www.tamilarangam.net

தன்னியல்புவாதம் குறித்து...

அழகியலும் அரசியலும்

சிங்கள இனவாதம்
' தமிழ் தேசம் ' குறித்து
கட்டமைத்துள்ள ஐதீகங்கள்

# உயிர்ப்பு

ஆனி. 95

5

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

# சிங்கள இனவாதம் 'தமிழ் தேசம்' குறித்து கட்டமைத்துள்ள ஐதீகங்கள்

*தேவதாஸ்*

சிங்கள இனவாதம் தொடர்ச்சியாக தமிழ் மக்களை ஒடுக்கி வருகின்றது. இந்த ஒடுக்குமுறைகளை நியாயப்படுத்தும் வகையில் அது பல புனைவுகளையும் கட்டுக் கதைகளையும் உருவாக்கிப் பரப்புகின்றது. இப்படிப்பட்ட புனைவுகளையும் கட்டுக்கதைகளையும் பொதுவாக நாம் ஐதீகங்கள் (Myths) என்கிறோம். எங்கும் எப்போதும் விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்படாத இந்த ஐதீகங்கள் திரும்பத்திரும்ப கூறப்படுகையில் அவை மக்களது மனதில் ஆழப்பதிந்து இறுகிப் போய் விடுகின்றன. இறுதியில் இவை தரப்பட்ட உண்மைகள் போலவே தோற்றமளிக்கின்றன. இத்தகைய ஐதீகங்கள் மூலமாக சிங்கள இனவாதிகள் முதலில் சிங்கள தேசத்தின் மீது தமது சித்தாந்த மேலாண்மையை இலகுவில்நிறுவிக் கொள்கின்றனர். இதனால் சிங்கள தேசமானது இனவாதத்தின் கைதிகளாக கட்டுண்டு போய் விடுகின்றது.

சாதாரண சிங்கள மக்கள் மட்டுமல்ல, சிங்கள இடதுசாரிகளும் கூட சிங்கள இனவாதம் பரப்பிய இப்படிப்பட்ட ஐதீகவலைக்குள் சிக்குண்டு விடுகின்றனர். தேர்தலும் பாராளுமன்ற ஆசனங்களுமே கதியாகிவிட்ட இவர்களால், சிங்கள தேசத்தின் மீது மேலாதிக்கம் செலுத்துகின்ற சிங்கள இனவாத சித்தாந்தத்திற்கு எதிராக அதிகம் செயற்பட முடியாமற் போவது மட்டுமல்ல, தாமே தம்மளவில் இந்த இனவாத சித்தாந்த ஆதிக்கத்திற்கு பலியாகியும் போய் விடுகின்றனர். இதனால் இனவாத ஒடுக்குமுறைகளுக்கு எதிராக தீவிரமாக போராடியிருக்க வேண்டிய இவர்களே ஒடுக்கு முறைகளை நியாயப்படுத்தவும் விளைகின்றனர். அது மட்டுமல்ல ஒடுக்குமுறைகளுக்கு எதிராக தமிழ் மக்கள் மத்தியில் இருந்து எழும்குரல்களை எப்படியும் அடக்கி விடுவதிலும் இந்த சிங்கள இடதுசாரிகள் அதிக கவனம் செலுத்துகின்றனர். தமிழ் மக்களின் தேசியவாத, ஜனநாயக கோரிக்கைகளை தமிழ் இனவாதம் என்பதாக இவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்நிலையில், இடதுசாரி கட்சிகளினுள்அங்கம் வகிக்கும் தமிழ் அங்கத்தவர்களை எடுத்துக் கொண்டால் அவர்களின் நிலை ஒருவகை சங்கடத்திற்குள்ளாகிறது. ஒரு புறம்தமிழர் என்றவகையில் சிங்கள இனவாத ஒடுக்குமுறைகளை தாமே அனுபவிக்கவும் செய்கின்றனர். ஆனால் இதற்கு எதிராக குரல்கொடுக்க முன்வந்தால், எங்கே தமது தலைமை தம்மையும் "தமிழ் இனவாதிகள்" என்று கூறிவிடுவார்களோ என அஞ்சுகின்றனர். மறுபுறம், தாம் இதுவரை கட்டிக்காத்து வந்ததலைமை விசுவாசம் காரணமாகவும், தேசியவாதம் தொடர்பாக தாம் கொண்டிருந்த குறுகிய புரிதல் காரணமா

> *இனவாத ஒடுக்குமுறைகளுக்கு எதிராக தீவிரமாக போராடியிருக்க வேண்டிய இவர்களே ஒடுக்கு முறைகளை நியாயப்படுத்தவும் விளைகின்றனர். அது மட்டுமல்ல ஒடுக்குமுறைகளுக்கு எதிராக தமிழ் மக்கள் மத்தியில் இருந்து எழும் குரல்களை எப்படியும் அடக்கி விடுவதிலும் இந்த சிங்கள இடதுசாரிகள் அதிக கவனம்செலுத்துகின்றனர். தமிழ் மக்களின் தேசியவாத, ஜனநாயக கோரிக்கைகளை தமிழ் இனவாதம் என்பதாக இவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஐதீகங்கள்....

கவும் , சிங்கள இனவாதத்திற்கு பலியாகிவிட்ட தமது தலைமைகளை இவர்களால் விமர்சிக்கவும் முடியாத நிலை . எனவே தாமும் தமிழ் மக்களது தேசியவாத , ஜனநாயககோரிக்கைகளை முன்னையவர்களை விடவும் தீவிரமாக கண்டிக்கத்தலைப்படுகின்றனர்.பொதுவாக , தமது தலைமை இட்டுள்ள " தமிழ் இனவாதம் " என்ற முத்திரை தம் மீதும் விழுந்து விடக்கூடாது என்ற ஒருவகை தற்காப்பு உளவியல் உந்தல் மேற்படி கண்டனங்களை இன்னும் தீவிரமாக வெளிப்படுத்தும் நிலைக்கு இவர்களை தள்ளுகிறது . விளைவு , எந்த வித தயக்கமும் இன்றி , சிங்கள இனவாதத்துடன் தமது தலைமையும் இணைந்து பரப்பிய ஐதீகங்களை அப்படியே தாமும் விழுங்கிக்கொள்கின்றனர் , அவற்றை விரிவாக பரப்பவும்செய்கின்றனர் . இந்த வகையில் சிங்கள இனவாதம் கட்டமைத்த புனைவுகள் , கட்டுக்கதைகளை தமிழ் தேசத்தின் மத்தியிலும் கொண்டு சென்று பரப்பியவர்களாக இத்தமிழ் இடதுசாரிகளே அமைகின்றனர் . மேலும் ஒரு நிலையில் சிங்கள இனவாதிகளை விடவும் மோசமான பாத்திரத்தை கூட ஆற்றுகின்றனர் என்பதற்கு இங்கு பலவருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஒரு சம்பவத்தை உதாரணமாக குறிப்பிடலாம் . . . . நான்காம் அகிலத்தை சேர்ந்த ஐரோப்பியர் ஒருவர் தமிழ் இடதுசாரி ஒருவருடன் , தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் அரசியல் பிரச்சனைகள் குறித்து கலந்துரையாடினார் . கலந்துரையாடலை முடித்துவிட்டு வந்த அந்த ஐரோப்பியர் மிகவும் எரிச்சலுடன் , இந்த தமிழ் இடதுசாரி ஒரு சிங்கள இனவாதியைவிடவும் மோசமாக சிங்கள இனவாதக் கருத்துக்களைக் கொண்டுள்ளார் எனக் கூறிவிட்டுச் சென்றார் . தமிழ் இடதுசாரிகள் சிங்கள இனவாதக் கருத்துக்களை எந்தளவிற்கு விழுங்கியிருந்தனர் என்பதற்கு இதுவோர் எடுத்துக்காட்டாகும் .

தமிழ் இடதுசாரிகள் தமிழ் தேசத்தினுள் பரப்பிய ஐதீகங்களும் புனைவுகளும் சாதாரண தமிழ் மக்கள் மத்தியில் பெருமளவு தாக்கத்தைசெலுத்த முடியாவிட்டாலும் கூட அவை இங்குள்ள முன்னேறிய பிரிவினரிடம் குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தவே செய்தது . இந்த தமிழ் முன்னேறிய பிரிவினரிடம் ஏற்கனவே மரபுவழி மார்க்சிய பார்வையை அடியொட்டிக் காணப்பட்ட , தேசியவாதம் பற்றிய குறுகிய புரிதலுடன் , இந்த ஐதீகங்களும் சேர்ந்து கொண்ட போது அவை மோசமான குழப்பங்களை அவர்களிடம் ஏற்படுத்தியது . இவ்வாறாக குழப்பப்பட்ட தமிழ் முன்னேறிய பிரிவினர் , தமது தேசம் ஒடுக்கப்படுவதைக் கூட பகிரங்கமாக பேசுவதற்கு வெட்கப்படும் அளவிற்கு இடதுசாரிகள் பரப்பிய ஐதீகங்களைஉள் வாங்கியிருந்தனர் . எனின் இவை அனைத்துக்குமான முழுப்பொறுப்பும் தமிழ் இடதுசாரிகளையே சார்கிறது . இந்த வகையில் இந்த இடதுசாரிகள் ஒருவகையில் சிங்களஇனவாதத்தின் ஊதுகுழலாகவே செயற்பட்டு வந்துள்ளனர் என்று கூறுவது பொருத்தமானதே .

அரசியல் விழிப்புணர்வு கொண்டவர்களாக அமையும் தமிழ் முன்னேறிய பிரிவினர்களை பொறுத்த வரையில் , தமிழ் தேசம் முகம் கொடுக்கும் பல்வேறு ஒடுக்குமுறைகளையும் இவர்கள் நன்கு உணர்கிறார்கள் . எனவே ஒரு மாற்றை , விடிவை அவாவி நிற்கின்றார்கள் . ஆனாலும் தேசியவாதம் பற்றிய குறுகிய புரிதலும் , சிங்கள இனவாதம் இட்டுக்கட்டியுள்ள ஐதீகங்களின் ஆதிக்கமும் சேர்ந்து , இவர்களை காத்திரமான பாத்திரம் ஆற்றமுடியாது செய்துள்ளன . விடுதலைப் போராட்டத்தை உறுதியாக முன்னெடுப்பதில் இவர்கள் தயக்கம் காட்டுகின்றனர் . எனவே ஒரு மாற்றை அமைப்பதில் முனைப்புடன் செயற்பட முன்வருவதில்லை . இத்தகைய பின்னணியில்தான் , முன்னேறிய பிரிவினர் மத்தியில் காணப்படும் பல்வேறு ஐதீகங்களையும் , மயக்கங்களையும் தகர்க்க வேண்டிய அவசியம் தீவிரமாக எழுகின்றது . சிங்கள இனவாத சித்தாந்த பிடியில் இருந்து உடனடியாக எம்மவர்களை விடுவித்தாக வேண்டியுள்ளது . இப்பொறுப்பு சரிவர ஆற்றப்படாது விடின். . . .போராட்டத்தில் நெருக்கடி , தேக்கம் தோன்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் போராட்ட சக்திகள் நம்பிக்கை இழப்பதும் ; தமது கோரிக்கைகளின் நியாயம் குறித்து சந்தேகம் கொள்வதும் ; தவிர்க்கமுடியாதாகிவிடும் . மேலும் , இவர்களே சிங்கள இனவாதத்தின் " ஒற்றையாட்சி புனிதகோட்பாட்டை " கட்டிக்காக்க முனைவதும் , தேசிய நல்லிணக்கம் பற்றி பேசுவதும் , சிங்கள அரசின் நல்லெண்ணங்குறித்து போற்றி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புளங்காங்கிதம் அடைவதும் நடைபெறவே செய்யும். உக்கித்தகர்ந்து கொண்டிருக்கும் ஓர் அரசியல் கட்டமைப்பை நம்மவர்களே தாங்கி நிற்க முனைவதுடன் புதிய புரட்சிகர கட்டமைப்புகளின் உருவாக்கத்திற்கு தடையாக எதிர்க்கும் துணை போகவும் செய்வர்.

இவ்வாறான நிலை தொடருகின்றபோது, விடுதலையை புரட்சிகரமாக முன்னெடுத்துச் செல்ல எவருமற்ற ஒரு வெற்றிடத்தில், தமிழ்தேசத்தின் அரசியல் தலைவிதியை தொடர்ந்தும் புலிகள் போன்ற பிற்போக்கு சக்திகளே நிர்ணயிப்பர் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த வகையில், சிங்கள இனவாதத்தால் கட்டமைக்கப்பட்டுள்ள ஐதீக வியூகங்களை தகர்க்கும் நோக்குடன், இவற்றில் தீர்க்கமாகஅமையும் சிலவற்றை இங்கு எடுத்துக் கொள்கின்றோம், அவற்றில். . . . . .

* *நிர்வாக துறையிலும், நிபுணத்துவ துறைகளிலும் தொடர்ச்சியாக தமிழரே ஆதிக்கநிலையில் இருந்து வந்துள்ளனர். எண்ணற்ற வாய்ப்புகளையும் சலுகைகளையும் அனுபவித்தவர்கள் தமிழரே.*

* *கல்வி கற்பதற்கான வாய்ப்புகளையும் கூட சிங்களவரை விட தமிழரே கூடுதலாக பெற்றிருந்தனர்.*

* *தென்னிலங்கையிலோ நிலப்பசி அதிகம், கிழக்கிலங்கையயோ சனத்தொகை செறிவு மிகக்குறைவாயும், நீர்வளம் கூடுதலாகவும் கொண்ட ஒரு பிரதேசமாகும். மேலும் தமிழர்களும் பரந்தளவில் குடியேறுவதில் எவ்வித அக்கறையும் காட்டவில்லை. அவ்வாறாயின் தென்னிலங்கை விவசாயிகள் இப்பிரதேசம் நோக்கி சுதந்திரமாக நகர்வதை எவ்விதம் குற்றம் காணமுடியும்.*

* *தமிழருக்கு சாதகமாகவே கொலனித்துவ அரசு செயற்பட்டுள்ளது. தமிழரும் கொலனித்துவ எஜமானர்களை திருப்தி செய்யும் வகையில் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளனர். இந்த வகையில் இலங்கையின்சுதந்திர இயக்கத்திற்கு எதிரானவர்களாகவே தமிழர் எப்போதுமே இருந்து வந்துள்ளனர்.*

* *இலங்கை ஒரு ஜனநாயக நாடு, இங்கு பாராளுமன்றத்தில் ஜனநாயக பூர்வமாக மேற்கொள்ளப்படும் முடிவுகளின்படியே ஆட்சி நடைபெறுகின்றது. இவ்வாறு ஜனநாயகபூர்வமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை விமர்சிப்பது. தமிழர் தமக்கென தனிச்சலுகை கோருவதும் தமிழ்மக்களின் ஜனநாயகவிரோத பண்புகளையே காட்டுகிறது.*

* *மலையகத் தமிழர் சிங்களவரின் நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டதுடன் சிங்களவரின் பொருளாதாரத்தையும் சூறையாடினர். இதுவே சிங்களவரின் நிலப்பிரச்சினைக்கும் வறுமைக்கும் அடிப்படைக் காரணமாகும்.*

* *மலையக தமிழரின் உரிமைகளை வென்றெடுக்க இடதுசாரிகளே தீவிரமாகபோராடினர். ஆயினும் மலையக தொழிலாளர்தம்வர்க்க குணாம்சத்தை இழந்துமுதலாளித்துவ தலைமையிடம் சரணடைந்தனர்.*

இதுவரை காலமும் உண்மைகளாக பேசப்பட்டு, மேலாதிக்கம் பெற்று வந்துள்ள மேற்படி ஐதகீங்களை இங்கு விரிவாகபரிசீலிப்போம்.

## *நிர்வாக மற்றும் நிபுணத்துவ துறைகளில் தமிழரின் ஆதிக்கம்?*

ஐதீகம் :

கொலனித்துவ ஆட்சிக்காலம் முதற்கொண்டே நிர்வாக, நிபுணத்துவதுறைகள் பலவற்றில் தமிழரே மேலாதிக்கம் பெற்றிருந்தனர். அனைத்து வாய்ப்புக்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யும் சுவீகரித்துக் கொண்ட அவர்கள் மண்ணின் மைந்தர்களான சிங்களவரை கடைக்கோடிக்குத் தள்ளிவிட்டனர். சுதந்திரம் அடையப்பட்டதை தொடர்ந்து சிங்களவர் தாம் இழந்தவற்றையே மீளப் பெற முயன்றனர். இதனையே தமிழர் மீதான ஒடுக்கு முறை என்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

சிங்கள இனவாதத்தின் புனைவுகளும் நியாயங்களும் இப்படித்தான் அமைகின்றன. போலிப்பெருமைகள் பேசி பீற்றிக் கொள்வதில் மகிழ்வுறும் நாமும் இதுவே உண்மை என்பதாக இதுவரை நம்பி வந்துள்ளோம்.

இக் குறிப்பிட்ட கால எல்லையிலும் பின்பும் சமூகங்களின் ஒட்டுமொத்த சனத்தொகை எண்ணிக்கையும் வீதாச்சாரமும் பின்வருமாறு அமைகின்றன.

அட்டவணை -1:

ஆதாரம் : Department of Census and Statistics

குறிப்பு : இந்த குறிப்பிட்டுள்ள காலங்களில் ( 1881 > 1891 > 1901 ) இலங்கை தமிழரும், மலையக தமிழரும் ஓர் அலகாக கணிக்கிடப்பட்டுள்ளது.

| ஆண்டு | மொத்த சனத் தொகை | சிங்களவர் % | இல. தமிழ் % | மலை. தமிழர் % | இல.சோனகர் % | பறங்கியர் % | மலாயர் % | ஏனையோர் % |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1881 | 2759800 | 66.9 | 24.9 | 24.9 | 6.7 | 0.7 | 0.3 | 0.5 |
| 1891 | 3007800 | 67.9 | 24.1 | 24.1 | 6.5 | 0.7 | 0.3 | 0.5 |
| 1901 | 3566000 | 65.4 | 26.7 | 26.7 | 6.4 | 0.6 | 0.3 | 0.6 |
| 1911 | 4106400 | 66.1 | 12.9 | 12.9 | 6.5 | 0.7 | 0.3 | 0.6 |
| 1921 | 4498600 | 67.1 | 11.5 | 13.4 | 6.3 | 0.6 | 0.3 | 0.8 |
| 1931 | 5306900 | 65.5 | 11.3 | 15.4 | 6.1 | 0.6 | 0.3 | 0.8 |
| 1946 | 6657300 | 69.4 | 11.0 | 11.7 | 6.2 | 0.6 | 0.3 | 0.8 |
| 1953 | 8097900 | 69.4 | 10.9 | 12.0 | 6.3 | 0.6 | 0.3 | 0.5 |
| 1963 | 1,0582000 | 71.0 | 11.0 | 11.6 | 6.5 | 0.4 | 0.3 | 0.2 |
| 1971 | 1,2689800 | 72.0 | 11.2 | 9.3 | 6.7 | 0.4 | 0.3 | 0.1 |
| 1981 | 1,4850000 | 74.0 | 12.6 | 5.5 | 7.1 | 0.3 | 0.3 | 0.2 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> சிவில் – நிர்வாக , நிபுணத்துவ துறைகளில் இருந்த தமிழரின் எண்ணிக்கையை தமிழ் சமூகத்தின் ஒட்டுமொத்த எண்ணிக்கையுடன் ஒப்பு நோக்கின் அது உண்மையில் மிகவும் சொற்பமானதே ஆயினும் , அரசு அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட சிங்கள இனவாத தலைமையானது , குறிப்பாக இத்துறைகளில் தமிழ் சுத்திகரிப்பை மேற்கொள்வதற்கும் , பொதுவாக தமிழ் மக்கள் மீது ஒடுக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுவதற்கும் முன்னேற்பாடாக சில ஐதீகங்களை உருவாக்கிப் பரப்புவதை தமது உத்தியாகக் கையாண்டது .

இந்த ஒவ்வொரு காலகட்டத்திலும் சிவில் – நிர்வாகம் மற்றும் நிபுணத்துவ துறை ஒவ்வொன்றும் எண்ணிக்கையில் மொத்தமாக எத்தனை நபர்களை கொண்டிருந்தது என்பதையும் , ஒட்டுமொத்தமான சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் அவை எத்துணை சொற்பமான எண்ணிக்கை என்பதையும் முதலில் கவனத்தில் கொள்ள வேண்டும் . இவற்றில் பதவி வகித்த தமிழர் எத்தனை பேர் என்பதும் , அவர்கள் தமது சனத்தொகை வீதத்தையும் விட மேலதிகமாக இருந்துள்ளனர் எனக் கூறப்படும் சந்தர்ப்பங்களில் , உண்மையாக *எண்ணிக்கையில்* அது எத்தனை என்பதும் , குறிப்பாக கவனிக்கப்பட வேண்டும் . அதுமட்டுமல்ல , இந்த தமிழ் நிர்வாகிகள் மற்றும் நிபுணர்களுக்கு மேலதிகாரிகளாக , ஆணையிடுபவர்களாக வீற்றிருந்தோர் யார் என்பதும் , அவர்களையும் மீறி இத்தமிழர் ஆதிக்கம் செலுத்தியிருக்கத்தான் முடியுமா என்பதையும் கேள்விக்குள்ளாக்க வேண்டும் .

சிவில் – நிர்வாக, நிபுணத்துவ துறைகளில் இருந்த தமிழரின் எண்ணிக்கையை தமிழ் சமூகத்தின் ஒட்டுமொத்த எண்ணிக்கையுடன் ஒப்பு நோக்கின் அது உண்மையில் மிகவும் சொற்பமானதே ஆயினும் , அரசு அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட சிங்கள இனவாத தலைமையானது , குறிப்பாக இத்துறைகளில் தமிழ் சுத்திகரிப்பை மேற்கொள்வதற்கும் , பொதுவாக தமிழ் மக்கள் மீது ஒடுக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுவதற்கும் முன்னேற்பாடாக சில ஐதீகங்களை உருவாக்கிப் பரப்புவதை தமது உத்தியாகக் கையாண்டது . அதாவது , மேற்படி துறைகளில் பதவி வகித்த தமிழர்களைஎண்ணிக்கை வகையில் குறிப்பீடு செய்வதை வேண்டுமென்றே தவிர்த்து , பதிலாக தமிழரை வீதாச்சாரபடுத்தியே அழுத்தம் கொடுத்து வந்துள்ளது . இவ்வாறாக இனவீதாச்சாரத்திற்கு அழுத்தம் கொடுத்ததன் மூலம் தமிழர்களே எங்கும் ஆதிக்கம்செலுத்துவதான ஒரு பிரமையை அவர்களால் தோற்றுவிக்க முடிந்தது . உதாரணமாக , (அட்டவணை 2 ஐ பார்க்க)

அட்டவணை – 2

சிவில் நிர்வாக சேவை

| ஆண்டு | மொத்தம் | சிங்களவர் | தமிழர் | பறங்கியர் |
|---|---|---|---|---|
| 1870 | 07 | --- | --- | 07 |
| 1907 | 12 | 04 ( 33.3% ) | 02 ( 16.6% ) | 06 ( 50% ) |
| 19 25 | 39 | 17 ( 43.6% ) | 08 ( 20.5 % ) | 14 ( 35.9% ) |
| 1935 | 33 | 13 ( 39.3% ) | 11 (33.3% ) | 09 ( 27.3% ) |
| 1946 | 116 | 69 ( 59.5% ) | 31 (26.7% ) | 16 ( 13.8% ) |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஐதீகங்கள்....

1870 ம் ஆண்டில் சிவில் சேவையில் தமிழர் எவருமே இடம் பெறவில்லை . 1907 இல் தமிழரின் வீதம் இங்கு 16.6 வீதம் ஆயினும் , அது ஆள் எண்ணிக்கையில் ஆக இரண்டு ( 02 ) மட்டுமே . மேலும் தமிழ் மக்களின் சனத்தொகை வீதம் சராசரியாக 12% எனக் கொள்வோமாயின் இங்கு தமிழர் தமது வீதத்திலும் பார்க்க 4.6 வீதம் மேலதிகமாக உள்ளனர் . இந்த மேலதிகம் 4.6 வீதத்தை ஆள் எண்ணிக்கையில்கணக்கிடுவோமாயின் (அதாவது 16.6 வீதத்திற்கு இரண்டு நபர் எனின் 4.6வீதத்திற்கு.....) இங்கு ஒருவர் கூட தேற முடியாது . எனவே மேலதிகமாக இருந்துள்ளனர் என்ற கூற்று வெறும் சூனியமாகவே உள்ளது .

இவ்வாறே 1925 ம் ஆண்டில் சிவில் சேவையில் தமிழர் 20 வீதமாக இருந்துள்ளனர் . அதாவது தமது சனத்தொகை வீதத்தை விட 8 வீதம் மேலதிகமாக உள்ளனர் . இந்த மேலதிகம் ஆள்எண்ணிக்கையில் ஆக மூவர் மட்டுமே எனின் , 1907, 1925 களில் மேலதிகமாக அமையும் இந்த ஓரிருவர் தான் முழு சிங்களதேசத்தையுமே ஆதிக்கம் செலுத்தினர் என்கிறார்களா ? .

1946 ம் ஆண்டை எடுத்துக்கொள்வோம் , இங்கு தமிழர் 26.7 வீதமாக. அதாவது தமது சனத்தொகை வீதத்திலும் பார்க்க ( 26.7–12 ) 14.7 வீதம் மேலதிகமாக உள்ளனர் . ஆள் எண்ணிக்கையில் இது பதினாறு ( 16 ) பேர்மட்டுமே . இவ்வாண்டில் 69 சிங்களவர் சிவில் நிர்வாகத்தில் இருந்துள்ளனர் என்பதைகவனத்தில் கொள்ளவும் . இந்த உண்மைகளுடன் 1881 ம் ஆண்டில் இருந்து 1946 வரையிலான மொத்த சனத்தொகை எண்ணிக்கையையும் கருத்தில் கொண்டால் " தமிழரின் ஆதிக்கம் " " சிங்களவர் பாதிப்பு " போன்ற வாதங்களிலுள்ள அபத்தம் தெளிவாகிவிடுகிறது . இது தவிர , 1870 ம் ஆண்டு தொடக்கம் 1925 வரையிலும் தமிழர் அல்ல பறங்கியரே இத்துறைகளில் அதிக எண்ணிக்கையில் இருந்துள்ளனர் என்பதையும் இங்கு குறிப்பிட்டுச் சொல்ல முடியும ".

இவ்வாறாக சிவில் மற்றும் துறைகளில் பறங்கியர் கூடுதலாக இருந்தமை பற்றியோ , அல்லது முஸ்லீகள் தமது சனத்தொகை வீதத்தையும் விட குறைவாக அல்லது அறவே இல்லாமலுள்ளது பற்றியோ ஒரு வார்த்தையும் பேசாது தமிழர்களை மட்டும் குறிவைத்து சிங்கள இனவாதம் வெளிப்பட்டுள்ளதையும் எம்மால் புரிந்து கொள்ளமுடிகிறது .

இதே போன்ற உண்மை நிலையை அட்டவணை 3 இலும் ஒப்பு நோக்கமுடியும் .

அட்டவணை – 3 : *பொது சேவைகள் திணைக்களம்*

| ஆண்டு | மொத்தம் | சிங்களவர் | தமிழர் | பறங்கியர் |
|---|---|---|---|---|
| 1907 | 20 | 04 ( 20% ) | 02 ( 10% ) | 14 ( 70% ) |
| 1925 | 28 | 06 ( 21.4% ) | 02 ( 7.2% ) | 20 ( 71.4% ) |
| 1935 | 35 | 12 ( 34.3% ) | 10 ( 28.6% ) | 13 ( 37.1% ) |
| 1946 | 67 | 35 ( 52.2% ) | 17 ( 25.4% ) | 15 ( 22.4% ) |

தவிர , 1907 ம் ஆண்டில் தமிழர் தமது சனத்தொகை வீதத்தையும் விட 2 வீதம் குறைவாயும் , 1925இல் 5 வீதம் குறைவாக இருந்துள்ளதையும் கூட அட்டவணை 3 எடுத்துக் காட்டுகிறது .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமகாலத்தில் மருத்துவம் , நீதி போன்ற நிபுணத்துவ துறைகளை எடுத்துக்கொள்வோம் . இங்கும் தமிழ்ர்களின் எண்ணிக்கையை நோக்கும் போது , அது ஒட்டு மொத்த சமூக அளவில் தமிழ் சமூகத்திற்கு சாதகங்களையும் சிங்கள சமூகத்திற்கு பாதகங்களையும் ஏற்படுத்தும் விதத்தில் இல்லை என்பதை அறிய முடிகிறது . அட்டவணை 4ஐ பார்க்கவும் .

அட்டவணை - 4 *மருத்துவம்*

| ஆண்டு | மொத்தம் | சிங்களவர் | தமிழர் | பறங்கியர் |
|---|---|---|---|---|
| 1870 | 23 | 02 ( 8.7% ) | -------- | 21 ( 91.3) |
| 1907 | 61 | 15 ( 24.6% ) | 09 (14.7% ) | 37 (60.7 ) |
| 1935 | 283 | 156 (55.1% ) | 73 ( 25.8% ) | 54 (19.1% ) |
| 1946 | 345 | 205 ( 59.4% ) | 115 (33.3% ) | 25 (7.3% ) |

அட்டவணை - 5 *நீதித்துறை*

| ஆண்டு | மொத்தம் | சிங்களவர் | தமிழர் | பறங்கியர் |
|---|---|---|---|---|
| 1935 | 30 | 8 ( 26.7% ) | 10 (33.3% ) | 12 (40% ) |
| 1946 | 53 | 25 (47.1% ) | 14 ( 26.4 ) | 14 (26.4 ) |

1870ம் ஆண்டில் மருத்துவத் துறையில் தமிழர் எவரும் இல்லை . 1907இல் தமது சனத்தொகை வீதமாகிய 12 வீதத்தை விட 2.7வீதம் அதிகமெனின் இங்கு ஒரே ஒருவர் மட்டுமே ஆள் எண்ணிக்கையில் மேலதிகமாகத்தேற முடியும். 1935 இல் அதாவது 28 வருடங்களுக்கு பின்பு தமது வீதாச்சாரத்தை விடவும் 13.8 வீதம் கூடுதலாக , அதாவது 39பேர் மட்டுமே மேலதிகமாக இடம் பெறுவர் . இதே ஆண்டில் சிங்களவர் மருத்துவதுறையில் 156 பேர் இருந்துள்ளனர் என்பதைகுறித்துக் கொள்க .

இவ்வாறே நீதித்துறையிலும் மேலதிக வீதாச்சாரம் என்பதை எடுத்துப் பரிசீலித்தால் அது எண்ணிக்கையில் ஒரு சில தமிழர் தான் என்பதை எடுத்துக்காட்டலாம் .

பொதுவில் , பட்டயக்கணக்காளர் துறை (Accountancy) தவிர்ந்த அனைத்திலும் மேற்படி கால இடைவெளியில் , சிங்களவரின் வீதத்தை விடவும் தமிழரின் வீதம் பெரும்பாலும் கூடுதலாக இருந்ததில்லை . அப்படி ஏதேனும் ஒன்றிரண்டு இருந்துவிடின் அது நபர் எண்ணிக்கையில் ஒரு சிலர் என்பதாகவே அமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிறது 1948 ம் ஆண்டிற்கு பின்னர் நிர்வாக, நிபுணத்துவ துறைகளில் உள்வாங்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கையில் பெருக்கம் ஏற்பட்டதுடன், சிங்கள அரசு மேற்கொண்ட அப்பட்டமான இனவாத அணுகுமுறை காரணமாக சிங்களவர் பல துறைகளில் தமது சனத்தொகை வீதத்தையும் விடவும் கூடுதலான அளவில்நியமிக்கப்பட்டனர். வெளிப்படையாக இந்த இனப்பாகுபாடு தொடங்கப்பட்ட போதுதான், அனைத்து துறைகளிலும் தமிழர் ஆதிக்கம் செலுத்துகின்றனர் என்ற ஐதீகமானது மேலும் தீவிரமாக பரப்பப்பட்டது.

"சுதந்திரத்திற்கு" பின்னான காலப்பகுதியில் பல்வேறு துறைகளிலும் இடம் பெற்றவர்களின் எண்ணிக்கை, அவர்களின் இனவீதாசாரம் என்பன ஒப்பீட்டின் நிமித்தம் அட்டவணைகள் 6, 7, 8 இல் தரப்படுகின்றன.

இதுவரை எடுத்துக்காட்டப்பட்டுள்ள தரவுகள், சிவில் / நிர்வாக சேவைகளில் தொடக்கத்தில் இருந்தே தமிழர் எந்தவகையிலும் ஆதிக்க நிலையில் இருக்கவில்லை என்பதை தெளிவாக்குகின்றன தவிர சிங்களவரின் எண்ணிக்கையும், (அதுபோல் வீதாச்சாரமும்) தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்வதையும், "சுதந்திரத்தின்" பின்னர் சிவில் / நிர்வாக, மற்றும் நிபுணத்துவதுறைகளில் சிங்களவரின் தொகைபெரும்பாலும் வேகமாக அதிகரித்து பிற்காலங்களில் அவர்களின் சனத்தொகை வீதத்தை விட மேல் நிலை வகிப்பதையும் தரவுகள் காட்டுகின்றன.

மேற்படி துறைகளில் தமிழர் ஒருபோதும் ஆதிக்கம் செலுத்தியிருக்க முடியாது என்பதை மற்றொரு உண்மையின் மூலம் உறுதிப்படுத்த முடிகிறது. அதாவது 1900 - 1947 வரையிலான காலப்பகுதியிலும்,

**அட்டவணை - 6** *சிவில்துறை தரம் i, ii, iii அடங்கலாக*

| ஆண்டு | சிங்களவர் | தமிழர் | முஸ்லிம்கள் | பறங்கியர் |
|---|---|---|---|---|
| 1956 | 101 ( 57.1% ) | 52 ( 29.4% ) | 3 (1.7% ) | 21( 11.8% ) |
| 1962 | 148 (73.7% ) | 36 (17.9% ) | 5 ( 2.3% ) | 12 ( 6.0 % ) |
| 1975 | 1029 ( 81.3% ) | 201 (15.9% ) | 25 ( 2.0% ) | 10 ( 0.8 % ) |

**அட்டவணை - 7** *நீதித்துறை*

| ஆண்டு | சிங்களவர் | தமிழர் | முஸ்லிம்கள் | பறங்கியர் |
|---|---|---|---|---|
| 1956 | 38 (57.6% ) | 20 (30.3% ) | 4 | 4 |
| 1962 | 47 (60.3% ) | 21 (26.9% ) | 8 | 2 |
| 1973 | 66 (77.6% ) | 16 (18.8% ) | 3 | 0 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அட்டவணை - 8

| 1980 ம் ஆண்டு | பொதுதுறை ஊழியர் Public Sector Employees | கூட்டுதாபன துறை ஊழியர் Corporative Sector |
|---|---|---|
| சிங்களவர் | 311089 (84.*%) | 195955 ( 85.74% ) |
| தமிழர் | 42818 ( 11.43% ) | 24373 ( 10.6% ) |

அதற்குப் பின்னரும் அரசியல் மற்றும் நிறைவேற்று அதிகாரங்களை கணிசமாகவே சிங்களவர் பெறத் தொடங்கியிருந்தனர் . சட்டசபை உருவாக்கப்பட்டும் , வேறு பல அரசியல் சீர்திருத்தங்கள் மூலமும் , அதிகாரங்கள்படிப்படியாக சிங்கள தலைமையை சென்றடைந்தன . 1937 ம் ஆண்டு ' தனிச்சிங்கள மந்திரி சபை ' அமைக்கப்பட்டது இப்போக்கின் உச்சவிளைவாகும். எனவேபல்வேறு துறைகளிலும் பணியாற்றிய தமிழ் நிர்வாகிகளை பொறுத்த வரையில் அவர்கள் – இன்று வரையிலும் – சிங்கள அரசுத்தலைவர்கள்,சிங்கள அமைச்சர்கள் , அல்லது இவர்களின் செயலாளர்களின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்தாக வேண்டிய நிலையிலேயே இருந்துள்ளனர் . அவ்வாறாயின் இந்த சொற்பதமிழ் நிர்வாகிகள் , அதிகாரிகள் தானா , தமக்கு மேலே ஆணை பிறப்பிப்பவர்களாக சிங்களவர்களையும் வைத்துக் கொண்டு , சிங்கள சமூகத்தின் மீது ஆதிக்கம் செலுத்தினார்கள் ? .

இப்போது , தம்மை இடதுசாரிகள் எனக்கூறிக் கொண்டு நம்மத்தியிலுள்ள தமிழ் பேசும் இந்த சிங்கள சோவினிஸ்டுகளை நோக்கி நாம் ஒரு வினாவை தொடுக்கின்றோம் . இதுவரைகாலமும் விகிதாச்சார முலாம் பூசி சிங்கள இனவாதம் உருவாக்கிவைத்துள்ள ஐதீகங்களை பரப்பிவந்துள்ள உங்களது வாதம் , சனத்தொகை வீதாச்சாரப்படி தான் வேலை வாய்ப்பு என்பதுதானா ? அவ்வாறாயின் , 1937 ம் ஆண்டில் தனிச் சிங்கள மந்திரிசபைஅமைக்கப்பட்ட போதும், முப்படைகளிலும் ஏனைய அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த துறைகளிலும் தமிழர் திட்டமிட்டுபுறக்கணிக்கப்பட்ட போதும், மீள் முதலீடுகள் , உள்ளக கட்டுமானங்கள் யாவும் சிங்கள தேசத்திற்கு மட்டுமே தொடர்ச்சியாக செய்யப்பட்ட போதும் , நீங்கள் என்ன செய்துகொண்டிருந்தீர்கள் ?. இவை எதையுமே கண்டுகொள்ளாதது மட்டுமல்ல இனவாத ஐதீகங்களையும் விழுங்கி , முனைந்து அவற்றை பரப்பவும் செய்த நீங்களும் உங்கள் தலைமையும் ஒட்டு மொத்தமாக சிங்கள இனவாதிகளுக்கே ஏஜண்டுகளாகி தொண்டு புரிந்துள்ளீர்கள் என்று கூறுவதில் ஏதேனும் தவறு இருக்க முடியுமா ? .

### பாடசாலைகள் , கல்விவாய்ப்புகள் யாவும் தமிழருக்கே ?

ஐதீகம் : – கொலனித்துவ அரசும் , கிறித்துவ மிசனறிகளும் அனைத்து கல்வி வாய்ப்புக்களையும் தமிழருக்கே தாரைவார்த்திருந்தன . நிர்வாக , நிபுணத்துவ துறைகளில் தமிழரின் ஆதிக்கம் ஏற்பட இதுவே மூலகாரணமாகும் .

இவ்வாறாக அமைவது சிங்கள இனவாதத்தின் இன்னுமொரு புனைவாகும் . இங்கு உண்மை நிலையைஎடுத்துக்காட்ட தரவுகளை பேச விடுவதே போதுமானது . 1931 ம் ஆண்டுக்கும் 1944 க்கும் இடைப்பட்ட காலத்தில் வடக்கு கிழக்கு பிரதேசத்திலும் , அது தவிர்ந்த தென்னிலங்கை பிரதேசங்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ளிலும் அமைந்திருந்த பாடசாலைகளின் விபரம் கீழே தரப்படுகிறது .

*குறிப்பு :* – வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய நகர்புறபிரதேசங்களில் தமிழ் பாடசாலைகள் இருந்துள்ளபோதிலும் சிங்கள மாணவர் சிங்களத்திலும் , ஆங்கிலத்திலும் கல்விபெறுவதற்கான வாய்ப்புகளே பெருமளவில் இப்பிரதேசங்களில் இருந்திருக்கும் என்பதை மேற்படி அட்டவணையை பரிசீலிக்கும் போது கவனத்தில் கொள்ளவும் , ஏனெனில் இக்காலப்பகுதியில் சிங்களமாணவர்கள் , தமிழ் மாணவர்கள் படிக்கும் பாடசாலைகள் என்ற ரீதியில் தனித்தனியான , துல்லியமான புள்ளி விபரங்களை பெற முடியவில்லை .

' சுதந்திரம் ' பெற்றதன் பின்பு ( 1959 – 1963 வரை கிடைத்த புள்ளிவிபரங்களின் படி ) சிங்கள , தமிழ் மாணவர் கற்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை விபரம் பின்வருமாறு அமைகிறது . ( அட்டவணை – 10 பார்க்கவும் )

அட்டவணை - 9

| பாடசாலை வகையினம் | 1931ம் ஆண்டு | | | 1944ம் ஆண்டு | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | வடகிழக்கு தவிர்ந்த பிரதேசம் | வடகிழக்கு பிரதேசம் | மொத்தம் | வடக்கிழகு தவிர்ந்த பிரதேசம் | வடகிழக்கு பிரதேசம் |
| ***அரச பாடசாலைகள்*** | | | | | | |
| மத்திய ( Central ) | - - | - - - | - - - | 23 | 20 | 03 |
| ஆங்கில ( English ) | 16 | 16 | - - - | 13 | 13 | - - |
| இருமொழி ( Bilingua ) | 31 | 30 | 01 | 39 | 38 | 01 |
| சிங்கள / தமிழ் | 1395 | 1291 | 104 | 2455 | 2261 | 194 |
| ***அரச உதவி பெறும்*** | | | | | | |
| ஆங்கிலம் | 255 | 186 | 69 | 296 | 233 | 63 |
| இருமொழி | 22 | 16 | 06 | 23 | 12 | 11 |
| சிங்கள / தமிழ் | 2246 | 1717 | 529 | 2814 | 2239 | 575 |

***ஆதாரம்*** : கல்விஅமைச்சு வெளியீடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அட்டவணை - 10

| ஆண்டு | சிங்களமாணவர் பாடசாலைகள் | தமிழ்மாணவர் பாடசாலைகள் |
|---|---|---|
| 1956 | 4084 | 884 |
| 1958 | 4524 | 879 |
| 1960 | 4839 | 874 |
| 1962 | 4961 | 873 |
| 1963 | 5552 | 873 |

இக்காலப்பகுதியில் , தமிழ் பாடசாலைகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏதும் இல்லாமலும் சிங்கள பாடசாலைகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துச் செல்வதையும் காணமுடிகிறது .

எனவே சிங்களவரை விட தமிழருக்கே கல்விவாய்ப்புக்கள் அதிகம் என்பது அப்பட்டமான ஐதீகமே என இங்கு நிரூபணமாகிறது .

*தமிழ் பிரதேசத்தில் சிங்கள குடியேற்றம் பற்றி*

**ஐதீகம் : -**

* *இலங்கை பிரசைகள் யாவரும் எங்கும் வாழும் உரிமை உடையவர்கள் .*

* *வடக்கு, கிழக்கிற்கு சிங்களவர் சுதந்திரமாகவே குடிபெயர்ந்தனர் ,*

* *கிழக்கு மாகாணம் மிகவும் ஐதான சனத்தொகையை கொண்டதும் , நீர் வளம்மிக்கதும் ஆகும் . எனவே சிங்களவர் இயல்பாகவே இப்பகுதியில் குடியேறினர் .*

*குடியேற்ற திட்டங்களுக்குச் செல்ல தமிழர் அக்கறை காட்டவில்லை .*

* *கிழக்கில் , கடலோரம் இருந்து பத்து ( 10 ) மைல்களுக்கு அப்பால் தமிழ் , முஸ்லீம் குடிகள் காணப்படவே இல்லை .*

எமது தாயகத்தில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதை நியாயப்படுத்துவதற்காக இந்த ஐதீகங்கள் சிங்கள இனவாதத்தால் பரப்பப்பட்டுள்ளன . வரலாற்று ஆய்வு என்ற வடிவில் இப்போதும் கூட இது நடைபெறுகின்றது .

இந்த அம்சங்களை ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்வோம் . 1930 களுக்கு முந்தியதும் இரண்டு வீதத்திற்கும் ( 2 ) உட்பட்டதாக அமைந்ததுமான இயல்பானசிங்கள குடிவரவும் , பிற்பட்ட காலங்களில் , சிங்கள அரசின் ( 1931 டொனமூர் அரசியல் யாப்புடன் அரசானது சிங்களமயமாக்கம் பெறத் தொடங்குகிறது ) நேரடி ஏற்பாட்டின் பேரில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்கள குடியேற்றமும் அடிப்படையில் ஒன்றல்ல . அரசும் , சர்வோதய போன்ற சிங்களவர் நலம் பேணும் ஏனைய நிறுவனங்களும் , ஆயிரக் கணக்கில் கொண்டு வரப்பட்ட இந்த சிங்கள குடியேற்றவாசிகளுக்கு மிகவும் கவர்ச்சியான உதவிகளையும் , வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்தன . காணி , வீடு , உழவுக்கு எருதுகள் , கிணறு , விதைதானியங்கள் , நீர்ப்பாசனம் , பராமரிப்பு செலவுகள் உட்பட பல்வேறு மானியங்கள் குடும்ப ரீதியில் வழங்கப்பட்டன . திட்டமிட்ட இந்த குடியேற்றங்களின் விளைவாக கிழக்கு மாகாணத்தில் 1921 ம் ஆண்டில் 8744 ( 4.69 வீதம் ) என இருந்த சிங்களவர் தொகை 1981 ம் ஆண்டில் 255843 ( 25. 8 வீதம்) ஆக பெருக்கமுள்ளது . கல்லோயா , அல்லை - கந்தளாய் குடியேற்ற திட்டங்கள் அரசின் வரவு செலவு திட்டத்தில் மிகப்பெருந்தொகை பணத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களாகும் .

தமிழர் தாயகத்தை துண்டாடும் நோக்கில் , மணலாறு போன்ற இராணுவ கேந்திர முக்கியத்துவம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாய்ந்த பிரதேசங்களில் ஆயுதம் தரித்த சிங்கள கிரிமினல் குற்றக் கைதிகள் குடியமர்த்தப்பட்டனர். குறித்த தண்டணை காலத்திற்கு முன்னரே இக் கைதிகளை விடுதலை செய்வதற்கு, கண்டிப்பாக இவர்கள் மணலாறில் குடியேறவேண்டும் என அரசினால் முன்நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. " எங்கும் வாழ்வதற்கான சுதந்திரம் " என்றகோசத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இத் திட்டமிட்ட குடியேற்றங்கள் தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்க மேற்கொண்ட ஓர் அப்பட்டமான துணை இராணுவ முயற்சியாகும்.

*தமிழர் தாயகத்தை துண்டாடும் நோக்கில், மணலாறு போன்ற இராணுவ கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களில் ஆயுதம் தரித்த சிங்கள கிரிமினல் குற்றக் கைதிகள் குடியமர்த்தப்பட்டனர். குறித்த தண்டணை காலத்திற்கு முன்னரே இக் கைதிகளை விடுதலை செய்வதற்கு, கண்டிப்பாக இவர்கள் மணலாறில் குடியேற வேண்டும் என அரசினால் முன் நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.*

கிழக்கு மாகாணமே சனத்தொகை செறிவில் மிகவும் குறைந்த பிரதேசமாகவும் அதே வேளை நீர் வளம் மிக்கதாகவும் இருந்தது. எனவே சிங்களவர் இங்கு குடியேறியதில் தவறில்லை என்ற வாதம் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும். உண்மையில் கிழக்குமாகாணத்தை விடவும் மொனராகலை, பொலநறுவை, அனுராதபுரம் போன்ற மாவட்டங்கள் ஒப்பீட்டளவில்சனத்தொகை அடர்த்தி மிகவும் குறைவாயும் (பார்க்கஅட்டவணை) அதிக நீர்ப்பாசனம், குளங்கள் என்பவற்றை கொண்டதாகவும் இருந்தன. எனினும் சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு கிழக்கும், வன்னியும் அரசின் குறியாக அமைந்ததற்கு தனியான உள் – நோக்கம் அடிப்படையாக இருந்துள்ளது. மாறாக சனச்செறிவு, நீர்வளம் எனப் பேசுவதெல்லாம் அப்பட்டமான கபடத்தனமாகும்.

**அட்டவணை - 11**

*மாவட்ட அடிப்படையில் சனத்தொகை செறிவு % :*

| | 1953 | 1963 |
|---|---|---|
| மட்டகளப்பு | 37 | 74 |
| அம்பாறை | | 69 |
| திருகோணமலை | 31 | 51 |
| அனுராதபுரம் | 22 | 38 |
| பொலநறுவை | | 33 |
| மொனராகலை | -- | 18 |

**ஆதாரம் : அட்டவணை - 11**

( UN - ECO , Social Commission for Population for Srilanka -Country mono graphy -1976 ) ;

குடியேற்றத்திட்டங்களுக்கு செல்ல தமிழர் அக்கறை காட்டவில்லை என்பதை எடுத்துக் கொள்வோம். சிங்கள குடியேற்றவாசிகளுக்கு அரசினால் வழங்கப்பட்ட எந்த விதமான சலுகைகளும், மானியங்களும் இல்லாத போதிலும் கூட, தமிழ்மக்கள் தாமாகவே விரும்பிச் சென்று விவசாய குடியிருப்புகளை அமைத்துக் கொண்ட போது, இவர்கள் அரசு அதிகாரிகளாலும், படையினராலும், குறிப்பாக சிங்கள அரசியல்வாதிகளின் அடியாட்களாலும் அடித்து விரட்டப்பட்டுள்ளனர். பதவியாவில், கல்லோயாவில், திரியாயில், தென்னைமரவாடியில், கந்தளாயில், புளியடிச் சோலையில் காலத்திற்கு காலம் நிகழ்ந்தவை இங்கு சில எடுத்துக்காட்டுகளாகும்.

புதிய குடிகள் மட்டுமல்ல, ஆண்டாண்டு காலம் நிரந்தர குடிகளாக இருந்த தமிழர்களும் கூட வீடுகள் உடைக்கப்பட்டு, வர்த்தக நிலையங்கள் கொள்ளையிடப்பட்டு, அடித்து விரட்டப்பட்டுள்ளனர். மலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யகத்தில் இருந்து தாக்குதலுக்குள்ளாகி வெளியேறிவந்து கிழக்கில் வன்னியில் குடியிருந்த தமிழ் அகதிகள் புனர் வாழ்வுத் திட்டங்களும் தகர்க்கப்பட்டன . இத்திட்டங்களை மேற்கொண்டு வந்த காந்தீயம் தொண்டர் அமைப்பும் தலைமையகமும் திட்டமிட்டு தரைமட்டமாக்கப்பட்டது . 1956 , 1958 , 1977 , 1981 , 1983 , 1990 , களில் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவொழிப்பு நடவடிக்கைகளுக்கு – குறிப்பாக குடியேற்றத்திட்டங்களிற்கு அண்மித்த பகுதிகளில் – சான்றுகள் தேவையில்லை .

சிங்கள குடியேற்றவாசிகளுக்கு அரசினால் வழங்கப்பட்ட எந்தவிதமான சலுகைகளும் , மானியங்களும் இல்லாத போதிலும் கூட , தமிழ்மக்கள் தாமாகவே விரும்பிச் சென்று விவசாய குடியிருப்புகளை அமைத்துக் கொண்ட போது , இவர்களை அரச அதிகாரிகளாலும் , படையினராலும் , குறிப்பாக சிங்கள அரசியல்வாதிகளின் அடியாட்களாலும் அடித்து விரட்டப்பட்டுள்ளனர் . பதவியாவில் , கல்லோயாவில் , திரியாயில் , தென்னைமரவாடியில் , கந்தளாயில் , புளியடிச் சோலையில் காலத்திற்கு காலம் நிகழ்ந்தவை இங்கு சில எடுத்துக்காட்டுகளாகும் .

பெரும்பாலன இத்தகைய தாக்குதல்களின் முனைப்புடன் ஈடுபட்டவர்கள் யார் ? அவர்களின் உள் நோக்கம் என்ன ? சிங்கள அரசியல் வாதிகள் இவற்றின் சூத்திர தாரிகள் ஆகும் . இந்த அரசியல் வாதிகளால் ஏவப்பட்ட படையினரும் , அரசியல் வாதிகளின் எடுபிடிகளான அரச ஊழியர்களும் , அடியாக்கள் கூட்டமுமே இவ்வாறு முனைப்புடன் ஈடுபட்டவர்களாகும் . என்பது குறிப்பான முக்கியத்துவமுடையது . திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களில் பிரதான உள்நோக்கம் பாரம்பரிய தமிழ் , முஸ்லீம் பிரதேசங்களின் குடிப்பரம்பலை மாற்றியமைப்பதாகும் . (Demographic Alteration) . இதற்கான அடித்தளம் 1931 டொனமூர் அரசியல் யாப்புடன் பலமாக இடப்பட்டது . பிரதேசவாரி பிரநிதித்துவமும் , சர்வசன வாக்களிப்பு முறையும் நடைமுறைக்கு வந்ததுடன் தமிழ் முஸ்லீம் இனச்சுத்திகரிப்புடன் கூடியதிட்டமிட்ட சிங்கள குடியேற்றம் எமது பாரம்பரிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டது . நிலம் , நீர்வளம் , சனச்செறிவுகுறைவு , சுதந்திரமாக குடியேறும் உரிமை என்பதெல்லாம் , சிங்கள இனவாதத்தின் நேரடியான அரசியல் உள்நோக்கத்தினை மறைக்கும் கபட்டத்தனமாகும் . சிங்கள இனவாத அரசியல் வாதிகளின் இந்த உள்நோக்கமானது , புதிய அம்பாறை மாவட்ட உருவாக்கம் , புதிய சேருவிலை தொகுதி , வன்னி தெற்கு உதவி அரச அதிபர் பிரிவு உருவாக்கம் , மணலாறை வெலியோயா சிங்கள மாவட்டமாக்கும் திட்டம் , திருகோணமலை மாவட்ட தமிழ் முஸ்லிம் மக்களின் சனச் செறிவை மாற்றியமைக்கும் நோக்கில் தமிழ் முஸ்லீம் கிராமசேவகர் பிரிவுகளை , அனுராதபுரத்துடன் இணைத்தமை . சிங்கள கிராம சேவகர்பிரிவுகளை பலவந்தமாக திருமலை மாவட்டத்தினுடன் இணைத்த நடவடிக்கைகள் என்பவற்றின் மூலம் தெளிவாக புலப்படுகின்றது .

## *தமிழர் சுதந்திர இயக்கத்தின் விரோதிகள் ?*

ஐதீகம் : –

இலங்கையின் சுபீட்சத்திற்கும் முன்னேற்றத்திற்கும் முட்டுக்கட்டையாக எப்போதும் இருந்து வந்தது தமிழரே . சுதந்திர இயக்கத்திற்கு எதிரானவர்களாயும் , கொலனித்துவத்திற்கு முண்டு கொடுப்பவர்களாயுமே அவர்கள் செயற்பட்டுள்ளனர்.

மாறாக , இத்தகைய எதிர் நிலை பாத்திரங்களை ஆற்றியவர்கள் சிங்கள இனவாத அரசியல் தலைவர்களே என்பதையும் , தமிழ் மக்களுடைய வரலாற்றுப்பாத்திரமோ முற்றிலும் வேறானதாக , முற்போக்கு தன்மைவாய்ந்ததாகவே இருந்துள்ளது என்பதையும் இங்கு எடுத்துக்காட்ட முடியும் .

சுதந்திர உணர்வு இலங்கையில் 1910 – 1920 களில் முளைவிடத் தொடங்கியிருந்தது . மேட்டுக்குடியினராக தம்மை நிறுத்திக் கொண்ட சிங்கள தலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மையும் , கொழும்பு தமிழ்தலைமையும் இணைந்த " கொவி – வேளாள " கூட்டானது கொலனித்துவ எஜமானர்களுக்குஎதிரான சுந்திர இயக்கத்தை தீவிர மாக முன்னெடுக்க தயாராக இருக்கவில்லை . ஆனால் வடபகுதியிலோ , ஹென்றி பேரின்பநாயகம் அவர்க ளால் ஸ்தாபிக்கப்பட்ட " யாழ் இளைஞர் கொங்கி ரஸ் " அமைப்பானது மிகுந்த உத்வேகத்துடன் சுத ந்திர இயக்கத்தை முன்னெடுத்தது . இவ்வமைப்பு , சாதிய வேறுபாடுகளை எதிர்த்து நின்றதும் ,வகுப்பு வாதங்களை எதிர்த்து தேசிய ஐக்கியத்தை வலியுறு த்தி நின்றதும் ; 1925 ம் ஆண்டில் சிங்களவரான P.D.S. குலரத்தின என்பவரை யாழ் இளைஞர் கொங்கிரஸ்சின் தலைவராக தெரிவு செய்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது . இளைஞர் கொங்கிரஸ்சின் சுதந்திர வேட்கையும் அது காட்டி வந்த தீவிர மும்தான் உண்மையில் கொலனித்துவ ஆட்சிக்கு கிலியை ஏற்படுத்தியது .

1930 களில் பிரித்தானிய ஆதிக்கத்திற்கு எதிரான அலை உலகெங்கிலும் , குறிப்பாக இந்தியாவிலும் வீறார்ந்து எழுந்தபோது இதன் தாக்கம் யாழ் இளை ஞர் கொங்கிரஸிலும் வெளிப்பட்டதை கொலனி ஆட்சி கவனத்தில் எடுத்துக் கொண்டது . இந்தியாவில் தீவிரமடைந்து வரும் சுதந்திர இயக்கத்துடன் இல ங்கையும் இணைந்து விடாமல் தடுக்கவும் , மாறி வரும் உலக சமனிலையில் , சர்வதேச விவகாரங்க ளில் எதிர்காலத்தில் தமது நலன்களுக்கு ஏற்ப செயற் படுமாறு இலங்கையை மாற்றியமைக்கவும் , யாழ் இளைஞர் கொங்கிரஸின் சுதந்திர எழுச்சியை முளை யிலே கிள்ளிவிடவும் , அப்போது தென்னிலங்கை யில் பலம் பெறத் தொடங்கியிருந்த இடதுசாரிசக் திகளை பலவீனப்படுத்தவும் , என ஒரு ஒட்டு மொத்த தந்திரோபாயத்தை கொலனியாதிக்கம் மேற்கொண்டது .

இதுவரையிலும் கொலனியாதிக்கம், தமக்கு பொருத்த மான , விசுவாசம்மிக்க ஏஜென்டுகளாக கரையோர சிங்கள இனவாத தலைமையை இனங்கண்டிருந்தது . எதிர்காலத்தில் இலங்கையின் மீது இந்தியாவின் மேலாதிக்கம் ஏற்படும் என்பதாக சிங்கள தலைவருக்கு பயப்பிராந்தியை ஏற்படுத்திக்கொண்டே , சிங்களதலை மையின் அபிலாசைகளுக்கு ஏற்ப அரசியல் சீர்திருத்த ங்களையும் படிப்படியாக மேற்கொள்ளத் தொடங்கிய கொலனியாதிக்கம் , ஆட்சியதிகாரத்தை தம்விசுவாசி களான சிங்கள இனவாத தலைமையிடம் கையளி த்தது . தமது நலன்களை சார்ந்து நிற்கும் படி கொல னித்துவம் மேற்கொண்ட இந்த உத்திகள் எதிர்பார் த்த பலனை அதற்கு அளித்தது . ஏகாதிபத்திய நலன்க ளுக்கு இசைவாக நடந்து கொண்டு தமது நலன்க ளையும் பேணிக் கொண்டது சிங்கள தலைமை .

இலங்கை தேசிய கொங்கிரஸில் ( C.N.C ) இரு ந்து முரண்பட்டு வெளியேறுவதற்கு முன்பே D.S. சேனநாயக்காவும் அவரை சார்ந்தோரும் கொலனி த்துவ அதிகாரிகளுடன் இரகசிய உறவுகளை பேணி வந்தனர் . தீவிர கொம்யூனிச எதிர்ப்பாளர்களாக தம் மை வெளிப்படுத்தியும் , கொலனித்துவத்தின் குறி ப்பான நலன்களைப் பேணியும் தமது விசுவாசத்தை இவர்கள் நிருபித்தனர் . D.S. சேனநாயக்கா , ஆளு நர் சோல்பரியுடன் இரகசிய ஒப்பத்தங்களை (குறி ப்பாக பாதுகாப்பு ஒப்பத்தங்கள் ) செய்து கொண் டார் . இதற்கெல்லாம் பிரதியுபகாரமாகவே 1947 புதிய அரசியல்யாப்புடன் , சேனநாயக்க தலைமையிலான பிரிவினர் அரசியல் அதிகாரத்தை தம்வசப்படுத்திக் கொண்டனர் .

வடபுலத்திலோ நிலமை வேறுவிதமாக வளர்ச்சியு ற்றது . 1930 களில் நாட்டுக்கு முழுமையான சுதந்

*ஹென்றி பேரின்பநாயகம் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட " யாழ் இளைஞர் கொங்கிரஸ் " அமைப்பானது மிகுந்த உத்வேகத்துடன் சுதந்திர இயக்கத்தை முன்னெடுத்தது . இவ்வமைப்பு , சாதிய வேறுபாடுகளை எதிர்த்து நின்றதும் , வகுப்புவாதங்களை எதிர்த்து தேசிய ஐக்கியத்தை வலியுறுத்தி நின்றதும் ; 1925 ம் ஆண்டில் சிங்களவரான P.D.S .குலரத்தின என்பவரை யாழ் இலைஞர் கொங்கிரஸ்சின் தலைவராக தெரிவு செய்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது .*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திரத்தை கோரும் அரசியல் போராட்டத்தை யாழ் இளைஞர் கொங்கிரஸ் தீவிரமாக்கியது . கொலனி ஆட்சியை பகிஸ்கரிக்கும் குறியீடாக கதர் ஆடை அணியும் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது . 1931 டொனமூர் அரசியல் யாப்பை நிராகரித்து முழுமையான சுதந்திரம் வழங்கும்படி யாழ் இளைஞர் கொங்கிரஸ் கோரியது . நாட்டிற்கு இறைமை , சுதந்திரம் எதையும் வழங்காத முதலாவது தேர்தலை வெற்றிகரமாக பகிஸ்கரித்தது . இதற்காக குடாநாடு தொடர்ச்சியாக நான்கு வருடங்கள் தமது சட்டசபை அரசியல் பிரதிநித்துவத்தை விலையாக கொடுக்க வேண்டியிருந்தது . இது தமிழ் மக்களின் ஒரு வரலாற்றுப்பங்களிப்பாகும் . தொடர்ந்து வந்த காலங்களில் சிங்கள இடதுசாரிகளுக்கும் , சுதந்திர , சமூக ஜனநாயக இயக்கங்களுக்கு முன்னோடியான அமைப்பு என்ற வகையில் யாழ் இளைஞர் கொங்கிரஸின் வரலாற்றுப் பாத்திரமும் இங்கு முக்கியத்துவம் பெறுகிறது .

இன்றைய ஆழமான தேசிய பிளவிற்கான முழுப்பழியையும் கொலனித்துவத்தின் பிரித்தாளும் உத்தியின் மீது மட்டுமே சுமத்திவிட்டு நழுவிப்போய் விடுவது சிங்கள , தமிழ் இடது சாரிகளிடம் காணப்படும் ஒரு பொதுப் போக்காக இருந்து வந்துள்ளது . இந்தக் " கண்டுபிடிப்பை " உச்சாடனம் செய்தே பழகிப்போய் விட்டதால் , ஆழமான சமூக , அரசியல் யதார்த்தங்களை துல்லியமாக மதிப்பிடுவதில் இவர்கள இன்றுவரை பெரிதாக அக்கறை காட்டவில்லை . ஆசிய ஆபிரிக்க நாடுகளில் வேர் கொண்டுள்ள சமூக முரண்பாடுகளின் மையமாக கொலனியாதிக்க முறை இருந்துள்ளதை நாம் நிராகரிக்க வேண்டியதில்லை . இருந்த போதிலும் , இதுவே ஒரு சர்வவியாபக விளக்கமாக ஓர் எல்லைக்கு அப்பாலும் நீட்சி பெறுகையில் , இங்கு கொலனியாதிக்கம் முடிவுக்கு வந்த பின்னரும் , மிக மோசமாக வெளிப்பட்ட ஒடுக்கும் தேசத்தின் குறிப்பான தேசிய வெறியும் , இனவொழிப்பு நோக்கும் ஏதோ வகையில் கண்டு கொள்ளாமலே விடப்படுகிறது .

கொலனித்துவ ஆட்சியின் போது காணப்பட்டதையும் விட புதிதாக சுதந்திரம் அடைந்த அரசுகளின் கீழ் இன முரண்பாடுகள் மிகத் தீவிரமாக வெளிப்படுவதற்கு வேறு பலகாரணங்கள் விளக்கமாக அமைவதுடன் இங்கு இன்னுமொன்றையும் குறிப்பிட முடியும் . அதாவது கொலனித்துவம் தன் ஆளுகைக்கு உட்பட்ட கொலனியில் ஒரு வரையறுக்கப்பட்ட அளவில் தலையீட்டை மேற்கொள்வதாக உள்ளது . ஆனால் புதிதாக அமைந்த சுதேசிய அரசுகளின் ஆட்சிப் பொறுப்புகளானது , மிகவும் பேராசையும் , ஆதிக்கவுணர்வும் கொண்ட சமூகக் குழுவின் பிரதிநிதிகளாக வருபவர்களினது கைகளில்வீழ்வதால் , இவர்கள் தொட்டுணரக்கூடிய எல்லா தளங்களிலும் , துறைகளிலும் தமது ஆதிக்கத்தையும் அடங்கா பசியையும் விஸ்தரித்துச் செல்கின்றனர் . தமது ஆளுகையின் கீழ்வரும் சக சமூகங்களுக்கு என எதையுமே புதிய ஆட்சியாளர்கள் விட்டு வைப்பதில்லை . எனவே முரண்பாடுகளின் கடுமை பல முனைகளிலும் தீவிரமாக வெடித்தெழுகின்றது . என்ற விளக்கத்தையும் சேர்த்துக் கொள்ளலாம் .

நமது சூழலில் நிலவிய ஒடுக்குமுறை அரசியல் , சிங்கள இனவாத தலைமையின் இத்தகைய தவறுகளை ஒட்டுமொத்தமாக கொலனித்துவ பிரித்தாளும் தந்திரத்தின் மீதும் , குறைவளர்ச்சிப் பொருளாதார கோட்பாட்டின் மீதும் சுமத்தி மறைத்து விடுவது ஒருவகையில் இடதுசாரிகள் சிங்கள இனவாதத்திற்கு செய்யும் சேவையாகிறது .

> *இன்றைய ஆழமான தேசிய பிளவிற்கான முழுப்பழியையும் கொலனித்துவத்தின் பிரித்தாளும் உத்தியின் மீது மட்டுமே சுமத்திவிட்டு நழுவிப்போய் விடுவது சிங்கள , தமிழ் இடது சாரிகளிடம் காணப்படும் ஒரு பொதுப் போக்காக இருந்து வந்துள்ளது .*

சிங்கள தேசிய வாதமானது , கொலனித்துவத்திற்கு எதிராக ஆரம்பத்திலிருந்தே போராடி , விரட்டியடிப்பதை விட்டு தமிழ் , முஸ்லீம் சமூகங்களையே தனது வெறுக்கத்தக்க விரோதிகளாக கருதும் நிலைக்கு தன்னை வளர்த்துக் கொண்டது . தன்னுள் பொதிந்துள்ள பிற்போக்கு கூறுகளைகளைந்து, முழு இலங்கைக்குமான தேசியவாதமாக வளர்த்துக்கொள்ள முனை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாததனது தவறை அது ஒப்புக் கொள்ளாமல் , கடந்த காலத்திற்கான முழுப்பழியையும் கொலனியாதிக்கத்தின் மீது சுமத்திவிடுகிறது . சிங்கள , தமிழ் இடதுசாரிகளுக்கோ இந்த பிற்பகுதியை காவிச்செல்வதே இலகு பணியாகி விட்டதன் மூலம் , தாமும் சேர்ந்து இழைத்த வரலாற்றுத் தவறுகளையும் , சொந்த பலவீனங்களையும் கூட இதற்குப்பின்னால் மறைத்து விட முடிந்தது .

*இவ்வாறான வாதங்களுக்கு பின்னே காணப்படுவதுபெரும்பான்மை ( majority ) சிறுபான்மை ( minority ) என்ற பதங்கள் குறித்த குறுகிய தவறான புரிதலாகும் . தற்போது இக்கருத்தினங்கள் முறையே ஆதிக்கம் மற்றும் அடங்கிப்போகும் மனோபாவங் களையும் தமக்குள் கொண்டுள்ளதாக மாற்றப்பட்டுள்ளது .*

## *பெரும்பான்மை ( Majority ) சிறுபான்மை ( Minority ) என்ற கருத்தினங்கள்*

***ஐதீகம் :***

இலங்கை ஒரு ஜனநாயகநாடு , இங்கு பாராளுமன்றத்தில் ஜனநாயகபூர்வமாக மேற்கொள்ளப்படும் முடிவுகளின் படியே ஆட்சி நடைபெறுகிறது . இவ்வாறு ஜனநாயக மரபுப்படி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை தமிழர் விமர்சிப்பதும், தமக்கென அவர்கள் தனிச்சலுகைகள் கோருவதும் தமிழரின் ஜனநாயக விரோத பண்புகளையே காட்டுகின்றது .

இந்த ஐதீகத்தில் ஊன்றிநின்று தம்மை ' பெரும்பான்மை ' எனக் கருதியுள்ளதன் அடிப்படையில் தான் சிங்கள மொழிஅரச கரும மொழியாக்கப்பட்டதையும் , அரசியல் யாப்பில் பௌத்த சிங்கள குடியரசு எனக்குறிப்பிடப்பட்டுள்ளதையும் , சிங்கம் , அரச இலைகள் தாங்கிய தேசிய கொடியையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். தேசிய சிறுபான்மையினராகிய தமிழர் இந்த விடயங்களில் அதிகம் சகிப்புத்தன்மை கொண்டவர்களாக இருக்க வேண்டும் .சிறுபான்மை தமிழர் சிங்களவர்களுக்கு சமமாக தாமும் கோரிக்கைகளை முன்வைப்பது தான் உண்மையில் தவறானதாகும் . இந்த வகையில் சமத்துவம் , தமிழீழம் என்பதெல்லாம் அதிகப்பிரசங்கித்தனமே . இப்படிப்பட்ட கோரிக்கைகளை எழுப்பி சிங்கள மக்களை ஆத்திரமூட்டியதே இன்றைய நெருக்கடிகள் அனைத்திற்கும் மூலகாரணமாகும் . தமிழ் தேசியவாதிகளது புத்திசாலித்தனமற்ற இந்த நடவடிக்கைகள் காரணமாகவே சிங்கள இனவாதம் இவ்வாறு தீவிரமடைந்துள்ளது. . . . . இதுபோன்ற நியாயப்படுத்தல்களின் பின்னணியில் , இடதுசாரிகள் பின்வருமாறு கோருகின்றனர் .

நிலமை இவ்வளவு தூரம் மோசமாகி விட்டது . இதற்குப் பிறகும் கூட தமிழர் தொடர்ந்தும் சிங்களவர்களுக்கு சமத்துவமாக கோரிக்கைகளை எழுப்பி முரண்படாமல் , நல்லெண்ணம் கொண்ட புதிய அரசு இப்போது தானே முன்வந்து தரத்தயாராக இருப்பவற்றைப் பெற்றுக்கொண்டு , இப்போதைக்கு எப்படியாவது அமைதி நிலையை கொண்டுவர முயலவேண்டும் என்கிறார்கள் . தமது கையாலாகாத்தனத்தை மூடிமறைக்கும் இடதுசாரிகளைப் பொறுத்த வரையில் இது ஓர் அற்புதமான ' முன்மொழிவு தான் .

இவ்வாறான வாதங்களுக்கு பின்னே காணப்படுவது பெரும்பான்மை ( majority ) சிறுபான்மை ( minority ) என்ற பதங்கள் குறித்த குறுகிய தவறான புரிதலாகும். தற்போது இக்கருத்தினங்கள் முறையே ஆதிக்கம் மற்றும் அடங்கிப்போகும் மனோபாவங்களையும் தமக்குள் கொண்டுள்ளதாக மாற்றப்பட்டுள்ளது . எனவே முதலில் இங்கு நிலவும் தவறான புரிதல் தெளிவாக்கப்படவேண்டிய அவசியத்தை இது தோற்றுவிக்கிறது .

பெரும்பான்மை , சிறுபான்மை என்ற இந்த கருததாக்கங்கள்வரலாற்று ரீதியில் 1790 களில் பிரித்தானிய லிபரல் ஜனநாயக சூழ்நிலையில் எழுந்தவையாகும் . இவற்றின் பிரயோகம் கலாச்சார ஒருமையுடைய மக்களை பிரஜைகளாக (Citizens) கொண்ட ஒரு அரசுக்கட்டமைப்பின் கீழ் , ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையிலான வாக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களிப்பின் போது பெறப்படும் பெரும்பான்மை பிரிவினரின் அபிப்பிராயம் மிகவும் சரியாக இருக்கும் (அக் குறித்த சர்ந்தப்பத்தில் ) என்று ஓர் இலட்சிய வடிவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது . எனவே ஜனநாயக பூர்வமாக பெரும்பான்மையினரால் தெரிவு செய்யப்படுகின்ற அரசாங்கமானது எல்லோருக்கும் நீதி , நியாயம் , பாதுகாப்புமற்றும் உரிமைகளை வழங்கும் அடிப்படையில் செயற்படும் என்பதாகிறது .

இக்காலப் பகுதியில் தேசியவாத கொள்கை அடிப்படையில் அரசுகள் தோற்றம் பெற்ற போது ஒவ்வொரு அரசின்கீழும் அமைந்த பிரஜைகள் கலாச்சார ஒருமை கொண்ட (Cuttural Homogenity ) சமூகமாகவோ அல்லது வளர்ச்சியுற்று மேலாதிக்கம் பெற்றதாக விளங்கும் கலாச்சாரங்களுடன் ஒன்று கலந்தவர்களாகவோ தமக்குள் இணைந்து கொண்டனர் . இத்தகைய சூழ் நிலையில் பெரும்பான்மை , சிறுபான்மை என்ற பதங்களை கராறாக வரையறுத்து விளக்க வேண்டும் என்ற அவசியம் எழுவதில்லை . காரணம் சமூக குழுமங்களின் அடிப்படையிலோ அல்லது இன , மத , கலாச்சார பன்முகத்தன்மைகளை குறித்துக் காட்டும் வகையிலோ இப்பதங்கள் ஒருபோதும் பயன்படுத்தப்பட்டதில்லை .

அன்றைய பிரித்தானிய சமூகத்தை உதாரணமாக எடுத்துக் கொண்டால் , அங்கு சிறுபான்மை என்னும் பதம் பிரித்தானிய தேசியம் என்ற ஒரே முழுமைக்குள் அடங்குகின்ற ஒரு பகுதியினை மட்டும் சுட்டிக்காட்டுகின்றதே தவிர , எண்ணிக்கையில் அதிகமான ஆங்கிலேயர் பெரும்பான்மை என்றோ ஏனையவை சிறுபான்மை என்ற அர்த்தத்திலோ அல்ல . இங்கு எண்ணிக்கையில் குறைவான ஸ்கொட்ஸ் , வேல்ஸ் போன்ற பிரிவுகளும் பிரித்தானிய தேசம் என்ற ஒரே முழுமையில் சம உரிமைகள் கொண்ட பகுதிகளே . எண்ணிக்கையில் அதிகமானது என்பதற்காக ஆங்கிலேய இனம் எந்த வகையிலும் மேலாதிக்கம் கொண்டதோ தனிச்சலுகைகளுக்கு உரித்தானதோ அல்ல .

ஆனால் திட்டவட்டமாக கலாச்சார ரீதியில் வேறுபட்டு , பன்முக சமூகங்களாக அமைந்த கிழக்கு ஐரோப்பிய , அல்லது மூன்றாம் உலக நாடுகளில் பெரும்பாலானவற்றில் மேற்கு ஐரோப்பாவை ஒத்த சமூக உருவாக்கம் நடந்தேறவில்லை . கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் குறிப்பிட்ட ஒரு அரசின் ஆளுகையின் கீழ் , தனித்துவமான கலாச்சாரம் , மொழி , இனத்துவம் என்பவற்றைக் கொண்ட சமூகங்கள் தனித்தனி இருப்பாக ( Seperate Entity ) அமைகின்றன . இது போன்ற நாடுகளில் அமையும் பிரஜைகள் யாவரையும் ஒரே முழுமையாக ஒரு இருப்பாக ( Single Entity ) எடுத்துக்கொண்டு , இங்குமேற்கு ஐரோப்பிய ஜனநாயக அர்த்தப்படுத்தலை அப்படியே பிரயோகிக்க முனைந்தால் , தெளிவான பன்மைத் தன்மை கொண்ட இச் சமூகங்களில் எண்ணிக்கையில் அதிகமான சனத்தொகை கொண்ட ஒரு சமூக குழுமமானது அரசியல் ஆதிக்கத்தையும் , விசேட சலுகைகளையும் பெற்றுக் கொள்கிறது . உண்மையில் இந்த முறைமையானது ஜனநாயகமே அல்ல , மாறாக இது பெரும்பான்மை வாதம் (Majoritarianism) ஆகிறது .

எனவே இப்படிப்பட்ட நிலைமைகளில் குறிப்பிட்ட நாடானது பல்லின , பன்முக கலாச்சாரங்கள் கொண்ட சமூகங்களின் தொகுப்பாக கொள்ளப்பட்டு , ஏலவே தனித்தனி கலாச்சாரம் கொண்டசமூகங்களை தனித்தனி இருப்பாக கணித்து அவற்றிக்கிடையே சமத்துவம் பேணப்படுவதும் , குறிப்பிட்ட ஒரு இருப்பினுள் ( Entity ) மட்டுமே லிபரல் ஜனநாயக மரபுப்படி மேற்கூறப்பட்டபெரும்பான்மை – சிறுபான்மை என்ற கருத்தாக்கங்களை, பிரயோகிப்பதை சாத்தியப்படுத்தும் வகையிலான ஓர் அரசியல் ஏற்பாடு நடைமுறைப்படுத்தப் படுவதுமே சரியானதாகும் . சமஸ்டி , கொன்பெடரேசன் போன்ற கூட்டாட்சி முறைகள் என்பதன் உண்மையான அர்த்தம் இதுவே . அப்போது தான் ஒவ்வொரு தனியான அலகினுள்ளும் லிபரல் ஜனநாயக விழுமியங்கள் செல்லுபடியானதாய் , அர்த்தமுள்ளதாய் அமையும் . உண்மையான ஜனநாயகத்தில் ஒவ்வொரு பிரஜையும் எல்லா அர்த்தத்திலும் மற்றவருக்கு உள்ள அவ்வளவு உரிமைகளுமே உடையவராகின்றார் . இங்கே இரண்டாம் தர பிரஜை என்ற அம்சமே இருக்க முடியாது .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கையிலும் , இலங்கையர் என்ற ஒரே தேசமாக , ஒரே முழுமையாக சமூக உருவாக்கம் நடைபெறவில்லை . அதாவது சிங்களவரும் , தமிழரும் , முஸ்லீம்களும் , மலையக மக்களும் இலங்கையர் என்ற ஒரே முழுமையின் பகுதிகளாக அமையவில்லை . இவை திட்டவட்டமாக வேறுபாடுகள் கொண்ட தனித்துவமான தேசங்களாகும் .

இவை தமக்கென தனித்தனியான வரலாற்று விதிகளை கொண்டவையாகும் . இந்த அர்த்தத்தில் தமிழ் சமூகமோ , முஸ்லீம் சமூகமோ , மலையக மக்களோ ஒருபோதும் சிறுபான்மை என்பதாக அமையமாட்டாது . மாறாக அவை ஒவ்வொன்றும் தனித்தனி இருப்புகளாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் . ஏதோ ஒரு குறிப்பிட்ட வகை சமூக கட்டமைப்பில் பிரயோகிக்கப்பட்ட பதங்களை முற்றிலும் வேறுபட்ட பின்புலத்தில் அப்படியே அச்சாக பின்பற்றுவது அக்கருத்தாக்கங்களின் அடிப்படை பண்புகளையே தகர்த்து விடுகிறது . மேலும் , இலங்கை அரசியலில் லிபரல் ஜனநாயகம் கூட நேர்மையாக பின்பற்றப்படவில்லை என்பது , மலையக தமிழரின் வாக்குரிமை பறிப்பு , சிங்கள அரச கருமமொழிச் சட்டம் போன்றவை அப்போதைய அரசியல் யாப்பு 29ம் சரத்துக்கு முற்றிலும்முரணாக நிறைவேற்றப்பட்டதன் மூலம் நிரூபணமாகியது .

ஒரே புவியியல் எல்லைக்குள் அமைந்த போதிலும் , இங்கு வெவ்வேறு சமூக குழுமங்களும் , ஒரே தேச முழுமை என அமையும் வகையில் சமூக உருவாக்கம் நிகழ்ந்தேறவில்லை எனக்குறிப்பிட்டோம் . இலங்கை அரசியலில் ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற ஜனநாயக முறைமையானது வளர்ச்சி பெற்ற போது , அது ஒருபோதுமே , ஒருமித்த , அல்லது ஒன்று கலந்த கலாச்சார வகையினத்திற்குள் பெறப்பட்ட பெரும்பான்மை – சிறுபான்மை அபிப்பிராயங்களாக வெளிப்படவில்லை . இங்கு நிலவிய ஜனநாயக முறைமையில் சிங்கள வாக்குகள்... தமிழ் வாக்குகள்... முஸ்லீம்வாக்குகள்......, மலையக வாக்குகள்... என்பதாகவே அபிப்பிராயங்கள் மிகப்பெரும்பாலும் வெளிப்பட்டுள்ளன . இதன் பின்னணியில் சிங்களவர் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தனர் என்ற தகுதியின் மீதே சிங்கள அரசு நிலைநாட்டப்பட்டது . எனவே அது தங்கு தடையின்றி ஏனைய சமூகங்களின் மீது மேலாதிக்கம் செலுத்துவதையும் , அவற்றை ஒடுக்கிப் பணிய வைப்பதையும் தனது ஒரே பண்பாகவும் வரித்துக் கொண்டது .

எனவே தனித்துவமாக நிலவும் தத்தமது தேசியத்துவ அடிப்படையில் நோக்குவோமாயின் , ஒவ்வொன்றிலும் உள்ள ஆள் எண்ணிக்கையை கொண்டு , ஒன்றை பெரும்பான்மை எனவும் , மற்றயதை சிறுபான்மை எனவும் வரைவிலக்கணப் படுத்துவது அர்த்தமற்றது என்பது தெளிவாகிறது . இந்த வகையில் தமிழர் ஒரு சிறுபான்மையோ , துணைக்கலாச்சாரக் குழுமமோ அல்ல . பிரித்தானியாவில் குடிபெயர்ந்து வாழும் ஆசிய சமூகங்கள் போன்றோ , மலேசியாவில் வாழும் சீனர்களை போன்றோ , கிழக்கு ஆபிரிக்காவில் வாழும் இந்தியர்களைப் போன்றோ , இவர்கள் அமையமாட்டார்கள் . மேற்குறிப்பிட்ட குழுமங்கள் கலாச்சார சிறுபான்மையினராகவும் , தமக்கென சுயாதீன அரசியல் நிறுவனங்களை ஸ்தாபிக்கும் வலிமை அற்றவர்களாயும் , அந்தந்த நாடுகளிலுள்ள அரசுக்கட்டமைப்புக்களை மாற்ற அல்லது திருத்தியமைக்க முடியாதவர்களாயும் உள்ளனர் . இவர்களே தேசிய சிறுபான்மையினர் என்று அழைக்கப்படுவர் . ஆனால் ஈழத்தமிழர்களோ மேற்படி சமூகக் குழுமங்களை விடவும் தேசிய பண்பில் வேறுபட்டவர்களாகும் . இவர்கள் தனித்துவமான ஒரு தேச

*இலங்கையிலும் , இலங்கையர் என்ற ஒரே தேசமாக , ஒரே முழுமையாக சமூக உருவாக்கம் நடைபெறவில்லை . அதாவது சிங்களவரும் தமிழரும் , முஸ்லீம்களும் , மலையக மக்களும் இலங்கையர் என்ற ஒரே முழுமையின் பகுதிகளாக அமையவில்லை . இவை திட்டவட்டமாக வேறுபாடுகள் கொண்ட தனித்துவமான தேசங்களாகும் .*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாக அமைகின்றார்கள் . கணிசமான எண்ணிக்கை யிலும் செறிவாயும் வாழும் அவர்களுக்குஎன பிரத்தியேக தாயகம் உண்டு . தாமும் தமது முன்னோர்களும் பிறந்து , வாழ்ந்து போராடிய நிலம் உண்டு , முன்னேறிய மொழி , கலாச்சாரம் என்பவற்றை தமக்கென கொண்டவர்கள் . இப்போது நிலவும் அரசுக் கட்டமைப்பை மாற்ற அல்லது தமக்கென புதிதாக ஒன்றை படைக்க தகைமையும் , வல்லமையும் கொண்டவர்கள் . அதாவது தமக்கென ஒரு தனியான வரலாற்று விதியை கொண்டுள்ள இவர்கள் தேசிய சிறுபான்மையினர் அல்ல , மாறாக இவர் தனியான ஒரு தேசமாக அமைகிறார்கள். தமக்கென சொந்த அரசை அமைக்கும் சுயநிர்ணய உரிமைகொண்ட தேசமாக அவர்கள் அமைகின்றார்கள் .

இதுவரையிலான விளக்கத்தின் அடிப்படையில் நோக்கு வோமாயின் சிங்கள தேசமானது எண்ணிக்கை என்ற ஒரேயொரு தகைமையை கொண்டு ஏனையவற்றின் மீது ஆதிக்கம் செலுத்துவதை பிறப்புரிமையாக கொள்வதும்; தனிச்சலுகை கோருவதும் சரியானதே என்ற வாதம் எத்துணை அபத்தம் என்பதை புரிந்து கொள்ளலாம் . இயல்பாகவே தன்னளவில் ஆதிக்கத்தன்மை கொண்டதாகமாறிவிட்ட ' பெரும்பான்மை ' என்ற கருத்தினம் ஏனைய சமூகங்கள் மத்தியில் திட்டமிட்டுக் கொண்டு செல்லப்பட்டுள்ளது . இது அவர்கள் எமக்கு சலுகைகளை தருபவர்களாயும், நாமோ அவற்றைகையேந்தி பெறவேண்டியவர்களாகவும் உள்ளோம் என்ற அதிகார அடுக்கு மனோபாவத்தின் இருப்பாகவும் இன்று மாறியுள்ளது . இடதுசாரி கட்சிகள் தமிழ் மக்களை குறிக்கும் போது தமிழ் தேசம் என்ற பதப்பிரயோகத்திற்கு பதிலாக ' சிறுபான்மை இனம் ' எனக் குறிப்பிடுவது, அவர்களும் இந்த பெரும்பான்மைவாதத்திற்கு பலியாகிப் போனதன் அடையாளமாகவே உள்ளது .

இந்த ஐதீகத்தை அப்படியே ஏற்றுக்கொண்டதன் காரணமாகவே , சிங்கள அரசானது சமாதான பேச்சுவார்த்தைகளில் தனது முன்மொழிவுகளை வைக்க முன்பே , தமிழ் மக்கள் எப்படியாவது அரசுதருவதை ஏற்றுக் கொண்டு அமைதியாகிவிட வேண்டும் எனசில தமிழ் இடதுசாரிகளும் கூடகோருகின்றனர் . இப்படிப்பட்டவர்கள் உண்மையிலேயே சிங்கள இனவாதத்தின் ஊது குழல்களே , இவர்களை தமிழ் பேசும் சிங்கள சோவனிஸ்டுகள் என்று அழைத்தால் கூட அதில் தவறில்லை .

> *இலங்கையில் எப்போதாவது சிங்களதேசம் ஏனைய தேசங்களுடன் சேர்ந்து அமைதியாக வாழ்வதாயின் அது பல தேசங்களின் இருப்பை அங்கீகரித்து , அவற்றுடன் சமத்துவமாக வாழ்வதன் மூலம் மட்டுமே சாத்தியப்படலாம் .*

இலங்கையில் எப்போதாவது சிங்களதேசம் ஏனைய தேசங்களுடன் சேர்ந்து அமைதியாக வாழ்வதாயின் அது பல தேசங்களின் இருப்பை அங்கீகரித்து , அவற்றுடன் சமத்துவமாக வாழ்வதன் மூலம் மட்டுமே சாத்தியப்படலாம் . அப்போது தேசிய கொடி , அரசியல் யாப்பு , தேசியகீதம் , உட்பட அனைத்துமே இந்த ஜனநாயக விழுமியங்களை தாங்கி நிற்கவேண்டும் . அத்துடன் கடந்த காலங்களில் தன்னால இழைக்கப்பட்ட அநீதிகளை சிங்கள தேசம் பகிரங்கமாக ஒப்புக் கொண்டு அவற்றிற்கான பரிகாரங்களையும் செய்தாக வேண்டும் . இதனை சாத்தியப்படுத்தும் வகையில் இடதுசாரிகள் சிங்களதேசத்தை சுயவிமர்சனம் செய்யுமாறு தூண்டுவதற்குப் பதிலாக ஒடுக்கப்பட்ட தமிழ் தேசத்திடம் சகிப்புத்தன்மையை கோருவது சிங்கள இனவாதத்தின் ஒரு குரலாக இவர்களும் மாறிவிட்டதையே காட்டுகிறது .

## மலையக தமிழர் குறித்த இனவாத புனைவுகள்

ஐதீகம் : – மலைநாட்டு சிங்களவரின் வறுமைக்கும் நிலப்பிரச்சனைக்கும் காரணம் , இந்திய தமிழர் சிங்களவரின் நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டதுடன் அவர்களின் பொருளாதாரத்தை சூறையாடி , தொழில் வாய்ப்புக்களையும் பறித்துக்கொண்டதேயாகும் .

நவீனயுகத்தில் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டு நாடற்ற மக்களாக, நவீன அடிமைகளாக நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக அடக்கப்பட்டவர்கள் இந்த மலையக தமிழராகும் . பொருளாதார



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முதுகெலும்பாக அமைந்த இவர்கள் குறித்து சிங்கள தேசத்தின் மத்தியில் பரப்பப்பட்டுள்ள புனைவுகள் ; இதனால் மலையக தமிழர் பற்றி சிங்கள தேசம் கொண்டுள்ள மனோபாவம் ; இதனை அடிப்படையாக கொண்டு சமூக அளவில் மலையக தமிழர் பலிகொள்ளப்பட்டது யாவும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாகும்

மலையக தமிழர் மீது சிங்களவர் கொண்டுள்ள காழ்ப்புணர்விற்கும் , குரோதத்திற்கும் தோற்றுவாயாக அமைவது , இவர்கள் சிங்களவரின் நிலத்தையும் மற்றும் பொருளாதார வளங்களையும் , தொழில்வாய்ப்புக்களையும் பறித்துக் கொண்ட ஒரு கூட்டம்என்ற ஆழமான நம்பிக்கையாகும் . ஜே . வி . பி போன்ற இடதுசாரி தீவிரவாத அமைப்புக்கள் கூட இந்த ஐதீகங்களை உள்வாங்கிச் செறித்துக் கொண்டதன் விளைவே , அவர்களின் பிரசித்தி பெற்ற ஐந்து அரசியல் வகுப்புகளில் ஒன்றாகும் . ஏன் தமிழர் மத்தியிலுள்ள இடதுசாரி , முற்போக்கு சிந்தனை கொண்ட பலரையும் கூட இந்த ஐதீகம் ஏதோ ஒருவகையில்விட்டு வைக்கவில்லை என்பதால் இது குறித்து உண்மை நிலையானது இங்கு எடுத்துக்காட்டப்பட வேண்டியுள்ளது . மலையக மக்களின் வரலாறு குறித்து விரிவான படைப்புகள் அனேகம் உள்ளன . நாம் இங்கு அவர்கள் பற்றிய ஐதீகங்களை ஒட்டிய சில விடயங்களை மட்டுமே எடுத்துக் கொள்கிறோம் .

சிங்கள விவசாயிகளின் விவசாய நிலங்களை மலையக தமிழர் ஆக்கிரமித்துக் கொண்டார்கள் என்ற கட்டுக்கதையை எடுத்துக் கொள்வோம் . 1880கள் வரையிலும் மலைநாட்டில் சிங்கள கிராமங்களை அண்டிய தாழ்மலை பிரதேசங்களில், கோப்பிச் செய்கையே பிரதானமாக இருந்துள்ளது . வசதிபடைத்த சிங்கள விவசாயிகளும் கூட இத்துறையில் ஓரளவு ஈடுபட்டிருந்தனர் . இக் கட்டத்தில் இந்திய தமிழ் தொழிலாளர் பெருமளவில் இலங்கைக்கு கொண்டு வரப்படவோ அல்லது நிரந்தரகுடிகளாக நிலைகொள்ளவோ இல்லை . அப்படி ஓரளவு எண்ணிக்கையில் இங்கு வந்தாலும் அது கோப்பி அறுவடை காலத்தில் மட்டும் வந்து திரும்பிச் செல்பவர்களாகவே இருந்துள்ளனர்.

1880களின் பின்பு தேயிலை செய்கை அறிமுகப்படுத்தப்பட்ட போது கடும் குளிரும் , ஈரலிப்பும் கொண்ட , சிங்கள குடியிருப்புகள் ஏதுமற்ற, உயர் மலைப்பிரதேசங்களில், அடர்ந்த காடுகள் அழிக்கப்பட்டே தேயிலை செய்கை சிறு அளவில் தொடங்கப்பட்டது . லயன்களில் அடைக்கப்பட்டு , இயற்கைக்கும் , மூலதனத்திற்கும் தமது வாழ்வை ஈந்த மலையக தமிழரின் வரலாறு இங்கு தொடர்கிறது எனலாம் .

தேயிலையின் மூலம் கிடைத்த பேரிலாபம் காரணமாக பெருந்தோட்டத்துறை வேகமாக விஸ்தரிக்கப்பட்டது . பிரித்தானிய மூலதனம் பெருமளவில் இங்கு பாய்ந்தது . மூலதன உட்பாய்ச்சலுக்கு ஏற்ப கொலனித்துவ அரசு வாய்ப்புகளை விஸ்தரித்துக் கொடுத்தது. தேவைக்குஏற்ப சட்டங்களை இயற்றி பாரியளவு காடுகளையும் , தரிசு நிலங்களையும், பயன்பாடின்றி கிடந்த மடாலய காணிகளையும் சுவீகரித்து பெருந்தோட்டதுறைக்கு வழங்கியது . உள்ளூர் மேட்டுக்குடி பிரிவினரும் இந்நடவடிக்கைகள் தொடர அரசுக்கு துணை நின்று தாமும் சலுகைகளை பெற்றுக் கொண்டனர் . தீவிரமான நிலத்தேவை என்பது கிராமப்புற சிங்கள மக்கள் மத்தியில் அக்கட்டத்தில் இருக்கவில்லை என்பதால் அவர்களிடம் இருந்து குறிப்பிடத்தக்க எதிர்ப்புகள் கிளம்பவில்லை .

பெரும் தோட்டத்துறையின் விரிவிற்கு ஏற்ப புதிதாக ஆயிரக்கணக்கில் இந்திய தமிழ் தொழிலாளர் இங்கு கொண்டு வரப்பட்டனர் . 1827இல் 10000 ஆக , 1847இல் 50000ஆக , இருந்த எண்ணிக்கையானது 1911இல் 457765 ஆகவும் 1946இல் 665853 ஆகவும் அதிகரித்தது .

பிந்திய தசாப்தங்களில் சிங்கள விவசாயிகளின பயன்பாட்டுக்குகந்த நிலப்பகுதிகள் வரையிலும் பெருந்தோட்டம் விஸ்தரிக்கப்பட்டது . அதே சமயம் சனத்தொகை பெருக்கத்திற்கு ஏற்பகுடியிருப்பிற்கும் , விவசாயத்திற்குமான நிலத்தேவையும் அதிகரித்துச் சென்றது . அரசியல் அதிகாரம்உள்ளூர் சிங்கள தலைமைகளின் கைகளுக்கு மாறவிருந்த காலகட்டத்திலும் , அதற்குப்பின்னரும் சிங்கள மக்களால் நிலத்தேவை தீவிரமாக உணரப்பட்டது . கொலனித்துவ ஆட்சி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*சிங்கள விவசாயிகளின் நிலப்பிரச்சனைக்குக் காரணம் எனக் குற்றம் காணப்பட்ட மலையகதமிழர்களோ இன்று வரையிலும் துண்டுக் காணிகள் கூட சொந்தமில்லாதவர்களாக , நெருக்கமான லயங்களில் , தாய் , தந்தை , வயதுவந்த பிள்ளைகள் , திருமணமான பிள்ளைகள் அனைவருமேஒன்றாக அடை பட்டுக் கிடக்கின்றனர் . இந்த ஒற்றை லயங்களையும் கூட சொந்தம் பாராட்ட முடியாதவர்களாகவே அவர்கள் உள்ளனர் .*

யாளரிடம் இருந்தும் , பெருந்தோட்டத் துறையில் இருந்தும் வாய்ப்புகளை பெற்று சுகம் அனுபவித்து வந்தசுதேசிய ஆளும் வர்க்கங்களும் , சிங்கள அரசியல் தலைமையும் சிங்கள மக்கள் மத்தியில் அதிகரித்து வரும் பதட்டத்தை உணர்ந்து கொண்டன . இவ்வெதிர்ப்பு நிலையானது தம்மை நோக்கி வடிவம்பெற முன்னமே அவற்றை திசை திருப்பியாக வேண்டியிருந்தது . ஏற்கனவே நிலவிய இந்தியர் வெறுப்பை தளமாகக் கொண்டு , மலையக தமிழ் தொழிலாளரை நோக்கி , கொந்தளித்துக் கொண்டிருந்த சிங்கள மக்களின் உணர்வுகளை திருப்பி விட்டனர் . இதன் மூலம் , கொலனித்துவ ஆட்சிக்கும் , பெருந் தோட்டதுறை மூலதனத்திற்கும் இதுவரை உடந்தையாக இருந்து வந்த தமது துரோகத்தனத்தை மறைத்துக் கொண்டனர் . மேலும் 1931 டொனமூர் அரசியல் யாப்பின் அடிப்படையில் தாம் அரசியல அதிகாரத்தைப் பெற்று கொள்ளும் பேரவாவும் இத்துடன் சேர்ந்து மலையக தமிழருக்கு எதிரான செயற்பாடுகளை சிங்கள தலைமைகளிடம் தீவிரப்படுத்தியது .

சிங்கள விவசாயிகளின் நிலப்பிரச்சனைக்குக் காரணம் எனக் குற்றம் காணப்பட்ட மலையக தமிழர்களோ இன்று வரையிலும் துண்டுக் காணிகள் கூட சொந்தமில்லாதவர்களாக , நெருக்கமானலயங்களில் , தாய் , தந்தை , வயதுவந்த பிள்ளைகள் , திருமணமான பிள்ளைகள் அனைவருமே ஒன்றாக அடைபட்டுக் கிடக்கின்றனர். இந்த ஒற்றை லயங்களையும் கூட சொந்தம் பாராட்டமுடியாதவர்களாகவே அவர்கள் உள்ளனர்.

பெருந்தோட்டதுறையில் மலையக தமிழர் ஈட்டிக் கொடுத்த வருமானத்தின் பெரும்பகுதியானது பெரிய ,சிறிய , தோட்டவுடமையாளருக்கும் , அது சார்ந்த துறைகளில் மூலதனமிட்டவர்களுக்கும் செல்ல , எஞ்சிய பகுதி நாட்டிலுள்ள ஏனைய மக்களின் நலன்புரி சேவைகளுக்கும் , அரசு நிர்வாகத்திற்கும் , அரசு யந்திரங்களை போஷிக்கவும் செலவிடப்பட்டது. ஆனால் தோட்ட தொழிலாளரோ அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டவர்களாக மட்டுமல்ல , தொடர்ச்சியான இன வன்முறைகளுக்கும், பலியாகினர் மலையக தமிழரே சிங்களவரின் வறுமைக்கும் , நிலப்பிரச்சனைக்கும் அடிப்படைக் காரணம் என்பதாக இனவாத தலைமைகள் பரப்பிய கருத்துக்கள் , பின்னர் இதே தலைமை தமது அரசியல் அதிகாரத்தை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் வகையில் மலையக தமிழரின் குடியுரிமை ,வாக்குரிமை என்பவற்றை மிகவும் சுலபமாக பறித்துக் கொள்ளவும் துணையாக அமைந்தது அதற்கான வெகுசன தளங்களை நன்கு தயார் செய்திருந்தது . இத்துடன் இந்திய ஆக்கிரமிப்பின் ஒரு நேரடியான வடிவமே மலையக தமிழராகும் என்ற முட்டாள் தனமான நம்பிக்கை படித்த சிங்களமக்களையும் கூட பீடித்துள்ளது என்றால் , குறித்த ஐதீகங்களின் வலிமையை நன்கு புரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ந்து கொள்ளமுடிகிறது .

" சுதந்திரத்திற்கு " முன்பிருந்தே சிங்கள இனவாதம் பரப்பி வந்துள்ள மற்றுமொருபுனைவு , இந்திய தமிழர் சிங்களவரின் பொருளாதாரத்தை சூறையாடி தம் நாட்டிற்கு கொண்டு சென்றனர் என்பதாகும் . மலையக தமிழரின் குடியுரிமையை பறித்தெடுக்க முன்னேற் பாடாக D.S. சேனநாயக்க முன்வைத்த அப்பட்டமான பொய்பிரச்சாரம் , இந்திய தமிழர் சிங்களவரின் பொருளாதாரத்தை சூறையாடி , சமூக வாழ்வையும் நாசம் செய்கின்றார்கள் என்பதாகும் .

மலையக தமிழர் ஆக்கிரமிப்பு நோக்குடன் இங்கு வந்தவர்கள் அல்ல, அவர்கள் ஒருவிதத்தில் பலவந்தப்படுத்தப்பட்டும் , ஆசைகாட்டி ஏமாற்றப்பட்டும் வெள்ளையரால் தென்னிந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டவர்களாகும் . இவர்கள் இலங்கையில் மட்டுமல்ல , மலேசியா , தென்னாபிரிக்கா , கிழக்கு ஆபிரிக்கா போன்ற நாடுகளுக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் .

* *இதற்கென தென்னிந்தியாவில் செயற்கையாகவே பஞ்சம் , பட்டினி உருவாக்கப்பட்டது .*

* *கூலியடிமைகளாக வந்தவர்களில் பெரும்பாலானவர்கள் பஞ்சைகளாகவும் , ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் , சாதிகளை சேர்ந்தவர்களாயும் இருந்தனர் .*

* *மீளாக் கடனாளிகளாக இருந்து வந்த இவர்கட்கு இலங்கை பொன் விளையும் பூமி என்பதாக ஆசை காட்டப்பட்டது . .*

* *இலங்கை கரையோரங்களில் இறக்கப்பட்டு அங்கிருந்து காட்டுவழியூடாக , நடத்தியேகொண்டு வரப்பட்டனர் .*

* *வீதிகள், ரயில்பாதைகள் அமைப்பது, காடுகளை அழித்தல் , தோட்டங்களை தயார் செய்தல் போன்ற அனைத்தையும் இயந்திர சாதனங்கள் இன்றி இவர்களே உடல் உழைப்பால் இரவு பகலாக செய்து முடித்தனர் .*

* *நோய்களாலும், பட்டினியாலும், கடும் உழைப்பினாலும் ஆயிரக்கணக்கில் மாண்டு போயினர் .*

* *அடிமைகள் போல , புற உலக தொடர்புகள் இன்றியே தோட்டங்களினுள் முடக்கிவைக்கப்பட்டிருந்தனர் .*

இப்படிப்பட்ட பரிதாப நிலையில் காணப்பட்ட இவர்களை தான் சிங்களவர்களின் நிலங்களை ஆக்கிரமித்து , பொருளாதாரத்தை சூறையாட வந்தவர்கள் என்பதாக ஐதீகம் உருவாக்கப்பட்டிருந்தது .

1940 ம் ஆண்டில் D.S. சேனநாயக்க இவ்வாறு கூறினார். . . .

*" . . . . இலங்கையை தமது நிரந்தரமான தாயகமாக்கிக் கொள்ளாத மக்களுக்கு முழுமையான குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்பது சிந்திக்கவே முடியாத ஒன்றாக உள்ளது . இலங்கையில் இருக்கும் மிகப் பெரும்பான்மையான இந்தியர்கள் இந்தியாவை தமது தாயகமாகவும் இலங்கையை தொழில்பார்க்கும் இடமாகவும்கருதுகின்றனர் . பணத்தை சம்பாதிக்கவும் அதனை இந்தியாவிற்கு எடுத்துச் செல்லவுமே அவர்கள் இங்கு உள்ளனர். இலங்கையின் பொருளாதாரத்திலும் சமூகவாழ்விலும் வளர்ந்து செல்லும் இந்திய ஆதிக்கம் என்ற இந்த இடரை நாம் களையாவிட்டால் இலங்கை தேசம் என்ற எமது இருப்பு அழிவுக்குள்ளாவது தவிர்க்க முடியாததாகிவிடும். . . . "*

கொலனியாதிக்கத்தின் கீழ் முழு நாட்டையும் அடிமைத்தளையிட்டு , கோடிக்கணக்கில் சுரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ட்டிச் சென்ற வெள்ளை முதலாளிகளின் சுரண்டல் ஆட்சி முறைக்கு துணைபோன சிங்கள மேட்டுக் குடி தலைமைகள் , ஒருசில இந்தியச் செட்டிகளை எடுத்துக்காட்டி , முழுத் தமிழ் தோட்டத் தொழிலாளர் மீதும் ஏனைய மலையக தமிழர் மீதும் வெறுப்புணர்வையும் , குரோதத்தையும் தூண்டிவிட்டு அரசியல் இலாபம் அடைவதே இதன் பின்னாலுள்ள உள் நோக்கம் ஆகும் .

பெருமளவில் பஞ்சப்பட்ட மக்களாகவும் , மீளாக் கடனாளிகளாகவும் கொண்டு வரப்பட்டு தோட்டத் தொழிலாளருக்கு , அவர்களின் நாள் கூலியானது அன்றாட அடிப்படைத் தேவைகளுக்கே போதுமானதாக இருககவில்லை . இவர்களின் குடும்ப அங்கத்தவர்களில் பாதிப் பேர் இந்தியாவில் என்பதால் , ஒரு சில ரூபாய்களைமீதப்படுத்தி அவ்வப்போது இந்தியா சென்று வந்தனர் . 1930 களின் பின் புதிய சந்ததி தலையெடுத்ததுடன் இவ்வாறு போய் வருவதும் கூட பெரும்பாலும் நின்று போயிற்று . இப்படிப்பட்டவர்கள் இலங்கையின் பொருளாதாரத்தை கொள்ளையிட்டு இந்தியாவிற்கு கொண்டு செல்வதான ஒரு கருத்து இனவாதத்தால் பரப்பப்பட்டது .

1940 ல் , கூறப்பட்ட D.S. சேனநாயக்காவின் மேற்படி கூற்றானது , திட்டவட்டமான ஓர் இட்டுக்கட்டலேயாகும் . அக்காலத்தில் , பொருளாதாரம் சமூக வாழ்வு என்ற இரண்டு தளங்களிலும் மலையக தமிழர் சிங்களவர்களுக்கோ ஏனையவர்களுக்கோ பாதிப்புகளை ஏற்படுத்தியதாக அவர் கூறியதில் , எவ்வித உண்மையும் கிடையாது . ஆனால் அவர் குறிப்பிடாது விட்டுச் சென்ற ஒன்றில் தான் அவருக்கும் அவர் சார்ந்த வர்க்க நலன்களுக்கும் பாதிப்பு இருந்து உள்ளது . அதுதான் அரசியல் என்ற தளமாகும் .

இலங்கையின் அரசியல் வாழ்வில் மலையக தமிழர் தீர்மானகரமான தாக்கத்தை 1940களில் ஏற்படுத்தியிருந்தார்கள் . சேனநாயக்க அதிகார கூட்டினை அச்சுறுத்தியது இதுவே . குடியுரிமையினை பறிக்கும் ஆழ்ந்த சூழ்ச்சியின் உண்மையான பின்னணி அவர்களின் வாக்குரிமைகளை பறித்து அரசியல் அனாதைகளாக்கி , தமது தனிப்பட்ட வர்க்க , இனவாத ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொள்வதுதான் .

*அதாவது சுதந்திரமான ஓர் அரசு தன்னைத் தானே நிர்வகித்துச் செல்ல அன்று உதவியது இம் மக்களின் உழைப்பேயாகும் . இந்த வகையில் இலங்கையை சுதந்திரத்திற்கு தகுதி பெற வைத்ததே மலையக தமிழர்என்றாகிறது அல்லவா ?*

முதலாவதாக. . . . அன்றைய சனத்தொகை கணக்கெடுப்பின்படி , இலங்கைத் தமிழருடன் , இந்திய தமிழரும் சேர்ந்தால் மொத்த சனத்தொகையில் 23 வீதம் தமிழர் என்றாகிவிடும் . இத்துடன் சிங்களவர் அல்லாதவர்கள் என்ற வகையில முஸ்லீம்களையும் சேர்த்துக் கொண்டால் அது 30 வீதம் என்றாகிவிடும் . இது அரசியல் அதிகார அமைப்பில் தீர்க்கமான தாக்கத்தை ஏற்படுத்தும் . அதாவது சேனநாயக்கவின் கனவாகிய அரசு அதிகாரத்தை தம் வர்க்க நலன் சார்ந்து சிங்கள மயமாக்குவதற்கு சட்டவாக்கத்துறையில் இது பெரும் தடையாகி விடும் .

இரண்டாவதாக . . . . மலையக தமிழர் அன்று இலங்கை பொருளாதாரத்தில் திட்டவட்டமாக ஒரு சாதகமான (Positive) தாக்கத்தை ஏற்படுத்தினர் என்பதைகுறிப்பிட வேண்டும் . அதாவது 1940 களில் இலங்கைக்கு பூரண சுதந்திரம் வேண்டும் என்ற கோரிக்கை பரவலாக தீவிரம் பெற்ற போது , கொலனித்துவ அரசு இதற்கு ஒரு முன்னிபந்தனை விதித்திருந்தது . இலங்கை ஸ்திரமான பொருளாதாரத்தை கொண்டிருக்க வேண்டும் என அது கோரியது . இந்த முன் நிபந்தனையை அன்று முழுமைப்படுத்தி கொடுத்தது மலையக தமிழர் தம் தோள்களில் சுமந்திருந்தபெருந்தோட்ட துறையாகும். அதாவது சுதந்திரமான ஓர் அரசு தன்னைத் தானே நிர்வகித்துச் செல்ல அன்று உதவியது இம் மக்களின் உழைப்பேயாகும் . இந்த வகையில் இலங்கையை சுதந்திரத்திற்கு தகுதி பெற வைத்ததே மலையக தமிழர் என்றாகிறது அல்லவா ?

மூன்றாவதாக. . . . 1930 –1 940 களிடையே மலையக தோட்டத் தொழிலாளர் வர்க்கப்போராட்டங்களில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தீவிரமாக ஈடுபட்டு தம்மை ஒரு அரசியல் சக்தியாக வெளிப்படுத்தியிருந்தனர் . இது ஆளும் வர்க்கங்களின் பொருளாதார அரசியல் ஆதிக்கத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்துள்ளது .

நான்காவதாக. . . . இக்காலகட்டத்தில் இடதுசாரிகள் பாராளுமன்றத்தில் கணிசமான ஆசனங்களை பெற்று பலமான எதிர்க்கட்சியாக அமைந்ததற்கு மலையக தொழிலாளர் அளித்த வாக்குகளும் பிரதான காரணமாக அமைந்தது .

ஐந்தாவதாக. . . . மலையக தமிழர் இலங்கையின் பொதுவான சமூக வாழ்வில் எதிர்மறை செல்வாக்கு செலுத்தக் கூடியதாக அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை . அவர்கள் அயல் சமூகங்களுடன் தொடர்பேதும் இன்றி பேருந் தோட்டங்களினுள் முற்றாகமுடுக்கப்பட்டிருந்தனர் . எஞ்சிய பிரிவினர் நகர்ப்புற மலிவுக்கூலிகளாயும் , நகரசுத்தி தொழிலாளராயும் , வீட்டுப்பணியாட்களாகவுமே இருந்துள்ளனர் .

இவ்வாறான பின்னணிகளில் மலையக தமிழர் பற்றிய இனவாத பொய் பிரச்சாரத்தின் உள் நோக்கினை புரிந்து கொள்ளலாம் .

## *குடியுரிமை , வாக்குரிமை பறிப்புகளும் இடதுசாரிகளின் போராட்டமும்*

**ஜதீகம் : –** மலையக தமிழரின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டதற்கு எதிராக தாம்முன்னின்று தீவிரமாக போராடிய போதிலும் அவர்கள் வர்க்க குணாம்சத்தையும் இழந்து , இடதுசாரிகளையும் கைவிட்டு இலங்கை – இந்திய கொங்கிரஸ் முதலாளித்துவ தலைமையிடம் சரணடைந்தனர் .

இவ்வாறு இடதுசாரிகள் தொடர்ந்தும் கூறி வருகின்றனர். தோட்டத் தொழிலாளர் தொடக்கத்தில் மதம் , மொழி , கலாச்சாரம் என்ற அடிப்படைகளிலும் பார்க்க வர்க்கரீதியிலேயே தம்மை கூடுதலாக இனங் காட்டி வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது . 1930 களில் இடதுசாரி தொழிற்சங்கங்களின் கீழ் அணிதிரண்டு தீவிரமான போராட்டங்களை நடாத்தியுள்ளனர் . ஆனாலும் குடியுரிமை , வாக்குரிமை என்பனபறிக்கப்பட்ட போது, தாம் நம்பியிருந்த பிரதான இடதுசாரி அமைப்புகளால் இவர்கள் கைவிடப்பட்டனர் என்பதை இங்கு எடுத்துக்காட்ட முடியும் .

தோட்டத் தொழிலாளரின் குடியுரிமை , வாக்குரிமைக்காக போராடியதாக கூறும் இடதுசாரிகள் , தாம் பாராளுமன்றத்தில் கைகளை உயர்த்தி குறிப்பிட்ட சட்டமூலத்தை எதிர்த்து வாக்களித்ததைத் தான் தீவிர போராட்டம் என்கிறார்கள் . இதற்கு மேல் அனைத்து தோட்ட தொழிலாளர்களையும் , ஏனைய நகர்புற தொழிலாளர்களையும் ஒன்றிணைத்து இடதுசாரிகளால் தீவிரமாக போராட முடியாது போனது ஏன் ? இடதுசாரிகளின் அப்போதைய பலவீனமான நிலையும் , இயலாமையும்தான் இதற்கு காரணம் என எவரும் இதனை நியாயப்படுத்த முடியாது . ஏனெனில் சமகாலத்திலும் அதற்கு முன்னரும் பின்பும் இடதுசாரிகள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தேயுள்ளனர் . தோட்டத் தொழிலாளரும் கூட இடதுசாரி அமைப்புகளின் வழிகாட்டுதலின் கீழ் பொருளாதார போராட்டங்களில் பங்கு பற்றியுள்ளனர். 1939 இல் L.S.S.P இன் தலைமையில் தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். அரசும் , தோட்ட முதலாளிகளும் பிரயோகித்த வன்முறைகளுக்கு மத்தியிலும் இப்போராட்டம் நடைபெற்றுள்ளது . 2ம் உலகப்போருக்குப் பின்பு தலைமறைவில் இருந்து வெளிப்பட்ட L.S.S.P தலைமை 1947இல் பெரும் பெரும் ஆர்ப்பாட்டங்களையும் , வேலை நிறுத்தம் ஒன்றையும் வெற்றிகரமாக மேற்கொண்டிருந்தது . அதே ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் இடதுசாரிகள் பதினான்கு ( 14 ) ஆசனங்களை பெற்று எதிர்க்கட்சியாக அமர்ந்து கொண்டனர் . தோட்டத் தொழிலாளரின் கணிசமான வாக்குகளும் கூட இதற்குகாரணமாகும் . 1953இல் டட்லியின் அரசாங்கத்தை ஸ்தம்பிக்கச் செய்யும் வகையில் ஹர்த்தால் இயக்கத்தையும் , வேலை நிறுத்தங்களையும் இடதுசாரிகளால் முன்னின்றுநடாத்த முடிந்தது .

இவ்வாறாக அக்காலகட்டத்தில் பலமான நிலையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்துள்ள இடதுசாரிகள் , தமிழ் தோட்டத் தொழி லாளரின் குடியுரிமை , வாக்குரிமை பறிக்கப்பட்ட போது மட்டும் பாராளுமன்றத்தில் கைகளை உயர்த்தி எதிர்ப்பு தெரிவித்ததுடன் நின்று விட்டனர் . இடதுசாரிகள் தீவிரமாக எதிர்த்து போராடியிருக்க வேண்டும் என்றால் அது ஆயுதபோராட்டமாக இருந்திருக்க வேண்டும் என்பதல்ல . வெகுசன போராட்டங்களாகவும் ,வேலைநிறுத்தங்கள் , மற்றும் ஆர்ப்பாட்டங்களாகவும் கூட அவை இருந்திருக்க முடியும் . இவர்களின் செயலின்மையில் அதிருப்தியுற்று நம்பிக்கையிழந்த தோட்டத்தொழிலாளர்களை இலங்கை , இந்திய கொங்கிரஸ் ( இன்றைய C.W.C ) தன் பால்ஈர்த்துக் கொண்டபோது, தொழிலாளரின் வர்க்க உணர்வு மங்கிவிட்டதாக கூறும் இடதுசாரிகளிடம் உண்மையில் தமது தவறுகளை மறைக்கும் கயமைத்தனமே இருந்துள்ளது .

*முடிவாக* ,

சிங்கள இனவாதம் தனது ஒடுக்கு முறைகளை என்றென்றைக்கும்தொடரவும் , அவற்றை நியாயப்படுத்தவும் என இதுவரை பரப்பி வந்துள்ள ,இப்போதும் பரப்புகின்ற புனைவுகள் , ஐதீகங்கள் சிலவற்றையே இங்கு அம்பலப்படுத்தியுள்ளோம் . தம்மை இடதுசாரிகள் எனக் கூறிக் கொண்டாலும் , இந்த இனவாத அழுக்குகளை அப்படியே தம்மீது அப்பிக்கொண்டும் தமிழ் தேசத்தின் மத்தியில் பரப்பிக் கொண்டும் வந்துள்ள இடதுசாரிகள் , ஒடுக்குமுறை விலங்குகளை உடைத்தெறிய முயன்று வரும் தமிழ் தேசத்தின் விடுதலை போராட்டத்தை சிதைக்கின்ற கைங்கரியத்தையே இது

> *இவர்களின் செயலின்மையில் அதிருப்தியுற்று நம்பிக்கையிழந்த தோட்டத் தொழிலாளர்களை இலங்கை , இந்திய கொங்கிரஸ் ( இன்றைய C.W.C ) தன்பால் ஈர்த்துக் கொண்டபோது , தொழிலாளரின் வர்க்க உணர்வு மங்கிவிட்டதாக கூறும் இடதுசாரிகளிடம் உண்மையில் தமது தவறுகளை மறைக்கும் கயமைத்தனமே இருந்துள்ளது .*

வரையிலும் செய்துவந்துள்ளனர் . இந்தவகையில் இவர்கள் சிங்கள இனவாதத்தின் துணைக் கருவிகளாகவே இருந்துவந்துள்ளனர் . இவர்கள் ஒருவகையில்சிங்கள இனவாதத்தின் ஏஜெண்டுகள் தான் என்றால் அதில் தவறில்லை .

இந்த அவப் பெயரை மறுக்கும் துணிவு இத்தமிழ் இடதுசாரிகளிடம் இருக்குமாயின் , தாமும் சேர்ந்து இதுவரையில் பரப்பி வந்துள்ள மேற்படி ஐதீகங்களை அவைஐதீகங்கள் அல்ல நிஜமே என நிரூபித்துக் காட்டட்டும் . அவ்வாறு நிரூபிக்க முடியாது எனின் (முடியாது தான்) இது வரையிலும் சிங்கள இனவாதத்திற்கு ஊதுகுழலாக செயற்பட்டு வந்துள்ள தமது தவறை உடனடியாக ஒப்புக் கொண்டு , சுயவிமர்சனம் செய்து தம்மை திருத்திக் கொள்ளட்டும் , மீண்டு வந்து இப்போதேனும்சரியான புரட்சிகர அரசியலை முன்னெடுக்கட்டும், இதுவும் முடியாது என்றால் , அவர்கள் தமது வங்குரோத்து அரசியலை மூடிக்கட்டிவிட்டு ஒதுங்கிக் கொள்ளட்டும் . இதற்கு மேல் இவர்கள் இடதுசாரிகளே அல்ல , வெறும் உயிரற்ற ஜடங்கள் தான் என்பதை , இவர்களால் இதுவரை பரப்பப்பட்டு வந்துள்ள ஐதீகங்களுக்கு பலியாகிப்போன தமிழ் தரப்பின் அரசியல் விழிப்புணர்வுள்ள பிரிவினர் இனிமேலாவது புரிந்துகொள்வார்கள் .

பின்வரும் நூல்கள், கட்டுரைகளில் இருந்தும் இக் கட்டுரைக்கான கருத்துகள் தகவல்கள் புள்ளி விபரங்கள் பெறப்பட்டுள்ளன .


1) Charls Abeyasekara - Ethnic Representation in the higer stateservices.
(Papers Presented at a seminar organized by the S.S.A Dec.1979)

2 S.J. Thambiah - Srilank-Ethnic Fratricide and dismantling of Democracy.

3) Sachi Ponnammpalam - Srilanka and The Tamil Liberation Struggle.

4) Nawaz Dawood - Teand Poverty.

5) முதிருநாவுக்கரசு. – இலங்கை இனப்பிரச்சனையின் அடிப்படைகள்.

6) திருமதி சொர்ணவல்லி பத்மநாபஐயர் –இலங்கையின் தோட்டப் பள்ளி கூடங்களின்கல்வியமைப்பும் பிரச்சனைகளும்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அழகியலும் அரசியலும்

அரசியல் செயற்பாடுள்ளோர், கலை இலக்கிய முயற்சிகளில் ஈடுபடுவதனால் ஏற்படும் விளைவுகள் பற்றிய, சில அவதானக் குறிப்புக்கள்.

அழகியலும் அரசியலும் பற்றிய ஒரு வரண்முறையான புலமை நிலைப்பட்ட விரிவான தெளிவான ஆய்வு ஒன்றை முன் வைப்பது இங்கு நோக்க மல்ல. அத்தகைய தொரு 'அறிவு', 'ஆய்வு' நம்மிடம் தேவை என்பது உண்மையே. ஆயினும் புலமை மட்டத்தில் இத்தகைய சிந்தனைப் போக்கு உருவாகியும், நாம் இயல் பாகவே இதனை மறந்து செயல் படுகிறோம். இத்தகைய தொரு சந்தர்ப்பத்தில் நாம், அழகியலும் அரசியலும் பற்றி ஆழ்ந்து சிந்திக்கவும், புரட்சிகர அரசியல் செயற்பாட்டு அரங்கில் ஈடுபடும் போது நாம் முகம் கொடுக்கும் பிரச்சனைகள்,அதனால்விளையும் பாதகமான அம்சங்கள் எனும் நிலைப்பாட்டில் மட்டுமே இக்கட்டுரை பேசப்பட்டுள்ளது. குறிப்பாக அரசியல் செயற்பாடு மேற்கொண்டோர் மத்தியில் உரத்துப் பேசவேண்டிய விடய மாகவே இதனைக் கருதலாம்.

தமிழில் மார்க்சிய இலக்கிய விமர்சனத்திற்கு ஒரு கால் நூற்றாண்டு கால வரலாறு உண்டு. இக்காலத்தில் தமிழியல் பரப்பில் அது ஏற்படுத்திய விளைவுகள், சாதனைகள் ஆழமானவை என்றே கூறமுடியும். இது காறும் மார்க்சியமாக அறியப்பட்ட அறிவுத் தோற்றம் குறித்த 'பிரதிபலிப்புக் கொள்கை' – அடித்தளம் மேல்கட்டுமானம் என்கிற உருவக வகைப்பட்ட அணுகல் முறை ஆகிய வற்றினடியாக உருவாக்கப்பட்ட மார்க்சிய இலக்கிய விமர்சனக் கோட்பாடுகள் மேலை நாடுகளில் சுமார் முப்பதாண்டுகளுக்கு முன்பே மறுபரிசீலனைக் குள்ளாக் கப்பட்டுள்ளன. கிராம்சி, அல்துாசர் போன்ற சிந்தனை யாளர்களின் வருகை மார்க்சிய சிந்தனையில் புதிய வளங்களை ஏற்படுத்தி வளர்க்கின்றன.

இன்று மார்க்சிய இலக்கிய விமர்சனம் சர்வதேச அளவில் அமைப்பியல், பின்–அமைப்பியல், நவீனத்துவம், பின்–நவீனத் துவம், குறியியல் போன்ற சிந்தனைகளின் வளங்களையும் உள்வாங்கிக் கொண்டு ஒடுக்க ப்பட்ட வர்க்கங்களின், மற்றும் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட மக்கள் பிரிவினர்களின் சார்பாகவும், வாசிப்பில் அரசியல் குறுக்கீடு செய்யும் ஒரு கால கட்டத்தில் மார்க்சிய இலக்கிய விமர்சனம் அடியெடுத்து வைத்துள்ளது எனலாம்

ஆதி

நாம் இத்தகைய புதியபங்களிப்பு க்கள் தமிழாய்வுகளில் எத்தகைய சாத்தியப்பாடுகளை தோற்றுவிக்க முடியும் என்பது குறித்து சிந்திக்கும் கால கட்டத்திற்கு வந்து விட்டோம். தமிழாய்வு களின் பரப்பை இன்னும் அகல ப்படுத்தி ஆழப்படுத்த வேண்டிய வரலாற்றுத் தேவையையும் நாம் தட்டிக் கழித்துவிட முடியாது. இருப்பினும் நவீன சிந்தனைகள் இன்னமும் தமிழ்ச் சிந்தனையில் சரிவரச் சுவறவில்லையென்ப தையும் கூறத்தான் வேண்டும். இதனை நம் சிந்தனையாளர்கள் பலரும் உணர்ந்ததாகவும் தெரிய வில்லை. அத்தோடு பலரும் விமர்சனம் எதுவுமின்றி கண் மூடித்தனமாக இச் சிந்தனை களை நிராகரிப்பதையும் அல்லது பாரா முகம் காட்டுவதையும், நாம்அவதானிக்கவும்முடிகின்றது.

நாம் வாழும் காலகட்டம், அது தோற்றுவித்து வரும் பிரச்சனை கள், அவற்றை புரிந்து கொள்வ தற்கான முயற்சிகள், அவற்றுக் கான நமது தேடல், சிந்தனை, கற்றல், விவாதம் எனும் ஓர்அறி வார்ந்த செயல்பாட்டில் இயங்க வேண்டியுள்ளவர்களாகவும் உள்ளோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதனை நாம் மறுத்துவிட முடியாது. இத்தகையதோர் சிந்தனைத் தேடலின் தேற லாகவே நமது கலை இலக்கிய முயற்சிகள், பார்வைகள் மீதான சில பிரச்சனைப் பாடுகளையும் கவனத்தில்கொள்ள வேண்டியுள்ளது.

கடந்த காலத்தில் கலை இலக்கிய தளத்தில் மர்க்சியவாதிகளின் தலையீட்டின் முக்கியத்துவத்தை யாரும், இன்றும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. சிலர் கலை இலக்கியத்தை அரசியலுக்கு அப்பாற்பட்டதாக காட்டுவதன்மூலம், அதனுள் பொதிந்திருக்கும் அரசியலை மறைத்து அதன்மூலம் தமது சித்தாந்த மேலாண்மையை தொடர்ந்தும் பேண முயன்றனர். இப்போக்கை எதிர்த்து எழுந்த மார்க்சிய விமரிசனமானது கலை இலக்கியங்களில் பொதிந்துள்ள அரசியலை இனங்காட்டி வெளிப்படுத்தி, மாற்றாக புரட்கிகர சித்தாந்தத்தின் மேலாண்மையை நிலைநாட்ட முயன்றது. நிலவுகின்ற அமைப்பிற்கு ஏற்புடையதாய் அங்கீகரிக்கப்பட்ட விளக்கத்திற்கு, எதிரான குறுக்கீடு என்ற வகையில் மார்க்சியர்கள் வன்மையான குறுக்கீடுகளை செய்துள்ளனர் என்பது வரலாறு கண்ட உண்மை. இதனை யாரும் இன்று மறுந்துவிட முடியாது.

இத்தகையதோர் விவாதச்சூழலில் மார்க்சியவாதிகள் கோட்பாட்டளவில் தமது கருத்தை நிலைநாட்டுவதில் ஓரளவு வெற்றி பெற்றாலும், நடைமுறையில் இந்த வெற்றியானது கலை இலக்கியத் துறையில் நிலை நாட்டப்பட்டதா என்பது கேள்விக்குரியதே. அன்றைய காரசாரமான விவாதங்களின் உணர்ச்சிக் கொக்கரிப்புக்கள் ஓரளவு அடங்கிவிட்ட நிலையில் இந்தவிவாதங்களின் விளைவுகளை இன்று ஒரு தடவை மீழ் மதிப்பீடு செய்து கொள்வது பயனுடையதே.

மார்க்சிய வாதிகளிடத்தில் அன்று காணப்பட்ட மார்க்சியம் தொடர்பான புரிதலில் காணப்பட்ட குறைபாடு அவர்களது கருத்துக்களிலும், கண்ணோட்டங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தி இருப்பதை இன்று நாம் அவதானிக்க முடிகிறது. பிரதிபலிப்புக் கொள்கை– அடித்தளம்–மேற்கட்டுமானம் ஆகியவற்றை நேரடியாகப் பொருத்திப் பார்த்தல் பொருளாதார வாதம், குறுகிய பயன்பாட்டு வாதம், 'ஸ்தாநோவியப்' பார்வை போன்றவற்றின் பாதிப்புக்களை நாம் காணமுடிகிறது.

கலை இலக்கியத்திலுள்ள அரசியலை ஒரு சாரார் முற்றாகவே மறுக்க, இன்னொரு சாரார் இவர்களை எதிர்த்து கலை இலக்கியத்திலுள்ள அரசியலை முதன்மைப்படுத்தினர். இவர்கள் அரசியலுக்கு மிகை அழுத்தம் கொடுக்க இது தவிர்க்க முடியாதவகையில் கலை இலக்கியத்தின் அழகியல் அம்சங்களை மறுதலிப்பதில் போய் முடிந்துள்ளமையை நாம் இன்று காண முடிகிறது. பொதுவாக இன்றைய தமிழ் சூழலில் காணப்படும் கலை இலக்கியம் தொடர்பான கருத்துக்கள் மேற்கூறிய இரண்டு பாதிப்பு க்களையும் தாங்கி நிற்பவையா கவே இருப்பதும் கண்கூடு.

ஈழத் தமிழ் மக்களின் வரலாற்றில் இடது சாரிச் சிந்தனைகளின் செல்வாக்கும், இடது சாரிக் கட்சிகளின் செயல்பாடுகளும் வளர்ச்சியுற்ற காலப்பகுதியிலிருந்து தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட இளந் தலைமுறையினர் வரை, அரசியல் பங்களிப்பு என்பது ஓர் உறுதியற்ற தன்மையையும், தொடர்ச்சியற்ற போக்கையும் கொண்டதாக இருப்பது நாம் அவதானிக்க கூடியது. இதற்கு பல்வேறு காரணங்கள் இருப்பினும் அவை பற்றி ஆராய்வது இக் கட்டுரையின் நோக்கமல்ல.

ஆனால் இத்தகைய பின்புலத்தில் வரும் பலரும் ஒருகாலத்தில் தீவிரமாக அரசியலில் செயல்படுவதும் பின்னர் ஒதுங்கிக் கொள்வதும் இயல்பான போக்காகவே இருந்து வருகிறது. அத்துடன் இன்னும் பலர் கலை இலக்கியத் தளத்தில் செயல்பாடு கொண்டசக்திகளாகவும், கலை இலக்கியத் தளத்தை தமது புரட்சிகர செயல்பாட்டு அங்கீகாரத்துக்கான – இருத்தலுக்கான– ஒன்றாக குறுக்கும் போக்கையும் இது கொண்டிருக்கிறது. கதை எழுதுவதும், கவிதை எழுவதும், ஒரு இலக்கியக் கூட்டத்தில் கலந்து கொள்வதும் அங்கு புரட்சிகர கோசங்கள் எழுப்புவதும் கலைப் படங்கள் பார்ப்பதும் என்று மட்டுமே குறுக்கப்பட்ட நமது புரட்சிகர முற்போக்குப் பார்வை– புரிதலிருந்து நாம் முதலில் விடுபட வேண்டியுள்ளது

**கலை இலக்கியத்திலுள்ள அரசியலை ஒரு சாரார் முற்றாகவே மறுக்க, இன்னொரு சாரார் இவர்களை எதிர்த்து கலை இலக்கியத்திலுள்ள அரசியலை முதன்மைப்படுத்தினர். இவர்கள் அரசியலுக்கு மிகை அழுத்தம் கொடுக்க இது தவிர்க்க முடியாத வகையில் கலை இலக்கியத்தின் அழகியல் அம்சங்களை மறுதலிப்பதில் போய் முடிந்துள்ளமையை நாம் இன்று காண முடிகிறது**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலை இலக்கியவாதிகள் அரசியல் செயல்பாட்டில் ஈடுபடக்கூடாது என்பதோ அல்லது புரட்சிகர சக்திகள் கலை இலக்கியப் பிரக்ஞை உள்ளவர்களாக, படைப்பாளிகளாக இருக்ககூடாதென்பதோ, இங்கு பிரச்சனை அல்ல. அத்தகையவர்கள் மீதான விமர்சனம் வைப்பதும் இங்கு நோக்கமல்ல. ஆனால் கலை இலக்கியம் என்று வந்துவிட்டு அத்தளத்தில் கலை இலக்கியம் செய்யாது, கூடிக் கலையும் அரசியல் பேசிக்கொள்ளும் நிகழ்வாக மட்டும் மாற்றிக்கொள்ளும் போக்கையே இங்கு கேள்விக்குள்ளாக்க வேண்டியுள்ளது. அத்தகைய சக்திகளை அம்பலப்படுத்த வேண்டியுள்ளது. இவர்கள் திட்டவட்டமான அரசியற் செயற்பாட்டக்குப் பதிலாக, தமது இலட்சியத்தை அதாவது புரட்கிகர அரசியல் இலட்சியத்தை,– சமூக மாற்றத்தை– சமூக மாற்றத்துக்கான போராட்டத்தை அடையும் சாதனமாக கலையை மட்டும் வெறுமனே பயன்படுத்துவது என்று மட்டும் புரிந்து கொண்ட தன் விளைவே இது எனலாம். இது காறும் பல்வேறு கலை இலக்கிய நிகழ்வுகளில் கலந்து கொண்டதன்விளைவாகவே இக் கருத்துக்களை முன்வைக்க வேண்டியுள்ளது.

இன்று அரசியலில் தொடர்ந்தும் தீவிரமாக ஈடுபடுவதற்கான உகந்த சூழ்நிலை இல்லாத காரணத்தால், அத்தகைய ஒரு சூழல் தோன்றும் வரை, கலை இலக்கிய முயற்சிகளில் ஈடுபடுவது சரியானதே என்று இவர்கள், தமது கலை இலக்கியம் நோக்கிய நகர்வுக்கு காரணம் கூறுகிறார்கள். ஆனால் நடைமுறையிலோ இவர்கள் கலை இலக்கிய முயற்சிகளில் உணர்வுபூர்வமாக ஈடுபடுவதற்குப் பதிலாக அந்த அரங்கை தமது அரசியல் உணர்வை வெளிப்படுத்தும் களமாகமாற்றி வருகிறார்கள் இவர்கள் மொத்தத்தில் அரசியலும் செய்யாமல் கலை இலக்கியமும் படைக்காமல் இரண்டையுமே கதம்பமாக்கி வருகின்றனர்.

குறிப்பிட்ட ஒருவர் கலைஞராக இருப்பதா? அல்லது புரட்சியாளராக இருப்பதா? அல்லது இரண்டுமாக இருப்பதா? என்பது முற்றிலும் அவரைப் பொறுத்த விடயம்.

அரசியலும் கலை இலக்கியமும் மக்களுடன் தொடர்பானவை. மக்கள் வாழ்வில் பாதிப்பை செலுத்தக் கூடியனவைதான். இந்த வகையில் இவற்றில்ஈடுபடு கிறவர்கள் உயர்ந்த சமூகப் பொறுப்பும் நேர்மையான அணுகுமுறைகளும் கொண்டிருப்பது அவசியமாகிறது. தமது அரசியலை மட்டும் வெளிப்படுத்துகின்ற தளங்களாககலைஇலக்கியத்தை மாற்றிக் கொள்ளாமல் இருப்பதும் இங்கு மிக முக்கியமானது. ஆனால் இந்த அடிப்படைப் பண்புகளிலேயே இவர்கள் பற்றாக்குறை கொண்டவர்களாக

அல்லது புரிந்து கொள்ளாதவர்களாக நமது இன்றைய புரட்சிகர முற்போக்கு சக்திகள் உள்ளனர்.

குறிப்பிட்ட ஒருவர் கலைஞராக இருப்பதா?அல்லதுபுரட்சியாளராக இருப்பதா? அல்லதுஇரண்டுமாக இருப்பதா? என்பது முற்றிலும் அவரைப் பொறுத்த விடயம். இதில் யாரும் ஒருவரை நிர்ப்பந்தித்து எதனையும் செய்ய முடியாது. ஆனால் ஒருவர் எந்த தளத்தில் செயல்பட்டபோதிலும் கூட, அந்த தளத்திற்கேயுரிய தனித்துவமான பண்புகளைகருத்திற் கெடுத்து செயல்படுவதும்முக்கியமானது. இதில் இழைக்கப்படும் தவறானது எந்தவொருதளத்திலுமே உருப்படியான பங்களிப்பு எதனையும் செய்யமுடியாதவராக ஒருவரை ஆக்கிவிடும். இன்றும் இத்தகையதொரு போக்கு தொழிற்பட்டு வந்துள்ளது என்பதையும் நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். இது காறுமான எமது முயற்சிகளை பின்னோக்கிப் பார்க்கும் போது இன்று நாம் அவ்வளவு திருப்தி கொள்ளக் கூடியநிலமை இல்லை. தொடர்ந்தும் நாம் அதே தவறுகளை மீளவும் விட்டுச்செல்வதை இயல்பாக்கிக் கொண்டுள்ளோம்.

நமது சூழலில் அழகியல்,அரசியல் பற்றிய பிரக்ஞை பூர்வமான சிந்தனை வெளிப்பாடு தோற்றம் பெற்று சூடான விவாதப் போக்காக வளர்ச்சியுற்றிருந்தாலும் அது பிற்பாடுதணியஆரம்பித்தது என்பதும் உண்மையே. இதனைப் பலர் இன்று மறந்திருக்கலாம். ஆயினும் நாம்அதனை இங்கு மீட்டுக் கொள்வது மிகப் பொருத்தமாக இருக்கும்.

எண்பதுகளில் ஈழத்து இலக்கிய விமரிசனச் சூழலில் அழகியல் பற்றிய சர்ச்சை முக்கியமானதாகக் கொள்ளப்படுகிறது. கலை இலக்கியத்தில் அழகியல் பற்றிய அக்கறை கொண்டோரை முற்போக்கு விரோதிகளாகப் பார்க்கும் மனோபாவத்தையும் அது ஏற்படுத்தியது. இன்றுவரைஇத்தகைய மனோபாவத்திலிருந்து நாம் விடுபடமுடியாதவர்களாகவும் உள்ளோம் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அழகியலை வலியுறுத்துபவர்களை 'கலை வாதிகள்' எனச்சாடி அவர்களை அரசியல் ரீதியில் பிற்போக்கு வாதிகள் எனநிரூபிப்பதில் மார்க்சிய வாதிகள் தமது முழுக் கவனத்தையும் சக்தியை யும் செலவளித்தனர் என்றே கூறமுடியும். "முற்போக்கு இலக் கியத்தின் அழகியல் பிரச்ச னைகள்" எனும் தலைப்பில் "சமர்" சஞ்சிகையில் (1979) கைலாசபதி ஒரு கட்டு ரையை எழுதிப் பெரும்வாதப்பிரதிவாத ங்களை ஏற்படுத்தினார். ஆயினும் அக் கட்டுரை அழகியல் பிரச்ச னைகள் பற்றி எழுதும் தோர ணையில் தொடங்கினாலும் அப் பிரச்சனை பற்றி அக்கட்டுரை எதுவும் போசாது, அது தனியாக ஆராயப்படவேண்டும் என்றே குறிப்பிட்டிருந்தது.

இருப்பினும் அதே கட்டுரையில் கைலாசபதி "ஆழமாகநோக்கினால் கலை வாதிகள் அறிந்தோ அறியாமலோ சமுதாய மாறுதலுக்காக பாடுபடும் எழுத்தாளா களின் ஆக்கங்களையே அழகியலின் பெயரில் நிராகரிக்கின்றனர். இது தற்செய ல் நிகழ்ச்கியல்ல, வர்க்கமுரண்பாட்டின் பிரதிபலிப்பாகவே உள்ளது" என்றார்.

கைலாசபதியின் கட்டுரையை அடுத்து சித்திரலேகா மௌன குரு "ஈழத்து இலக்கியமும் இடதுசாரி அரசியலும்" எனும் கட்டுரையை அதே 'சமர்' சஞ்சிகையில் எழுதியிருந்தார்.இதனையடுத்து கைலாசபதியின் கட்டுரைக்கான "எதிர்வினை" 'அலை' சஞ்சிகையில் வெளிவந்தது. யேசுராசா தனக்கேயுரிய பாணியில் எழுதியிருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தான் வேண்டும். ஆனாலும் இவ் விவாதம் தமிழ் சஞ்சிகையில் மட்டும் நிற்காமல், 'லங்காகாடியன்' ஆங்கில சஞ்சிகையிலும் தொடரப்பட்டது. சண்முகரத்தினம் எழுத, அதனைத் தொடர்ந்து ரெஜி சிறிவர்த்தனா, ஏ.ஜே. கனகரத்னா, சிவசேகரம், மு. பொன்னம்பலம் ஆகியோர் இவ் விவாதத்தில் கலந்து கொண்டனர்.

சமுத்திரன் அழகியல் பற்றிய விவாதத்தை மார்க்சிய வாதிகளுக்கும் உருவ வாதிகளுக்கும் இடையிலான பிரச்சனையாகவே எடுத்துக் காட்டினார். உருவ வாதிகள் அழகியலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர், மார்க்சிய வாதிகளோஉருவத்தை விட உள்ளடக்கத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர் என்பதே அவரது கருத்தாக இருந்தது. இத்தகையகண்ணோட்டமே முற்போக்கு சக்திகளின் பார்வையாக அன்றுமுதல்இன்றுவரை இருந்து வருகிறது என்றும் கூறமுடியும்.

கைலாசபதி, சமுத்திரன் ஆகியோருடைய இரு கட்டுரைகளும் அழகியல் பற்றி எழுத வந்துள்ளவற்றுள் மோசமான கட்டுரைகள் என்பதே பொதுவானஅபிப்பிராயம். இக் கருத்து ஏற்புடையதென்றே இன்றும் கருதலாம். இன்றும் நாம் கலை இலக்கிய விமர்சனத்தை ஒரு கொச்கையான, உள்ளடக்க வாதமாக மட்டுமே குறுக்கும் போக்கும் இன்னும் ஓய்ந்தபாடில்லை. கலைஇலக்கியத்தை சாராம்சத்தில் சில சமூகக் கருத்துக்களின் தொகுதியாக மட்டும் காண்பதே உள்ளடக்க வாதத்தின் அடிப்படை ஆகும். இத்தகைய போக்கு கலை இலக்கிய விமர்சனத்தை ஒரு குறுகிய பயன்பாட்டு வாதத்துக்கு இட்டுச் செல்கிறது எனலாம்.

சமூக மாற்றத்திற்கான போராட்டத்தில் கலை இலக்கியம் ஒரு கருவியே என்பது' இப் பயன்பாட்டு வாதத்தின்' சாராம்சமாகும். இன்றும் மார்க்சிய விமரிசன நோக்கில் இத்தகைய போக்கே முதன்மை பெற்றுள்ளதுஎனலாம். இது வெவ்வேறு அளவிலும் வடிவிலும் மேலோங்கியுள்ளது. நாம் மார்க்சியத்தையும் இலக்கிய த்தையும் மிக எளிமைப்படுத்தி புரிந்துகொண்டதன் விளைவாகவே இதனைப் பார்க்க முடியும்.

எது எவ்வாறாயினும் ஈழத்துச் சூழலில் அழகியல் பற்றிய பிரச்னையை வளர்த்துக் கொள்வதற்கான விவாதச் சூழல் ஒன்று உருவாகியும் ஏனோ அழகியல் பற்றிய ஆரோக்கியமான விவாதங்கள் முன்னெடுக்கபபடாமல் போனமையும் நாம் சுட்டிக்காட்டத்தான் வேண்டும். அழகியல் பற்றிய விவாதம், இன்றுவரை முன்னெடுக்கப்பட வேண்டியதன் தேவையையும் வலியுறுத்திக் கொண்டுதான் இருக்கிறது. ஆகவே நாம் அது பற்றி சிந்திப்பது எவ்விதத்திலும் தவறாகாது என்பதையும் இங்கு குறித்துக் கொள்வோம். முற்போக்கு இலக்கியத்தின் அழகியல் பிரச்சனைகளை விளங்கிக் கொள்ளும் வகையில் நடைமுறை சார்ந்து தேடிக் கொள்வதும் புரிந்து கொள்ள முற்படுவதும் இன்னும் ஆரோக்கியமாக இருக்கும் எனலாம்.

நாம் ஒரு புதுக்கவிதையில், சிறுகதையில் ஆழமான சிக்கலான சமூகப்பிரச்சனைகளுக்கு, தீர்வைத் தேடும் முயற்சியும், குறிப்பிட்ட ஒரு சமூகப் பிரச்சனைக்கு தீர்வு காண்பது என்பதும் இலகுவானதல்ல. என்பதனைப் பார்க்கத் தவறிவிடுகிறோம். எம்மில் பலரும் இந்த இரண்டையுமே ஒன்றுபோல் எளிதாக எதற்கும் தீர்வு கண்டுவிட முடியும் என்ற நம்பிக்கை கொண்டவர்களாகவே உள்ளோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மையில், குறிப்பிட்ட ஒரு சமூகப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதென்பது, குறிப்பிட்ட அந்த சமூக உருவாக்கம்தொடர்பான கோட்பாட்டு ரீதியான புரிதலுடன் தொடர்புடையதுஎனலாம். சமூகத்தின் முரண்பாடுகள்,அது கட்டவிழ்த்து வரும் சமூக சக்திகள், இந்த சமூக சக்திகளின் வளர்ச்சிநிலை, மாற்றத்திற்கான சாத்தியப்பாடுகள், புரட்சிகர அமைப்பு, அதன் செயற்பாடுகள் போன்ற பல பிரச்சனைகளுடன் இந்ததீர்வானதுதொடர்புடையது. உண்மையில் ஒரு புரட்சிகர தாபனம் மட்டுமே இந்தவிதமான தீர்வை முன்வைக்க முடியும்.

ஒரு கலைஞனிடம் தீர்வைஎதிர்பார்ப்பதென்பதுஅவரதுசக்திக்கும் அப்பாற்பட்டதென்பதோடு, பொறுப்பை அவரது தலையில் வீணே சுமத்துவதாகவே அர்த்தப்படும். அதுவும் முன்னணிப் புரட்சியாளர்கள் ஒரு புரட்சிகர தாபனம் இல்லாத நிலைமையில், சிறு குழுக்கள் கூட தமக்குள் முறையான தாபனஅமைப்பையோ,திட்டத்தையோ கொண்டிராத நிலைமையில், கலைஞனிடம் தீர்வைஎதிர்பார்ப்பதென்பது, புரட்சியாளர்கள் தமது கடமையை கலைஞர்களதுதலையில் சுமத்திவிட்டுத் தப்பித்துக் கொள்வதாகவே அர்த்தப்படும்.

குறிப்பிட்ட ஒரு சமூகப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதென்பது, குறிப்பிட்ட அந்த சமூக உருவாக்கம் தொடர்பான கோட்பாட்டு ரீதியான புரிதலுடன் தொடர்புடையது எனலாம்சமூகத்தின்முரண்பாடுகள் அது கட்டவிழ்த்து வரும் சமூக சக்திகள், இந்த சமூக சக்திகளின் வளர்ச்சிநிலை, மாற்றத்திற்கான சாத்தியப்பாடுகள், புரட்சிகர அமைப்பு, அதன் செயற்பாடுகள் போன்ற பல பிரச்சனைகளுடன் இந்ததீர்வானதுதொடர்புடையது.

ஒரு கலைஞனால் செய்யக்கூடியதெல்லாம் தனது புரிதலுக்கும் அனுபவத்திற்கும் எட்டிய விதத்தில் நடப்பு சமூக இருப்பை, ஒழுங்கை கேள்விக்குள்ளாக்குவதும் விமர்சனத்திற்கள்ளாக்குவதும் என்பதாகவே இருக்க முடியும். இதனாலேயே இன்று "சோசலிச யதார்த்தவாதத்திற்குப்" பதிலாக "விமரிசன யதார்த்த வாதம்" முன்வைக்கப்பகிறது. விமரிசன யதார்த்த வாதம் அரசியல் தளத்தில், சமூக மாற்றத்திற்கு வழங்கிய முக்கியமான பங்களிப்பு எனக்கூற முடியும்.

ஒரு கலைஞனிடம் ஓர் பிரச்சனைக்குத் தீர்வு முன்வைக்கப்பட வேண்டுமென கட்டாயமாக எதிர்பார்ப்பது அவரது சக்திக்கு மிஞ்சிய விடயமாகவே அமையும். அதனையும் மீறி அவர் தீர்வு முன்வைக்கும் போது, அழகியல் தளத்திலிருந்து அரசியல் தளத்தினுள் காலெடுத்து வைப்பதாகவே அர்த்தப்படும். இங்கு முறையான கோட்பாட்டுச் செயல்பாடு, அரசியல் செயல்பாடு இன்றி, அழகியற் செயற்பாட்டுத் தளத்தில் இருந்து கொண்டே தீர்வுகளை முன்வைக்கமுயலும் போது, அவர்களது எல்லைகளைத் தாண்டுவதாகவே அர்த்தப்படும். எதுவாயினும் ஒருவர் தனது சக்திக்கு உரியவற்றை தூக்குவதுதானே சரியானது. இந்த விதத்தில் அவரால், கலைஞன் என்றவகையில் தீர்வுகளை முன்வைப்பது சாத்தியப்படமாட்டாது. அதையும் மீறி அவர் முன்வைக்கும் தீர்வு பெரும்பாலும் அபத்தமானதாகவோ அல்லது கொச்சையானதாகவோ அமைந்துவிடவாய்ப்பு அதிகமென்றே கருத முடியும். இதனையும் மீறி ஒருகலைஞன் குறிப்பிட்ட சமூகப் பிரச்சனைக்கு தீர்வு காண்பதில் உறுதியாக இருப்பின், அவர் நேரடியாக கோட்பாட்டு அரசியல் தளத்திற்குச் சென்று கோட்பாட்டு அரசியல் உற்பத்தியில் ஈடுபடுவதன் மூலமே அவற்றை அடைய வேண்டுமே ஒழியஅழகியல் உற்பத்திக்கூடாக அல்ல. இதனை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். மனிதர்களுக்கும் கலை இலக்கியத்துக்கும் இடையிலான உறவில் அழகியல் நுகர்வு என்பது முதன்மை பெறுகிறது. இதுதான் அவர்களை கலை இலக்கியத்தை நாடவைக்கிறது. இந்த அழகியல் நுகர்வின்போது ஒருவித சிந்தாந்தப் பரவலும் நிகழவே செய்கிறது. ஆனால் இது அவர்களைப் பொறுத்த வரையில் அதிக முக்கியத்துவம் பெறுவதில்லை. இருப்பினும் இந்த அழகியல் நுகர்வு என்பதை நாம்

ஒரு கலைஞனால் செய்யக்கூடியதெல்லாம் தனது புரிதலுக்கும் அனுபவத்திற்கும் எட்டிய விதத்தில் நடப்பு சமூக இருப்பை, ஒழுங்கை கேள்விக்குள்ளாக்குவதும் விமர்சனத்திற்கள்ளாக்குவதும் என்பதாகவே இருக்க முடியும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மறந்துவிட்டு எம்மிட முள்ள கருத்துக்களைக் கொண்டு போவதற்கான வெறும் சாதன மாக கலை இலக்கியங்களை பார்க்க முயலும் போது இது முற்றிலும் பயன்பாட்டுவாதமாக இருக்கிறது.

மக்கள் அரசியல் கருத்துக்களை எளிமைப்படுத்தப்பட்ட விதத்தில் கற்றுக் கொள்வதற்காகவேகலை இலக்கியங்களை நாடுகிறார்கள் என்பது மிகவும் குறுகியபார்வை யாகும். வேறொரு இலட்சிய த்தை அடையும் சாதனமாகக் கலையைப் பயன்படுத்துவது, அப்படிச் செய்பவரின் சீரிய நோக்கத்தைக் காட்டலாம், ஆனால் அது கலையின் பொறு ப்பை அலட்சியம் செய்வதாகும். மேலும் முற்போக்கு இலக்கிய ங்கள் உள்ளடக்கத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அதன் அழகியல் அம்சத்தை நிராகரிக்க முற்படுகின்றன. இதனால் சாதாரண வாசகன் தனது அழகியல் நுகர்விற்கான தேவை எங்கு நிறைவு பெறுகி றதோ அதனை நோக்கிப்போவது தவிர்க்க முடியாததாகிறது. இந் நிலையில் சாதாரண மக்கள் பிற்போக்கு இலக்கியங்களை நாடிப் போவதற்காக அவர்களை மட்டும்குறை கூறாது, அதற் கான முக்கியமான ஊற்று மூலங்களை முற்போக்கு இலக்கிய வாதிகள் தமது குறு கிய பார்வையிலும் தேடிக் கொள்ள கொள்ள வேண்டும்.

அரசியலும், கலை இலக்கியமும் தமக்கிடையே நெருங்கிய உறவு களைக் கொண்டிருக்கின்ற போதிலும், இவை இரண்டும் வெவ்வேறான தளங்களில் தனித் துவமாக இயங்குபவை. இந்த உண்மை புரிந்து கொள்ளப்படாத போது அரசியலும், கலை இலக்கியமும் குழப்பப்படுவதும் தவிர்க்க முடியாது நிகழவே செய்யும். அதுவும் குறிப்பாக அரசியலில் தீவிரமாக ஈடுபட்டவர்கள் கலை இலக்கிய முயற்சிகளில் பங்குகொள்ளும்போது இது இன்னும் அழுத்தமாகவே இடம்பெறும். அரசியற் செயற்பாட்டில் இருந்துவிடுபட்டு கலை இலக்கிய அரங்குக்குள் நுழைகின்ற புரட்சிகர முற்போக்கு சக்திகள், அரசியலும் கலை இலக்கியமும் தனித்தனியான இயங்கு தளங்களில் இயங்குபவை என்பதில் இவர்கள் எவ்வித பிரக்ஞையையும் வெளிப்படுத்தாதவர்களாகவே செயற்படுகின்றனர்.

கலை இலக்கியம் தனியான தளத்தில் தனக்கேயுரிய குறிப்பான பண்புகளுடன், விதிகளுடன் இயங்குகின்றது என்பதில் தெளிவான புரிதல் தேவைப்படுகின்றது.மாறாக, பொருளாதாரச் செயற்பாடு அல்லது அரசியற் செயற்பாடுகளில் கையாள்கிற விதிமுறைகளை கலை இலக்கியங்களுக்கும் பிரயோகிக்கும் போது அவற்றின் சுயாதீனம் மறுக்கப்பட்டு விடுகிறது. தமக்குரிய இயங்குதளத்தில் இருந்து கலை இலக்கியங்கள் பிய்த்தெடுக்கப்பட்டு தமது பண்புகளையே ஆன்மாவையே அவை இழந்தும் விடுகின்றன. – தமிழில் கலை இலக்கியத்தில் கரிசனை கொள்பவர்கள் அவற றில் உள்ளடங்கியிருக்கின்ற அழகியல் அம்சம் குறித்தும், கலை இலக்கியத்திற்கும் மக்களுக்கும் இடையிலான உறவு குறித்தும், கலை இலக்கியங்களும் அவற்றின் படைப்பாளிகளும் அரசியலுடன் கொண்டிருக்கின்ற உறவுகள் குறித்தும், கோட்பாட்டு ரீதியிலான புரிதல்களைப் பெறு வது அவசியத்துக்குரியது. இத்தகைய கோட்பாட்டுப்புரிதல்க ள்தான் கலை இலக்கியங்களின் தனித்துவத்தையும் இவற்றின் இயங்குதளத்தையும் துல்லியமாக வெளிப்படுத்தக்கூடியன.

உண்மையில் ஒருவர் வெறு மனே முற்போக்காளனாய் இரு ந்துவிடுவதனாலேயே அவரது கலைப்படைப்புக்கள் சிறப்பாக அமைந்து விடுமென்ப தில்லை. தான் படித்த அரசியல் சமூகக் கருத்துக்களை, புரட்சிகர சுலோ கங்களை வெறுமனே ஒப்பு வித்து வருபவர்கள், அதனையே தங்களது சிந்தனைகளாக கலை இலக்கியத்தில் பதிவு செய்வது தான் சிறந்த முற்போக்கு கலை ப்படைப்புக்கள் என அர்த்தப்ப டுத்தி வைத்திருக்கும் ஒரு மரபையும் நாம் பேணிவரு கிறோம் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

சமூகப்பிரக்ஞை உள்ள ஓர்படை ப்பாளியின் தனித்துவம் மிக்க பார்வையும் நடையுமே ஒரு சிற ந்த படைப்பை வழங்க முடியும் எனக்கூறலாம். மக்களிடம் சென் றால் நல்ல கலைப்படைப்புக்கள் வெளிவர முடியும் என்றாலும், எல்லோரும் சென்றால் எல்லோரு க்குமே கலைப் படைப்புக்கள் சிறப்பாக அமைந்து விடுமென்ப தில்லை. முழுமையான படை ப்பாக உழைப்புச் செயற்பாட்டில் ஈடுபடுவதன்மூலமே சிறந்த கலை ப்படைப்புக்கள் வெளிவர முடியும். நாம் மக்களிடம் செல்வது என்பதனை மிகை எளிமைப்படுத்தி புரிந்துகொண்டு ள்ளோம். இதன் விளைவை நமது சூழலில் இன்றும் காண முடிகிறது.

என்றோ தமிழ்ச் சூழலில் மார்க் சிய கலை இலக்கிய கோட்பாடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்றோ தமிழ்ச் சூழலில் மார்க்சிய கலை இலக்கிய கோட்பாடு களை அறிமுக ப்படுத்திய அதே நிலையிலிரு ந்துதான் இன்றும் நாம் கலை இலக்கியங்களை அணுகு வோம் பார்ப்போம் என க்கூறிக் கொள்வோமாயின் அது ஏற்புடையதுஅல்ல.

களை அறிமுகப்படுத்திய அதே நிலையிலிருந்துதான் இன்றும் நாம் கலை இலக்கியங்களை அணுகுவோம் பார்ப்போம் என க்கூறிக்கொள்வோமாயின் அது ஏற்புடையது அல்ல. இதனால் நாம் சாதிக்கப் போவது ஒன்று மில்லை.

எப்படியிருப்பினும் இன்று வரை கலை இலக்கியத்தளத்தில் அழ கியல் பற்றிய சிந்தனை அதன் மீதான கவனம், பார்வை இன் னும் சரிவரச் சுவறவில்லை என லாம். பலரும் மார்க்சிய அழ கியல் என்று விளங்கிக் கொண்டு இதில் மார்சியமும் இருக்க வேண்டும். அழகிய லும் இருக்க வேண்டும் என ஒரு மேம்போக்கான மிக மிக எளிமை ப்படுத்தப்பட்ட ரீதியில் புரிந்து கொண்டதன் விளைவு. அழகு பற்றிய கண்ணோட்டமே அழகியல் என்று புரிந்து கொள்ள வைத்துள்ளது. இங்கு அழகியல் என்பதைஅழகுணர்வு பற்றிய கண்ணோட்டமாக அர்த்தப்படுத்துவது அழகியலின் அடிப்படையையே புரிந்து கொள்ளாமை யால் ஏற்பட்ட தவறென்றே கூற முடியும். அழகுணர்வையும் அழகிய லையும் நாம் பிரித்துப் பார்க்க வேண்டும். அழகியலைக் கலைத் துறையுடன் சம்பந்தப் படுத்தி நோக்க வேண்டும்.

அழகியல் என்பது கலை ஏற்ப டுத்தும் பாதிப்பும், அப்பாதிப்பை ஏற்படுத்த கலைஞன் கையா ளும் வழிமுறைகளும், அவை சம்பந்தமான அவனது பார்வை களும் கொள்கைகளும் ஆகும். இவை பற்றிய ஆழமான புரிதல் தெளிவுள்ள வர்களாலேயே அழகியல் பற்றிய அக்கறை யுடனான கலைப்படைப்புக்க ளை வழங்க முடியுமென லாம். அழகியல் விதிகள், சித்தாந்த வரையறுப்புக்கும், வர்க்க நிலைப்பாடுகளுக்கும் இத்தியாதிகளுக்கும் அப்பாற்ப ட்ட கலைப் படைப்பின் சொந்த விதிகள் எனலாம். இன்னும் கூறுவதானால் கலை யின் ஆக்க முறைமை யிலேயே - ஆக்கியல் கூறுகளே அழகியல் விதிகள் எனலாம்.

அழகியல் என்பது கலை ஏற்படுத்தும் பாதிப்பும், அப்பாதிப்பை ஏற்படுத்த கலைஞன் கையாளும் வழிமுறைகளும் அவை சம்பந் தமான அவனது பார்வைகளும் கொள்கைகளும் ஆகும்

நாம் எப்போதும் மார்க்சிய கண்ணோட்டத்தின்படி கலை இலக்கியத்தின் சமூகப்பணி குறித்தே அதிகளவு அக்கறை செலுத்தியுள்ளோம். அதாவது கலை இலக்கியம் சமூக மாற்றத்திற்காகப் பயன்படுவது என்பதை மட்டுமே அர்த்த ப்படுத்தி புரிந்து வைத்திருக்கும் எமக்கு அழகியல் பற்றிய அக்க றை வேம்பாக அமைவதும் தவிர்க்க முடியாததே. கலைகள், சமூக தன்மைக்கும், சமூக விதிகளுக்கும் உட்பட்டு இயங்குவது போல கலையின் உள்ளார்ந்த கலை விதிகளுக்கும் உட்பட்டு இயங்குகின்றன. கலைக்கும் அழகியல் விதிகள் உள்ளன என்பதனை அடிப்ப டையில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆனாலும் இதனை மறுத்து நாம் மோசமான படை ப்புக்களையும் கூட ஏற்கும் விமர்சனச் சூழலையும் உரு வாக்கி வருகின்றாம்.

மேற் குறித்த கருத்துக்களை முன் வைக்கும்போது நாம் இலகுவில் ' கலைவாதிகள்' கலை கலைக்காக எனக் கோச மிடுபவர்கள் என்று யாரும் தட்டிக் கழித்துவிட முடியும். நாம் இங்கு அரிச்சுவடிப் பாடம் நடத்த வேண்டாம். கலையாவும் மக்களுக்கே. இதில் விவாதம் தேவையில்லை. இப்படியான விவாதத்தில் இறங்குவதே தவறென்றுதான் கருத முடியும்.

இன்று தம்மை புரட்சிகர சக்திக ளாக இனம் காண்போர் கோட்பா ட்டு அரசியல் தளத்தில் தமது கடமைகளை ஆற்றாது அழகி யல் தளத்திற்கு ஓடுவதும், அங் கும் கூட அழகியல் தளத்தின் தனித்துவமான பண்புகளை நிரா கரித்து, அரசியல் கோசங்க ளை எழுப்புவதுடன் திருப்தியுறுவது மாகவே அமைகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இத்தகைய தெளிவிலிருந்துதான் நாம் கலை பற்றிய அக்கறையில் கவனம் செலுத்துகிறோம்.

இன்று தம்மை புரட்சிகர சக்திகளாக இனம் காண்போர் கோட்பாட்டு அரசியல் தளத்தில் தமது கடமைகளை ஆற்றாது அழகிபல் தளத்திற்கு ஓடுவதும், அங்கும் கூட அழகியல் தளத்தின் தனித்துவமான பண்புகளை நிராகரித்து, அரசியல் கோசங்களை மட்டும் எழுப்புவதுடன் திருப்தியுறுவதுமாகவே அமைகின்றனர். இப்போக்கு இறுதியில் யாருக்கும் எதற்கும் எந்த விதமான பயனையும் விளைவித்து விடுவதில்லை. தம்மை தாமே ஏமாற்றிக் கொள்வதைத் தவிர இங்கு ஏதும் நடந்திருப்பதில்லை. "தன் வீரத்தைக் காட்ட மேடை கிடைக்காத கதாநாயகனின் நிலைதான் இவர்களதும்.

எமது விமரிசனங்களை ஆட்சேபிக்க முனைபவர்கள், அப்படியானால் கலை இலக்கியங்கள் அரசியலுக்கு அப்பாற் பட்டவையா? என்ற கேள்வியை எழுப்புவதும் எமக்கு கேட்கத்தான் செய்கிறது. உண்மைதான். அரசியல் இல்லாத கலை இலக்கியம் என்பது கிடையாதுதான். ஆனால் இப்போது பிரச்சனை என்னவென்றால் எத்தனை காலம்தான் இந்த அரிச்சுவடியை திரும்பத் திரும்ப ஒப்புவிப்பது என்பதுதான். கலை இலக்கியத்திலுள்ள அரசியலை மறுப்பது எத்தனை அபத்தமானதோ அதேயளவு அபத்தமானது தான் கலை இலக்கியங்களை அரசியலாகக் குறுக்குவதும்.

அழகியலுக்கும் அரசியலுக்கும் இடையிலான உறவென்பது எளிய நேரடியான வெளிப்படையானது அல்ல. மாறாக மிகவும் சிக்கலான ஆழமான உறவு இது. அழகியலும் அரசியலும் தனித் தனியான கட்டமைப்புக்கள் என்ற வகையில் இவை ஒவ்வொன்றும் தனித்துவமான பண்புகளைக் கொண்டிருக்கின்றன. இவை தமக்குள் உறவுகளை மேற் கொள்ளும் போது கூட இந்த கட்டமைப்பு குலையாத உறவைத்தான் மேற்கொள்ளுகின்றன. இந்த உறவை விளக்க முயலுகையில் அறிஞர் டெர்ரிஈகிள்டன், ஒரு பிரதியானது, பொதுவான உற்ப த்திமுறை, அழகியல் உற்பத்தி முறை, பொதுச் சித்தாந்தம், ஆசிரியர் சித்தாந்தம் அழகியல் சித்தாந்தம் போன்ற ஐந்து அம்சங்களினூடாக இந்த உறவைப் புரிந்துகொள்ளுமாறுவலியுறுத்துகிறார். இந்த விதமான விளக்கமானது ஒரு பிரதியில் காணப்படும் பலதரப்பட்ட முரண்பட்ட குரல்களையும் மோதிக்கொள்ளும் சிந்தாந்தங்களையும் கூட விளக்க வல்லது எனலாம்.

ஒரு பிரதியானது வெவ்வேறு காலகட்டங்களில் பல தரப்பட்ட வாசிப்புக்கள் வரும் சாத்தியம் பற்றியும், இன்னோர் பிரதியுடனான உறவிலேயே ஒரு குறிப்பிட்ட பிரதி அர்த்தம் பெறுவதையும் வலியுறுத்தும் காலத்திலேயே நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இன்றும் திரும்ப திரும்ப பழைய கோசங்களை எழுப்புவதுடன் திருப்தியுறுவதென்பது நகைப்புக்குரிய விடயமாகவே கணிக்கலாம்.

நமது இதுகாறுமான மார்க்சிய இலக்கிய விமரிசனச்சூழல் "ஸ்தானோவிய ப்பார்வை "பிரதிபலிப்புக்கொள்கை, அடித்தளம், மேற்கட்டு மானம் ஆகியவற்றை நேரடியாகப் பொருத்திப் பார்த்தல், இலக்கிய-தத்துவ முயற்சிகளை கட்சி நோக்கத்திற்கு கீழ்படிந்து ஒரு வெறும் கருவியாகப் பார்த்தல், சோசலிச எதார்த்த வாதக்கருத்துக்கள் ஆகியன இன்று மறு பரிசீலனைக் குள்ளாக்கப்பட்டுள்ளன. ஆனால் தமிழ் சூழலில் மேற்குறித்த போக்குகள் மீதான பார்வைகள், கருத்துக்கள்கூட இன்னும் வைக்க முடியாத சூழலையே கொண்டுள்ளது என்பதையும் கணக்கில் கொள்ளத்தான் வேண்டும். இது பற்றிய கேள்விகளை எழு ப்பிவிட்டால் போதும் திரிபுவாதிகள், மார்க்சிய விரோதிகள், ஏகாதிபத்திய கைககூலிகள் என முத்திரை குத்துவதில் இவர்கள் காட்டும் கவனத்தை வேறு உருப்படியான முயற்சிகள் எதனிலும் காட்ட முடியாதவர் களாகவே உள்ளனர்.

தமிழ் மார்க்சிய இலக்கிய விமரிசனச்சூழல் எண்பதுகளில் சுயவிமரிசனப் போக்காகவும் தொழிற்பட்டுள்ளது என்பதையும் குறிப்பித்தான்வேண்டும். நம்மவர்களான சிவத்தம்பி, நு.: மான் என்பவர்கள், தமிழக த்தில் அ.மார்க்ஸ் போன்றோர் இச் சுய விமரிசனப் போக்கைப் பிரதிநித்துவப் படுத்துகின்றனர். இவர்களுடைய பார்வைகள் எல்லாம் ஒரே மாதிரியானவை என்றோ இவர்களின் சுயவிமரிசனங்கள் ஒரே தரமுடையவை என்பதோ அல்ல. ஆயினும் நாம் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியது: இவர்களுடைய பார்வைகள், சுயவிமரிசனங்களிற்கு

**அழகியலுக்கும் அரசியலுக்கும் இடையிலான உறவென்பது எளிய நேரடியான வெளிப்படை யானது அல்ல. மாறாக மிகவும் சிக்கலான ஆழமான உறவு இது.**

பக்க தொடர்ச்சி 118. . .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சற்று நீண்ட கால இடைவெளிக்குப் பின்பு மீண்டும் உங்களை சந்திக்கின்றோம் . இந்த இடைக்காலத்தில் பல மாற்றங்கள் நடந்தேறியுள்ளன . பழைய , எதேச்சாதிகார U.N.P. அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டு , " புதிய " , " இனவாதமற்ற " , " ஜனநாயகபூர்வமான " PA அரசாங்கமும் , அரசுத்தலைமையும் மக்களின் மிகப்பெரும்பான்மை ஆதரவுடன் ஆட்சியில் அமர்த்தப்பட்டுள்ளன . புதிய ஆட்சியமைத்தவுடன் தேசியபிரச்சனை தொடர்பாக PA அரசாங்கம் மேற்கொண்ட சில நடவடிக்கைகள் பல " முற்போக்கு சக்திகளது " மனதைக் குளிரச் செய்துள்ளது . வழக்கம் போலவே இது எமது முன்னேறிய பிரிவினர் மத்தியிலும் மீண்டும் குழப்பங்களை ஏற்படுத்தத்தவறவில்லை .

பொதுவாகவே தமிழ் தேசத்தின் முன்னேறிய பிரிவினரது தத்துவ அக்கறை மிகவும் குறைவாகவே உள்ளது . உலகக் கண்ணோட்டத்தில் உள்ள இந்த பற்றாக்குறையானது தன்பங்கிற்கு முன்னேறிய பிரிவினரது கோட்பாட்டுப் புரிதலிலும் , அரசியல் நிலைப்பாடுகளிலும் கூட பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது . பகுதி – முழுமை , தோற்றப்பாடு – சாராம்சம் போன்ற தத்துவத்தின் மிகவும் அடிப்படையான கருத்தினங்களில் ( Categories ) கூட தெளிவு பெறாத நிலையில் , இந்த குறைபாடானது மிகவும் சாதாரண அரசியல் நிகழ்வுகளை கூட புரிந்து கொள்வதில் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தி விடுகிறது . அனுபவவாதமும் , நேர்காட்சிவாதமும் மார்க்சியத்தின் பெயரால் முன் வைக்கப்படும் வரையில் இந்த குழப்பங்களுக்கு முடிவு ஏற்படப்போவதில்லை . இன்றைய அவலங்களைக் களைய உண்மையிலேயே எத்தனிக்கும் எவருமே தத்துவத்திலுள்ள இந்தக் குறைபாடுகளை களைவதில் தமது அக்கறைகளை தீவிரப்படுத்தியாக வேண்டியுள்ளது . இந்த நோக்கில் ' உயிர்ப்பு ' எதிர்காலத்தில் தனது முயற்சிகளை தீவிரப்படுத்தும் .

இந்த புரிதலுடன் , ' சமாதான முயற்சிகள் ' என்ற விடயத்தை பரிசீலிப்போம் இதனை சரியாக புரிந்து கொள்வதாயின் , முதலில் எப்படிப்பட்ட பின் புலத்தில் இந்த முயற்சிகள் தொடங்கப்படுகின்றனஎன்பதை குறித்துக்கொள்ள வேண்டும் . நீண்ட காலமாகவே தமிழ் மக்களை அரசியல் ரீதியாக சிங்கள தேசம் ஒடுக்கி வந்துள்ளது . இந்த ஒடுக்கு முறைக்கு எதிரான தமிழ்மக்களது கிளர்ச்சிகள் தீவிரமடையவே அதனை இராணுவரீதியில் நசுக்கி விட சிங்கள தேசம் முனைந்தது.கடந்த பத்தாண்டுகளாக சிங்கள தேசம் தனது பொருள்வகை , ஆன்மீகவகை சக்திகளனைத்தையும் திரட்டி முனைந்தும் கூட இந்த நோக்கில்வெற்றி பெற முடியவில்லை. மேற்கொண்டு தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போராட்டத்தை இராணுவ ரீதியில் ஒடுக்கிவிடுவது சாத்தியமாகாது என்பதை முன்னாள் இராணுவ அதிகாரிகள் பலர் பகிரங்கமாகவே வெகுசனத் தொடர்பு சாதனங்களில் வெளிப்படுத்த தலைப்பட்டு விட்டனர் . இந்த கசப்பான உண்மையை சிங்கள தேசமும், அதன் தலைமைகளும் , அவர்களே விரும்பாவிட்டாலும் கூட ஏற்றுத்தான் ஆக வேண்டும் என புறநிலை யதார்த்தம் அவர்கள் மீது இடித்துரைக்கிறது . ஆயுதக் கொள்வனவுகளில் கையூட்டுப் பெற்று பிழைப்பு நடாத்தும் " சாவுவியாபாரிகளும் " , இனவாத அரசியலையே நம்பி பிழைப்பு நடாத்தும் சமூக ஒட்டுண்ணிகளும் தவிர வேறு எவருமே இந்த யதார்த்த உண்மையை

உயிர்ப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காணத்தவற முடியாது . இதற்கு மேல் , புலிகள் சிறிலங்கா ஆயுதப்படைகளை இராணுவ ரீதியில் தோற் கடித்தே தான் ஆக வேண்டும் என்பதில்லை , இன்றுள்ள இராணுவ படைபல சமனிலையை ( Balance of Forces ) இன்னும் சிலகாலத்திற்கு புலிகள் தம்பக்கம் தொடர்ந்தும் பேண முடிந்தாலே போதும் , சிறிலங்கா படைகள் தமிழீழத்தை விட்டு வெளியேறியாக வேண்டியிருக்கும் . ( ஆனால் இது தமிழ் தேசத்தை சேர்ந்தஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட, விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட மக்களுக்கு உண்மை யான விடுதலையாக இருக்குமா என்பது வேறு பிரச்சனை)

இப்படிப்பட்டதொரு பின் புலத்தில் தான் இரண்டு தேர்தல்களும் நடைபெற்றன . நம்பிக்கையூட்டாத யதா ர்த்த நிலைமை , அதிகார துஷ்பிரயோகம் , ஊழல் மோசடிகள் , ஏதேச்சாதிகார அடக்குமுறைகள் போன்ற வற்றிற்கு தமது ஆட்சேபணைகளை தெரிவிக்கும் விதத்தில் சிங்கள மக்கள் ஆட்சிமாற்றத்தை ஏற்படு த்தியிருக்கின்றார்கள் . இந்த ஆட்சிமாற்றத்தை " இனவாதத்தின் மறைவாக " சித்தரிக்கும் போது அனு பவவாதம் அம்மணமாக தெரிகின்றது. சிங்கள தேசத்தை பீடித்துள்ள பேரினவாத சித்தாந்தத்திற்கு மாற்ற ங்கள் ஏற்பட்டுள்ளனவா என்பது பற்றி விரிவான பரிசீலனை எதுவும் செய்யாமல் , அதாவது சாராம்ச த்தை பார்க்காமல் , இன்றைய தோற்றப்பாட்டை மட்டும் வைத்தே அப்படியான முடிவுகளை இலகு வாக வந்தடைகிறார்கள் . (இதே சக்திகள், முன்புபிரேமதாச ஆட்சிக்காலத்தில் "மறைந்து போன " இன வாதம் மேதின குண்டு வெடிப்புடன் டிங்கிரிபண்டா வடிவில் மறுபிறவி எடுத்தது பற்றி எதுவுமே கூறமாட் டார்கள் . )

தேசிய பிரச்சனைக்குத் தீர்வு , அரசியலை ஜனநாயக மயப்படுத்தல் என்ற இரண்டு முக்கிய கோசங்களு டன் பதவிக்கு வந்த சந்திரிகாவின் பதவியேற்பு முதல் உரையே இந்த மயக்கங்களை எல்லாம் கலைத்து விட போதுமானதாக இருந்தது . " சிங்கள இனத்தை பாதுகாப்பது " , சிங்களமக்களது கௌரவத்தி ற்கு இழுக்கு ஏற்படுத்தாத தீர்வு " என்பனே அவரது பிரதான அக்கறைகளாக வெளிப்பட்டன .

சிங்கள தேசம் இனவாதத்திலிருந்து விடுவித்துக் கொண்டுள்ளதா இல்லையா என்பது ஒருபுறம் இரு க்க , இந்த சந்திரிக்கா அவர்களே தன்னளவில் பேரினவாத சித்தாந்தத்துடன் கணக்குத் தீர்த்துக்கொண்டு ள்ளாரா இல்லையா என்பதை இவை காட்டுகின்றன . கடந்த சுமார் ஐம்பதுவருடங்களாக , ஓர் இறைமையுள்ள அரசை தனது கரங்களில் வைத்துக்கொண்டு , அந்த அதிகாரத்தின் துணை கொண்டு ஏனைய சமூக ங்களை ஈவிரக்கமின்றி ஒடுக்கிவந்த , தொடர்ந்தும் ஒடுக்கி வருகின்ற ஒரு தேசம் " தன்னை பாதுகா ப்பது " பற்றி பேசினால் அதற்கு என்ன அர்த்தம் ? யாரிடமிருந்து தன்னை பாதுகாக்கப் போகின்றது ? இதற்கு ஒரேயொரு அர்த்தத்தையே நாம் கொள்ள முடியும் . அதாவது " சிங்கள தேசம் தனது சலுகை பெற்ற நிலையை , ஆதிக்க நிலையை தொடர்ந்தும் பேணி வருவதை பாதுகாப்பது " என்பதே அதன் அர்த்தமாகும் . அடுத்ததுகௌரவம் பற்றிய பிரச்சனை. . . . குறிப்பிட்ட ஒரு சமூகமானது பல்வேறு வரலா ற்று நிலைமைகளின் கீழ் தவறுகளை இழைத்து பிற சமூகங்களை ஒடுக்கும் பாத்திரத்தை ஆற்ற நேர் ந்துவிடுவதுஎன்பது ஒரு வருந்தத்தக்க நிலைமையாகும் . இந்த நிலைமை இப்படியே தொடர முடி யாதுஎன்பதை வரலாறு இடித்துரைத்த பின்பு , அந்த தேசம் தன்னை மீளாய்வுக்கு உட்படுத்தி , தனது தவறுகளை இனங்கண்டு திருத்தி , பாதிக்கப்பட்டவர்களுக் உரிய இழப்பீடுகளை வழங்கி , தனது கடந்த கால வரலாற்று அழுக்குச் சுமையிலிருந்து விடுவித்துக் கொள்வது என்பது அந்தகுறிப்பிட்ட சமூகத்தின் முதிர்ச்சியை காட்டுகிறது . இதனை எவ்வளவு தூரம் வெளிப்படையாகவும் , நேர்மையாக வும் செய்கின்றதோ அந்தளவிற்கு இக்குறிப்பிட்ட சமூகத்தின் கௌரவமானது ஏனைய சமூகங்கள் மத்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திியிலும் , சர்வதேச அளவிலும் மேலோங்குகின்றது . இவ்வாறு செய்வதை அந்த சமூகமானது கௌர வக் குறைவானதாக கருதுமானால் , அது இன்னமும் இந்த வரலாற்று அழுக்கு மூட்டையில் இரு ந்து தன்னை விடுவித்துக்கொள்ள தயாராக இல்லை, அதற்கான பக்குவம் , முதிர்ச்சியும் அச்சமூகத் திற்கு இன்னமும் ஏற்படவில்லை என்பதே அர்த்தமாகும் .

கடந்த காலங்களில் விடுதலை போராளிகளை இராணுவ ரீதியாக தோற்கடிக்க முடியாத தனது விரக்தியை , தமிழ் தேசத்தை கூட்டாக தண்டிப்பதன் (Collective Punishment) மூலம் சிறிலங்கா அரசு வெளிப்படுத்தியது . வடமாகாணம் மீதான பொருளாதார தடை என்பது சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்ப ட்ட மனித உரிமைச்சட்டங்களை மோசமாக மீறும் தீங்கியல் குற்றமாகும் ( Crime ) . உண்மை யில் இது சிறிலங்காக அரசுக்கு எதிர்மறை விளைவையே ( Counter Productive ) கொடு த்தது . சிறிலங்கா அரசின் ஒடுக்குமுறையை தமிழ்மக்கள் நேரடியாக அனுபவிக்கவும் , அதன் விளைவாக , இந்த ஒடுக்குமுறைக்கு எதிராக போராடுபவர்களை ஆதரிக்குமாறு நிர்ப்பந்திக்கவும் செய்தது . எனவே தமிழ்தேசத்துடன் அர்த்தமுள்ள விதத்தில் பேச்சுவார்த்தைகள் எதனையும் தொடங்குவதற்கு முன்பாகவே அரசு தானாகவே முன்வந்து , இந்ததடைகளை உடனடியாகவே நீக்கிவிடுவது என்பது மிகவும் அடிப்ப டையானது . ஆனால் ஒரு சில பொருட்களுக்கு மட்டுமாக அரைகுறையாக தடைகளை நீக்கிவிட்டு அரசு பேச்சுவார்த்தைமேசைக்குச் சென்றது . இது வரையில் சுமார் ஆறுமாதகாலம் இந்ததடைகளை நீக்குவது , மற்றும் அன்றாட பிரச்சனைகளுக்கு தீர்வுகாண்பது தொடர்பான பேரம் பேசலிலேயே கட ந்துவிட்டது . இப்படியான நீண்ட பேரம்பேசல்கள் , மிரட்டல்களின் பின்பு பகுதியளவில் பொருளாதார தடைகள் நீக்கப்படுவதைக் கூட சிங்கள இனவாதிகளும் வெகுசன தொடர்பு சாதனங்களும் சகித்துக் கொள் ளத்தயாராக இல்லை . தமது அரசு புலிகளுக்கு சலுகை வழங்குவதாக " பகிரங்கமாக குற்றம் சாட்டுகின் றன . இதற்கு சந்திரிகா கூறும் பதில் , " புலிகளை தமிழ்மக்களிடம் இருந்துதனிமைபடுத்துகிறோம் என்ப தாகும் . ஆக பொருளாதார தடைகளை இத்தனை இழுத்தடிப்புகளுக்கு பின்பும் பகுதியளவிலும் , மிக வும் வரையறுக்கப்பட்ட அளவிலும் நீக்கப்படுவது கூட புலிகளை தனிமைப்படுத்தத்தானா ? இங்கு உண்மையில் நடப்பதென்ன ? இனவாதத்தால் கறைபடாதவராக , ஜனநாயக வாதியாக , துணிச்சல் மிக் க தலைவராகசித்தரிக்கப்படும் சந்திரிகாவிற்கு , கடந்த காலத்தில் விதிக்கப்பட்ட பொருளாதார தடை என் பதுசர்வதேச நியமங்களுக்கு விரோதமான ஒரு தீங்கியல் குற்றம் எனக் கூறி அதனை நீக்கும் தைரியம் ஏன்வரவில்லை ? இந்த உண்மையை விளங்கிக் கொள்ள முடியாத அளவிற்கு அவர் இன்னமும் இனவா தத்தின் பிடியில் இருந்து விடுபடவில்லையா ? அல்லது ஏனைய இனவாத சக்திகள் , இராணுவம் ஆகி யோரது நெருக்குதல்களை சமாளிக்கும் வகையில் இதனைக் கூறினாரா ? அப்படியானால் நல்லுள்ளம் கொண்ட சந்திரிகா இப்படியான நெருக்குதல்களுக்கு உட்பட்டுத்தான் செயற்பட்டாக வேண்டிய வகையில் இனவாதம் ஒரு முறைமையாக (System) நிலவுகிறது எனக்கூறுவதா ? அல்லது சந்திரிகா கூறுவ தன் நேரடி அர்த்தத்தில் இந்த சமாதான முயற்சிகள் என்பவைகூட புலிகளை மக்களிடம் இருந்து தனிமை ப்படுத்தி தோற்கடிப்பதற்கு முயலும் ஒருவித இராணுவ தந்திரோபாயம் (Counter Insurgency Tactics) தானா ? அதாவது யுத்தமுனையில் சாதிக்க முடியாததை சமாதானத்தின் பெயரால் சாதிக்க முனைகின்றாரா ? இராணுவ சீருடை செய்யத்தவறியதை வெண்புறாவின் மூலம் சிங்கள தேசம் செய்ய முனைகிறதா ?

அரசுத் தலைவரின் இலட்சணம் இதுவானால் , பேச்சுவாத்தை நடத்தச் செல்லும் அதிகார வர்க்கத் தின் தகுதிகள் ஒரு படிமேல். வடக்கில் கடந்த ஐந்து வருடங்களாக மின்சாரம் இன்மையால் ஏற்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ட்டுள்ள பாதிப்புக்களை பேச்சுவார்த்தைகளின் போது கூறித்தான் தெரிந்துகொள்ள வேண்டிய நிலையிலுள்ள மண்டுகங்கள் இவர்கள் . இதற்கும் மேலாக " சமாதான " முயற்ச்சிகளை பலப்படுத்தச்செல்லும் முற்போக்கு சக்திகளின் முயற்சிகள் வேறொருவகை . ஏற்கனவே தெற்கில் அரசுடன் ஒட்டிக் கொண்டு பிழைப்பு நாடாத்தும் இவர்கள் சமாதான முயற்ச்சிகளிலும்கூட புகுந்து பிழைப்பு நடாத்த முயலுகின்றார்கள் . சிங்கள தேசத்தை - அதாவது தாம் அரசையல்ல , சிங்கள மக்களை - பிரதிநிதித்துவப்படுத்திச் செல்வதாக கூறும் இவர்கள் சமாதான குழுக்களில்சென்று கேட்கும் கேள்வி இது தான் . " உங்களுக்கு என்ன வேண்டும் ? " எத்தனை வெளிப்படையான , நேரடியான கேள்வி இது . இவ்வளவு கசப்பான படிப்பினை களுக்குப்பிறகும் கூட கடந்தகால தவறுகளை எப்படி திருத்தலாம் என்ற அக்கறைக்கு பதிலாக , இப்போதும் கொடுப்பது - எடுப்பது என்ற ஒருவித அதிகார உறவுடனேயே பிரச்சினை அணுகப்படுகிறது . இந்த அதிகார உறவு மனோபாவத்தினால் சிங்கள " புரட்சிகர " , " முற்போக்கு " சக்திகளும் கூட பீடிக்கப்பட்டிருக்கும் போது சிங்கள தேசத்திடமும் அதன் முதலாளித்துவ அரசியல் தலைமையிடத்திலும் அதிகம் எதிர்பார்ப்பது என்பது கண்மூடித்தனமான ஒரு நப்பாசைதான் . அதிகாரம் , ஆதிக்கம் என்பவை ஒரு தேசத்தவரை எவ்வளவு தூரம் கறைபடுத்தியுள்ளதென்பதற்கு இந்த முற்போக்கு பிரிவினர் சிறந்த உதாரணங்களாகும் .

சிங்கள தேசமும் , தமிழ் தேசமும் சமாதானத்தை விரும்புகின்றன என்பது உன்மைதான் . சாவு வியாபாரிகளையும் போர்வெறியர்களையும் தவிர வேறு எவருமே இத்தனை அழிவுகளுக்குப் பின்பும் யுத்தத்தை தொடர விரும்பமாட்டார்கள் என்பது உண்மைதான் . ஆதலால் . இந்த முற்போக்கு சக்திகளது சமாதான நோக்கங்களை நாம் சந்தேகிப்பதா என்று கேள்வி எழலாம். உண்மைதான், இந்த சக்திகளது சமாதான நோக்கங்கள் உண்மையானதாக இருக்கலாம் . ஆனால் இந்த நோக்கங்களின் பின்னாலுள்ள அரசியல் , தவறானது என்பதுதான் எமது கருத்து . எத்தனை , எவ்வளவு , யார்கொடுப்பது - யார்எடுப்பது என்பதல்ல இங்குள்ள பிரச்சனை . கொடுப்பது - எடுப்பது என்ற அதிகார உறவையே தமிழ் தேசம் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை என்பதுதான்இங்குள்ள அடிப்படையாகும் . சமாதானத்தை இரண்டு தேசங்களும் விரும்புகின்றன என்பதுஉண்மைதான். ஆனால் எந்த அர்த்தத்தில் ( Terms ) என்பதுதான் இங்குள்ள பிரச்சனை . சிங்களதேசம் தனது மேலாதிக்க நிலையை பேணிக் கொண்டு சமாதானத்தை அடையவிரும்புகிறது . தமிழ் தேசம் தன்மீதுள்ள ஒடுக்குமுறையை களைவதன் மூலம் சமாதானத்தை அடையவிரும்புகிறது . எனவே எந்த அர்த்தத்தில் சமாதானத்தை அடைவது என்பதில் உள்ள இந்த முரண்பாடு தீர்க்கப்படாத வரை சமாதானம் குறித்த இவர்களது உணர்ச்சி மயமான உரைகளெல்லாம் வெறும் " சவர்க்கார குமிழிகள் " தாம் . இன்றைய சமாதான முயற்சிகளுக்குப் பின்னால் உள்ள இந்த அரசியல் பிடிபடாத வரையில் சமாதானத்தைப் பற்றி கனவு காணும் உரிமைமட்டுமே எஞ்சியிருக்கும் .

சிங்கள தேசம் உண்மையிலேயே சமாதானத்தை விரும்பினால் அது முதலில் ஏனைய தேசங்களின் இருப்பை ஏற்றுக்கொண்டு அவற்றை சமத்துவமாக நடத்துவதில் இருந்து தனது முயற்சிகளை தொடங்க வேண்டும். பல்வேறு தேசங்களும் சமத்துவ அடிப்படையில் எவ்வாறு அதிகாரங்களை , வளங்களை பகிர்ந்து கொள்வது என்பது பற்றி பேச வேண்டும் . இந்த நோக்கில் இலங்கையின் அரசியலமைப்புச் சட்டம் தேசியக் கொடி , தேசிய கீதம் உற்பட அனைத்தையும் மாற்றிக் கொள்ள அது தயாராக இருந்தாக வேண்டும் . இத்தனைக்குப் பின்பும் ஒரு தேசம் விரும்பினால் பிரிந்து செல்லவும் முடியும் என்பதையும் உள்ளடக்கியே, சுயநிர்ணய உரிமைபற்றி பேசமுடியும் . ஆனால் இன்று





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ள்ள நிலைமையில் சிங்கள தேசமானது ஏனைய சமூகங்களை தனியான தேசங்களாக ஏற்றுக்கொள்ள , அவர்களின் தாயக பிரதேசங்களை அங்கீகரிக்க, அவற்றின் அந்நியப்படுத்த முடியாத சுயநிர்ணய உரிமையை மதிக்கத் தயாராக இல்லை. ஏனைய சமூகங்களது தேசிய அடையாளங்களையும் , அவர்களது அரசியல் பிரதிநிதித்துவப்படுத்தல்களையும் இழக்கச் செய்யும் நோக்கில் கடந்த காலங்களில் சிங்கள அரசு நடாத்திய திட்டமிட்ட குடியேற்றங்களைக் கூட , அப்படி எதுவுமே நடைபெற வில்லை எனமறுக்கிறது . குடியேற்றம் என்ற பதமே ஒரு நாட்டினுள் பாவிக்கப்பட முடியாதது என விதண்டா வாதம் பண்ணிக் கொண்டிருக்கிறது . இந்த தேசத்திடம் போய் இனவாதத்தில் இருந்து விடுபட்டு விட வேண்டும் எனஎதிர்பார்ப்பது மீண்டும் எமது முன்னேறிய பிரிவினர்களின் நப்பாசையே தவிர வேறென்ன ?

கடந்த காலத்தில் சிங்கள தேசமானது இலங்கையிலுள்ள ஏனைய சமூகங்களை மோசமாக ஒடுக்கும் தவறை இழைத்துள்ளது என்பதுதான் வரலாற்று உண்மையாகும் . இந்த தவறை திருத்தி அதற்கு இழப்பீட்டை வழங்குவதன் மூலமே சமாதானத்தை எட்ட முடியும் . அதுவும் இந்த மாற்றங்கள் வெளிப்படையாகவும் சிங்கள தேசத்தின் பங்கு பற்றுதலுடனும் நடைபெறவேண்டும் . அப்போதுதான் அடையப்படும் தீர்வுகள் குறுகிய நோக்கம்கொண்ட சக்திகளதுபலவிதமான தடைகளையும் மீறி நிலைத்து நீடிக்கக்கூடிய சமாதானத்தை கொண்டுவரும் . கிழக்குமாகாணத்தில் சர்வசனவாக்கெடுப்பு நடாத்தி வடக்கு – கிழக்கு மாகாண இணைப்பை பிரித்துவிட போவதாக அடிக்கடி மிரட்டி வரும் சிங்கள தலைமைகளுக்கு துணிச்சல் இருந்தால் , சிங்கள தேசத்தின் சுயவிமர்சனத்தை சிங்கள தேசத்திடமே கொண்டுபோகட்டும் பார்க்கலாம் . சிங்கள தேசம் தனது கடந்தகால தவறுகளை ஒத்துக்கொண்டு அவற்றை நிவர்த்தி செய்ய தனது சம்மதத்தை வழங்கி விட்டால் இதற்கு மேல் பேச்சுவார்த்தை மேசை என்பது வெறுமனே முறைப்படியான சில ஆவணங்களை தயாரிக்கும் , கையொப்பமிடும் அரங்காக குறுகிவிடும் .

சிங்கள மக்கள் உண்மையிலேயே இனவாதத்தின் பிடியில் இருந்து விடுபட்டிருந்தால் , அவர்களை முகங்கொடுக்கும் தைரியம் ஏதாவது ஒரு சிங்கள தலைவருக்கு இருந்தால் இதனை முயன்று பார்க்கலாம் . துரதிஷ்டவசமாக இலங்கையில் " மண்டேலா " மட்டுமல்ல , " கிளார்க் " கூட இல்லைஎன்பதுதான் வருந்தத்தக்க உண்மையாகும். இந்த யுத்தமென்பது சிங்களதேசம் ஏனையை சமூகங்களை சமத்துவமாக நாடத்த தயாராக இல்லை என்ற அரசியலில் இருந்து பிறந்ததாகும் . தேசிய ஒடுக்கு முறையை அரசியல் வழிமுறைகளால் தீர்க்க முடியாமல் போனதன் விளைவே இந்த யுத்தமாகும் . இப்போது இந்த யுத்தத்திற்கு தான் சமாதான முறையில் தீர்வுகாண முயற்சிகள் நடைபெறுகின்றன . ஆனால் இந்த சமாதான முயற்சிகள் எதுவுமே யுத்தத்தின் பின்னால் உள்ள அரசியலை இனங்கண்டு , தேசங்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வு காட்டும் ஒடுக்கு முறை அரசியலுக்கு முடிவுகட்ட தவறுமானால் , அது வேறுவழிகளில் – அதாவது யுத்தமாக – தொடரப்படுவதை யாராலும் தவிர்த்து விட முடியாது . சந்திரிகா அரசின் இதுவரை கால சமாதான முயற்சிகளை கவனமாக பரிசீலிக்கும் எவருமே இந்த எத்தனிப்புக்கள் தேசங்களுக்கிடையிலான அதிகார உறவை கேள்விக்குள்ளாக்காமல் அப்படியே பேணிக்கொண்டு அமைதியைக் கொண்டுவரும் எத்தனிப்புக்களாகவே இருப்பதை புரிந்துகொள்ள முடியும் . எனவே இது அடுத்தகட்டத்தை – யுத்தத்தை – நோக்கி நகர்வது , யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்,தவிர்க்கமுடியாததாகி விட்டதென்றே கருதுகின்றோம் . இதற்கு மேல் யுத்தத்தின் தொடக்கமானது சில " தற்செயல் " நிகழ்வுகளுக்காக மட்டுமே காத்திருக்கிறது . இந்த காத்திருப்பு என்பதையும் கூட, அடுத்து வரவுள்ள இன்னும் தீவிரமான ஒரு மோதலுக்கான தயாரிப்பாகவே இரு சாராரும் எடுத்துக் கொண்டு

www.tamilarangam.net

ள்ளதை நடப்புக்கள் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. . . . இப்பகுதி எழுதி முடித்து அச்சுக்கு போகத் தயார் செய்கையில் , திருமலை கடற்படை பீரங்கிப் படகுகள் தாக்கப்பட்டு மோதல் தொடங்கி விட்டதை கருத்தில் கொள்ளவும். . . . தர்க்க ரீதியான முடிவானது கண் முன்னே யதார்த்தமாவதை இங்கு காண்கின்றோம். . . .

இன்னும் சில நல்லெண்ணம் கொண்டோர், வேறோரு வழியில் தீர்வினை காண விளைகிறார்கள் . " சமஷ்டி " எனும் பதத்தை சிங்கள மக்கள் சந்தேகத்துடன் நோக்குவதால் , கிட்டத்தட்ட அப்படியான ஒரு தீர்வை , ஆனால் வேறொரு பெயரில் கொண்டு வரலாம்என இவர்கள் முன்மொழிகின்றார்கள். வெளிப்படையாகவும் நேர்மையாகவும் அடையப்பட்ட தீர்வுகள் கூடஅவற்றை நடைமுறைப்படுத்துவது என்று வந்தவுடன் அதிகாரவர்க்கங்களாலும் இராணுவத்தினராலும் பலதடைவை குழப்பப்படும் என்பது தான் சர்வதேச அளவிலான பொதுவான உண்மையாகும் . அப்படியானால் சிங்கள மக்களின் முதுகுக்குப் பின்னால் உருவாக்கப்படும்பலவீனமான முடிவுகளுக்கு என்ன நடக்கும் என்பதை ஊகிக்க முடியுமல்லவா ?

பேரினவாதம் என்பது சில தனிநபர்களது விருப்பு வெறுப்புகளிலிருந்து பிறப்பதல்ல . அது ஒரு முறைமை ( System ) ஆகும் . இந்த முறைமை அடிப்படையில் மாற்றியமைக்கப்படாத வரையில் , எவ்வளவு தான் சிறந்த நபர்களாயிருப்பதும் , அவர்களது நோக்கங்கள் எவ்வளவு தான் உயர்வாக இருப்பதும் கூட , அவை இந்த முறைமையினால் மிகவும் குறுகிய அளவிலேயே மட்டுப்படுத்தப்பட்டு விடும் . சந்திரிகா தேர்தல் விஞ்ஞாபனத்தில் உலக வங்கியை விமர்சித்திருந்தார் ! சுதந்திர வர்த்தகவலய தொழிலாளர்களது உரிமைகள் பற்றி குரலெழுப்பியிருந்தார் ! பத்திரிக்கை சுதந்திரம் பற்றி அதிகமாகவே பேசியிருந்தார் . இப்போது பதவிக்கு வந்தவுடன் அந்தந்த பிரச்சனைகளுடன் தொடர்புடைய முறைமைகளினால் கட்டுப்படுத்தப்பட்டு தான் கூறியவற்றிக்கு எதிராகவே செயற்படுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார் . நிதி மூலதனத்திடம் சரணடைவதும் , தொழிலாளருக்கு துரோகமிழைத்ததும் , பத்திரிக்கையாளருக்கு இருட்டடி போட்டதும் , அடுத்தடுத்து மிகவேகமாகவே நடந்தேறியுள்ளன . அவரது சமாதான முயற்சிகளுக்கும் இதேகதிதான் காத்திருக்கிறது . U.N.P. அரசாங்கத்தின் 17 வருட " சாதனைகள் " சில மாதங்களுக்குள் முறியடித்து விட துடிக்கும் சந்திரிகா அரசாங்கம் தேசிய பிரச்சனையிலும் அதே வேகத்துடன்செயற்படும் என்றே எதிர்பார்க்கலாம் .

சென்ற இதழில் வெளியான " அமைப்பியல்வாதம் " பற்றிய கட்டுரை தொடர்பாக வெளிப்பட்ட பிரதிபலிப்புகள் பற்றி சிலவற்றை இப்போது கூறியாக வேண்டியுள்ளது. . . . சமூக உருவாக்கத்தை மிகவும் சிக்கலானதாக புரிந்துகொள்ள வேண்டும் என்பதைக் கடைக்கோடி " பொருளாதாரவாதிகள் " தவிர வேறு எவருமே வெளிப்படையாக மறுப்பதில்லை . " . . . இதில் புதிதாக வலியுறுத்த அப்படி என்னதான் இருக்கிறது. . . . மாவோ ஏற்கனவே தெளிவாக கூறிவிட்டாரே . பின்னர் ஏன் அதே வலியுறுத்தல்களை அமைப்பியல்வாதம் என்னும் பெயரில் மேற்கொள்ள வேண்டும் ?. . . . தேசியவாதம் , பால்வாதம் , சாதியம் , கலை – இலக்கியம் போன்றவை பொருளாதாரத்தில் இருந்து வேறுபட்ட தனித்துவமான பண்புகளை , தனியான இயங்கு விதிகளையுடையவை என்பது மிகவும் சாதாரண உண்மையல்லவா ? இதனை திரும்பச் சொல்வதற்கு ஏன் இத்தனை ஆர்ப்பாட்டமான சொல்லாடல்கள் ? " அமைப்பியல் வாதம் போன்ற சிந்தனை முறைகளை கடந்து,பின் – அமைப்பியல்வாதம் மேலும் புதிய சிந்தனைகள் வளர்ந்து , இன்று அவையும் கூட பழையபாணியாக ( Old Fashion ) மாறிவிட்டனவே . இப்போது போய். . . அமைப்பியல் வாதம் பற்றிய இத்தனை அழுத்தம் தேவைதானா ?. . . . "





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது போன்ற கருத்துக்களை கேட்கும் போது எமது முன்னேறிய பிரிவினரின் கோட்பாட்டு அக்க றை பற்றி ஒருவித மகிழ்ச்சி பெருமிதம்தோன்றினாலும் கூட , இந்த உணர்வானது சில கணங்கள் கூட நீடித்திருக்க முடியாதவாறு யதார்த்தம் எமக்கு இடித்துரைக்கின்றது . இவர்களது விளக் கம் எவ்வளவு தூரம் எளிமைப்படுத்தப்பட்டதாக இருக்கிறது என்பது அவர்கள் இந்தவிடயங்கள் தொடர்பாக தொடர்ந்து வெளியிடும் கருத்துக்களை ஆழமாக உற்று நோக்கினால் புரிந்துகொள்ள முடிகிறது .

தேசியம் , பால்வாதம், சாதியம் , கலை – இலக்கியம் என்பவற்றை தனித்துவமான கட்டமைப்பு க்களாக ஏற்றுக்கொள்ளும் இவர்கள், அந்தந்த துறைகளில் தாம் இறங்கியவுடன் , அவர்கள் முன்பு ஒத்துக்கொண்ட விடயங்கள் மிகவும் பெயரளவிலானதே என்பதை நிரூபித்து விடுகிறார்கள் .தேசிய வாதம் பற்றிபேசும் போது முதலாளித்துவம் என்பதை தொடங்கு புள்ளியாக கொண்டு ஆரம்பிக்கின் றார்கள் . முடிவில் தேசியவாதத்தின் தனித்துவமான பண்புகளைப் பற்றி பேசுவதற்குப் பதிலாக முதலாளி த்துவத்திற்கும் தேசியவாதத்திற்கும் உள்ள உறவை வலியுறுத்துவதையேசெய்து முடிக்கிறார்கள் . சாதியம், பால்வாதம், கலை – இலக்கியம் பற்றிய ஆய்வுகளிலும் இதே பிரச்சனைகளே வருகின்றன உண்மையில் இங்கு என்ன நடைபெறுகிறது என்றால் , இவர்கள் தேசியவாதம் , பால்வாதம் , சாதி யம் , கலை – இலக்கியம் என்பவை தனித்துவமான கட்டமைப்புகள் என பெயரளவில் ஏற்றுக் கொண்டாலும் கூட , அந்தந்த துறைகளில் இறங்கியதும் , தாம் ஒத்துக் கொண்டவற்றை மறுக் கும் வகையில் பொருளாதாரவாதத்தில் இருந்தே தமது ஆய்வுகளை முன்வைக்கின்றார்கள் . இதன் மூலம் பொருளாதார விதிகளை அப்படியே ஏனைய கட்டமைப்புக்களுக்கும் பிரயோகிப்பதைத் தான் செய்து முடிக்கின்றார்கள் . இதன்படி தேசியவாதம் முதலாளித்துவமாகவும் , சாதியம் நிலப்பிரபுத்து வமாகவும் , பால் முரண்பாடு வர்க்க முரண்பாடாகவும்,கலை – இலக்கியம் வர்க்கமுரண்பாட்டின் பிரதிபலிப்பாகவும் குறுக்கப்பட்டு விடுகின்றது . பொருளாதாரத்தின் அதே விதிகள் அல்லது அதனையொ த்த விதிகளே வேறோர்வண்ணத்தில் தேசியவாதத்திலும், சாதியத்திலும் , பால்வாதத்திலும், கலை – இல க்கியத்திலும் செயற்படுமாயின் பின் , இவற்றை தனித்துவமான கட்டமைப்புகளாக வலியுறுத்துவதே அவசியமற்றதாகி விடுமே . எனவே இங்கு வெளிப்படுவது சமூக உருவாக்கம் சிக்கலானது என்ற பார்வையல்ல, மாறாக சாராம்ச வாதமே. பொருளாதாரம் என்ற சாரத்தைக் கொண்டு ஏனைய கட்டமை ப்புகளை விளக்க முனைவதையே காண்கின்றோம் .

**பொருளாதாரத்திற்கும் ஏனைய கட்டமைப்புகளுக்கும் இடையிலான உறவானது நேரிடையானதல்ல .** அதா வது, பொருளாதார தளத்தில் நடைபெறும் ஒவ்வொரு மாற்றத்திற்கும் ஏற்ப , அதற்கொத்த மாற்ற ங்கள் ஏனைய கட்டமைப்புக்களிலும் நடைபெற்றுக் செல்லமாட்டா அந்தவகையில் பொருளாதாரத்தி ற்கும் ஏனைய கட்டமைப்புக்களிற்கும் இடையிலுள்ள உறவானது ஒன்றுக்கு – ஒன்று ( One - to - One ) என்பதாக இல்லை. பொருளாதாரம் வந்து நிர்ணயிப்பது இறுதியில் மட்டும் தான் . அந்த இறுதிக் கணம் வரையில் ஏனைய கட்டமைப்புகள் ஒவ்வொன்றும் மிகவும் வெவ்வேறான திசைகளில், மிகவும் வேறுபட்ட வேகத்தில் ( Rythum ) தத்தமக்குரிய தனித்துவமான விதிக ளின்படியே செயற்படுகின்றன . ஏதாவது ஒரு இடைக்கட்டத்தில் பொருளாதாரமும் இன்னோர் கட்ட மைப்பும் மிகவும் வேறுபட்ட திசைகளில் ( சமயத்தில் எதிரெதிராகவும் கூட ) மிகவும் வேறுப ட்ட வளர்ச்சி விகிதத்தில் சென்று கொண்டிருக்கலாம். அந்த நிலையில் , குறிப்பிட்டகட்டமைப்பில் நடைபெறுபவற்றை வெறுமனே பொருளாதாரத்தால் அப்படியே நேரடியாக விளக்கிவிட முடியாது .





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாம் செய்யக் கூடியதெல்லாம் , இறுதியில் பொருளாதார தளத்தில் நிகழும்முரண்பாடுகளும் , குறிப்பிட்டதொரு கட்டமைப்பில் நிகழும் முரண்பாடுகளும் எவ்வாறு ஒன்றையொன்று பலப்படுத்தும் விதத்தில் ஒன்றிணைந்து ( Articulate பண்ணி ) செயற்படுகின்றன என்பதை விளக்குவது மட்டும் தான் .

தேசியவாதம் , பால்வாதம் , சாதியம் , கலை - இலக்கியம் என்பவை பொருளாதாரத்திலிருந்து வேறுபட்டதனித்துவமான கட்டமைப்புகளாகும் , என்ற கூற்றானது உண்மையில் இவ்வளவு ஆழமான தார்பரியங்களையும் கொண்டுள்ள ஒரு விடயமாகும் . இந்த கூற்றை இதே அர்த்தத்தில் புரிந்துகொண்டு , இந்த ஒவ்வொரு கட்டமைப்புகளினதும் தனித்துவமான இயங்குவிதிகளை கண்டறிவதை நோக்கி நகராத வரையில் மேற்குறிப்பிட்ட ஏற்றுக்கொள்வது என்பது வெறுமனே பெயரளவினதாகவே இருக்கும் . இதற்குப் பின்னால் அதே பொருளாதாரவாதம் தொடர்ந்தும் செயற்பட்டுக் கொண்டேயிருக்கும் .

வேறுபட்ட கட்டமைப்புகளின் தனித்துவமான விதிகளைக் கண்டறியும் பிரச்சனை அடுத்து வருகிறது : இதற்கு , இந்த ஒவ்வொரு கட்டமைப்பையும் முதலில் தனித்தனியான இருப்புகளாக ( Seperateentity ) எடுத்துக் கொண்டு கட்டுடைப்பு ( De - Construction ) செய்யவேண்டும் . ஒரு கவிதையைப் புரிந்து கொள்ளும் நோக்கில் எவ்வாறு அந்த கவிதை ஒரு தனியான இருப்பாக எடுத்துக் கொள்ளப்பட்டு கட்டுடைப்பு செய்யப்படுகின்றதோ அவ்வாறு இந்த ஒவ்வொரு கட்டமைப்பும் முறையாக கட்டுடைக்கப்பட வேண்டும் . இப்படியாக கட்டுடைப்பு செய்து பெறப்படும் கூறுகள் எவ்வாறு ஒன்றோடொன்று தொடர்பு கொள்கின்றன , இதன் மூலம் பெறப்படும் அர்த்தப்படுத்தல்களுக்கான சாத்தியக் கூறுகள் எவை , போன்றவற்றை நாம் முதலில் குறித்துக் கொள்ள வேண்டும் . இதன் மூலமே குறித்த ஒவ்வொரு கட்டமைப்பிற்குமான தனித்துவமான விதிகளை நாம் கண்டறிறோம் . எந்தவொரு கட்டமைப்பும் பிறிதொரு கட்டமைப்புடன் கொள்ளும் உறவிலேயே அர்த்தம்பெறும் என்பதாலும் , பொருளாதாரம் வந்து நிர்ணயிப்பதாலும் , குறிப்பிட்ட ஒரு கட்டமைப்பின் தனித்துவமான விதிகளானது ஏனைய கட்டமைப்புகளுடன் தொடர்புபடுத்தப்படுகிறது . இதன் மூலமே குறிப்பிட்ட கட்டமைப்பு பற்றிய சரியான புரிதலானது எட்டப்படுகின்றது . ஆனால் குறித்த கட்டமைப்பு இப்படியாக ஏனைய கட்டமைப்புகளுடன் தொடர்புபடுத்தப் படுவதென்பது இறுதியில் நடைபெறுவதாகும் . மாறாக , பொருளாதாரம் என்பதையே தொடக்கப்புள்ளியாகக் கொண்டால் , அந்த குறிப்பிட்ட கட்டமைப்பானது ஒரு போதும் முறையான கட்டுடைப்பிற்குள்ளாக மாட்டாது . இதனால்குறிப்பிட்ட கட்டமைப்பின் தனித்துவமான விதிகளை கண்டறிவதற்கு பதிலாக, பொருளாதார விதிகளை பிரதியிடுவதே நிகழ்தேறும் . இதுதான் இன்று எமது முன்னேறிய பிரிவினர் மத்தியில் நடைபெற்று வருகின்றது .

இன்னும் சிலர் , தாம் ஆழமான ஆய்வுகளை மேற்கொள்ளும் துறைகளில் பொருளாதார வாதமானது போதிய விளக்கங்களை அளிக்கத்தவறிவிடுவதால் , அபத்தமான முடிவுகளை தவிர்த்து விடும் நோக்கில் தத்தமது அக்கறைக்குரிய துறைகளை ஒரளவு தனித்துவமான கட்டமைப்புகளாக எடுத்துக் கொண்டே அணுகத்தொடங்கிறார்கள் . இதன் மூலம் சில குறிப்பிடத்தக்க படைப்புகளை உருவாக்கி குறிப்பிடத்தக்க விதத்தில் தமது தடங்களை பதிக்கின்றார்கள் . ஆயினும் , இப்படிப்பட்டவர்கள் மீது " மார்க்சியவிரோதி " என்ற முத்திரையை குத்துவதற்கு ஒரு பட்டாளமே காத்துக்கொண்டிருக்

உங்கள் நாம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கின்றது – நடப்பிலுள்ள மார்க்சியம் பற்றிய தவறான புரிதலை எப்படியும் காத்தே வேண்டும் என்பதில் உறிதியாகவுள்ள இந்த பட்டாளத்தை எப்படி சமாளிப்பது என்புது தனி நபர்களான முன்னையவர்களுக்கு பெரியதோர் பிரச்சனைதான் . இதனால் தமது துறைகளில் தாம் மேற்கொள்ளும் அனுகுமுறைகளை தத்துவமட்டத்திற்கு உயர்த்தி , அதனை முரணற்ற , முற்றிலும் உள்ளிணக்கமான உலகக் கண்ணோட்டமாக வளர்த்தெடுக்கவும் , அதன்மூலம் சமூக உருவாக்கத்திலுள்ள ஏனைய கட்டமைப்புகளை ஆய்வு செய்வதற்கான ஒரு முறையியலாகவும் வளர்த்தெடுப்பதற்கு பதிலாக , தாம் மார்க்சியவாதிகள் தான் என்பதை நிரூபிக்க " சத்திய கடதாசிகளை " தயாரிப்பதிலேயே இவர்களது ஆற்றல்கள் அதிகம் செலவாகிறது . இதனால் தத்தமது துறைகளில் குறிப்பிடத்தக்க சாதனைகளை படைத்தவர்களும் கூட மற்றொரு துறையில் நுழைந்ததும் மீண்டும் நடப்பு புரிதலை காக்கும் கும்பலுடன் சேர்ந்து கொள்கின்றார்கள் . இந்த இடத்தில் சமூக உருவாக்கத்தை சிக்கலானதாக புரிந்து கொள்வது தொடர்பான சம்பந்தப்பட்டவர்களது புரிதல்களை கேள்விக்குள்ளாக்க வேணடியுள்ளது . கலை இலக்கியம் , பெண்ணிலைவாதம் போன்றவற்றில்குறிப்பிடத்தக்க சரியான புரிதலை வெளிப்படுத்தும் சிலர் தேசிய வாதத்தில் இடறி விழுவதைஇவ்வாறுதான் புரிந்து கொள்ள முடியும் .

எனவே " சமூக உருவாக்கமானது சிக்கலானது " என்ற வாசகத்தை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பதல்ல பிரச்சனை . இந்த வாசகத்தின் ஆழமான தார்ப்பரியங்களை புரிந்து கொண்டுள்ளோமா ? என்பதும் , இந்த புரிதலை குறிப்பிட்ட ஒரு துறை சார்ந்ததாக மட்டுமன்றி சமூக உருவாக்கத்தில் தொடர்புடைய ஏனைய கட்டமைப்புகளையும் தழுவியதாக விரித்துச் செல்கிறோமா ? என்பதும் தான் இங்கு முக்கியமானது . இப்படிப்பட்ட ஒரு விரிவான புரிதலை எட்டுவதன் மூலம் , நாம் வாழும் சமூகத்தையும் அதில் முட்டி மோதிக்கொள்ளும் சமூக சக்திகளையும் புரிந்துகொண்டு இந்த மாற்றத்தில் பங்களிக்கக் கூடிய விதத்தில் சில முடிவுகளை எட்ட முடியுமா என்பதே அக்கறைக்குரியதாகும் . இந்த முயற்சிகளில் வெற்றியீட்டாத வரையில் புலிகளை மதிப்பிடுவது , தேசிய வாதத்தை புரிந்துகொள்வது போன்ற பிரச்சனைகளில் மட்டுமன்றி, புரட்சிக்கு அவசியமான திட்டம் , மூலோபாயம் , என்பவற்றை வரைவதிலும் வெற்றிபெற முடியாது .

இனி கட்டுரைகளுக்கு வருவோம். . . . புரட்சிகரமாற்றை • கட்டும் பணியை எங்கிருந்து தொடங்குவது ? என்பதுபற்றி விரிவாக விவாதித்து தீர்வுகாண வேண்டியதன் அவசியம் குறித்து நாம் முன்னரே வலியுறுத்தியிருந்தோம் . அந்த வகையில் புரட்சிகர மாற்றை கட்டும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகளையும் , எமது கடந்த காலப்போராட்டம் முழுவதையும் கூட மீள்மதிப்பீடு செய்து , எமது கடந்தகால சிந்தனை முறையிலும், வேலைமுறையிலும் இருந்து முறித்துக்கொள்வது அவசியம் எனக் கருதினோம் . அந்த நோக்கில் எழுதப்பட்டதே " தன்னியல்புவாதம். . . . " குறித்தகட்டுரையாகும் . இக்கட்டுரை எழுதப்பட்டதிலிருந்து இப்போது உயிர்ப்பு பிரசுரிக்கப்படுவதற்கிடையில் கிட்டத்தட்ட ஒரு வருடம் முழுதாக ஓடிவிட்டது . இந்த இடைக்காலத்தில் பல மாற்றங்கள் நடந்தேறியுள்ளன . " மக்களிடம் போவது " என்ற கோசம் அனேகமாக ஓய்ந்தே விட்டது . அதற்குப்பதிலாக சமாதான முயற்சிகள் பற்றிய எதிர்பார்ப்புகள் ஓங்கி நிற்கின்றன . இவ்வாறே முன்பு நாம் தன்னியல்பு வேலைகள் ஓய்ந்து போவதற்கான வாய்ப்புகள்பற்றி ஓரளவு தர்க்க ரீதியான ஊகத்தின் அடிப்படையிலேயே இக்கட்டுரையில் பேசமுனைந்தோம் . ஆனால் இந்த இடைக்காலத்தில் அது அனேகமாக நடந்தேறிவிட்டது . தன்னியல்பு வேலைகள் தமது ஆற்றல்களை தீர்த்துவிட்ட நிலையில் படிப் படியாக ஓய்ந்துபோகும் நிலைமையைஅடைந்துள்ளன . இந்த கட்டுரை எழுதப்படும்போது வெளிவந்துகொண்டு இருந்த பல பத்திரிகைகள் இப்போது அனேகமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நின்று போயுள்ளன . அப்படியானல், தன்னியல்பு வாதம் பற்றிய ஒரு விரிவான கட்டுரையின் தேவை என்ன ? என்ற கேள்வி எழவேசெய்கிறது . தன்னியல்பு வேலைகள் ஓரளவு ஓய்ந்துபோய் உள்ளமை உண்மைதான் ஆனால் நாம் எவ்வளவு தூரம் தன்னியல்பு வாதத்துடன் பிரக்ஞைபூர்வமாக கணக்குத்தீர்த்துக் கொண்டுள்ளோம் என்பது இன்று வரை பிரச்சனைக்குரியதாகவே உள்ளது . இன்று ஆற்றல்கள் தீர்ந்து ஓய்ந்து போயுள்ள இந்ததன்னியல்பு வேலைகள் எதிர்காலத்தில் இன்னொரு நிலைமையில் மீண்டும் தலைதூக்காது என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது . மேலும் , நாம் ஒரு புரட்சிகர மாற்றை கட்டுவதில் உறுதியாக இருப்பின் எமது கடந்த கால சிந்தனை முறையுடனும் , வேலைமுறையுடனும் கணக்குத் தீர்த்துக்கொள்வது என்பது தீர்க்கமான விடயமாகிறது . அத்தோடு புரட்சியாளர்கள் உடனடிக் கரிசனைக்குரிய விடயங்களுடன் மட்டும் நின்றுவிடாது , நீண்ட கால நலன்களைக் கருத்தில் கொண்டால் புரட்சிகரமாற்றை கட்டுவதற்கான முன்முயற்சிகள் பற்றிய படிப்பினைகளை பெற்றுக்கொள்வது ஒரு வரலாற்றுத் தேவையாகவும் உள்ளதால் இந்த விடையங்களை மாற்றங்கள் இன்றி அப்படியே விட்டுள்ளோம்.

தன்னியல்பு வேலைகள் தம் ஆற்றல்களை தீர்த்து ஓய்ந்து விட்டமையானது , முன்னேறிய பிரிவினர் மத்தியில் இதுவரைகாலமும் நடைபெற்ற அற்ப சொற்ப வேலைகளும் நின்றுபோய் , இந்த சக்திகள் முற்றாகவே நம்பிக்கையிழந்து போகும் நிலைமையையும் தோற்றுவித்துள்ளது . இப்படிப்பட்ட நிலைமையில் தொடர்ந்தும் செயற்பட வேண்டும் என்பதில் உறுதியாயுள்ள சக்திகளின் தோள்களில் அதிக சுமைகள் விழுவதை உணரமுடிகிறது . இந்த நிலையில் எமது முயற்சிகள் இன்னமும் தீவிரப்படுத்தப்பட வேண்டியதை உணர்கின்றோம் . இங்கு , மக்களை அணிதிரட்டுவதில் தன்னியல்பு வாதம் ஏற்படுத்தக் கூடிய பாதிப்புகளை மட்டுமன்றி , அமைப்புப்பணிகளில் கூட தன்னியல்பு வாதம் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புக்களைப் பற்றி அதிகம் பேசியாக வேண்டியுள்ளது . இக்கட்டுரையில் இந்த விடயம்குறித்து அதிகம் பேசமுடியவில்லை . இன்றைய வரலாற்றுத் தேவைகள் தாபன வேலைமுறைகளிலும், ஊழியர் கொள்கைகளிலும் தன்னியல்பு நிலவுவதற்கான வாய்ப்புகள் பற்றியும் , கோட்பாட்டுப் பணியும் , அணிதிரட்டலும் கூட அவற்றிற்கு இணையான அமைப்புப்பணியுடன் இணைக்கப்படாவிட்டால் இவை கூட தன்னியல்பின்பாற்பட்டவையாக அமைந்து விடும் வாய்ப்புப்பற்றியும் நாம் அதிகம் அக்கறை எடுத்துக்கொண்டாக வேண்டியுள்ளது . இந்த வகையில் இக்கட்டுரையில் கூறப்படும் கருத்துகள் இன்னமும் முழுமைப் படுத்தப்பட வேண்டியதாக உள்ளதை உணர்கிறோம். . . .

. . . . ஒவ்வொரு ஆதிக்க வடிவமும் தனது இருப்பிற்கும், அதன் தொடர்ச்சிக்கும் வெறுமனே பலப்பிரயோகத்தை மாத்திரம் நம்பியிருப்பதில்லை . இந்த நோக்கில் ஆதிக்க சக்திகளின் சித்தாந்தங்களின் பாத்திரம் முக்கியமானது இந்த அர்த்தத்தில் ஆதிக்கசித்தாந்தங்கள் வன்முறை இயந்திரத்தை ஒத்த , அதற்கு துணையான ஒரு பாத்திரத்தையே ஆற்றி வருகின்றனர் . இந்த நோக்கில் தான் கிராம்சி " சிவில் சமூகம் " பற்றியும் , அல்தூசர் " சித்தாந்த அரசயந்திரம் " பற்றியும் பேசுகின்றார்கள் . ஆதிக்க சக்திகள் பல புனைவுகளை , ஐதீகங்களை உருவாக்கி அவற்றை தமது கட்டுப்பாட்டிலுள்ள தொடர்புசாதனங்கள் மற்றும் பலதரப்பட்ட சித்தாந்த நிறுவனங்களின் மூலம் விரிவாகப்பரப்பி , முதலில் ஆதிக்க சக்திகளை ஒன்றுதிரட்டி , திடப்படுத்தி பலப்படுத்தவும் பின்பு ஒடுக்கப்பட்ட மக்களையே தமது சித்தாந்த ஆதிக்கத்திற்குள் கொண்டுவரவும் செய்கின்றார்கள் . ஒடுக்கப்படும் மக்கள் ஆதிக்க சித்தாந்தங்களின் பிடிக்குள் சிக்கியிருக்கும் வரையில் , ஸ்தூலமாக தாம் அன்றாடம் முகம்கொ





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டுக்க நேரும் ஒடுக்குமுறைகளையும் கூட சரியாக இனங்கண்டு அவற்றுக்கு எதிராக போராடமுடியாதவர்களாக இருப்பர். தம்மீதான ஒடுக்கு முறைகள் பற்றி போதிய விழிப்புணர்வு பெறாமால் அவற்றை சகித்துக்கொள்ளுமாறு அவ்வாறு சகித்துக்கொண்டிருப்பதை நியாயப்படுத்துமாறு , ஆதிக்க சித்தாந்தங்களின் பிடி இவர்களை நிர்ப்பந்தித்துக் கொண்டிருக்கும். இந்த நிலையில் எந்தவொரு ஒடுக்குமுறைக்குள்ளாகும் மக்கள் பிரிவினரும் குறிப்பிட்ட ஒடுக்குமுறையிலிருந்து பௌதிகரீதியாக தம்மை விடுவித்துக் கொள்வது என்பது , ஆதிக்க சித்தாந்தங்களில் இருந்து தம்மை ஆன்மிக ரீதியாக விடுவித்துக் கொள்வதை முன்நிபந்தனையாக கொண்டுள்ளது . இந்த நோக்கில் ஆதிக்க சித்தாந்தங்களின் புனைவுகளை எதிர்த்துப் போராடுவது அவசியமாகிறது . அந்த நோக்குடன் எழுதப்பட்டதே " சிங்கள இனவாதம் தமிழ் தேசம் குறித்து கட்டமைத்துள்ள ஐதீகங்கள் " எனும் கட்டுரையாகும் .

தமிழ் தேசத்தின் முன்னேறிய பிரிவினர் புரட்சிகர மாற்றை அமைப்பதில் வெற்றி பெறுவதற்கு முதலில் அவர்கள் தம்மை இந்த புனைவுகளில் இருந்து விடுவித்துக் கொண்டாக வேண்டியுள்ளது . அதேவேளை இந்தப் புனைவுகளை தமிழ் தேசத்தினுள் பரப்பும் செயலை கடந்த காலத்தில் செய்து வந்தவர்களை அம்பலப்படுத்தியாகவும் வேண்டியுள்ளது . கடந்த காலத்தில் தேசிய வாதம் தொடர்பாக இவர்களிடத்தில் காணப்பட்ட குறுகிய புரிதலுடன் கூடவே , இந்த புனைவுகளை உண்மையென ஏற்றுக்கொண்டு அவற்றைத் தாமும் சேர்ந்து பரப்பியதும் , தேசியவிடுதலைப் போராட்டமானது பிற்போக்கு சக்திகளது கரங்களுக்கு சென்றடைந்ததில் முக்கியபாத்திரம் ஆற்றியுள்ளது . தமிழ் தேசத்தின் இத்தனைகால இழப்புகள் , இடதுசாரிகளின் மோசமானபின்னடைவுகள் , சிங்கள இனவாதிகளின் திமிர்த்தனம் மிக்க நிலைப்பாடுகள் போன்ற இத்தனைக்குப் பின்பும் இவர்கள் தங்களை மீள் மதிப்பீடு செய்யாமல் இருப்பது வருந்தத்தக்கதே . சிங்கள தேசமானது தான் இழைத்த தவறுகளை இனங்கண்டு அவற்றிலிருந்து மீண்டுவரும் வகையில் தன்னை சுயவிமர்சனம் செய்யும் இயக்கத்தை தொடங்குமாறு சிங்கள இடதுசாரிகளை உந்துவிப்பதற்கு பதிலாக இவர்கள் , போராடும் தமிழ் மக்களை சாந்தப்படுத்தும் முயற்சிகளைமேற்கொண்டு வருகின்றார்கள். அரசு தேசியப்பிரச்சனைக்கு எந்தவொரு தீர்வையும் முன்வைக்க முன்பே அரசு வழங்கும் தீர்வு ஏதுவானலும் அதனை ஏற்றுக் கொண்டு தற்போதைக்கு திருப்தியுறுவதைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறுவழி கிடையாது என்று பேசத்தொடங்கியுள்ளனர் .

கடந்த காலத்தில் சர்வதேச அளவில் மார்க்சியத்திற்கு ஏற்பட்ட நெருக்கடிகள் குறித்தோ , இலங்கையில் தேசியப்பிரச்சனையில் தாம் எடுத்த தவறான நிலைப்பாடுகள் குறித்தோ சுயவிமர்சனம் ஏதுமின்றி மௌனம் சாதிக்கும் இவர்கள் கடந்தகாலத்தில் பரப்பிவந்துள்ள ஐதீகங்களை தோலுரித்துக் காட்டியுள்ளோம் . இவற்றை மறுத்து , கடந்தகாலத்தில் தாம் பரப்பிய கருத்துகள் சிங்கள இனவாதம் உருவாக்கிய ஐதீகங்கள் அல்ல , விஞ்ஞான பூர்வமான உண்மைகளே என்று நிரூபிக்க முடியுமாவென இவர்களைக் கேட்கவிரும்புகிறோம் . அப்படிச் செய்ய அவர்கள் முன்வரும் பட்சத்தில் அதற்கு பிரசுர வசதி யின்மை தடையாக இருக்குமானால் அவர்களுக்கென சிலபக்கங்களை ஒதுக்கிக் கொடுக்க " உயிர்ப்பு " தயாராகவுள்ளது .

சமூக உருவாக்கம் என்பது சிக்கலானது என்ற கண்ணோட்டத்தை சமூகவுருவாக்கத்தின் பல்வேறு துறைகளுக்கும் விரித்துச்செல்ல வேண்டியதன் அவசியம் காரணமாக , கலை – இலக்கியத்தில்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலவும் குறுக்கல்வாத புரிதல்கள் ஏற்படுத்தும் சில பிரச்சனைகள் குறித்து கேள்விகளை எழுப்ப முயன்றுள்ளோம் . அதன் வெளிப்பாடுதான் " அழகியலும் அரசியலும். . . . " என்ற கட்டுரையாகும் . அத்தோடு புரட்சிகர அரசியல் நடவடிக்கைகளையும் கலை – இலக்கிய முயற்சிகளையும் ஒன்றாக போட்டுக் குழப்பிக்கொள்ளும் தவறுகளும் முன்னேறிய பிரிவினர் மத்தியில் அடிக்கடி ஏற்பட்டு வருவதை அவதானித்துள்ளோம் . முன்னேறிய பிரிவினர் இடத்தில் குழப்பங்களும் , சோர்வுகளும் அதிகரித்துச் செல்லும் இன்றைய நிலையில் புரட்சியாளர்கள் தமது பணிகளை கறாராக வரையறுத்துக் கொள்ளும் நோக்கில் இது அவசியமானதும் கூட .

இறுதியாக , ஒரு பத்திரிகை தான் முன்வைத்துச் செல்லும் கருத்துக்களை சமூகத்தில் ஆழமாக ஊன்றுவதற்கு அது கிரமமாகவும் , அடிக்கடியும் வெளிவருவது அவசியமானது . இதன் மூலமாகவே ஒரு ஆரோக்கியமான விவாதத்தையும் நாம் நடாத்தமுடியும் , இதுவரைகால " உயிர்ப்பு " இன் வருகை இந்த அர்த்தத்தில் மிகவும் மோசமாக இருப்பதை அக்கறை உள்ளபலரும் சுட்டிக் காட்டி உள்ளனர் . இதற்கு மேல் நாம் வழங்கும் எந்த வாக்குறுதிகளும் வாசகர்களை திருப்திப்படுத்த மாட்டாது எனவும் புரிகிறது . எத்தனை தான் சிரமங்கள் இருப்பினும் இதனை செயல்மூலமே ஈடுசெய்யலாம் எனவும் புரிந்து கொண்டுள்ளோம் .

● ஆசிரியர் குழு

ஏற்கனவே வெளிவந்த
' **உயிர்ப்பு** ' பிரதிகள் வேண்டுவோர்
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பல்வேறு நெருக்கடிக்களுக்கு மத்தியில்
' **உயிர்ப்பு** ' வெளிவருகிறது .
உயிர்ப்பின் வளர்ச்சியில் உங்கள்
பங்களிப்பை – நிதி உட்பட – எதிர்பார்க்கின்றோம்.

***தொடர்பு முகவரி :***

**UYIRPPU**
**BM BOX 4002**
**LONDON**
**WC IN 3XX**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்களிடமிருந்து

## எமக்கு

### [illegible]

எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் பல அமைப்புக்கள் வந்து போய்விட்டன. விடுதலை, சமூகமாற்றம் என்று கனக்க பேசிவிட்டார்கள். ஆனால் புலிகள் தான் தலைமை இடத்தை பிடித்துக் கொண்டுள்ளார்கள். அவர்களும் தேசவிடுதலைப் போராட்டத்தை ஆரோக்கியமாக முன்னெடுக்கவில்லை. தமிழ் மக்களின் சமூகப் பிரச்சனைகளை பிறகு பார்த்துக்கொள்ளளாம் என்று சொல்லி தாம் நினைத்ததை எல்லாம் செய்கிறார்கள். இந்த நிலையில் விடுதலைப் போராட்டத்தை சமூகத்திலுள்ள பிரச்சனைகளிற்கு தீர்வுகாணக் கூடியதாக எப்படி முன்னெடுக்கலாம் என்ற வினா நீண்ட காலமாகவே எனக்கு இருந்து வருகிறது. உயிர்ப்பு 4இல் வந்த கட்டுரைகள் ஓர் விளக்கத்தை தரமுயல்கிறது. ஒரு நம்பிக்கை கீற்றாகவும் உள்ளது.

### [illegible]

தத்துவம் கோட்பாட்டுப் புரிதல் என்பதெல்லாம் போதும் முதலில் தளத்துக்கு வாருங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கூறுங்கள். சிங்கள இனவாத ஒடுக்கு முறை, விடுதலை என்று பேசிய அமைப்புக்கள் இன்று எதிரியுடன் கூடிக்குலாவி தமிழ் மக்களின் அரசிய லை கொச்சைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். புலிகள் தவறு என்றால், புலிளை விட சரியான அமைப்பை ஏன் உருவாக்கக் கூடாது. அதைவிட்டு இவ்வளவு அநியாயங்களையும் செய்யும் சிங்கள அரசுடன் கூட்டுச் சென்றது, புலிகளை ஒழித்துக் கட்டிவிட்டு அரசிடம் இருந்து உரிமைகளைப் பெறலாம் என்று நினைக்கிறார்களா? அல்லது பின் முதலில் இருந்து சிங்கள அரசுடன் மோதலாம் என்று கனவு காண்கிறார்களா? இந்த குழப்பங்களிற்கு தேச விடுதலைப் போராட்டமும் அரசியலும் என்ற கட்டுரை தெளிவான பதிலைத் தர முயற்சிக்கிறது. அத்துடன் எமது தேசத்தின் வளங்களை ஊதாரித்தனமாக்கவது பற்றியும், போராட்ட சக்திகளை போராட்டத்தில் இருந்து அன்னியமாக்குவதை யும் குறித்து ஒரு விளக்கத்தையும் தருகிறது. ஆனாலும் சரியான தேசிய விடுதலை இயக்கத்தை முன்னெடுப்பது பற்றிய போதுமான விளக்கத்தை கட்டுரை கொண்டிருக்கவில்லை. இதில் கூடிய கவனம் எடுப்பீர்கள் என நம்புகிறேன்.

### [illegible]

அமைப்பியல் வாதம் என்ற பெயரில் புரிந்து கொள்வதற்கு புதிதாக என்ன இருக்கிறது. மாவோ முரண்பாடுகள் பற்றி மிக தெளிவாக கூறிவிட்டாரே. எல்லாம் தெரிந்த விடயம். மார்க்சியம் மிகத் தெளிவாக அனைத்தையும் தெளிவுபடுத்திவிட்டது. புதியதுகளை மார்க்சியத்துடன் போட்டுக் குழப்புவது மார்க்சிய விரோதச் செயலென்றே கருதலாம். உயிர்ப்பும் ஏன் குழப்ப வேலையில் ஈடுபடுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**[redacted]சிவராமன்[redacted]**

அமைப்பியல் வாதம் பற்றி இப்ப தான் கேள்விப்படுகின்றேன். படித்துப்பார்க்கும் போது ஒன்றுமே பிடிபடவில்லைத்தான். இருப்பினும், பகுதி இரண்டைபடிக்கும் போது முன்னய பகுதி கொஞ்சம் விளங்குகிறது போல் உள்ளது. எத்தகைய சிந்தனைகளாயினும் நடைமுறையோடு இணைத்துப் பார்க்கும் போது கூடுதலான புரிதலைத் தரும். அந்த வகையில் கட்டுரை ஓரளவு விளக்கத்தை தர முற்படுகிறது.

**[redacted] குமாரசாமி [redacted]**

ஈழத்து அரசியற் சூழலில் அமைப்பியல் 'வாதம் குறித்த சிந்தனைகளை முதலில் அறிமுகப்படுத்த முற்படுவது வரவேற்கக் கூடியதே. இலங்கை தமிழக சூழலில் புதிய சிந்தனைகளை அறிமுகப்படுத்தும் சூழலுடன் இம் முயற்சியை ஒப்பிட்டால், நடைமுறை சார்ந்த தெளிவை கூடுதலாக இக் கட்டுரை தருகிறது எனலாம். எப்போதும் புதிய சிந்தனைகளை தெளிவாக கூறுவதில் ஈழத்துச் சூழல் ஓரளவு முன்னேறியே உள்ளது என்பதையும்குறிப்பிடலாம்.

**[redacted] குக[redacted]**

அமைப்பியல்வாதம் கைவிடப்பட்டு பின் அமைப்பியல் வாதம் என்றெல்லாம் வளர்ச்சியுற்றுள்ளது. இப்படியிருக்கையில் கலாவதியான சிந்தனையை இங்கு முன்னெடுப்பது எவ்வளவு பொருத்தமானதோ தெரியவில்லை...... .......மொழியியலில் ஓரளவு செல்வாக்குச் செலுத்திய அமைப்பியல்வாத சிந்தனையை, முழுச் சமூகப் பிரச்சனைக்கும் தீர்வு காணும் கோட்பாடாகக் கொள்வது சரியானதா என்ற கேள்வியையும் எழுப்ப வேண்டியுள்ளது.

**நு.கோகுலன் [redacted]**

....புலிகளை சரியாக மதிப்பீடு செய்ய வேண்டுமென்ற போக்கு ஆரம்பத்தில் எல்லோரிடமும் காணப்பட்டது. உயிர்ப்பும் இதில் கவனத்தை செலுத்தியிருந்தது. ஆனால் இன்று பலரும் இம் முயற்சியை கைவிட்டுள்ளனர். நீங்கள் ஏன் இம்முயற்சியில் மீண்டும் கவனத்தை குவித்துக் கொள்ளக் கூடாது.

**ம. கருணைநாதன் [redacted]**

இன்று சர்வதேச நிலமைகள் கூட நம்பிக்கை தரக் கூடிய நிலமைகள் அற்று எங்கும் நம்பிக்கையீனங்கள், சோர்வுகள் நிலைபெற்றுள்ளன. இன்நிலையில் உயிர்ப்பும் புதிய தேடல்கள் என்றெல்லாம் கூறிக்கொண்டு மோசமான திரிபுவாதக் கருத்துக்களை காவிக்கொண்டு வருவது தான் வேதனையளிக்கிறது. இத்தகைய திரிபுவாதக் கருத்துக்களை, மார்க்சிய விரோதக் கருத்துக்களை பரப்புவதை நிறுத்திவிடுங்கள். இதுவே தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு செய்யும் பெரிய பங்களிப்பாக இருக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புரட்சிகர மாற்றை உருவாக்கும் முயற்சிகளில் தன்னியல்புவாதம் ஏற்படுத்தும் இடையூறுகள் பற்றிய ஒரு பரிசீலனை

ஏகலைவன்

முன்னுரை :

தமிழீழ போராட்த்தில் எழுந்துள்ள நெருக்கடிகளைக் கடந்து போராட்டத்தை புரட்சி கரமாக முன்னெடுக்க வேண்டும் என்ற அக்கறை, போராட்டத்துடன் தொடர்புடைய புரட்சிகர முற்போக்கு சக்திகளிடையே பொதுவாக இன்று காணப்படுகிறது. ஆனால் இந்தப் பணியை 'எங்கிருந்து தொடங்குவது?' என்பது பற்றி இந்த சக்திகள் தமக்கிடையே விரிவாக விவாதித்து, தீர்வுகாணவில்லை. இதனால் பல்வேறு தனிநபர்களும், குழுக்களும் "நாம் சும்மா இருக்க முடியாது ஏதாவது செய்ய வேண்டும்" என்ற அக்கறையில் தமது புரிதலுக்கும் ஆற்றலுக்கும் ஏற்றவகையில் சில பணிகளை முன்னெடுத்து வருகிறார்கள்.

கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக இவ்வாறு முன்னெடுக்கப்பட்டு வந்த பணிகளின் விளைவுகள் திருப்திகரமாக இல்லையென்பது இன்று உணரப்பட்டு வருகிறது. இதனால் பல்வேறு தனிநபர்களிடத்திலும், குழுக்களிடையிலும் நம்பிக்கை வரட்சி, அக்கறை மின்மை போன்றவை உருவாகி, எங்கும் தேக்கமும் சிதைவும் ஏற்படத் தொடங்கியுள்ளது. இப்படிப்பட்ட ஒரு நிலையில், ஒரு புரட்சிகர மாற்றை உருவாக்கியே தீருவது என்பதில் தொடர்ந்தும் உறுதியாக இருப்பவர்கள் தமது கடந்தகால முயற்சிகள் பற்றி ஒரு விரிவான பரிசீலனையை மேற்கொண்டு , தமது சிந்தனை முறைகளையும் வேலைமுறைகளையும் சீர் செய்து கொள்வது இன்றைய அவசர தேவையாக எழுகிறது . அந்த அக்கறையில் மேற்கொள்ளப்படும் ஒரு எத்தனிப்பே இந்த பரிசீலனையாகும் .

'புரட்சிகர மாற்றை உருவாக்குவது' என்ற அக்கறை இப்போதுதான் முதன் முதலாக எழுந்த ஒன்றல்ல. 1960 களின் பிற்பகுதியில் இருந்து பலதடவை இந்த அக்கறை தீவிரப்பட்டதுண்டு. 1970களின் முற்பகுதியிலும், 1970 பிற்பகுதியிலும், 1980களின் முற்பகுதிகளிலும், 1985 இல் போராட்டம் நெருக்கடிக்குள்ளாவது தெரிந்ததும், 1990களின் தொடக்கத்திலும் இந்த அக்கறை தீவிரமாக வெளிப்பட்டதுண்டு. ஒவ்வொரு கட்டத்திலும் இந்த கோசத்துடன் வெளிப்பட்டவர்கள், தாம்தான் அந்த காலகட்டங்களின் உண்மையான புரட்சிகர மாற்றை உருவாக்க முனைவதாக கூறிக்கொண்டுதான் புறப்பட்டார்கள். இப்படிப்பட்ட பல்வேறு முயற்சிகளும் உண்மையான ஒரு புரட்சிகர மாற்றை உருவாக்கி விடவில்லை யென்பது ஒரு புறமிருக்க , இன்று 1995 இல் 'புரட்சி கரமாற்றை' பற்றிப் பேசுபவர்கள் என்ன அர்த்தத்தில் இதனைப் பேசுகிறார்கள் என்பது முக்கியமானது . இன்று நாம் புரட்சிகர மாற்றை 'உருவாக்குவது' பற்றிப் பேசும் போது பேரினவாத அரசிற்கும் , புலிகளுக்கும் மாற்றாக மட்டுமின்றி , எமது கடந்தகால முயற்சிகளுக்கு மாற்றான ஒரு வழியைப்பற்றிப் பேசுகிறோம் . இது தவிர்க்கமுடியாமல் எமது கடந்தகால சிந்தனை முறைகளிலிருந்தும் , வேலைமுறைகளிலிருந்தும் முறித்துக் கொள்வதை முன்நிபந்தனையாக கோருகிறது . இந்த அக்கறையானது கடந்தகால போராட்டத்தையும், முற்போக்கு, புரட்சிகர பிரிவினரது செயற்பாடுகளையும் மீள்மதிப்பீடு செய்யமாறு வேண்டி நிற்கிறது.

1990 இல் தொடங்கப்பட்ட அக்கறையானது கடந்த காலத்தில் அமைப்புக்கள் மக்களை நிராகரித்ததின் ஒரு படிப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிணையாகவும் அன்றைய குறிப்பான வரலாற்றுச் சூழ்நிலை காரணமாகவும் சிறு பத்திரிகைகளும் அவற்றுடன் தொடர்புடைய செயற்பாடுகளுமாக தனது பணிகளைத் தொடங்கியது . மக்களின் ஒரு பிரிவினர் புலிகளைத் தொடர்ந்தும் ஆதரிப்பதற்கு புலிகளின் மோசமான அம்சங்கள் பற்றி மக்களிடமுள்ள அறியாமையே காரணம் எனக்கருதிய பலரும் புலிகளை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துவதில் தீவிர அக்கறை காட்டினார்கள். "மக்கள் மத்தியில் செல்வோம்" "புலிகளை அம்பலப்படுத்துவோம்" "பாசிசம் ஒழிக" என்பவையே அன்றைய பிரதான கோசங்களாயின.

தெளிவான இலக்கு நோக்கிய நன்கு திட்டமிட்ட செயற்பாடுகள் என்பதற்குப் பதிலாக பல்வேறு குழுக்களும் சிதறிய நிலையில் இருந்து கொண்டு கிட்டத்தட்ட ஒரேவிதமான வேலைகளை தமது சக்திகளுக்கு உட்பட்ட விதத்தில் சிறிய அளவில் செய்யத் தலைப்பட்டன. இந்த முயற்சிகள் ஆரோக்கியமான விளைவுகளை இதுவரையில் ஏற்படுத்தவில்லை. பல தனிநபர்களதும், குழுக்களதும் முயற்சிகள் பயனற்றுப் போவதான ஒரு உணர்வு பரவலாக தோன்றியுள்ளது. மக்கள் எமது கருத்துக்களை செவிமடுப்பதைவிட வேறுபல விடயங்களில் மூழ்கிவிடுகிறார்கள், இன்றைய அவசரப் பிரச்சனைகள் பற்றி உணராமல் இருக்கிறார்கள், அல்லது புலிகளைத் தொடர்ந்தும் ஆதரித்துக் கொண்டிருக்கிறார்கள், குறைந்த பட்சம் இந்த குழுக்களுக்கு இடையிலாவது ஒரு விரிவான புரிதல் ஏற்பட்டு, அவை ஒன்றாக திரண்டு பலமான சக்தியாக உருவாவதும் கூட சாத்தியப்படவில்லை. அதுமட்டுமன்றி சிறிய குழுக்கள் கூட தம்மளவில் தொடர்ந்தும் ஒரு குழுவாக இருப்பதும்கூட பிரச்சனைக்குரியதாகி விடுகிறது. குழுக்களினுள் சிதைவும், நம்பிக்கை வரட்சியும் நிலவுகிறது. இது தவிர்க்க முடியாதவாறு மக்களது புரட்சிகர ஆற்றல் பற்றிய சந்தேகங்களை ஏற்படுத்தி விடுகிறது. இன்றுள்ள நிலைமை இதுதான் என்றால் எமது வேலைமுறைகளை மீள் மதிப்பீடு செய்வதும் அவற்றை மாற்றியமைப்பதும்உடனடித் தேவைகளாகின்றது.

'மக்களிடம் போவது' என்பதன் உண்மையான தாற்பரியம் என்ன ? ஏன் போகிறோம் ? மக்களின் எந்தப் பிரிவினரிடம் போகப்போகிறோம் ? மக்களிடம் 'கொண்டுபோக' எம்மிடம் என்ன இருக்கிறது ? தமிழீழ விடுதலைப்போராட்டமா ? ஐக்கியப்பட்ட புரட்சியா? எமது எதிரி யார்? புலிகளா? ஸ்ரீலங்கா அரசா? இந்திய அரசா? ஏகாதிபத்தியமா? இது போன்ற அடிப்படையான நிலைப்பாடுகளில் கூட எம்மிடையே போதிய தெளிவும், பொதுவான விளக்கமும் கிடையாது. முன்பெல்லாம் முடிந்த முடிவாக இருந்த "தமிழீழம்தான் தமிழர்களுக்கு ஒரே தீர்வாகும்" என்ற நிலைப்பாடு கூட இப்போது சர்ச்சைக்குரிய தாக்கப்பட்டுள்ளது . ஏனைய விடயங்களில் கூட கடந்த காலத்தில் எமது பார்வைகள் மிகவும் மோசமானவையாக இருந்துள்ளன . 'எமது சொந்த ஆத்ம திருப்திக்காக ஏதாவது செய்வதானால்' இந்த கேள்விகள் தீர்க்கமானவை அல்லத்தான் . ஆனால் ஒரு புரட்சியை செய்து முடிக்க வேண்டும் . இன்றுள்ள நிலைமைகளுக்கு ஒரு புரட்சிகர மாற்றை கொண்டு வரவேண்டும் என்பதில் நாம் உண்மையிலேயே இதய சுத்தியுடன் செயற்படுவதாயின் இவை தட்டிக்கழிக்க முடியாத தீர்க்கமான கேள்விகளாகும் .

இப்படியான கேள்விகள் எழுந்தவுடனேயே 'மக்களிடம் போவது' என்ற கோசத்தின் கீழ் ஒன்றுபட்டிருப்பவர்கள் பல கூறுகளாக பிரிந்து விடுவர் . இந்த அடிப்படையான விடயங்களிலேயே எம்மிடையே ஆழமான புரிதலும், பொதுவான விளக்கமும் இருந்ததில்லை. பலரிடத்தில் இவை தொடர்பாக திட்டவட்டமான நிலைப்பாடுகளே கிடையாது. இப்படிப்பட்ட கேள்விகள் எழுப்புவர்களையே ஒருவித ஏளனமாக பார்க்கும் நிலையும் இருந்ததுண்டு. இப்படிப்பட்ட நிலைமையில் மக்களிடம் போவதன் நோக்கமென்ன? மோசமான கருத்துக் குழப்பங்களை மக்களிடம் கொண்டு போவது மக்களின் விழிப்புணர்வை அதிகரிக்க, மக்களைப் பலப்படுத்த, அவர்களை அணிதிரட்ட உதவப்போவதில்லை . மக்களை மேலும் குழப்பியடித்து அவர்களை நம்பிக்கையிழக்கச் செய்யும் வேலையைத்தான் இது செய்து முடிக்கிறது.

சரி, ஏதோவொருவிதத்தில் மக்களிடம் கருத்துக்களை கொண்டு போவதிலும், அவர்களை அணிதிரட்டுவதிலும் வெற்றி பெற்று விட்டதாகவே வைத்துக் கொள்வோம் இவ்வாறு அணிதிரட்டப்பட்டவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களை எவ்வாறு வழிநடத்தப் போகிறோம், அதற்கு அவசியமான தாபனம், திட்டம், மூலஉபாயம், தந்திரோபாயம் என்பன எம்மிடத்தில் இருக்கின்றனவா ? இவையெதுவுமே இல்லையானால் அதற்கு என்ன அர்த்தம் ? பிரக்ஞைபூர்வமான செயற்பாடு, கோட்பாட்டுரீதியிலான வழிகாட்டுதல் இல்லையென்பது தானே? அதாவது, நாம் ஒவ்வொருவரும் மனம் போன போக்கெல்லாம் சிந்திப்பதும், செயற்படுவதும் என்பதுதானே அர்த்தம் . இத்தகைய தன்னியல்பு வாதம் தானே எமது போராட்டத்தில் இன்று வரையில் ஓங்கி நிற்கிறது. கடந்த காலத்தில் போராட்டத்தை நெருக்கடிக்குள் இட்டுச் சென்றதிலும் தன்னியல்புவாதத்திற்கு முக்கியமான பாத்திரம் இருக்கிறது.

## 'பாசிசமும்' தன்னியல்புவாதமும்

கடந்த காலத்தில் நல்லெண்ணம் கொண்ட பலர் பல்வேறு அமைப்புக்களிலும் இருந்தார்கள். ஆனால் இவர்களையெல்லாம் மீறி இந்த அமைப்புக்களில் 'அராஜகம்' மேலோங்கியது எப்படி? தமிழ் சமூகத்தில் அதிலும் குறிப்பாகயாழ்பாண சமூக உருவாக்கத்தினுள் மேலோங்கி யிருக்கும் பலவிதமான குறுகிய வரையறுக்கப்பட்ட பார்வைகளையும் , சாதி , சீதனம் , சொத்துசேர்ப்பு , படிப்பு , அந்தஸ்து போன்ற பல விதமான தப்பெண்ணங்களையும் கடந்து 15 அல்லது 16வயது இளைஞர்கள் போராட்டத்தில் குதிப்பதனால் அவர்களின் மத்தியில் கணிசமான சமூக அக்கறை , தியாகஉணர்வு , அர்ப்பணிப்பு மனோபாவம் போன்றவை இருந்திருக்க வேண்டும் என்று யாருமே எதிர்பார்ப்பர் . இப்படிப்பட்டவர்களுக்குள் இன்று இந்த மிருகத்தனம் ' எப்படி உருவானது ?

புலிகளின் ' பாசிச ' போக்குகளை இனங்காண்பதும் அதற்கெதிராக செயற்படுதும் வரலாற்றில் இப்போதுதான் முதன்முதலாக தொடங்கப்பட்ட நடவடிக்கை என்பதில்லை. எமது போராட்ட வரலாற்றில் புலிகளின் பாசிசத்தை ஒழிக்க பல்வேறு சக்திகளும் பலதரப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். இந்த வகையில் புலிகளின் பாசிசத்தை ஒழிக்க விரும்புவர்கள் இந்த நடவடிக்கைகளை ஒரு தடவைதிரும்பிப்பார்த்து அவற்றிலிருந்து முக்கியமான சில படிப்பினைகளைப் பெற்றுக்கொள்வது அவசியமானதாகிறது. 80களின் ஆரம்பதிலேயே புலிகளின் தலைமையிலிருந்தே ஒரு பகுதியினர் வெளியேறி புலிகளின் அராஜகத்திற்கு எதிராக புதிய

> *கடந்த காலத்தில் நல்லெண்ணம் கொண்ட பலர் பல்வேறு அமைப்புக்களிலும் இருந்தார்கள். ஆனால் இவர்களையெல்லாம் மீறி 'அராஜகம்' மேலோங்கியது எப்படி ?*

அமைப்பொன்றைத் தொடங்கினார்கள். தனிநபர் பயங்கரவாத்தை நிராகரிப்பது குறித்தும், மக்களை அணிதிரட்டி போராடுவதன் அவசியம் குறித்தும் நிறையவே பேசினார்கள். ஆனால் சில வருடகாலங்களில் இந்த புதிய அமைப்பானது மக்களுடனான உறவுகளிலும், தாபன அகவுறவுகளிலும், புலிகளிலும் பார்க்க மிகவும் மோசமானவர்களாகவும் (வதை முகாம்களை தமிழீழபோராட்டத்தில் அறிமுகம் செய்தவர்களே இவர்கள்தான்) போர்க்குணாம்சத்தில் (எதிரியுடனான போராட்டத்தில்) புலிகளை விட மிகவும் பின்தங்கியவர்களாகவும் ஆனார்கள்.

பிற்காலத்தில், புலிகள் சக அமைப்புக்களை தடை செய்தபோது, சில அமைப்புக்கள் இந்தியப்படையின் உதவியுடன் ' அராஜகத்தை ' ஒழிக்கவும், தமிழ் மக்களுக்கு அமைதியை, ஜனநாயகத்தை கொண்டு வரவும் முயன்றார்கள். ஆனால் இவர்கள் தமது நோக்கத்தில் வெற்றி பெறாதது மட்டுமல்ல , ' கூலிப்படை ' 'பிள்ளைபிடிகாரர்' போன்ற வரலாற்றில் என்றும் மறையாத அவப்பெயர்களையும் சம்பாதித்து தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டனர். இப்போது இன்னும் சில அமைப்புக்கள் எதிரியுடன் சேர்ந்து புலிகளை ஒழிக்க, ஜனநாயகத்தை மீட்க(!) முயல்கிறார்கள். இன்று இலங்கையில் புலிகளை மாத்திரம்தான் விமர்சிக்க முடியாது என்பதில்லை. இந்த ' ஜனநாயக ' சக்திகளையும் கூட யாரும் விமர்சிக்க முடியாது. கடந்த காலத்திலும் புலிகளிடத்தில் மாத்திரமன்றி கிட்டத்தட்ட ஏனைய அனைத்து அமைப்புக்களிலும் ஜனநாயக விரோத போக்குகள் காணப்படவே செய்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அராஜகத்தை ' ஒழிக்க முற்பட்டவர்கள், தாமே இப்படிப்பட்ட ' அராஜக ' சக்திகளாக மாறியது எப்படி? என்ற கேள்வியை எழுப்புவது இங்கு முக்கியமானது. இது இன்றைய ' பாசிசத்தின் ஊற்று மூலங்களையும் பற்றிய தேடலை வலியுறுத்துகிறது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இன்று தோன்றியுள்ள நெருக்கடிகளை உண்மையிலேயே களைய விரும்பும் யாருமே, முதலில் இந்த அராஜக போக்குகள் தம்மளவில் மீண்டும் தோன்றாது என்பதை உத்தரவாதப்படுத்திக் கொள்வது முன்நிபந்தனையானதாகிறது .

புலிகளின் பாசிசத்திற்கான ஊற்று மூலமானது அவர்களது அரசியலில் இருக்கிறது. தவறான உலகக் 'கண்ணோட்டம், தவறான கோட்பாடு, தவறான அரசியல் நிலைப்பாடு, தவறான ஊழியர் கொள்கை, தவறான தாபன வேலை முறைகள் என்பவையே இந்த பாசிசத்தின் ஊற்று மூலமாகும். புலிகளின் ' பாசிசத்தை ' உண்மையிலேயே ஒழிக்க விரும்பும் எவரும் முதலில் புலிகளின் தவறான அரசியலுடன் முறித்துக் கொள்வது அவசியமானது . ஆனால், கடந்த காலத்தில் புலிகளின் ' அராஜகத்தை ' முறியடிக்க முனைந்த பலரும் இந்த ' அராஜகத்திற்கான ' ஊற்று மூலத்தை புலிகளின் அரசியலில் காணாமல் , புலிகளின் தலைமையில் இருந்த சில தனிநபர்களில் கண்டார்கள் . இதன் விளைவாக இவர்கள் குறிப்பிட்ட சில நபர்களிடமிருந்து தம்மை முறித்துக்கொண்டார்கள். ஆனால் புலிகளின் அதே தவறான அரசியலை தொடர்ந்தும் முன்னெடுத்தார்கள். இந்த தவறான அரசியலானது அவர்களின் நல்லெண்ணங்களையும் மீறி, அவர்கள் விரும்பாவிட்டாலும் கூட திரும்ப திரும்ப அதே தவறுகளை இழைக்குமாறு செய்கிறது. எனவே புலிகளின் ' பாசிசத்தை ' ஒழிப்பது என்பதற்கு ஒரு சரியான மாற்று அரசியலை பிரக்ஞைபூர்வமாக நிலைநாட்டுவது முன்நிபந்தனையாகிறது.

தமிழ் சமூக உருவாக்கமானது ஒரு வளர்ந்த முதலாளிதத்துவ சமூகமல்ல. முதலாளித்துவத்திற்கு முந்தைய பல கலாச்சார. நடைமுறை , விழுமியங்கள் தமிழ் சமூகத்தில் மேலாதிக்கம் செலுத்துவனவாக உள்ளன. ஜனநாயக விழுமியங்கள் தமிழ் சமூகத்தில் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. இலங்கையிலேயே பொதுவாக , பூர்சுவா ஜனநாயக சக்திகள் என்று கூறப்படக்கூடிய சக்திகள் எதுவும் கிடையாது. இருக்கும் கட்சிகள் எதிலும், பொதுவான அரசியல் செயற்பாடுகளிலும் ஜனநாயக நடைமுறைகள் முரணற்று பின்பற்றப்படுவது கிடையாது. தமிழ் சமூகத்தில் சமூக அளவில் சாதியம் போன்ற ஜனாயகவிரோத செயற்பாடுகள் பகிரங்கமாகவே நடைமுறையில் உள்ளன. மேற்சட்டை

[illegible] சமூக உருவாக்கமானது ஒரு வளர்ந்த முதலாளித்துவ சமூகமல்ல. முதலாளித்துவத்திற்கு [illegible] கலாச்சார. நடைமுறை, விழுமியங்கள் தமிழ் சமூகத்தில் மேலாதிக்கம் செலுத்துவனவா உள்ளன ஜனநாயக விழுமியங்கள் தமிழ் சமூகத்தி மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன .

(பிளவுஸ்) அணிந்த தாழ்த்தப்பட்ட பெண்ணின் சட்டையை உயர் சாதியினர் கொக்கைத்தடியால் பகிரங்கமாகவே கிழித்தெறியும் அளவுக்கு எமது சமூக நடை முறைகள் மிகவும் ஜனநாயக விரோதமானவை. எமது குடும்ப அமைப்புகள் கூட ஜனநாயகபூர்வமானவை அல்ல. தந்தை, தாய், , அண்ணா , தம்பி , அக்கா , தங்கை , என்று ஒருகண்டிப்பான அதிகாரப்படி நிலைவரிசை ( Hierarchial Order ) எமது குடும்பங்களில் காணப்படுகிறது இங்கு ஒரு குடும்ப அங்கத்தவரது தனிப்பட்ட விடயங்களில் கூட அவரது பங்குபற்றலும் சம்மதமும் இன்றி அதிகாரப்படிநிலையில் அவருக்கு மேலேயுள்ள ஒருவரால் தீர்மானிக்கப்படுவது சர்வ சாதாரணமானது . இவ்வாறே பாடசாலை , கோவில் போன்ற அனைத்து நிறுவனங்களுமே ஜனநாயக விழுமியங்களுக்கு எதிராக செயல்படும் ஒரு சமூகச் சூழலில்தான் இந்த விடுதலைப்போராட்டமும் நடைபெறுகிறது . இந்தப்போராட்டத்தில் தோன்றும் எந்தவொரு நிறுவனங்களிலும் அமைப்பிலும் ஜனநாயகமானது தானாக தன்னியல்பாகவே நடைமுறைக்கு வரமாட்டாது. எமது போராட்ட அமைப்புகளுக்குள் ஜனநாயகமானது பிரக்ஞைபூர்வமாகவே முன்னெடுக்கப்பட வேண்டும் . எங்கெல்லாம் தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



னியல்பு வாதம் ஓங்கி நிற்கிறதோ, அங்கெல்லாம் அமைப்புகுள் ஜனநாயக விரோதப்போக்குகள் ஓங்கி நிற்கவே செய்யும் . இதனால்தான் எமது போராட்டத்தில் தோன்றிய அனேகமான எல்லா அமைப்புகளிலும் ' அராஜாகப்போக்குகள் ' ஓங்கி நின்றன . இந்த அராஜகப் போக்குகளின் ஒரு கடைக் கோடி ( Exteme ) வடிவமே இன்றைய ' பாசிசம் ' ஆகும் . எனவே பாசிசத்தை ஒழிப்பதற்கான போராட்டமானது, பிரக்ஞை பூர்வமான செயற்பாட்டின் அத்தியாவசிமான தன்மையை – அதாவது தன்னியல்புவாதத்துடன் கணக்கு தீர்ப்பதை – முன்நிபந்தனையாக கோருகிறது.

## மக்களும் புரட்சிகர தாபனமும் :

ஒரு புரட்சியாளர் என்பவர் நல்லெண்ணங்களை கொண்டவராக இருக்கவேண்டும் . சமூகத்தில் ஆழ்ந்த ஈடுபாடு ; மக்களை நேசிப்பது ; அநீதிகளை கண்டு கொதித்தெழுவது ; சமூகமாற்றத்திற்காக தன்னை அர்பணிப்பது செயற்படுவது ; 'போன்ற அனைத்தும் இந்த நல்லெண்ணங்களுக்குள் அடங்கும். ஆனால் ஒரு சமூகப்புரட்சி என்பது அவரது மனத்தினுள் நடந்தேறுவதல்ல சமூகம் என்பது அவரது மனத்திற்கு வெளியே இருப்பதாகும் . எனவே இந்த சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி முடிப்பதற்கு இந்த நல்லெண்'ணங்கள் மட்டுமே போதுமானதல்ல . புறநிலையான சமூகம் பற்றியும் , அதன் இயங்கு விதிகள் பற்றியும் , அதில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள் பற்றியும் , அதற்கான வாய்ப்புக்கள் பற்றியும் , அந்த மாற்றங்களை ஏற்படுத்துவற்கான சக்திகள் பற்றியும் , அதற்கான வழிமுறைகள் பற்றியும் ஒருவிரிவான புரிதலை அவர் பெற்றிருக்க வேண்டும் . அதாவது இது விரிவான கோட்பாடுகளின் தேவையை காட்டுகிறது அத்துடன் தான் விரும்பும் மாற்றத்தை , தாம் வாழும் சமூகத்தில் நிகழ்த்தி முடிப்பதற்கு புரட்சியாளர்கள் தமது எண்ணங்கள், செய்கைகள், முயற்சிகள் போன்ற அனைத்தையும் ஒன்றுபடுத்தி செயற்படுத்துவதும் அவசியமானது . இந்த ஒன்றுபடுத்தலின் ஸ்தூலமான வடிவமே தாபனமாகும் . எனவே ஒரு புரட்சியாளர் தன்னிடமுள்ள நல்லெண்ணங்களுடன் கூடவே ஒரு புரட்சிகர கோட்பாட்டையும் , புரட்சிகர தாபனத்தையும் பெற்றுள்ள போதே தனது நல்லெண்ணங்களை புறநிலை யதார்த்தமாக மாற்றுவது சாத்தியமாகும் .

" பாசிசம் ஒழிக " என்பது மந்திரச் சொற்களல்ல ; அதனை நாம் கூறியதும் பாசிசம் தூள்களாக சிதறிவிட ; அல்லது மக்கள் தாமாகவே கிளர்ந்தெழுந்து ஒரே மூச்சில் பாசிசத்தை ஒழித்துவிட: பாசிசத்தை ஒழிப்பது என்பது நீண்டதும் , கடுமையானதுமான ஒரு போராட்டத்தினூடாக மட்டுமே சாத்தியப்படும் . பாசிசத்தை ஒழிக்க வேண்டுமானால் கோட்பாட்டுரீதியான , அரசியல்ரீதியான , தாபனரீதியான, இராணுவரீதியான . ஆழமான , கடினமான , விடாப்பிடியான முயற்சிகள் அவசியமானவை . பாசிசத்தின் சமூகவேர்கள் பற்றியும் , அதனை ஒழிப்பதற்கு செய்தாக வேண்டிய பணிகள் குறித்தும் தெளிவான புரிதலைப் பெறுவதும் , அவற்றை பிரக்ஞைபூர்வமாக, விடாப்பிடியாக செய்து முடிப்பதும் அவசியமானது . ஒரு புரட்சிகர தாபனம் கோட்பாட்டுரீதியான வழிகாட்டலுடன் மாத்திரமே இதனை செய்து முடிக்க முடியும்.

" பாசிசம் ஒழிக " என்பது மந்திரச் சொற்களல்ல ; அதனை நாம் கூறியதும் பாசிசம் தூள் தூளாக சிதறிவிட ; அல்லது மக்கள் தாமாகவே கிளர்ந்தெழுந்து ஒரே மூச்சில் பாசிசத்தை ஒழித்துவிட : பாசிசத்தை ஒழிப்பது என்பது நீண்டதும் , கடுமையானதுமான ஒரு போராட்டத்தினூடாக மட்டுமே சாத்தியப்படும்.

தமிழ் மக்கள் இன்று புலிகளை ஆதரிப்பதற்கு பல காரணங்களை கூறலாம். புலிகளின் உண்மையான தன்மை பற்றிய சரியான விழிப்புணர்வின்மை, அல்லது ஓரளவு விழிப்புணர்வு உள்ள போதிலும் தேசிய ஒடுக்கலை முகம் கொடுக்கும் மாற்று அமைப்பின்மை என்பவை இவற்றில் முக்கியமானவையாகும் இந்நிலையில் புலிகளைப் பற்றிய அம்பலப்படுத்தலானது தொடர்ந்தும் மக்கள் மத்தியில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**'மக்கள்' என்ற கருத்தாக்மானது ஒரு ஏகவீனமான, முற்றிலும் உள்ளினக்மான ஒன்றைச் குறிக்கவில்லை. மாறாக சமூகத்திலுள்ள பலவிதமான உறவுகள் காரணமாக மக்கள் மத்தியில்பலவிதமான பிரிவுகளும், வேறுபாடுகளும் காணப்படுகின்றன.**

மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றுதான். ஆனால் இந்த அம்பலப்படுத்தலுடன் கூடவே புலிகளுக்கு மாற்றாக, இந்த விடுதலைப் போராட்டத்தை இன்னும் புரட்சிகரமாக முன்னெடுக்கக் கூடிய ஒரு தாபனத்தை வைக்கும் போது தான் மக்கள் புலிகளை நிராகரிப்பது சாத்தியப்படும். இப்படிப்பட்ட ஒரு மாற்றை முன்வைக்காத வெறும் அம்பலப்படுத்தல்கள் வேண்டுமானால் மக்கள் மத்தியிலுள்ள நம்பிக்கையின்மை, அக்கறையின்மை, விரக்தி போன்றவற்றை இன்னும் ஆழப்படுத்த உதவலாம். ஆனால் இன்றைய அவலங்களுக்கு முடிவு கட்டவல்ல புரட்சிகரமாற்றை உருவாக்கும் நோக்கில் எந்த விதமான காத்திரமான பங்கையும் இந்த அம்பலப்படுத்தல்கள் மாத்திரம் ஆற்றி விடப்போவதில்லை.

மக்களே உண்மையான புரட்சியாளர்கள்; ஒவ்வொரு போராட்டத்திலும் மக்களே தீர்க்கமான சக்தி; என்பது உண்மைதான். ஆனால் இவ்வாறு கூறுவதானது, மக்கள் தாமாகவே கிளர்ந்தெழுந்து புரட்சிகர கடமைகள் அனைத்தையும் ஆற்றி முடிப்பார்கள் என்று அர்த்தப்பட மாட்டாது, மக்கள் சக்தி மகத்தானதுதான். ஆனால் ஆளும் வர்க்கங்களும், ஒடுக்குமுறையாளர்களும் அந்த மக்களை காலாதிகாலமாக தமது முழங்கால்களில் நிற்குமாறு பழக்கப்படுத்தி விட்டுள்ளார்கள். இவ்வாறு தமது முழங்கால்களில் நிற்கும் மக்களை தட்டி எழுப்பி அவர்களை தமது சொந்தக்கால்களில் நிற்கச் செய்யும்போதுதான், மக்கள் தமது மகத்தான உள்ளாற்றல் அனைத்தையும் வெளிப்படுத்துவார்கள். மக்கள் மத்தியில் எதிரிகளையும் எதிர்ப்புரட்சிகர சக்திகளையும் தொடர்சியாக அம்பலப்படுத்தவும், சரியான அரசியலை முன்வைத்து மக்களுக்கு எழுச்சியூட்டவும், கிளர்ந்தெழுந்த மக்களை அணிதிரட்டி அமைப்பாக்கவும், அவர்களை போராட்டத்திற்கு வழிகாட்டவும், மக்களது போராட்டத்தில் உண்மையான முன்னணிப்படை யாகவும் திகழக் கூடிய ஒரு புரட்சிகர தாபனமொன்று தோற்றுவிக்கப்படும் போதுதான் மக்களுக்கு தமது சக்தியிலும், போராட்டத்திலும், சமூகமாற்றத்திலும் நம்பிக்கை பிறக்கும். முன்னணிப்படை என்பது வெறுமனே மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவது மட்டுமல்ல. அந்த மக்களை 'உருவாக்குவதும்' இதன் பணியாகும். இப்படிப்பட்ட ஒரு புரட்சிகர தாபனம் இல்லாத போது அதனைக் கட்டுவதே புரட்சியாளர்களது உடனடிப்பணியாக இருக்கவேண்டும். இங்கு புரட்சியாளர்களுக்கும், பரந்துபட்ட மக்களுக்கும் இடையில் புரட்சிகர தாபனம் என்ற நிறுவனம் இருக்க வேண்டிய அவசியத்தை புரிந்து கொள்ளத் தவறக்கூடாது.

புரட்சிகர தாபனத்தின் அத்தியாவசிய தேவையை நாம் ஏற்றுக்கொண்டால், அதனை கட்டும் பணிகளை உடனடியாக தொடங்கியாக வேண்டியுள்ளது. அமைப்பை கட்டுவதற்கு அமைப்புப்பணிகள் என்று பொதுப்படையாக பேசினால் போதாது, எப்படிப்பட்ட கட்டத்தில், எந்தெந்த பணிகள் என்பதை நாம் குறிப்பாக வரையறுத்தாக வேண்டியுள்ளது. இவ்வாறே இந்த வெவ்வேறு பணிகள் மக்களின் எந்தெந்த பிரிவினரிடையே இலக்காக கொண்டு செய்யப்படவேண்டும் என்ற புரிதலும் முக்கியமானது. எனவே அமைப்புப் பணிகள் மக்கள் எனப் பொதுப்படையாக பேசிச் செல்லாமல். இவற்றை சற்று நெருங்கிப் பரிசீலிப்பது அவசியமானதாகிறது.

மக்கள்' என்ற கருத்தாக்மானது ஒரு ஏகவீனமான, முற்றிலும் உள்ளிணக்மான ஒன்றை குறிக்கவில்லை. மாறாக சமூகத்திலுள்ள பலவிதமான உறவுகள் காரணமாக மக்கள் மத்தியில் பலவிதமான பிரிவுகளும், வேறுபாடுகளும் காணப்படுகின்றன. வர்க்கம் என்பது அவற்றில் ஒன்றாகும். உற்பத்தி உறவில் தாம் வகிக்கும் நிலைக்கு ஏற்ப மக்கள் வர்க்கங்களாக பிளவுறுகிறார்கள். இவ்வாறே பால், மதம், தேசியம்........ போன்ற பல்வேறு காரணிகளால் மக்கள் பல்வேறு சமூகப்பிரிவுகளாக பிளவுற்றிருக்கிறார்கள். ஒவ்வொரு சமூகப்பிரிவும் கூட அவற்றின் அங்கத்தவர்களிடையே காணப்படும் பிரக்ஞையின் மட்டம், அரசியல் விழிப்புணர்வின் அளவு, அவர்களது சமூக நடவடிக்கைகளின் வீச்சம் என்பனவற்றைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொறுத்தும் அவர்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம் . 1

**முன்னேறிய பிரிவினர் :**

குறிப்பிட்ட சமூகப்பிரிவின் அங்கத்தவர்களிடையே பிரக்ஞையின் மட்டம், அரசியல் விழிப்புணர்வு , செயல்வீச்சம் என்பவற்றில் ஒப்பீட்டளவில் கூடிய நிலையில் இருப்பவர்கள் இவர்கள் தாம் . சமுதாயத்தில் நிலவும் முரண்பாடுகள் பற்றிய விழிப்புணர்வுடன் சமுதாய மாற்றத்தை வேண்டி, அதற்கான வழிமுறைகளை ஓயாது தேடிக் கொண்டிருப்போர் இவர்கள். சமூக கொந்தளிப்புக்கள் குறைவான 'அமைதியான' அல்லது போராட்ட அலை தணிந்த காலங்களில் கூட 'சமூக மாற்றத்தின்' அவசியத்தைப் புரிந்து கொண்டு , இப்படிப்பட்ட சமூகமாற்றத்தை நோக்காக் கொண்ட தாபனங்களை , சமூகப்புரட்சி தொடர்பான கருத்துக்களைத் தேடிக்கொண்டிருப்போர் : சமூகத்தில் மிகவும் சிறிய எண்ணிக்கையில் காணப்படும் இவர்களே ஒரு புரட்சிகர தாபனத்தை கட்டமைக்கும் பணியில் பங்கெடுத்துக் கொள்ளக் கூடியவர்கள்.

**மிதமானவர்கள் :**

மிதமான விழிப்புணர்வும் , மிதமான செயலூக்கமும் உடையவர்கள். அமைதியான, அல்லது போராட்ட அலை தணிந்த காலங்களில் ஒரு புரட்சிகர மாற்றத்திற்கான தேவையை உணர்ந்து கொண்டு அதற்கான தாபனத்தை அமைக்கும் பணிகளில் செயலூக்கத்துடன் ஈடுபடமாட்டார்கள் . ஆனால் ஒரு எழுச்சிக் காலக்கட்டத்தில், தம்முன்னுள்ள அமைப்புக்களில் சாரி சாரியாக அணிதிரண்டு தீவிரமாக போராடக் கூடியவர்கள் . சமூகத்தில் மிக பெரும்பான்மையானோர் இப்படிப்பட்டவர்களே என்பதால் எந்தவொரு எழுச்சியிலும் மிகவும் தீர்க்கமாக பங்காற்றக் கூடியவர்கள் .

**பின்தங்கியவர்கள் :**

அரசியல் விழிப்புணர்வு , செயலூக்கம் என்பவற்றில் மிகவும் பின்தங்கியவர்கள். எழுச்சி மிகுந்த காலங்களிலும் கூட அமைதியாக இருக்கக் கூடியவர்கள். சில வேளைகளில் எதிரியின் சித்தாந்தத்தை தொடர்ந்தும் காப்பாற்றி வருபவர்கள் . சமூகத்தில் குறிப்பிடத்தக்களவில் இவர்கள் இருக்கிறார்கள் .

இவ்வாறே, அமைப்புப்பணிகள் என்பவற்றை சரியாக வரையறுத்துக் கொள்வாதாயின் புரட்சிகர அமைப்பொன்றின் வரலாற்றின் வெவ்வேறு கட்டங்களில் வேறுபட்ட பணிகள் முதன்மை பெறுவதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது . பொதுவாக ஒரு புரட்சிகர தாபனத்தின் வரலாற்றில் அதன் வளர்ச்சியின் மூன்று கட்டங்களை ஒரளவிற்கு வேறுபடுத்திப் பார்க்கலாம்.

**புரட்சிகர கட்சிக்கான அடித்தளத்தை இடுவது :**

முன்னோடி புரட்சியாளர்கள் தாம் வாழும் சமூகம் பற்றியும் , அதில் உள்ள முரண்பாடுகள் பற்றியும் , நிகழ்த்தப்படவேண்டிய மாற்றம் பற்றியும் , அதற்கான வழிமுறைகள் பற்றியும் ஒரு தெளிவான புரிதலையும் , தமக்குள் பொதுவானவிளக்கத்தையும் எட்டுவது எந்தவொரு புரட்சிகர தாபனத்தின் உருவாக்கத்திற்கும் முன்னிபந்தனையானது . இதனால் புரட்சியுடன் தொர்புடைய கோட்பாட்டு, அரசியல் பிரச்சனைகளை விரிவாக விவாதித்து அவற்றினூடாக ஒத்த கருத்தினை அடைவதும் , இந்த கருத்தொற்றுமையானது அரசியல் திட்டத்தினை வரைவதன் மூலம் திடப்படுத்தப்படுவதும் , இந்த காலகட்டத்தில் முதன்மையான பணிகளாகும் . அதாவது கோட்பாட்டுப் பணிகள் இந்த காலகட்டத்தில் முதன்மை பெறுகின்றன . ஒரு புரட்சிகர அமைப்பை உருவாக்குவதன் தேவையை புரிந்து கொண்டு , அமைப்பின் கோட்பாட்டு பணிகளுடன் இணைந்து செயற்படக்கூடிய முன்னேறிய பிரிவினரை இலக்காகக் கொண்டு இக்காலகட்டத்தில் அமைப்பு செயற்பட வேண்டும் .

**கட்சியை பலப்படுத்துவது :**

ஒரு புரட்சிகர கட்சியின் பலமானது அது எந்த அளவிற்கு பரந்து பட்ட மக்கள் மத்தியில் பெருமளவிலான செல்வாக்கையும் , ஆழமான பிணைப்பையும் கொண்டுள்ளது என்பதிலேயே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தங்கியுள்ளது . இதனால் மக்கள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அங்கெல்லாம் சென்று அவர்கள் மத்தியில் கிளர்ச்சி, பிரசார , அமைப்புப்பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு , மக்களை பெருமளவில் மக்கள்திரள் அமைப்புகளிலும் , படைகளிலும் அணி திரட்டி கட்சி ஒரு அரசியல் சக்தியாக எழுச்சியுறுவது இந்த காலகட்டத்தில் பிரதான பணியாகிறது . மக்கள் மத்தியிலுள்ள மிதமான விழிப்புணர்வுடையவர்களிடையே சென்று , அவர்கள் மத்தியில் தொடர்ச்சியான கிளர்ச்சிப் பிரச்சாரப்பணிகளில் ஈடுபட்டு , அவர்களது விழிப்புணர்வை அதிகரித்து அமைப்பாக்குவதன் மூலம் அவர்களது செயல்வீச்சை அதிகரித்து அவர்களுக்கு தலைமை கொடுக்வேண்டும்.

## ஆட்சி அதிகாராத்தை கைப்பற்றுவது :

கட்சியானது போதியளவு அமைப்புப் பலத்தையும் , விரிவான அளவில் மக்களது ஆதரவையும் திரட்டிக் கொண்ட நிலையில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவது நோக்கி முன்னேறிச் செல்கிறது . தன்னுடையதும் , எதிரியினதும் சக்திகளை சரியாக மதிப்பிடுவதும் , நிலைமைகளை கூர்ந்து அவதானித்து மிகவும் சாதகமான தருணத்தில் இறுதித் தாக்குதலைத் தொடுப்பதும் இக்கால கட்டத்தில் பிரதான பணியாகும் . இந்த நோக்கில் எதிரியைத் தனிமைப்படுத்துவதும் , புரட்சிகர சக்திகள் தமது ஆற்றலைப் பெருக்கிக் கொள்ளவுமான ஐக்கிய முன்னணி தந்திரோபாயங்கள் இந்த கால கட்டதில் முக்கியத்துவம் பெறுகின்றன.

புரட்சியாளர்கள் " மக்களிடம் போவது " என்று பொதுப்படையாக பேசாமல், எந்தக்கட்டத்தில் எந்தமக்கள் பிரிவினிடம் போவது என்பதையும் மனதில் கொண்டே பேச வேண்டும். அவ்வாறே எந்தமக்கள் பிரிவினிடத்தில் போகிறோம் என்பதற்கேற்ப எமது வேலை முறையிலும், கருத்துக்களின் தன்மையிலும் கூட நுட்பமான வேறுபாடுகள் தேவைப்படும்.

மேலே குறிப்பிட்ட கட்சியின் வளர்ச்சிப் போக்கின் மூன்று கட்டங்களும் " சீனப்பெருஞ்சுவரால் " ஒன்றிலிருந்து மற்றயது முற்றாக பிரிக்கப்பட்டதோ , அல்லது இந்த மூன்று கட்டங்களும் ஒன்று முடிந்த பின்புதான் மற்றயது என்ற விதத்தில் ஒரு திட்டவட்டமான வரிசைக் கிரமத்தில் வருபவையோ அல்ல . இவை ஒன்றினுள் மற்றொன்று விரவியும் நிற்கவே செய்யும். உதாரணமாக முதலாவது கட்டத்தில் முதன்மை பெறும் கோட்பாட்டுப்பணி என்பது அடுத்தடுத்த கட்டத்திலும் ஏன் புரட்சியின் பின்பும் கூட தொடரவே செய்யும் . ஆனால் அமைப்பின் முதன்மையான பணியென்ற அர்த்தத்தில் அல்ல . அவ்வாறே மக்கள் மத்தியில் சென்று பணியாற்றுவது என்பதும் கூட முதற்கட்டங்களிலும் , மூன்றாவது கட்டங்களிலும் ஏன் புரட்சியின் பின்பும் கூட நடைபெறவே செய்யும் ஆனால் அமைப்பின் முதன்மைப் யான பணி என்ற அர்த்தத்தில் அல்ல . எப்படி இருப்பினும் இவ்வாறு கூறுவதானது கட்சியின் வளர்ச்சிப் போக்கில் வேறுபட்ட கட்டங்கள் இருப்பதையோ , இந்த வேறுபட்ட கட்டங்களுக்கேற்ப வேறுபட்ட பணிகள் முதன்மை பேறுவதையோ மறுப்பதாக அர்த்தப்படமாட்டாது .

புரட்சியாளர்கள் ' மக்களிடம் போவது ' என்று பொதுப் படையாக பேசாமல், எந்தக் கட்டத்தில் எந்த மக்கள் பிரிவினிடம் போவது என்பதையும் மனதில் கொண்டே பேச வேண்டும். அவ்வாறே எந்த மக்கள் பிரிவினரிடத்தில் போகிறோம் என்பதற்கேற்ப எமது வேலை முறையிலும், கருத்துக்களின் தன்மையிலும் கூட நுட்பமான வேறுபாடுகள் தேவைப்படும். இந்தவிதமான வேறுபாடுகளைக் கருத்திற் கொள்ளாது பொதுப்படையாக ' மக்களிடம் போவது ' பற்றிப் பேசினால் அது வெறுமனே சூட்சமான கோஷமாகத்தான் இருக்குமேயன்றி திட்டவட்டமான அமைப்புப் பணிகளை சுட்டமாட்டாது.

புரட்சிகர தாபனத்தை கட்டுவது என்று வரும்போது , புரட்சிகர தாபனத்தின் வளர்ச்சிப் போக்கில் உள்ள மூன்று கட்டங்களையும் மனதிற் கொன்டு, தாம் இருக்கும் கட்டத்தை சரியாக இனம் கண்டு , அந்த கட்டத்தில் செய்தாக வேண்டிய முதன்மையான பணிகள்மீது தமது அக்கறைகளை குவித்து செயற்படுவது அவசியமானது .

www.tamilarangam.net



அதாவது புரட்சியாளர்கள் அந்த கட்டத்தின் முதன்மையான பணிகளில் தமது ஆற்றல், உழைப்பு, நேரம் , வளங்கள் போன்றவற்றை உயர்ந்த பட்ச அளவில் ஈடுபடுவதன் மூலம் தமது செயலாற்றலின் ஈர்ப்பு மையத்தை (Central Gravity) அக்கட்டத்தின் முதன்மையான பணிகளில் வைத்திருப்பதை உத்தரவாதப்படுத்திக் கொள்ள வேண்டும் . இப்படியாக ஒரு புரட்சிகர அமைப்பில் வளர்ச்சிக் கட்டங்களையும், அந்தகட்டத்தின் முதன்மையான பணிகளையும் திட்டவட்டமாக வரையறுக்காமல் 'சொந்த திருப்திக்காக ஏதாவது செய்வது' ஆகின் ஒருவரது நல்லெண்ணங்கள் ஒரு போதும் புறநிலை யதார்த்தமாகமாட்டா .

இன்று எமது போராட்டத்தில் ஒரு புரட்சிகர மாற்றை அமைக்கும் ஆரம்ப முயற்சிகளே நடைபெற்று வருகின்றன . அதாவது நாம் ஒரு புரட்சிகர தாபனத்தின் வளர்ச்சிக்கட்டங்களில் முதலாவது கட்டத்தில் இருக்கிறோம் இந்தக் கட்டத்தில் எமது போராட்டத்துடன் தொடர்புடைய பல்வேறு கோட்பாட்டு அரசியல் பிரச்சனைகளையும் விரிவாக விவாதித்து , அவற்றிற்கு தீர்வு கண்டு ஒரு திட்டத்தை வரைந்தாக வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம் . இன்று அமைப்பின் முதன்மையான பணிகளாக கோட்பாட்டுப் பணிகள் அமைகின்றன . அமைப்பானது இந்த பணிகளில் கலந்து கொள்ளக்கூடிய எமது சமூகத்தின் மிகவும் முன்னேறிய பிரிவினரை இலக்காகக்கொண்டு செயற்பட்டாக வேண்டியுள்ளது .

மக்கள் பாசிச சக்திகளை தொடர்ந்தும் ஆதரிப்பதற்கு அவர்கள் மத்தியிலுள்ள அறியாமையும் ஒரு காரணம் என்பதால் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வது என்றென்றும் உள்ள ஒரு பணியாகும் பொதுமக்களிடையில் நமது வேலைமுறைகளும் , நமக்குள்ள செல்வாக்கையும் ஆழப்படுத்துவதும் , விரிவுபடுத்துவதும் நமது கடைமையாகும் . இதனைச் செய்யாதவர் புரட்சியாளரே அல்ல . அம்பலப்படுத்தல் என்பது எப்போதும் செய்யப்பட வேண்டியதுதான் . எல்லாக் காலங்களிலும் , எல்லாச் சூழல்களிலும் அத்தியாவசியமானது என்கிற காரணத்தால் இதனையே ஒரு விசேட கோசமாக மாற்றிக் கொண்டு விடக்கூடாது . இதுவே எமது பணியெனக் குறுக்கிக்கொள்வது உண்மையில் இதன் அர்த்தத்தை புரிந்து கொள்ள மறுத்த போக்கை காட்டுகிறது.

அம்பலப்படுத்தல் என்பது எப்போதும் செய்யப்பட வேண்டியதுதான் . எல்லாக் காலங்களிலும் எல்லாச் சூழல்களிலும் அத்தியாவசியமானது என்கிற காரணத்தால் இதனையே ஒரு விசேட கோசமாக மாற்றிக் கொண்டு விடக்கூடாது . இதுவே எமது பணியெனக் குறுக்கிக்கொள்வது உண்மையில் இதன் அர்த்தத்தை புரிந்து கொள்ள மறுத்த போக்கை காட்டுகிறது.

புரட்சியாளர்கள் தமக்கென ஒரு புரட்சிகர தாபனத்தை கட்டியமைக்காத நிலையில் அவர்களது பிரதான கவனமானது அவ்வாறான ஒரு தாபனததைக் கட்டும் பணியிலேயே செலுத்தப்பட வேண்டும் . இதற்கு உட்பட்ட விதத்திலேயே ஏனைய வெகுஜன , அரசியல் வேலைகள் செய்யப்பட வேண்டும் . ஆனால் இன்று இந்த அம்பலப்படுத்தல்களில் காட்டப்படும் அக்கறையில் ஒரு பகுதி கூட , இக்குழுக்கள் தமக்கிடையில் கருத்தொருமைப்பாட்டை உருவாக்கவும் , ஒருங்கிணைப்பிற்கு வரவும் , இதன் மூலம் ஒரு பலமான மாற்று சக்தியை உருவாக்குவதிலும் காட்டாமையே இன்றுள்ள பிரதான குறைபாடாகும் .

மக்களை பாசிசத்திற்கு எதிராக போராடுவதற்கு வழிகாட்ட விரும்பினால், இந்த நோக்கில் செய்தாக வேண்டிய ஒவ்வொரு சிறிய பணியையும் திட்டமிட்டுக் கொண்டு தொடங்கி விடாப்பிடியுடன் பணியாற்ற வேண்டும். இதற்கு மாறாக கோட்பாட்டு, அமைப்பு பணிகளை செய்யாமல் ' பாசிசம் ஒழிக ' என்ற பிரச்சாரத்துடன் நிறுத்தி விடுவதனால் இது ஒருவரது அக விருப்பத்தைக் காட்டுகிறதேயன்றி இந்த அக விருப்பங்கள் புறநிலை யதார்த்தங்களாக மாறமாட்டா . பாசிசத்தை அம்பலப்படுத்தும் சிறுகதைகள், கவிதைகள் , கட்டுரைகள் போன்றவை மாத்திரம் தம்மளவில் பாசிசத்தை முறியடித்து விடமாட்டா . ' முறிந்த பனை ' பல அத்தியாயங்களாக வெளிவருவதும் கூட இப்படிப்பட்டதே . இப்படிக்கூறுவதால் நாம் இது போன்ற முயற்சிகளைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொச்சைப்படுத்துவதாக பார்க்க வேண்டியதில்லை. மாறாக ஒரு பலமான மாற்று சக்தியின் தோற்றம் மட்டுமே பாசிசத்தை தோற்கடித்து எமது போராட்டத்தை அதன் இன்றைய தேக்கநிலையில் இருந்து மீட்டு அதன் உயர்ந்த இலக்குகள் அடையப்படுவதை சாத்தியமாக்கும். அப்படிப்பட்ட ஒரு மாற்று சக்தியை உருவாக்குவதில் ஜனநாயக, முற்போக்கு, புரட்சிகர சக்திகள் தமது பாத்திரத்தைப் புரிந்து கொண்டு முன்முயற்சிகளை எடுப்பது முக்கியமானது.

புரட்சியாளர்கள் தம்முன்னுள்ள பணிகளை சிறப்பாக செய்து முடிப்பதாயின் அவர்கள் கோட்பாட்டாளர், அமைப்பாளர், பிரச்சாரகர், கிளர்ச்சியாளர் போன்ற பல்வேறு பாத்திரங்களை ஆற்றவேண்டும். கோட்பாட்டாளர்கள், அமைப்பாளர்கள் என்றவகையில் புரட்சியாளர்கள் தமது பாத்திரங்களை சிறப்பாக ஆற்றினால் மட்டுமே பிரச்சாரமும், கிளர்ச்சியும் கூட தாக்கமுள்ளதாக அமையும். புரட்சியாளர்கள் புறநிலை யதார்த்தம் பற்றிய சரியான மதிப்பீடுகளை மேற்கொண்டு தமக்கிடையே ஒத்த கருத்துக்களை உருவாக்கிக் கொள்ளாமல் பிரச்சாரமோ, கிளர்ச்சியோ வெற்றிகரமாக மேற்கொள்ளமுடியாது. திட்டம் வரையப்பட்டால் இதுவே பிரச்சாரத்திற்கும், கிளர்ச்சிக்குமான சுலோகங்களை வழங்கும்.

புரட்சியாளர்கள் தமக்கிடையில் ஒருமித்த பொதுவான விளக்கத்தை அடையாத நிலையில் பகுதிபகுதியாக சிதறிய நிலையில் பகுதிப் பிரச்சனைகளில் செய்யப்படும் அம்பலப்படுத்தல்களும், பிரச்சாரங்களும் காத்திரமான தாக்கத்தை நிகழ்த்தப் போவதில்லை. பிரச்சாரம் என்ற நிலையிலிருந்து கிளர்ச்சி, வெகுஜனப்போராட்டம் போன்ற நிலைகளுக்கு முன்னேறுவதாயின் புரட்சியாளர்களிடையே ஒன்றுபட்ட புரட்சிகர தாபனமும், வெகுஜனங்களை அணிதிரட்டவல்ல வெகுஜன தாபனங்களும் அவசியமானவை. இந்தவிதமான கண்ணோட்டங்களைப் பெறாத வெறும் பிரச்சாரம் எந்தவிதமான உருப்படியான விளைவுகளையும் சாதிக்கமாட்டாது.

ஒவ்வொரு போராட்டத்திலும் அலையும் தணிவும் அடுத்து அடுத்து வருபவைதான். போராட்ட அலை வீசும் காலத்தில் மக்கள் தன்னியல்பாகவே கிளர்ந்து எழுவார்கள். அவர்களின் முன்னுள்ள அமைப்புகளில் விருப்பத்துடன் அணிதிரள்வார்கள். ஆயினும் போராட்ட அலை தணிந்த காலத்தில் சாதாரண மக்கள், போராட்டத்தில் அதிக அக்கறை காட்டமாட்டார்கள். மக்களின் முன்னேறிய பிரிவினர் மாத்திரமே வரலாற்றின் இயக்கப் போக்கை புரிந்து கொண்டு அதில் தமது பாத்திரம் பற்றிய பிரக்ஞையுடன் புரட்சிகர தாபனங்களை தேடிவருவார்கள். போராட்ட அலை தணிந்த இன்றைய காலகட்டத்தில் மக்கள் மத்தியில் சென்றால் அவர்கள் எமது குரலுக்கு உயர் பிரதிபலிப்பைக் காட்டமாட்டார்கள். இதில் தவறு மக்களுடையது அல்ல, எம்முடையதே. மக்களிடம் போகவேண்டும் என்ற ஆர்வம் மட்டுமே மக்களை உடனடியாக கிளர்ந்தெழச் செய்யபோதுமானதல்ல.

ஆகவே ஒரு புரட்சிகர தாபனத்தை தேடிக்கொண்டிருக்கும் முன்னேறிய பிரிவினரை வென்றெடுக்கவும், அவர்களை இணைத்துக் கொள்வதில் நாம் எதிர்நோக்கும் கோட்டுப்பாட்டுப் பிரச்சனைகளை விவாதித்து தீர்த்துக்கொள்ளவும் உரிய வழிமுறைகள் எம்மிடம் இல்லையென்றால், நாம் எமது கடமைகளைத் தவறுவதாகத்தான் அர்த்தப்படும். இன்று மிகவும் அத்தியாவசியமானதாக இருக்கும் புரட்சிகரதாபனத்தைக் கட்டுவதை, திட்டத்தை வரைவதை நாம் செய்து முடிக்கவில்லையானால், நாளை இன்னோர் எழுச்சிக்கட்டம் வந்தாலும் கூட அதனை நாம் சரியாக பயன்படுத்திக் கொள்ள முடியாமல் போய்விடும். கிளர்ந்தெழும் மக்களை அணிதிரட்ட வழிகாட்ட முன்னணிப்படை இல்லையானால் அப்போதும் கூட தன்னியல்புவாதம் தான் போராட்டத்தில் ஓங்கியிருக்கும். அந்த தவறுக்கும் நாமே பொறுப்பாளிகள் ஆக நேரும்.

நாம் இன்று முகங்கொடுக்க நேரும் முன்னேறிய பிரிவினர் என்போர் 83இல் இயக்கங்களை முகங்கொடுத்தவர் போன்று அப்பாவிகளாக, வெறும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உணர்ச்சிகளுடன் வருபவர்கள் அல்ல . பலரும் இரண்டு அல்லது மூன்று அமைப்புக்களை கடந்து வருபவர்களாக இருக்கின்றனர் . இவ்வாறு கடந்து வந்ததானது அவர்களுக்கு பல கசப்பான படிப்பினை களையும் , புதிதாக பல கேள்விகளையும் எழுப்பி யுள்ளன . இன்று முதன் முதலாக அமைப்பில் இணை ந்து கொள்ள முன்வரும் வயதிலும், அனுபவத்திலும் மிகவும் குறைவான ஒருவர் கூட புலிகளுடன் சேராது மாற்று அமைப்பொன்றைத் தேடுகிறார் என்றால் அவரிடத்தில் கணிசமான முதிர்ச்சியும் , கூடவே போராட்டம் குறித்து பலதரப்பட்ட கேள்வி களும் இருக்கின்றன என்றே அர்த்தம் . இவர் எழுப்பும் நியாயமான கேள்விகளை முகங்கொடுத்து , எதிரி கள் மேற்கொள்ளும் கருத்துக் குழப்பங்களை மீறி , அவர்களை வென்றெடுத்துச் செல்வதாயின் இன்று ள்ள எமது கோட்பாட்டு அக்கறைகள் இன்னும் தீவிரப்படுவதும் அதனூடாக ஒரு சித்தாந்த மேலாண்மை நிலைநாட்டுவதும் அவசியமானது .

- *" புரட்சிகர கோட்பாடு இன்றி புரட்சிகர கட்சியில்லை "*
- *" கோட்பாடு என்பது புரட்சிகர ஆயுதம் "*
- *" நமது காலத்தில் மிகவும் முன்னேறிய கோட்பாட்டால் ஆயுதமயமாக்கப் பட்டி ருக்கவேண்டும் "*
- *" சரியான கோட்பாடு என்பது புரட்சிக்கான வெற்றியை உத்தரவாதப் படுத்தி விடுவ தில்லை. ஆனால் வெற்றி பெற்ற ஒவ்வொரு புரட்சியும் சரியான கோட்பாட்டைக் கொண்டிருக்கிறது "*

போன்ற வாசகங்கள் இப்போது அதிக கவனத்தை வேண்டி நிற்கின்றன.

நமது கோட்பாட்டின் சரியான தன்மையை இனங்காண்பதற்கு அது நடைமுறையில் செயற் படுவது அவசியம் . நமது கோட்பாட்டின் நோக் கமே செயற்பாடுதான் என்றெல்லாம் கூறப்பட்டாலும் கூட கோட்பாடும் , நடைமுறையும் இரண்டு வேறு பட்ட அரங்குகள் என்பதை நாம் கவனிக்கத் தவறக்கூடாது . மக்களிடம் போவதால் மட்டும் சரியான கோட்பாடு உருவாகிவிடமாட்டாது . சரி யான கோட்பாடு என்பது விஞ்ஞான பூர்வமான ஆய்வுகளிலிருந்து பிறப்பதாகும். மாபெரும் மக்கள் இயக்கங்களுக்கு கோட்பாடானது வெளியிலிரு ந்து கொண்டு செல்லப்படுவதாகும் . ஒரு மக் கள் இயக்கமானது அது எவ்வளவுதான் புரட்சிகர மானதாக இருந்தாலும் கூட தன்னியலபான அம்சங் களையே தோற்றிவிக்கும் . எனவே சரியான கோட்பா ட்டின் தேவையை மக்களிடம் போவதன் மூலம் தீர்த்துவிட முடியாது .

இன்றைய வரலாற்றுப் போக்கை மாற்றியமைப்பதற்கு அவசியமான முன்னணிப்படையை தோற்றுவிப்பதில் புரட்சியாளர்கள் என்ற வகையில் நமது முன்கையெ டுக்கும் அவசியத்தை உணராது , மக்களின் தன் னியல்பிற்கு வழிவிட்டுக்கொண்டு தமது ஆத்ம திருப்திக்காக ஏதாவது செய்வது என்ற நிலை நீடிக்கும் வரையில் திரும்பத் திரும்ப இதே தோல்விகளும் , நம்பிக்கை வரட்சியும் , விரக்தியும் விசச்சூழல் போன்று எம்மை ஆட்டிப் படைத்துக் கொண்டேயிருக்கும் . இன்று புரட்சியாளர்கள் தம் முன்னுள்ள கோட்பாடு , அமைப்புப் பணி களை சரிவரப் புரிந்து கொள்வதாயின் முதலில் தன்னியல்புவாதத்திலிருந்தும் , பொதுப்புத்தி மட்ட த்தில் கருத்துப்பரிமாறுவதில் இருந்தும் தம்மை விடுவித்தாக வேண்டியுள்ளது . எனவே இப்போ து தன்னியல்பு , பொதுப்புத்தி என்ற விடயங்களை சற்று விரிவாகப் பரிசீலிப்போம் .

*இன்றைய வரலாற்றுப் போக்கை மாற்றியமைப்பதற்கு அவசியமான முன்னணிப்படையை தோற்றுவி ப்பதில் புரட்சிய ்கள் ்ற வகையில் நமது முன்கையெடுக்கும் அவசியத்தை உணராது , மக்களின் தன்னியல்பிற்கு வழிவிட்டுக்கொண்டு தமது ஆத்ம திருப்திக்காக ஏதாவது செய்வது என்ற நிலை நீடிக்கும் ரையில் திரும்பத் திரும்ப இதே தோல்விகளும் , நம்பிக்கை வரட்சியும் , விரக்தியும் விசச்சூழல் போன்று எம்மை ஆட்படுத்திக் கொண்டேயிருக்கும் .*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பொதுப்புத்தி (Commonsense) என்றால் என்ன ?

பொதுப்புத்தி என்பது எமது அன்றாட வாழ்கை அறிவாகும் . இது அடிப்படையில் வாழ்கை, மனிதர் பற்றிய பரவலான கருத்துக்களாகும் . எந்தவொரு சமூகத்திற்கும் , குறிப்பிட்ட காலத்துக்குப் பொதுவானதாக அமையும் ஊகங்கள் , நம்பிக்கைள் , கண்ணோட்டங்கள் என்பவற்றால் ஆன , முற்றிலும் உள்ளிணக்கமற்ற ஒன்றாகும் . இது அன்றாட நடைமுறை சார்ந்தது என்றாலும் கட்டயமாக விஞ்ஞானபூர்வமானதாகவோ பகுத்தறிவிற்கு பொருத்தமானதாகவோ இருக்க வேண்டுமென்பதில்லை . இது மனிதர்கள் தாம் வாழும் சமூகச்சூழலில் இருந்து விமர்சனமின்றி உள்வாங்கும் கருத்துக்ளால் உருவாகிறது .

தத்துவம் என்பது முறைப்படுத்தப்பட்ட சிந்தனையைக் குறிக்கிறது . இந்த அர்த்தத்தில் பொதுபுத்தியானது சாமன்ய மக்களது ' தத்துவம் ' *(Philosaphy of non - Philosaphers )* என்றும் தன்னியல்பான தத்துவம் என்றும் அழைக்கப்படலாம் .

சாதாரணமாக ஒருவர் எந்தவொரு முறைப்படியான சிந்னைக்குள்ளும் தன்னை ஆட்படுத்தாமல் சிறிதளவு மதத்தின் கருத்துகள் , சிறிதளவு ஜனநாயக்கருத்துக்கள் சிறிதளவு விஞ்ஞானக் கருத்துக்கள் , சிறிதளவு சோசலிச கருத்துக்கள் என்பவற்றை தனது மனத்தில் முறைப்படி இனைத்துக்கொள்ளாமல் . தேவைகேற்ப எடுத்து பயன்படுத்திக் கொள்கிறார் . பொதுபுத்தியானது முற்றிலும் வேறுபட்ட கருத்துக்களை மிகவும் குழப்பமான விதத்தில் ஒன்று சேர்ப்பதாகும் . இதனால் பொதுபுத்தியில் ஒருவர் தனக்கு வேண்டிய எதனையும் தேடி எடுக்கலாம் . உலகம் பற்றிய ஒருவரது கருத்துக்கள் விமர்சன பூர்வமானதாகவும் , உள்ளிணக்கமானதாகவும் இல்லாதபோது அது ஒருவித புதிரான கலவையாகவே இருக்கிறது .

பொதுபுத்தியில் முதன்மையான கூறுகள் மதத்தினால் வழங்கப்படுவதாகும் . இதனால் இது தத்துவத்தை விட மதத்திற்கே நெருக்கமானதாகும் . அதே வேளை பொதுபுத்தியில் ' யதார்த்த பூர்வமாக ' பொருள் முதல்வாதக் கூறுகளும் கூட காணப்படும் . ஆனால் இவை முறையாக செரிமான முறாத நிலையில் காணப்படும் . இவை மதத்தின் கருத்துக்களுடன் முட்டி மோதாமல் அரு கருகே சகவாழ்வு நடத்தும் இந்த ஆரம்பக் கூறுகள் ஒரு ஒத்திசைவான , உள்ளிணக்கமுள்ள கருத்தாக வளர்த்தெடுக்கும் தகுதியுடையவை . பொதுப்புத்தியில் விமர்சன கூறுகளும் , விமர்சன பூர்வமற்ற கூறுகளும் காணப்படுகின்றன இதனால் விஞ்ஞானபூர்வமான தத்துவத்தை , துண்டு துண்டான கருத்துக்கள் , அப்பிராயங்கள் ஆகியவற்றின் தொகுப்பால் உருவாகும் பொதுபுத்தியிலிருந்து முற்றிலும் வேறுபடுத்தி விடவும் முடிவதில்லை . இந்த அர்த்தத்தில் தான் தத்துவத்திற்கும் , பொதுபுத்திமிற்கும் இடையில் அளவுரீதியான வேறுபாடுகளே உண்டு பண்புரீதியான வேறுபாடுகள் அல்ல என்கிறார் கிராம்சி .

சமூகத்தில் காணப்படும் ஒவ்வொரு பிரிவினர்களுக்கும் என்று தனியான பொதுப்புத்திகள் இருக்கின்றன . பொதுப்புத்தி என்பது என்றும் மாறாத , இறுகிய ஒன்றல்ல . ஒவ்வொரு தத்துவ ஓட்டங்களும் சில கூறுகளை பொதுப்புத்தியில் பதித்துச் செல்கின்றன . எந்த மக்களது ' தத்துவமாக ' இது இருக்கிறதோ அவர்களது சமூக நிலைமைகளை தொடர்ந்து உறுதிப்படுத்துகிறது . எந்தவொரு சமூக மாற்றத்தின் போதும் நடப்பிலுள்ள பொதுப்புத்தியானது விமர்சிக்கப்பட்டு புதியதொரு பொதுப்புத்தியானது உருவாக்கப்படுகிறது . இந்த புதிய பொதுப்புத்தியானது புதிய ஆளும் வர்க்கத்தின் உலகக்கண்ணோட்டத்திற்கு நெருக்கமானதாக அமைகிறது .

சமூகம் என்பது ஒரு முறைமை (System) ஆகும் . இது அங்கிங்கென , தொடர்புறாத நபர்கள் , சம்பவங்கள் என்பவற்றால் ஆன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தல்ல . மாறாக , உறவுகள் , குழுக்கள் , நிறுவனங்கள் போக்குகள் என ஒன்றுடன் ஒன்று பிரிக்கமுடியாதவாறு பிணைந்துள்ள ஒழுங்குமுறையைக் கொண்டதே சமூகமாகும். இப்படியாக ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய சமூகத்தைப் புரிந்துகொள்வதாயின் ஒரு முறைப்படியான கோட்பாட்டுத் தொகுதியொன்று எமக்குத் தேவைப்படுகிறது. அதாவது உலகை ஒரு முறைமையாக புரிந்துகொள்வதாயின் ஒரு முறையான சிந்தனை அவசியமானது . சமூகம் பற்றிய எமது கருத்துக்களை எப்போது நாம் பிரக்ஞைபூர்வமாக ஒன்றோடொன்று தொடர்புபடுத்துகிறமோ அப்போது தான் முறைப்படி (systematically) சிந்திக்கத் தொடங்குவதாக அர்த்தப்படும் . துண்டுதுண்டான தகவல்களைக் கொண்ட பொதுப்புத்தியின் மூலம் சமூகத்தை புரிந்கொள்ளமுடியாது . ஆனால் அன்றாட வாழ்வில் பலரும் அவ்வாறு தான் முயல்கிறார்கள் . தத்துவவியலாளனாக இருப்பது என்றால் விலங்குத்தனமான , ஆரம்ப உணர்ச்சிகளைக் கடந்து , அவசியம் பற்றிய கருத்தை உருவாக்குவதன் மூலம் ஒருவரது செயற்பாடுகளுக்கு பிரக்ஞைபூர்வமான திசை வழியைக் காண்பதாகும் . மக்கள் திரளிலிருந்து ஒருவர் எப்போது விமர்சனத்தின் மூலம் பொதுப்புத்தியை கடந்து செல்கிறாரோ அப்போது தான் அவர் அந்த செயற்பாட்டின் மூலம் புதிய தத்துவத்தை ஏற்றுக்கொள்கிறார்.

*சமூகத்தில் ாணப்படும் ஒவ்வொரு பிரிவினர்களுக்கும் ன்று தனியான பொதுப்புத்திகள் இருக்கின்ற ாதுப்புத்தி என்பது என்றும் மாறாத இறுகிய ஒன்றல்ல . ஒவ்வொரு தத்துவ ஓட்டங்களும் சில கூறுகளை பொதுப்புத்தியில் பதித்துச் செல்கின்றன . எந்த மக்களது தத்துவமாக இது இருக்கிறதோ அவர்களது சமூக நிலைமைகளை தொடர்ந்து உறுதிப்படு கிறது . எந்தவொரு சமூக ற்றத்தின் தும் ப ிலுள்ள பொதுப்புத்தியானது விமர்சிக்கப்பட்டு புதியதொரு பொதுப்புத்தியானது உருவாக்கப்படுகிறது . இந்த புதிய பொதுப்புத்தியானது புதிய ஆளும் வர்க்கத்தின் உலகக்கண்ணோட்டத்திற்கு நெருக்கமானதாக அமைகிறது .*

மக்களது பொதுப்புத்தியில் காணப்படும் அத்தனை கருத்துக்களுமே தவறானவை என்பது அல்ல . உண்மைகளும் பொதுப்புத்தியில் காணப்படவே செய்கின்றன . ஆனால் நிச்சயமற்ற , முரண்பட்ட , பலதரப்பட்ட கருத்துக்களும் இதில் காணப்படுகின்றன . இவை பரிசீலிக்கப்படாதவை , பரீட்சித்துப்பார்க்கப்படாதவை . ஆதலால் விஞ்ஞான கண்ணோட்டத்தில் இவை உண்மையிலேயே போதுமானவை அல்ல . பொதுப்புத்தியானது காரணகாரிய உறவுகளை சரியாகவும் , உள்ளார்ந்தும் பிரயோகிப்பதில்லை மாறாக , பொதுப்புத்தியின் முடிவுகள் அனைத்தும் மிகவும் வரையறுக்கப்பட்ட விதத்திலேயே இந்த காரணகாரிய உறவுகளை பிரயோகிக்கிறது . நிகழ்வுகளுக்கும் , தோற்றப்பாடுகளுக்குமான காரணிகளை மிகவும் எளிமையானதாகவும் , நேரடியாகவும் , கைக்கு எட்டக்கூடியதாகவுமே பொதுப்புத்தி காண்கிறது . இங்கு அறிதல் என்பது அனுபவவாத மட்டத்திலேயே இருக்கிறது . ஆதலால் உண்மைக்கு ஆதாரமாக பொதுப்புத்தியைக் காட்டுவது ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல .

இதனால் கறாரான அர்த்தத்தில் விஞ்ஞான நோக்கங்களுக்கு பொதுப்புத்தியுடன் முறித்துக் கொள்வது கட்டாயமானதாகிறது . இதைக் கருதித்தான் எங்கெல்ஸ் , ' பொதுப்புத்தியானது அதற்குரிய நான்கு சுவர் களுக்குள்ளான அதன் அன்றாட இருப்பிடத்தின் வரம்புகளுக்குள் மரியாதைக் குரியதாக திகழ்ந்தாலும் , ஆராய்ச்சி என்ற பரந்த உலகினுள் அடியெடுத்து வைத்ததும் உடனே விந்தை மிகு விநோதங்களை அனுபவிக்க நேர்கிறது 'என்று ' டூரிங்கிற்கு மறுப்பு ' எனும் நூலில் குறிப்பிடுகிறார் .

பொதுப்புத்தியில் சாதகமான அம்சங்களே கிடையாது என்பதல்ல . பழைய , பத்தாம்பசலித்தனமான சிந்தனைகளை விட அன்றாட அனுபவத்திலிருந்து பிறக்கும் பொதுப்புத்தியானது உயர்ந்தவையே . 17ம், 18ம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நூற்றாண்டு காலத்தில் மறுமலர்ச்சி இயக்கங்களது, பழைய மூடக்கருத்துக்களுக்கு எதிரான போராட்டங்களில் பொதுப்புத்தியானது போற்றிப் புகழப்பட்டது. இப்போதும் கூட இப்படிப்பட்ட குறிப்பான சந்தர்ப்பத்தில் பொதுப்புத்தியை பாராட்டுவதும் ஓரளவு ஏற்றுக் கொள்த்தக்கதே. அவ்வாறே பொதுப்புத்தியில் காணப்படும் கருத்துக்கள் மிகவும் எளிமையானதாக, நேரடியானதாக இருக்கின்றன. இதில் வார்த்தை ஜாலங்கள், போலிவிஞ்ஞானங்கள், போலியான ஆழப்படுத்தல்கள் இருப்பதில்லை. இதனால் இந்த கருத்துக்களில் உள்ள தவறுகளை விமர்சனபூர்வமாக கண்டுகொள்வது போலிப் புலமையாளரின் போலி விஞ்ஞானக்கருத்துக்களை விட சுலபமானது. இதனால் பொதுப்புத்தியில் விளையும் தீங்குகளும் பின்னையதை விட குறைவானவையே.

எப்படியிருப்பினும் கோட்பாட்டுச் செயற்பாட்டு என்று வந்துவிட்டால் பொதுப்புத்தியுடன் கணக்குத் தீர்த்துக் கொள்வதும், முற்றிலும் விஞ்ஞானபூர்வமாக கோட்பாட்டுச் செயற்பாடு முன்னெடுக்கப்டுவதை உத்தரவாதப்படுத்திக் கொள்வதும் முக்கியமானது.

### தன்னியல்பு என்றால் என்ன ?

Spontanity என்ற ஆங்கிலபதமே தமிழில் தன்னியல்பு எனப்படுகிறது. அதாவது தானாக, இயல்பாக வருவது என்று இது அர்த்தப்படுகிறது 'என்ன செய்ய வேண்டும்' என்ற நூலில் லெனின் தொழிலாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளுடன் மாத்திரம் திருப்தியுற்றுவிடும் ஒரு வேலை முறையையே தன்னியல்பு என்று குறிப்பிடுகிறார். மூலவாசகங்களை அப்படியே ஒப்புவிப்பதே மார்க்சியம் என்று பழக்கப்பட்டுள்ள எமது சூழலில் தன்னியல்பு என்றதும் அது தொழிற்சங்க நடவடிக்கைகளை மட்டுமே குறிப்பதாக ஒரு கருத்து பரவலாக காணப்படுகிறது. ஆனால் எமது சூழலில் இந்த தன்னியல்பு மிகவும் விரிவான தார்ப்பரியங்களை உடையது என்பதால் இதனை இங்கு மறுவரையறை செய்தாக வேண்டியுள்ளது.

தொழிலாளர் வர்க்கத்திற்கு அதன் வாழ்நிலைமையானது இயல்பாகவே அதனை தொழிற்சங்கங்களில் அமைப்பாகி பொருளாதார போராட்டங்களை முன்னெடுக்குமாறு நிர்ப்பந்திக்கிறது. இதனால் தொழிலாளர் வர்க்கத்திற்கு தன்னியல்பாக தொழிற்சங்க நடவடிக்கைகளே வருகின்றன, என்பது சசரியானதே. ஆனால் இதிலிருந்து மிகவும் வேறுபட்ட ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் மிகவும் வேறுபட்ட வர்க்கங்களின், சமூகசக்திகளின் சேர்க்கை நிலவும் பட்சத்தில் அந்த இயக்கங்களில் தானாக, இயல்பாக தொழிற்சங்க நடவடிக்கைகள் இடம் பெறமாட்டாது மாறாக வேறுவிதமான நடவடிக்கைகளே தானாக, இயல்பாக வருகின்றன. இந்த விதமான நடவடிக்கைகளே எமது போராட்டத்தில் தன்னியல்பான நடவடிக்கைகளாக இனங்காணப்பட வேண்டும்.

எமது தேசியவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும் பல்வேறு சமூகப்பிரிவுகளும், அவர்களது வாழ்க்கை நிலமைகளால் எவற்றைத் தமக்கு இயல்பாக கைவரப்பெறும் நிலையில் உள்ளனவோ அவற்றினூடாக இப்பிரிவுகள் போராட்டத்தை அணுகுகின்றன. எமது போராட்டத்தில் சுவரொட்டி ஒட்டுதல், பிரச்சாரம், பத்திரிகை, சஞ்சிகை வெளியிடுவது, கலைக்குழுக்களை நடாத்துவது, எதிரியைத் தாக்குவது, எதிரியின் சொத்துக்களை நாசம் செய்வது ஆயுத நடவடிக்கைகள், சமூகசேவை, அகதிவேலை, மக்கள் அமைப்புக்களை கட்டுவது… போன்ற மிகவும் வேறுபட்ட பலவிதமான வடிவங்களை இந்த தன்னியல்பானது எடுக்கிறது. தன்னியல்பு என்பது ஏற்கனவேயுள்ள பிரக்ஞைபூர்வமான தலைமைக் குழுவின் முறையான கல்விசார் நடவடிக்கையின் விளைவாக அல்லாமல் பொதுப்புத்தியில் அதாவது, உலகம் பற்றிய மரபான ஜனரஞ்சகக் கருத்துக்களால், இயல்பூக்கங்களால் „ (Intinct) அதாவது முதிர்ச்சியற்றும், தொடக்கநிலையில் இருப்பதுமான வரலாற்றுப் பிரச்ச

> *எமது தேசியவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும் பல்வேறு சமூகப்பிரிவுகளும், அவர்களது வாழ்க்கை நிலமைகளால் எவற்றைத் தமக்கு இயல்பாக கைவரப்பெறும் நிலையில் உள்ளனவோ அவற்றினூடாக இப்பிரிவுகள் போராட்டத்தை அணுகுகின்றன.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

யத்திலிருந்து பிறப்பதான அன்றாட அனுபவங்களின் ஒளியூட்டலினூடாகவும் – உருவானதாகும். தன்னியல்பு என்பது மக்கள் மத்தியில் காணப்படும் பொதுவான பாதுகாப்பின்மை உணர்வின் ஸ்தூலமான வெளியீடு ஆகும். 'இதனைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது! ஏதாவது செய்தாக வேண்டும்' என்பது தான் தன்னியல்பின் வழிகாட்டு நெறியாகும். தன்னியல்பு வேலை என்பது கோட்பாட்டால் வழிகாட்டப்படுவதற்கு மாறாக உணர்ச்சிகளால், வெறும் உற்சாகங்களால், விருப்பங்களால் வழிநடத்தப்படுவதாகும்.

குறிப்பிட்ட ஒரு சமூக அநீதிக்கான மூல காரணம், அதற்கான தீர்வு, தீர்வை அடைவதற்கான வழிமுறைகள் என்பவற்றில் பெறப்படும் தெளிவே பிரக்ஞையின் உயர்ந்த நிலையாகும்.

குறிப்பிட்ட ஒரு சமூக அநீதிக்கான மூலகாரணம், அதற்கான தீர்வு, தீர்வை அடைவதற்கான வழிமுறைகள் என்பவற்றில் பெறப்படும் தெளிவே பிரக்ஞையில் உயர்ந்த நிலையாகும். இது புரட்சிகர தாபனம், திட்டம், மூலஉபாயம், தந்திரோபாயம், தாபன வேலைமுறைகள், போராட்ட வழிமுறைகள் என்பவை பற்றிய திட்டவட்டமான கருத்துக்களைக் கொண்டிருப்பதாகும். அதாவது இது கோட்பாட்டு மட்டத்திற்கு உயர்ந்த பிரக்ஞையைக் குறிப்பதாகும். ஆனால், 'இந்த நிலையை இப்படியே தொடரவிட முடியாது இதற்கெதிராக ஏதாவது செய்தாக வேண்டும்' என்ற தன்னியல்பானது பிரக்ஞையைக் கருஅளவில் கொண்டுள்ளதாகும். ஏனெனில் எந்தவொரு தன்னியல்பான நடவடிக்கைகளிலும் மிகக் குறைந்தளவில் என்றாலும் பிரக்ஞை இருக்கவே செய்கிறது. குறிப்பிட்ட ஒரு சமூக ஒடுக்குமுறை அநீதியானது (நீதியானது என்ற கருத்தை மறுப்பது); மனிதனால் உருவாக்கப்பட்டது (கடவுளால் உருவாக்கப்பட்டது என்பதை மறுப்பது) மாற்றப்படக் கூடியது (மாற்றப்பட முடியாது என்பதை மறுப்பது) அந்த மாற்றத்தில் தானும் பங்கெடுக்க முடியும் (தன்னால் எதுவுமே செய்ய முடியாது என்பதை மறுப்பது) என்ற கருத்துக்களின் அடிப்படையில் தான் ஒருவர் தான் அநீதியானது எனக்கருதும் ஒரு நடைமுறைக்கு எதிராக தனக்கு சரியெனப்படும் விதத்தில், தனக்கு அந்த சமயத்தில் முடியுமான விதத்தில், தனது எதிர்ப்பை தெரிவிப்பதே தன்னியல்பாகும். இது பிரக்ஞையின் கருநிலையே ஆகும். வரலாற்றில் 'தூய' தன்னியல்பு என்பதோ, 'தூயபிரக்ஞை பூர்வமான செயற்பாடு' என்பதோ கிடையாது.

பொதுவாக தன்னியல்பில் அறிவானது அனுபவாத மட்டத்திலேயே செயற்படுகிறது. அதாவது குறிப்பிட்ட ஒரு பிரச்சனைக்கான மூலகாரணம், அதனை தீர்ப்பதற்கான வழிமுறைகள் என்பவற்றைப்பற்றிக் கவலைப்படாது. உடலாலும், மனதாலும் தொட்டுணரத்தக்கவைக்கு எதிராக அங்கேயே, அப்போதே, அப்படியே செயற்படுவது என்பது தன்னியல்பின் குறிப்பான பண்பாகும்.

இதனால் தன்னியல்பான நடவடிக்கைகள், தோற்றப்பாடுகளுக்கு எதிராகச் செயற்படும் அந்த பிரச்சனையில் உள்ளார்ந்த இயங்கு விதிகளை அறியாதிருக்கும்; பகுதிப் பிரச்சனையில் தீவிரமாகப் போராடும். அதனை முழுமையுடன் தொடர்புபடுத்திப் பார்க்காது. உள்ளூர் நிலைமைகளுள் மூழ்கிப் போய் விடும். தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் அதற்குள்ள தொடர்புகளைக் கண்டு கொள்ளாது, உடனடி விளைவுகளைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளும். நீண்டகால விளைவுகள் பற்றிய சிந்தனையே இருக்காது. தனக்கு உடனடியாக சாத்தியமான வழிமுறைகளில், தனக்கு இயல்பாக கைவரப் பெறுபவற்றைக் கொண்டு உடனடியான நடவடிக்கைகளில் இறங்கிவிடும், சக்திகளைத் திரட்டுவது' தயாரிப்பது, தகுந்த தருணத்திற்காக காத்திருப்பது பலரதும், பலதரப்பட்ட நடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்பது பற்றி கவலைப்பட மாட்டாது. இதனால் போராடும் மக்கள் எங்கெல்லாம், எப்படியெல்லாம், உள்ளார்களோ அங்கங்கு, அப்படி அப்படியே போராடிக்கொண்டிருப்பார்கள். தயாரிப்பு, ஒருங்கிணைப்பு, இலக்குகள் என்று எதுவுமே இருக்காது. இதனால் தேசம் முழுவதுமே போராடிக் கொண்டிருந்தாலும் கூட அந்தப் போராட்டமானது உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் நன்கு அரண்செய்த, ஆயுத மயப்பட்ட, திறமையான நிர்வாக

www.tamilarangam.net

இயந்திரத்தையும் , வேகமாக விரைந்து செயற்படும் தொடர்பு வலைப்பின்னலையும் , ஏராளமான வளங்களையும் , மற்றும் சர்வதேச அளவிலான தொடர்புகளையும் , கொண்ட எதிரியை தோற்கடிப்பதில் தன்னியல்பான நடவடிக்கைகள் அதிகம் வெற்றி பெறுவதில்லை .

இங்கு அறிதல் என்பது புலனறிவு மட்டத்திலேயே நின்றுவிடுகிறது . இதனால் புறத்தோற்றப்பாடுகளுக்கெதிராக செயற்படுகிறதே அன்றி அந்த தோற்றப்பாடுகளுக்கு பின்னால் நிகழ்பவை பற்றி புரிந்து கொள்வதில்லை . அக்கறைப் படுவதும் இல்லை . இந்தவிதமான கண்ணோட்டமானது விபச்சாரியை இழிவு படுத்தும் ஆனால் பெண்ணடிமைத்தனத்தை கண்டு கொள்ளாது. பூசாரியைத் தாக்கும் மதத்தை விமர்சிக்காது பொலிஸ்காரனை எதிரியாகப் பாக்கும் . G.A யை மரியாதையுடன் நடத்தும்; நடைபாதை வியாபாரியுடன் சண்டைபோடும் . மூலதனம் பற்றி எதுவும் அறியாதிருக்கும் , உள்ளூர் அரசியல்வாதியை சபிக்கும் , ஏகாதிபத்தியத்தை இனங்காணாது ; அதன் ' உதவிகளை ' கோரிப்பெற்றுக் கொள்ளும் .

பொதுவாக தன்னியல்பான செயற்பாடுகளில் ஒருவர் தனது நடவடிக்கைகளில் நீண்டகால விளைவுகளை கருத்திற்கெடுத்து திட்டமிட்டு செயற்படுவதற்குப் பதிலாக , ஒரு செயலை செய்வது , அதன் விளைவுகளைப் பார்ப்பது , பின்பு அந்த விளைவுகளை முகம் கொடுக்கும் விதத்தில் இன்னோர் செயலை செய்வது , என்ற விதத்தில் செயற்பட்டு செல்வதாகும் . குருடன் தடவித் தடவி செல்வது போன்றது இதுவாகும் . அதாவது அனுபவவாத மட்டங்களிலேயே இது செயற்பட்டு செல்கின்றதே ஒழிய அறிதலின் உயர் மட்டத்தில் அல்ல . எமது அறிதலானது மிகவும் தாழ்ந்த மட்டத்தில் இருப்பதால் 'குறிப்பிட்ட ஒரு சமூக பிரச்சனைக்கான உண்மையான காரணங்களை கண்டறியாது வெறும் தோற்றப்பாடுகளுக்கு எதிராக செயற்படுவதாக அமைந்து விடுகிறது . இதனால் சில சமயங்களில் செய்யப்படும் தன்னியல்பான வேலைகள் , அது எந்த அநீதிக்கு எதிராக செயற்படுகிறதோ அதற்கும் இந்த தன்னியல்பு வேலைக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்று கூட ஆகிவிடலாம் . அல்லது ஆரம்பத்தில் இந்த தன்னியல்பு செயற்பாடானது குறிப்பிட்ட அநீதிக்கு எதிரானதாக இருந்தாலும் கூட அடுத்தடுத்த கட்டங்களில் இது தனது இலக்கை மறந்து அலைந்து திரியும் வாய்ப்பும் உள்ளது . சில வேளைகளில் ஆரம்பம் முதலோ அல்லது ஒரு வளர்ச்சிக் கட்டத்திலோ இந்த தன்னியல்பு நடவடிக்கைகள் புரட்சிகர மாற்றத்திற்கு எதிரானவையாக மாறிவிடும் வாய்ப்பும் உள்ளது .

> *எமது அறிதலானது மிகவும் தாழ்ந்த மட்டத்தில் இருப்பதால் குறிப்பிட்ட ஒரு சமூக பிரச்சனைக்கான உண்மையான காரணங்களை கண்டறியாது வெறும் தோற்றப்பாடுகளுக்கு எதிராக செயற்படுவதாக அமைந்து விடுகிறது .*

தன்னில்பான நடவடிக்கைகள் என்பவை பொதுவில் உற்சாகங்கள் , விருப்பார்வங்கள் ஆவேசங்கள் என்பவற்றிலேயே பெரிதும் தங்கியிருப்பதால் , பொதுவில் சமூகத்தில் ஏற்படும் தோற்றப்பாடுகளின் மாற்றங்களுக்கு ஏற்ப ஏற்ற இறக்கங்களை இது காட்டக்கூடியது . ' சாதாரண ' காலங்களில் தன்னியல்பு நடவடிக்கைகள் தீவிரமாக வெளிப்படமாட்டாது . நெருக்கடிகள் தீவிரப்படும்போது , தன்னியல்பான எழுச்சிகள் பொங்கிவழியும் . பின்பு நெருக்கடிகள் தற்காலிகமாக தணிந்தால் மீண்டும் அடங்கிவிடும் . அத்தோடு தொடர்ச்சியை பேணக்கூடிய தயாரிப்புக்கள் எதுவும் இல்லாததால் நெருக்கடிகள் மிகவும் தீவிரப்பட்டு மோசமான ஒடுக்குமுறை மிக நீண்ட காலத்திற்கு நீடிக்கும் நிலையில் தன்னியல்பானது தனது ஆற்றல் அனைத்தும் தீர்ந்து போவதால் முடிவுக்கு வந்திடக்கூடியது . இதனால் தன்னியல்பானது போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்து வெற்றியை அடைவதை உத்தரவாதப்படுத்த மாட்டாது . இதனால் தன்னியல்பான போராட்டங்கள் , ஒரு குறிப்பிட்டகாலத்தின் பின்பு ஏதோவொரு காரணத்தால் நெருக்கடிக்குள்ளாவது தவிர்க்க முடியாதது ஆகிறது .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தன்னியல்பான செயற்பாடுகள் மேலும் பல தவறான விளைவுகளையும் ஏற்படுத்துகின்றன . தன்னியல்பான நடவடிக்கைகள் ஆரம்பத்திலேயே தனது திசைவழியை நிர்ணயித்துக் கொள்ளாமல் அவ்வப்போது தோன்றும் உணர்ச்சிகளுக்கேற்ப செயற்பட்டுக்கொண்டு செல்வதால் அதன் ஆரம்ப நோக்கங்களை அது இறுதிவரை முரணற்ற விதத்தில் பின்பற்றிச் செல்லும் என்பதை உத்தரவாதப்படுத்திக் கொள்ள முடியாது . அத்துடன் அது தனது செயற்பாடுகளுக்கான திசைவழிகளை குறித்துக் கொள்ளாததால் எந்தவொரு கட்டத்திலும் அந்த செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதோ , அவற்றின் முன்னேற்றம் , பின்னடைவுகளை இனங்காண்பதோ கூட சாத்தியப்படமாட்டாது . ஒரு காட்டாற்று வெள்ளத்தில் அடித்துச்செல்லப்படும் ஒருவர் , தான் கரையொதுங்கும் இடத்தில் எழுந்து நின்று , தான் எங்கு வந்து சேர்ந்துள்ளார் என்பதை பார்க்க முடிவதுபோல , தன்னியல்பான செயற்பாடுகளும் கூட நீண்டகால ஓட்டத்தின் பின்பு எங்காவது முட்டி மோதி நின்ற பின்புதான் , அதில் ஈடுபட்ட ஒருவர் தான் எங்கு வந்து சேர்ந்துள்ளார் என்பதைப் பார்க்க அனுமதிக்கப்படுமேயன்றி, அந்த போக்கின் இடையிலேயே ஒரு கட்டத்தில் தமது வேலைகளை மறுமதிப்பீடு செய்ய , தேவைப்பட்டால் அந்த போக்கிலிருந்து பிரக்ஞைபூர்வமாக முறித்துக்கொள்ள அனுமதிப்பதில்லை . தன்னியல்பு வேலைகள் முழுவதிலுமே பிரக்ஞைபூர்வமான வழிகாட்டுதல் என்பது இல்லாத போது, இந்த பிரக்ஞைபூர்வமான முறிவுமட்டும் புதிதாக உருவாகிவிட முடியாதுதானே .

இவை எல்லாவற்றையும் விட முக்கியமான குறைபாடுயாதெனில் பிரக்ஞைபூர்வமாக வழிகாட்டுதலின்றி தன்னியல்பாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள ஒரு கட்டத்தில் எதிரியின் சித்தாந்தத்திற்கு பலியாகிப் போவதாகும் . தொழிலாளர்களது தொழிற்சங்க நடவடிக்கைகள் மிகவும் பெரும்பாலான சந்தர்பங்களில் முதலாளித்துவ சித்தாந்தத்திற்கு பலியாகிப் போய் விடுகின்றது . முதலாளித்துவ சித்தாந்தமானது சோசலிசசித்தாந்தத்தை விட பழமையானது அதைனை விட முற்றாக வளர்ந்திருப்பதாகும் அதனை விட அதிகமாக பிரச்சார சாதனங்களைப் பெற்றிருப்பதாகும் . பொதுப்புத்தியிலும் , எமது அன்றாட நடைமுறை , மரபுகள் போன்ற அனைத்திலும் நன்கு வேரூன்றியிருப்பதாகும் எனவே எங்கெல்லாம் பிரக்ஞைபூர்வமாக சோசலிச சித்தாந்தத்தை நாம் முன்னெடுக்க தவறுகிறோமோ அங்கெல்லாம் முதலாளித்துவ சித்தாந்தத்திற்கு பலியாகிப்போகும் அபாயத்தை லெனின் சுட்டிக் காட்டினார். எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் லெனினுடைய மேற்படி விளக்கமானது இன்னும் விரிவுபடுத்தப்பட்டாக வேண்டியுள்ளது . இங்கு எதிரியின் சித்தாந்தம் என்பது முதலாளித்துவ சித்தாந்தத்தை மாத்திரமன்றி சிங்கள பேரினவாதம் , இந்திய விஸ்தரிப்புவாதம் , ஏகாதிபத்தியம் போன்றவற்றின் சித்தாந்தங்களையும் உள்ளடக்கியதாக பார்க்கப்பட வேண்டும் . இந்தியாவை இன்னும் நட்புசக்தியாக பார்க்கும் போதும் , பேரினவாதம் மறைந்து வருவதாக சாதிக்க முனையும் போதும் ; மேற்குநாட்டுத் தலையீடுகளைக் கோரும் போதும் , நாம் இந்தவகையான எதிரிகளின் சித்தாந்தங்களுக்கு பலியாகிப் போயுள்ளது அப்பட்டமாக தெரிந்து விடுகிறது . தன்னியல்பு என்பது பிரச்சினைகளை பொதுப்புத்தி மட்டத்திலேயே புரிந்து கொள்கிறது . பொதுப்புத்தியில் விமர்சனக் கூறுகளும் , பிற்போக்குக்கூறுகளும் , காணப்படுகின்றன . தன்னியல்பான நடவடிக்கைகளில் ஆரம்ப கட்டங்களில் இந்த விமர்சனக் கூறானது ஓங்கி நிற்கிறது . காலப்போக்கில் இந்த விமர்சனக் கூறுகளின் முனைமழுங்கிவிட பிற்போக்குக் கூறுகள் முதன்மை பெறத் தொடங்குகின்றன .

தன்னியல்பான நடவடிக்கைகள் காலப்போக்கில் எதிரியின் சித்தாந்தத்திற்கு பலியாகிப்போய் எதிரியைப் பலப்படுத்தும் வேலைகளையும் , செய்து முடிப்பதால் எதிரி தன்னியல்பான நடவடிக்கைகளைக் கண்டு பயப்படுவதில்லை என்பது மட்டுமன்றி சில சந்தர்ப்பங்களில் அதனை ஊக்குவிக்கவும் செய்கிறான் . தூய பொருளாதார போராட்டம் என்பது ஆளும் வர்க்கத்திற்கு கசப்பானதல்ல . மாறாக விரும்பத்தக்கதே என்பதை லெனின் சுட்டிக்காட்டுகிறார் . இன்று கூட ஓரளவு சகிப்புணர்வுத்தன்மை கூடிய ஆளும்வர்க்கங்கள் பிரக்ஞை பூர்வமாக அமைப்பு செயற்பாடுகளுடன் தொடர்பில்லா தன்னியல்பான நடவடிக்கைகளை , அவை எதிரியை நேரடியாக காரசாரமாக விமர்சித்தாலும் , கண்டித்தாலும் கூட அவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ற்றை பெரிது படுத்திக்கொள்வதில்லை அவர்களது செயற்பாடுகளை நசுக்கிவிடாமல் அவர்களை சுதந்திர மாக செயற்பட அனுமதிக்கின்றன . அவர்களை நசுக்க முற்பட்டால் அவை தலைமறைவாகி மோசமான பாதிப்புக்களை எதிரிக்கு ஏற்படுத்தும் என்பதும் தொடர்ந்து செயற்பட அனுமதித்தால் பல்வேறு வழிக ளாலும் அவற்றை தமது சித்தாந்த செல்வாக்கிற்குள் படிப்படியாக கொண்டுவர முடியும் என்பதையும் எதிரிகள் அறிந்திருக்கின்றனர். எனவே பரபரப்பான நடவடிக்கைகளைக் கண்டு ஒருவர் மயங்கிவிடாமல் பிரக்ஞை பூர்வமாக செயற்பாடுகளில் முக்கியத்துவத்தை ஒரு கணமேனும் மறக்காதிருக்க வேண்டும்.

*எதிரியின் சித்தாந்தம் புது முதலாளித்துவ சித்தாந்தத்தை மாத்திரமன்றி சிங்கள பேரினவாதம் , இந்திய விஸ்தரிப்புவாதம் , ஏகாதிபத்தியம் போன்றவற்றின் சித்தாந்தங்களையும் உள்ளடக்கியதாக பார்க்கப்பட வேண்டும் . இந்தியாவை ...ன்னும் ...ஏகாதிபத்தியா...க்கு போதும் , ...ரினவாதம் ...றந்து வருவதா... சாதிக்க மு... யும் போது ம் ; மேற்குநாட்டுத் தலையீடுகளைக் கோரும்போதும் நாம் இந்தவகையான எதிரிகளின் சித்தாந்தங்களுக்கு பலியாகிப் போயுள்ளது அப்பட்டமாக தெரிந்து விடுகிறது .*

புரட்சியில் பிரக்ஞை பூர்வமான செயற்பாடுகளில் முதன்மையான பாத்திரத்தை புரட்சியாளர்கள் புரிந்து கொண்டு தமது கடமைகளை ஆற்றவேண்டும் . இப்படியான தமது கடமைகளை சரிவர ஆற்றாமல் விட்டுவிட்டு மக்களின் தன்னியல்பான போக்குகளுக்கு பின்னால் செல்லவோ அல்லது திட்டமிட்ட தயாரிப்புகளை மேற்கொள்ளாது , எந்தப்போராட்டம் அப்போதைக்கு சாத்தியமானதோ அதுவே விரும்பத்தக்கது , அந்த குறிப்பான கணத்தில் நிகழ்ந்துவரும் போராட்டமே சாத்தியமான போராட்டமாகும் என்று கூறிக் கொண்டு தன்னியல்பு வேலைகளில் மூழ்கிவிடுவது என்பது கடிவாளமற்ற சந்தர்பவாத போக்காகும் . இது செயலற்ற முறையில் தன்னியல்பை வழிபடும் தன்னியல்பு வாதமாகும் . தன்னியல்பு வாதமானது எவ்வளவுதான் தீவிரமானதாக, எவ்வளவுதான் உணர்ச்சிபூர்வமாக இருந்தாலும் புரட்சியின் இலக்குகளை அடைவதை உத்தரவாதப் படுத்தமாட்டா . இதனால் தன்னியல்பு வாதத்துடன் முறித்துக் கொள்வது ஒவ்வொரு புரட்சியாளரதும் அவசியமான கடமையாகிறது . குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் புரட்சியாளர்கள் முன்னுள்ள முதன்மையான பணிகள்எவையோ , அவற்றில் தமது முதன்மையான அக்கறைகளைக் குவித்து செயலாற்றலின் ஈர்ப்புமையத்தை அந்த முதன்மையான பணிகளில் வைத்திருக்காமல் ஏனைய பணிகளில் ஈடுபடுத்துவதானது , இவை எவ்வளவு தீவிரமான செயற்பாடுகளாக இருப்பினும் கூட , அந்தகட்டத்தில் தன்னியல் வாதத்திற்கு பலியாகிப் போவதாகவே அர்த்தப் படும்.

இன்று நாம் ஒரு புரட்சிகர மாற்றத்தை கட்டும் நிலையில் உள்ளோம் என்பதும் , இப்போது கோட்பாட்டுப் பணிகளே முதன்மை பெறுகின்றன என்றும் பார்த்தோம் . இந்த காலகட்டத்தில் கோட்பாட்டுப்பணிகளில் முதன்மையான அக்கறைகளைக் குவிக்காமல் செயற்படும் பலவகைப்பட்ட பிரச்சார , கிளர்ச்சிப் பணிகளும் – பத்திரிகை , சஞ்சிகை , கலைக்குழு , அகதி வேலை , சமூகசேவை , மக்கள் அமைப்பைக்கட்டுவது , படை கட்டுவது உட்பட – தன்னியல்பு வாதத்திற்கு பலியாகும் நடவடிக்கைகளே என்று திட்டவட்டமாக வரயறுத்துக் கொள்ள வேண்டும் .

தன்னியல்பு பற்றிய இன்னோர் விடயத்தையும் கட்டாயம் நாம் குறிப்பிட்டாக வேண்டும் . தன்னியல்பான வேலைகளை ஒருவர் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்கையில் இந்த தன்னியல்பான வேலைகள் தமக்கேயுரிய வளர்ச்சி விதிகளின்படி செயற்பட்டு குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் அவை தாமே தம்மளவில் ஒரு தனியான இருப்பாக ( Seperate entity ) மாறி அந்த தனியான இருப்பை பேணுவதிலேயே சம்பந்தப்பட்டவர்களது நலன்கள் கைகூடும் நிலைமையை அதில் ஈடுபடுபவர்களுக்கு உருவாக்கி விடலாம் சமூகமாற்றத்தை அவாவி ஆரம்பத்தில் ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபட்ட சிலர் காலப்போக்கில் சமூகமாற்றம் என்பதை மறந்து ஒரு பெரிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படையை வைத்திருப்பதிலேயே , இதனால் யுத்தத் தொடர்ந்து பேணுவதிலேயே தமது நலன்களைக் காணும் யுத்தபிரபுகளாக ஆகிவிடலாம் . ஒரு தொழிற்ச ங்கதலைவர், அந்த சங்கமானது புரட்சிகரத்தாபனத துடன் இணைந்து சமூகமாற்றத்தில் கலந்து கொள் ளாது நடப்புநிலையை காப்பவராக மாறவும் கூடும் . கட்சியைக்கட்டும் நோக்கத்துடன் தொடங்கப் பட்ட தாக கூறும் ஒரு பத்திரிகை காலப்போக்கில் தனது ஆரம்ப நோக்கங்களை மறந்து ஒரு பத்திரிகையாக இருப்பதையே தனது நோக்காக கருதத்தொடங்கவும் கூடும் . இங்கு வழிமுறைகள் என்பவையே இலக்குகளாக

புரட்சிகர மாற்றொன்றைக் கட்டுவது என்பது தன்னியல் வாதத்துடனும், பொதுப்புத்தியு டனும் உடனடியாக கணக்குத் தீர்த்துக் கொள்வதை முன்னிபந்தனையாகக் கோருகிறது .

மாறி , அந்த இருப்பைப் பேணுவதிலேயே சம்பந்தப்பட்ட வர்களது நலன்கள் கைகூடும் நிலையை உரு வாக்கிவிடுகிறது . இதற்குமேல் இதுவோர் பிழைப்புவாதமாகி விடுகிறது . இங்கு பிழைப்பு என்பது வயிற்றுப்பிழைப்பை மாத்திரம் குறிக்க வேண்டும் என்பதில்லை . சம்பந்தப்பட்டவர்களது புகழ், அந்தஸ்து , அதிகாரம் போன்றவற்றை பேணும் நோக்க மும் கூட ஒரு வித பிழைப்பு வாதமேயாகும் இப்ப டிப்பட்ட நிலையை உருவாக்கிவிட்டால் அதற்குமேல் இந்த நடவடிக்கைகளை வெறுமனே தன்னியல்பு வாதம் என்று குறிப்பிடுவது சம்பந்தப்பட்டவர்களது குற்றச்செயல்களை குறைத்து மதிப்பிடுவதாக அர்த்த ப்பட்டுவிடும் . எனினும் ஒரு புரட்சிகர இலக்கை நோக்கிய பயணத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தன்னி யல்பு கட்டத்தைத் தாண்டி வளரவில்லை என்பதை இது மறுப்பதாகவும் ஆகாது .

புரட்சிகர மாற்றொன்றைக் கட்டுவது என்பது தன்னியல் வாதத்துடனும் , பொதுப்புத்தியுடனும் உடனடியாக கணக்குத் தீர்த்துக் கொள்வதை முன்னிபந்தனை யாகக் கோருகிறது . எமது அன்றாட நடவடிக்கை களில் வெளிப்படும் இந்த போக்குகளுடன் முறித்துக் கொள்வதாயின் முதலில் எமது ஸ்தூலமான சூழலில் தன்னியல்பு வாதமும் , பொதுப்புத்தியும் எந்தெந்த விதங்களில் வெளிப்படுகின்றனஎனவும் , அவை எப்படிப்பட்ட பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன எனவும் விரிவான , தெளிவான ஒருப டத்தை நாம் பெற்றுக் கொள்வது முக்கியமானது . எனவே எமது கடந்த கால போராட்ட அனுபவங்களிலும் , தற்போதைய முயற்சிகளிலும் இவை ஏற்படுத்தும் விளைவுக ளைபபற்றி சற்று விரிவாக பரிசீலிப்போம் .

## அரசியல் தளத்தில் தன்னியல்பு வாதமும் போராட்டத்தில் அதன் தாக்கங்களும் .

இந்தப் பகுதியில் பொதுவில் போராட்டத்திலும் பல் வேறு குழுக்களது செயற்பாடுகளிலும் தன்னியல்பு ஏற்படு த்தும் தாக்கங்களை எடுத்து விரிவாகப் பரி சீலிப்போம்.

### 1. பொதுவில் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தன்னியல்பு வெளிப்படுதல்.

இலங்கையில் சிங்களப் பேரினவாதத் தின் இன ஒடுக்கல் நடவடிக்கைகள் சுதந்திரத் திற்கு மிகவும் முன்பே ஆரம்பித்து விட்டாலும் கூட சுதந்திரத்தின் பின்பு இது மிகவும் நேரடியான தாகவும் , தமிழ்மக்கள் சகித்துக்கொள்ள முடியாத தாகவும் ஆகிவிடவே , தமிழ் மக்களது தேசிய எழுச்சியானது சுதந்திரத்திற்கு பின்பு தொடங்கு கிறது . அந்த வகையில் நடைபெற்ற நிகழ்வு களை பின்வருமாறு சுருங்கக் கூறலாம் . 1948ல் சுதந்திரம் ; சுதந்திரத்தை அடுத்து மலையகமக் களது வாக்குரிமை பறிப்பு . 1949ல் தமிழரசுக் கட்சி என்ற தேசியவாதக்கட்சியின் உதயம் . 1956ல் தனி சிங்கள சட்டமும் அதற்கு எதிரான போராட்டமும், 1960ல் தமிழ் தேசம் தழுவிய சத்தி யாக்கிரக இயக்கம் இது அப்போதிருந்த கூட்டர சாங்கத்தினால் படைப்பலம் மூலம் நசுக்கப்பட்டது . 1965ல் வந்த U.N.P. அரசாங்கத்தோடு தமிழரசுக் கட்சி நெருக்கமாகி , தனது போராட்டங்களை கைவிடுதல், இதனால் அதன் அணிகளுள் அதிருப் தியும் , கிளர்ச்சியும் தோன்றுகிறது , 60களின் பிற்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குதியில் சுயாட்சிக் கழக நவரெத்தினத்தின் தமிழீ ழகோரிக்கை , 1968இல் ஈழத்தமிழர் விடுதலை இயக்கத்தின் தோற்றம் , ஆனால் இது அதிகம் வெற்றியளிக்கவில்லை , 70களின் தொடக்கத்தில் வங்காளதேசம் உருவாவது , 1971 கிளர்ச்சி போன் றவை தமிழ் இளைஞர்களிடையே எழுச்சியை உருவாக்குகின்றது , 70இல் ஆட்சிக்கு வந்த ஐக்கியமுன்னணி அரசாங்கம் அடுத்தடுத்து முன் னெடுத்த தரப்படுத்தல் , 72 அரசியல் அமைப்பு என்பன தமிழ் மாணவர்கள் , இளைஞர்களது கிளர்ச்சியை தீவிரப்படுத்துகிறது . தரப்படுத்தலுக்கு எதிரான போராட்டங்களில் மாணவர்கள் அணி திரளல் , இதனை ஒழுங்கமைப்பதில் ஈழத்தமிழர் விடுதலைஇயக்க முன்னோடிகள் பங்கெடுப்பது ; 1970இல் மாணவர் பேரவையாக உருவாவது ; மாணவர் பேரவை படிப்படியாக வன்முறையை நோக்கி நகர்வது ; திரளும் இளைஞர் சக்திகளை உள்வாங்கும் நோக்குடன் தமிழர் கூட்டணி 1973ல் இளைஞர் பேரவையை அமைப்பது , 74இல் தமிழாராச்சி மாநாடு குழப்பப்பட்டதும் , அதன் அவலங்களும் , ஆயுத நடவடிக்கைகளை நோக்கி இளைஞர்களை தள்ளுகிறது .

1975இல் தமிழீழ கோசத்தை தமிழீழ விடுதலை இயக்கம் " எரிமலை" பத்திரிகை மூலம் ஜனரஞ்சக ப்படுத்துகிறது . 1972இல' உருவான தமிழர் கூட் டணி , 1976இல் தமிழர் விடுதலைக் கூட்டணி யாக மாறுவது , தமிழீழ கோரிக்கையை தனது நிலைப்பாடாக அறிவிப்பது , 1977 தேர்தலை தமி ழீழ கோரிக்கைக்கான சர்வஜன வாக்கெடுப்பாக கருது வதாக கூட்டணி அறிவிப்பதும் , தமிழ்மக்கள் அதற்கு மிகப் பெரும்பான்மை ஆதரவளிப்பதும் , 1977ற்குப் பின்பு கூட்டணி தமிழீழ கோரிக்கையை முன்னெடுக்க முனையாமையும், அதன் இளைஞர் அமைப்புக்களில் அதிருப்தி , எதிர்ப்புணர்வுடன் தீவிரப்படுகிறது. இளைஞர்களது ஆயுத நடவடிக் கைகள் இன்னும் தீவிரப்படுகின்றது , 1978இல் அரசின் ஒடுக்குமுறை அதிகரிக்கிறது . சில பொலிஸ் அதிகாரிகளின் கொலை , இந்திய பின்தளம் ஆகி யவற்றின் மூலம் இந்த நெருக்கடி கட க்கப்படுகிறது. 1980இல் புலிகள் , ஈரோஸ் இயக்கங்களுள் நெருக்கடி களும் உடைவுகளும் ; 1981 தொடக்கம் 1983 வரை பல அமைப்புகள் படிப்படியாக செயற்படத் தொடங்குவது ; 1983 யூலை தாக்குதலும் அதனுடன் கலவரங்களும் ; இந்தியத் தலையீடும் போராட்ட த்தை வீங்கச்செய்வதும் ; 1984இன் பிற்பகுதியில் அநேகமாக எல்லா அமைப்புகளிலும் நெருக்கடிகள் ; 1985இல் பல அமைப்புக்களுக்குள்ளும் உடைவுகள் ; 1986ல் புலிகளின் ஏனைய இயக்கங்கள் மீதான தடை நடவடிக்கைகள் ; 1987ல் இலங்கைப் படை முன்னேறுவதும் , இந்தியாவின் நேரடித் தலையீடும் ; இந்தியப்படை – புலிமோதல் ; புலி – அரசு கூட்டு ; 1990ல் புலி – அரசுமோதல்...... .... இப்படியே இன்றைய காலகட்டத்திற்குள் நாம் வருகிறோம் .

இந்த நடப்புக்களை பின்வருமாறு புரிந்து கொள்ள லாம் . தேசிய ஒடுக்குமுறைகள் தீவிரமடைய தேசியவாதக் கட்சி உருவாகிறது . அந்த தேசிய வாதக் கட்சியானது வெகுஜனக் கிளர்ச்சிகளை தலைமை தாங்கி நடத்துகிறது . ஒருகட்டத் தில் அந்த தேசியவாதக்கட்சிக்கு வெளியிலும் தன்னியல்பான எழுச்சிகள் தோன்றுகின்றன . புதிய கோரிக்கைகளை முன் வைக்கின்றன . இந்த தன் னியல்பான எழுச் சிகளையும் , கோரி க்கைகளையும் உள் ளடக்கும் விதத்தில் தேசியக்கட்சியானது தன்னை தகவமைத் துக் கொண்டு ஒரு குறிப்பிட்ட கட்டம் வரையில் தலைமைச் சக்தியாக திகழ முடிகி றது . ஒரு கட்டத் திற்கு மேல் தேசி யவாதக் கட்சியானது தனது கோரிக்கை களை அதன் ஜன நாயக அரசியலுக்குட்பட்ட விதத்திலாவது முரண ற்று முன்னெடுக்கத் தயாராக இல்லாதநிலையில் தேசிய

> *தேசிய ஒடுக்குமுறைகள் தீவிரமடைய தேசியவாதக் கட்சி உருவாகிறது . அந்த தேசியவாதக் கட்சியானது வெகுஜனக் கிளர்ச்சிகளை தலைமை தாங்கி நடத்து கிறது . ஒருகட்டத்தில் அந்த தேசியவாதக்கட்சி க்கு வெளியிலும்தன்னிய ல்பான எழுச்சிகள் தோன்று கின்றன . புதிய கோரிக்கை களை முன்வைக்கின்றன*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாதக்கட்சிகளுக்குள்ளாகவே பிளவுகள் தோன்றுகின்றன . ஆயுத நடவடிக்கைகள் தீவிரமடைகின்றன . ஆயுத இயக்கமானது ஒரு கட்டத்திற்கு வளரும்போது நெருக்கடிக்குள்ளாகி உடைகிறது . உடைவைத் தொடர்ந்து பல குழுக்கள் தொடர்ந்தும் வளர்கின்றன . இவற்றின் நடவடிக்கைகள் தன்னியல்பானவையாகவே உள்ளன . இவற்றின் தன்னியல்பு நடவடிக்கைகள் புறநெருக்கடிகளை இன்னும் தீவிரப்படுத்தி இன்னும் பலர் தன்னியல்பான நடவடிக்கைகளில் இறங்குமாறு செய்கின்றன . 1983 இற்கு பின்பு தன்னியல்பானது மிகவும் தீவரமடைகிறது . இதுவும் கூட அதற்கு முந்திய தன்னியல்பான நடவடிக்கைகளின் விளைவேயாகும். இந்த தன்னியல்பானது சிறிது காலத்தில் மீண்டும் நெருக்கடிக்கு உள்ளாகி ஒட்டுமொத்தமாக இன்றைய நெருக்கடி நிலைக்கு காரணமாகி விடுகிறது.

இன்றைய நெருக்கடி நிலைக்கான காரணங்களை பலரும் புலிகளின் ' பாசிச ' போக்கிலும் , இந்திய தலையீட்டில் மட்டுமே காண முனைகின்றனர் . எமது போராட்டத்தில் இன்றைய நெருக்கடிகள் ஸ்தூலமான இந்த வடிவத்தில்தான் வந்தன என்றாலும் புலிகளின் ' பாசிசம் ' இந்தியத் தலையீடும் இல்லாவிட்டாலும் கூட நாம் இப்படிப்பட்ட ஒரு நெருக்கடி நிலைக்கு தள்ளப்பட்டிருக்கவே செய்வோம் . புலிகளின் பாத்திரத்தை எமது போராட்டத்திலிருந்த வேறு எந்தவொரு இயக்கமும் கூட எடுத்திருக்க முடியும் அந்தளவிற்கு ஏனைய அமைப்புக்களும் கூட ' அராஜக ' அமைப்புக்களாகவே இருந்தன . அத்தோடு புலிகள் அழிப்பதற்கு முன்பே ஏனைய அமைப்புக்கள் அகமுரண்பாடுகள் , மோதல்கள் , பிளவுகள் என்பவற்றால் மிகவும் பலவீனப்பட்டேயிருந்தன இதனால்தான் புலிகள் இந்த இயக்கங்களை இலகுவில் தடைசெய்ய முடிந்தது . ரெலோ இயக்கத்தைத் தவிர வேறு எந்தவொரு இயக்கத்தையும் புலிகள் ஆயுதமோதல் மூலம் தோற்கடிக்க வேண்டியே இருக்கவில்லை புறக்காரணிகள் கூட அகக்காரணிகள் மூலமே செயற்படும் என்பதை இங்கு நினைவு கூர்வோம்.

இந்தியத் தலையீடு என்பது ஸ்தூலமாக எமது போராட்டத்தை நெருக்கடிக்கு உள்ளாக்கியது என்பது உண்மைதான் ஆனால் எமது போராட்டம் இந்தளவிற்கு வளர, வீங்கச் செய்வதிலும் இந்தியாவிற்கு பங்குண்டு . 1978ல் அரசின் ஒடுக்குமுறையைத் தாக்குப்பிடிப்பதிலும் 1983ற்கு பின்பு இயக்கங்களை பயிற்றுவித்து , ஆயுதம் வழங்கியதும் , ஓரளவு பாதுகாத்ததும் இந்தியாவே . எமது போராட்டத்தில் இந்தியா முற்றாகவே சம்பந்தப்பட்டிரா விட்டால் இலங்கைப் படைகளே ஆரம்பத்தில் இயக்கங்களை மோசமாக நசுக்க முனைந்திருக்கும் . அந்த நிலைமையிலும் கூட இப்படிப்பட்டதொரு நெருக்கடி உருவாகியிருக்கவே செய்யும்.

> இந்தியத் தலையீடு என்பது ஸ்தூலமாக எமது போராட்டத்தை நெருக்கடிக்கு உள்ளாக்கியது என்பது உண்மைதான் ஆனால் எமது போராட்டம் இந்தளவிற்கு வளர, வீங்கச் செய்வதிலும் இந்தியாவிற்கு பங்குண்டு .

எனவே இன்றைய நெருக்கடிகளுக்கான காரணிகளை தனிநபர்களின் செயற்பாடுகளிலும் , சந்தர்ப்ப சூழ்நிலையிலும் போட்டுவிட்டால் எந்தவொரு போராட்டத்திலும் அலையும் , தணிவும் அடுத்தடுத்து வருபவை என்பதும் தன்னியல்பான போராட்டங்கள் நெருக்கடிகளுக்குள்ளாவதையும் கண்டு கொள்ள வேண்டும்.

ஒரு போராட்டத்தின் ஆரம்பத்தில் தன்னியல்பான நடவடிக்கைகள் ஓங்கி நிற்பதும் , பின்பு அவை நெருக்கடிக்குள்ளாவதும் எமது போராட்டத்தில் மட்டுமே நடந்த ஒரு விடயமல்ல . உலகளாவியரீதியில் பல போராட்டங்கள் இதேவிதமான அனுபவங்களுக்கு உள்ளாக நேர்ந்துள்ளன . அல்ஜீரிய விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்ட மார்க்சியவாதியும் உளவியலாளருமான Frantz Fannon என்பவர் 1963ல் எழுதிய " The wretched of the earth" என்னும் நூலில் தன்னியல்புவாதத்தைப் பற்றிக்குறிப்பிடும் சில பகுதிகளை சுருக்கமாக தருகிறோம் . இதில் சிலபகுதிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*ஒரு போராட்டத்தின் ஆரம்பத்தில் தன்னியல்பான நடவடிக்கைகள் ஓங்கி நிற்பதும் , பின்பு அவை நெருக்கடிக்குள்ளாவதும் எமது போராட்டத்தில் மட்டுமே நடந்த ஒரு விடயமல்ல .*

எமது போராட்டம் பற்றிய நேரடியான விமர்சனங்கள் போலவே அமைந்ததைக் காணமுடியும் .

" . . . . . . மரபான ' அரசியல் ' கிளர்ச்சி உரைகளின் பாலான நியாயமான வெறுப்புணர்வானது தன்னியல்பை வழிபடுவதற்கு ஆரம்பத்தில் இட்டுச் செல்கிறது. . . . . . ஆரம்பத்தில் தன்னியல்பு என்பது ஆட்சி செலுத்துகிறது . உள்ளூர் அளவிலேயே முன்முயற்சிகள் நடைபெறுகின்றன . உள்ளூர் வெற்றியே இலக்காக உள்ளது . உடனடி வெற்றியே மூல உபாயமாக உள்ளது. . . . . தன்னியல்பு நடவடிக்கையானது முழுத்தேசத்தின் சுதியுமே உடனடியாக , இங்கு , இப்போதே இருப்பது போலக் கருதிச் செயற்படுகின்றது . . . . . பிரச்சினை தெளிவானது ; வெளிநாட்டவர் வெளியேற வேண்டும் . இதற்காக பொதுவான முன்னணியை அமைப்போம் . ஆயுத போராட்டத்தால் கரங்களை பலப்படுத்துவோம் . . . . . தன்னியல்பானது ஒரேயொரு சுலோகத்தையே கொண்டுள்ளது . எப்படியெல்லாம் தேசம் இருக்கிறதோ அப்படியெல்லாம் செயற்படு . திட்டம் கிடையாது பேச்சுக்கள் , தீர்மானங்கள் கிடையாது . அரசியல் போக்குகள் என்று எதுவும்கிடையாது . . . . . மூல உபாயமும் , தந்திரோபாயமும் போட்டுக் குழப்பப்படுகிறது அரசியற்கலை என்பது யுத்தக்கலையாக குறுக்கப்படுகிறது . ஆயுத போராளிகளே அரசியல் போராளிகள் என்றாகி விடுகிறது . யுத்தத்தில் ஈடுபடுவதே அரசியலில் ஈடுபடுவதென்றாகிறது . இரண்டு அம்சங்களும் ஒன்றாகி ஒரே அம்சமாகி விடுகிறது . "

" . . . . . கொலனித்துவ அமைப்பு முறையை உடனியாகவே முடிவுக்கு கொண்டு வரவிரும்பும் கட்டுக்கடங்காத தன்னியல்பானது சுய மறுப்பிற்குள்ளாகுமாறு விதிக்கப்படுகிறது . அன்றாட நடைமுறை யதார்த்தமானது நேற்றைய கொந்தளிப்பான உரைகளை இடம்பெயர்த்து நிலைபேறு என்ற மயக்கத்தை முன்வைக்கிறது. இயந்திரத் துப்பாக்கிகளால் மலையாக குவிக்கப்படும் உடல்கள் கடினமான உண்மைகளாக எழுகின்றன இவை நிகழ்வுகளை முற்றாக மறுவியாக்கினம் செய்யக் கோருகின்றன . தப்பிப்பிழைப்பது என்ற எளிய இயல்பூக்கமானது குறைந்தளவு இறுகிய , அசையும் மனோபாவத்தைக் கொண்டு வருகிறது. . . . . . ஒரு போராட்டத்தில் குதிப்பதற்கு இனஉணர்வு மட்டுமே போதுமானது . ஆனால் ஒரு யுத்தத்தை தொடர்ந்து முன்னெடுத்துச்செல்ல , எதிரியின் பரவலானதும் , கொடூரமானதுமான ஒடுக்குமுறை நடவடிக்கைகளைத் தாங்கிக்கொள்ள இது போதுமானதல்ல. . . . . தனது இனஉணர்வு வெற்றிபெறுவதற்காக ஒருவர் தனது முழு குடும்பமும் ஒழிக்கப்படுவதை பார்த்துக்கொண்டு இருக்கமாட்டார். . . . அதாவது, இனஉணர்வு , எதிரியின் மீதான கசப்புணர்வு, வெறும் பழிவாங்குவதற்கான நியாயமான விருப்பம் போன்றவை ஒரு விடுதலைப்போராட்டத்தை நடத்தி முடிப்பதற்குப் போதுமானதல்ல. . . .வெறும் வெறுப்புணர்வை அடிப்படையாகக் கொண்டு திட்டத்தை வரைந்துவிட முடியாது என்பதை தலைவர்கள் நாளாகநாளாக உணர்ந்து கொள்வார்கள். . . . . மக்களுக்கும் எதிரிக்கும் இடையில் பிளவுகளை ஏற்படுத்தி மக்களை போராட்டத்தை நோக்கிதள்ளும் எதிரியின் நடவடிக்கைகளில் மாத்திரம்தங்கியிருப்பதானது – எதிரி இதுபோன்ற குற்றங்களை அடிக்கடி செய்வான் என்பது உண்மைதான் என்றபோதிலும் கூட ஒருவர் தனது சொந்தத் தோல்வியை தானே வரவழைத்துக் கொள்வதாகிறது . "

" . . . . மக்களின் எழுச்சியின் தீவிரத்தைக் காணும் எதிரி தனது தந்திரோபாயங்களை மாற்றிக்கொள்கிறான். ...... மக்களின் மனங்களை வெல்வதற்கான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திட்டங்களை எதிரி முனைப்புடன் முன்னெடுக்கிறான. . . . . சில சலுகைகளை வழங்குகிறான் . நல்லெண்ணச் சமிக்கைகளை காட்டுகிறான் . இது மக்களையும் , போராளிகளின் ஒரு பிரிவினரையும் மயக்குகிறது , குழப்புகிறது. . . . . மோசமான வெறித்தனத்தை தவிர வேறு எதனையும் எதிரியிடம் கண்டு பழக்கப்பட்டிராத மக்கள் எதிரியின் சிறிய சமிக்கைகளைக் கூட அவனில் ஏற்பட்ட பெரிய முன்னேற்றமாகக் கருதத் தலைப்படுகின்றனர் . அவ்வாறு நம்புமாறு அவர்களது கையறுநிலை அவர்களை நிர்ப்பந்திக்கிறது. . . . . எந்தக்கணத்திலும் எதிரியின் சலுகைகள் கண்களை மறைக்க அனுமதிக்கக் கூடாது என்று போராளிகளுக்கு அறிவுறுத்த வேண்டும். அவை வெறும் அற்பத் துணுக்குகளே . இவை அடிப்படைக் பிரச்சினையுடன் எந்தத் தொடர்பும் அற்றவை வரலாறு முழுவதும் போராடும் மக்களின் முன்பு எதிரிகள் இப்படிப்பட்ட அற்ப எலும்புத் துண்டுகளை விட்டெறிவதும் , இவை பற்றிய சரியான விளக்கமின்மையால் அவற்றை ஏற்று தமது அலக்குகளை மறந்து ஏய்க்கப்பட்டதுமான உதாரணங்களை நிறையவே காணலாம் . இன்னும் இறுக்கமான ஒரு ஆட்சியமைப்பை ஏற்படுத்துவதை மூடி மறைப்பதற்காகவே இந்த சலுகைகள் அறிவிக்கப்படுகின்றன . என்பது ஒருவரலாற்று விதியாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டும் .'

'. . . . . தேசிய விடுதலைப் போராட்டம் என்பது ஒரே எட்டில் தாவிக் குதித்து விடுவதல்ல . ஒவ்வொருநாளும் இந்த நாடகத்தில் அதன் அத்தனை கஸ்டங்களுடன் நாம் பங்கு கொள்ள வேண்டும் . இந்த கஸ்டங்கள் கொலனித்துவ காலம் முழுவதும் நாம் சந்தித்த கஸ்டங்களை விடவும் மிகவும் கடுமையானவை. . . . மக்கள் மத்தியிலுள்ள எதிரிக்கி எதிரான வெறுப்புணர்வுகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு மூன்று நாட்களுக்கு அல்லது மூன்று மாதங்களுக்கு நின்றுபிடிக்கலாம் . ஆனால் ஒரு தேசிய யுத்தத்தை அவ்வாறு நீங்கள் வெல்லமுடியாது பயங்கரமான எதிரியின் அடக்குமுறை இயந்திரத்தை தூக்கி எறிந்து விட முடியாது . அணிகளது உணர்வுத்தரத்தை உயர்த்த மறந்துவிட்டால் , நீங்கள் மக்களை மாற்றிவிடமாட்டீர்கள் . முரட்டுத்தனமான துணிச்சலோ , அருமையான சுலோகமோ கூட போதுமானதல்ல. . . . . . போராட்டத்தின் வெற்றியானது தெளிவான இலக்குகளை ; திட்டவட்டமான முறையியலை , எல்லாவற்றிற்கும் மேலாக , முறையான ஒழுங்கமைக்கப்படாத முயற்சிகள் தற்காலிக ஊக்கத்தை , தற்காலிக செயலாற்றலையே கொண்டிருக்கும் என்பதை பரந்துபட்ட மக்கள் உணர்ந்து கொள்வதை , முன்னனுமானிப்பதை தலைவர்கள் கண்டு கொள்கிறார்கள். . . . . இப்போது மக்களின் பல்வேறு குழுக்களும் அறிவொளியூட்டப்படுவதன் அவசியத்தை தலைவர்கள் உணர்கிறார்கள்.

> இன்னும் இறுக்கமான ஒரு ஆட்சியமைப்பை ஏற்படுத்துவதை மூடி மறைப்பதற்காகவே இந்த சலுகைகள் அறிவிக்கப்படுகின்றன . என்பது ஒரு வரலாற்று விதியாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டும் .

ஆயுதம் ஏந்திய தேசத்தின் வெளிப்பாடாக இருக்கும் சிதறுண்ட தேசம் எனும் நிலைமை திருத்தப்பட்டாக வேண்டும் . இது கடந்த காலத்திற்குரியதாக ஆக்கப்பட வேண்டும் . நகரத்தின் பயனற்ற அரசியல் நடவடிக்கைகளைத் துறந்தோடிய தலைவர்கள் இப்போது அரசியலின் தேவையை மீண்டும் உணரத் தலைப்படுகின்றனர் . மக்களை தூங்கச் செய்யும் , மக்களை நம்ப வைத்து ஏய்க்கும் கருவியாக அன்றி , அதற்கு மாறாக , மக்களின் போராட்டத்தை தீவிரப்படுத்தும் முறையாக ; தமது நாட்டை ஆட்சி செய்வதற்கானவிளக்கங்களும் , தெளிவும் உடையவர்களாக அவர்களை தயார்ப்படுத்தும் சாதனமாக. . . . . பெரிய அளவிலான விவசாய கிளர்ச்சிகளைக் கூட கட்டுப்படுத்தவும் . குறிக்கப்பட்ட சில வழிகளில் வழிநடத்தப்பட வேண்டிய அவசியத்தை தலைவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர் . விவசாய கிளர்ச்சி என்ற அளவில் இருக்கும் இயக்கங்களை முன்னெடுக்காது அவற்றை புரட்சிகர யுத்தங்களாக மாற்றமுனைகின்றனர் .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

" . . . . யுத்தம் என்பது ஒரேயொரு மோதல் அல்ல . மாறாக தொடர்ச்சியான பல உள்ளூர் மோதல்களை உள்ளடக்குகிறது . உண்மையைச் சொல்வதானால் இவற்றுள் எதுவுமே தீர்க்கமானவையல்ல. . . . . எனவே எமது ஆற்றல் முழுவதையும் ஒரேயடியாக செலவளித்துவிடாமல் சிக்கனமாக இருக்கவேண்டும் . கொலனித்துவத்திடம் உள்ளூர் மக்களைவிட அதிகளவிலான , விரிவான மூலவளங்கள் உள்ளன . நீடித்த யுத்தத்தை எதிரியால் தாக்குப்பிடிக்க முடியும் . இறுதியான முடிவு என்பது இன்றோ , நாளையோ ஏற்பட்டுவிடாது . பிரச்சினைக்கான முடிவு என்பது ஒரு அர்த்தத்தில் யுத்தம் தொடங்கிய அன்றே ஆரம்பித்து விட்டாலும் கூட யுத்தமானது அனைத்து எதிரிகளையும் கொல்வதால் , வேறு எதிரிகளே இல்லாததால் முடிவுக்கு வருவதல்ல . பல்வேறு காரணங்களால் எதிரி கொலனித்துவ மக்களது இறைமையை அங்கீகாப்பதிலேயே தனது நலன்கள் தங்கியுள்ளது என்று உணரத்தலைப்படுகிறான் ......... இதனால் ஆரம்ப நாட்களில் நடந்ததுபோல , போராட்டத்தின் இலக்குகளை கண்டபடியெல்லாம் வரையறுக்கக் கூடாது...... இதில் போதிய கவனம் எடுக்கப்படாவிட்டால் , எதிரி சில சலுகைகளை அறிவிக்கத் தொடங்கும் போது , மக்கள் எந்தக்கணத்திலும் யுத்தத்தை தொடர்வதன் அவசியம் பற்றி கேள்வி எழுப்பத் தொடங்கலாம் . "

". . . . மக்களை முதிர்ச்சி அடையச் செய்வது என்பது அமைப்பின் முழுமையான தன்மையிலும் , தலைவர்களது உயர்ந்தபட்ச புரிதல் தன்மையிலும் தங்கியுள்ளது . போராட்டம் தொடர்ந்து செல்லும்போது , எதிரி தனது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும் போது , வெற்றிகள் அடைகையிலும் தோல்விகளை சந்திக்க நேரும் போதும் இந்த அறிவாற்றலானது கூடுகிறது. . . நிலைமைகளை மதிப்பிடுவது , உணர்வுத் தரத்தை உயர்த்துவது, சமூக வரலாறு பற்றிய அறிவை வளர்ப்பது , போன்ற அனைத்துப் பணிகளும் அமைப்பின் வலைப்பின்னலினுள் , மக்களது அமைப்புகளினுள் மாத்திரமே சாத்தியமாகும். . . . . உள்ளூரில் ஏற்படும் ஒவ்வொரு பின்னடைவையும் அனைத்து கிராமங்களை , அமைப்பின் அனைத்து வலைப்பின்னல்கள் பற்றியதுமான பிரச்சினைகளுடன் தொடர்புபடுத்தி மீளாய்வுக் குட்படுத்தப்பட வேண்டும் ஒரு குறிப்பான பிரச்சினையை மக்களது விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக பயன்படுத்திக் கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கிளர்ச்சியாளர்கள் தமது அறிவுபூர்வமான அடிப்படையை நிரூபித்து தமது முதிர்ச்சியைக் காட்டிச் செல்கிறார்கள். . . யுத்தத்தின் உண்மையான இலக்குகள் மக்களுக்கு காட்டப்படும் போது அவை அடையப்பட முடியாதவை என்ற எண்ணம் அவர்களிடம் எழக்கூடாது . அவை அவர்களுக்கு விளக்கப்பட வேண்டும் . மக்கள் எங்கு போகிறார்கள் என்பதைக் காண வேண்டும் . தாம் எவ்வாறு அங்கு சென்றடைய போகிறார்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் . "

> *போராட்டத்தின் வெற்றியானது தெளிவான இலக்குகளை திட்டவட்டமான முறையியலை , எல்லாவற்றிற்கும் மேலாக முறையான ஒழுங்கமைக்கப்படாத முயற்சிகள் தற்காலிக ஊக்கத்தை , தற்காலிக செயலாற்றலையே கொண்டிருக்கும் என்பதை பரந்துபட்ட மக்கள் உணர்ந்து கொள்வதை , முன்னுமானிப்பதை தலைவர்கள் கண்டு கொள்கிறார்கள்.*

பொதுவாக எமது கட்டுரைகளில் இன்னொருவரது கருத்தை இவ்வளவு தூரம் மேற்கோள் காட்டுவது பற்றிகேள்வி எழலாம் . எமது போராட்டத்தின் ஒவ்வொரு அம்சங்கள் பற்றியும் இவ்வளவு துல்லியமான விமர்சனத்தை இன்னொருவரால் செய்ய முடியுமா? என்பது சந்தேகமே . இதற்கு மேல் எமது போராட்டம் தொடர்பாக நாம் முன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போராட்டத்தின் இலக்குகளை கண்டபடியெல்லாம் வரையறுக்கக் கூடாது— இதில் போதிய கவனம் எடுக்கப்படாவிட்டால், எதிரி சில சலுகைகளை அறிவிக்கத் தொடங்கும் போது, மக்கள் எந்தக்கணத்திலும் யுத்தத்தை தொடர்வதன் அவசியம்பற்றி கேள்வி எழுப்பத் தொடங்கலாம்.

வைக்கும் எந்தவொரு விமர்சனமும் மிகையானவையே என்பதால் இத்துடன் இந்தப் பகுதியை முடித்துக்கொண்டு வேறோர் உதாரணத்தை எடுத்துக்கொள்வோம்.

### 2. ஒரு புரட்சிகர குழுவின் செயற்பாடுகளில் தன்னியல்பின் பாதிப்புகள்

ஒருவிடுதலை இயக்கத்தில் செயற்பட்டு வந்த சிலர் அமைப்பினுள் தோன்றிய மோசமான ஜனநாயகவிரோத செயற்பாடுகள் காரணமாக அதிருப்தியுற்று அந்த இயக்கத்திலிருந்து வெளியேறி ஒரு புதியபுரட்சிகர அமைப்பை கட்ட முனைகிறார்கள். கடந்த காலத்தில் தாம் செயற்பட்ட அமைப்பில்திட்டவட்டமான கொள்கைகள் இல்லாதிருந்ததை காணும் இவர்கள் புதிய அமைப்பானது கொள்கைகளை வகுத்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார்கள். ஆனால் அது அரசியல் திட்டமாக இருக்கவேண்டும் என்ற புரிதல் அவர்களிடத்தில் இருக்கவில்லை. இயக்கங்கள் மக்களுடன் விரிவான தொடர்புகளை ஏற்படுத்தாமல் வெறும் இளைஞர் குழுக்களாகமாறிவிட்டதே அந்த இயக்கங்களின் முதிர்ச்சியற்ற தன்மைக்கு காரணம் எனக் காணும் இவர்கள் மக்கள் மத்தியில் சென்று விரிவாக பணியாற்றுகிறார்கள். வெறுமனே ஒரு இராணுவ குழுவாகசெயற்பட்டதால் இயக்கங்கள் இழைத்த தவறுகளைக் காணும் இவர்கள் அரசியலையும், இராணுவ வேலைகளையும் சமமாக முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார்கள்.

ஒரு அரசியல் பத்திரிகை வெளியிட்டு அதனை வீடுவீடாக கொண்டுசென்று விநியோகிக்கிறார்கள். இவ்வாறே துண்டுப்பிரசுரங்கள், ஏனைய சிறு பிரசுரங்கள் என்று விரிவான பிரசுரங்களை விநியோகிக்கிறார்கள். ஏனைய இயக்கங்களின் செயற்பாடுகள் குறைந்த சில கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அங்கு சென்று அங்குள்ள மக்களைச் சந்தித்து தமது கருத்துக்களை தெரிவித்து அங்குள்ள சிலரைக் கொண்டு கிராமக்குழுக்களைக கட்டுகிறார்கள். பெண்களை அணிதிரட்டவென ஒரு மகளிர் அமைப்பும் கட்டப்பட்டு அவர்களுக்கென ஒரு பொருளாதாரத் திட்டமும் ஆரம்பிக்கப்படுகிறது. அத்தோடு அந்தந்த கிராமங்களில் அமைப்பின் ஊழியர்கள் மூலம் சிறுவர் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்படுகின்றன. இதேவேளையில் சில இரகசிய வேலைகளையும் கூட திட்டமிட்டு செய்கிறார்கள். அத்துடன் கூடவே போராட்டத்தில் ஏற்படும் பொதுவான நெருக்கடிகள் தலைமறைவு நிலைமைகளையும் தோற்றுவித்து விடுகிறது.

இந்த குழுவானது திட்டம், மூல உபாயம் போன்றவற்றை வகுத்துச் செயற்படவில்லை. இதனால் செய்யப்படும் பணிகள் அமைப்பின் இலக்கை நோக்கித்தான் முன்னேறுகின்றனவா என்பதை உத்தரவாதப் படுத்த முடியவில்லை அத்தோடு இந்த வேலைகளை மதிப்பீடு செய்வதும் கூட சாத்தியப்படவில்லை. சிறிது காலத்தில் இந்த வேலை முறையின் விளைவுகள் வருந்தத்தக்கனவாகவே இருந்தன. முன்னேறியபிரிவினரிடம் போகாது சாதாரணமக்களிடம், அதுவும் போராட்ட அலை வற்றித்தணியும் ஒரு காலகட்டத்தில் செல்வதானது அமைப்பிற்கு புதிதாக அங்கத்தவர்களை வென்றெடுக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பயன்படவில்லை . கிராமக்குழுக்களில் இருந்தவர்கள் அமைப்பின் செயற்பாடுகளில் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை . சமூகசேவை வேலைகளில் ஏனைய தன்னார்வக் குழுக்கள் போட்டியாக வந்தபோது அவற்றிற்கு ஈடுகொடுக்க இந்த புரட்சிகர குழுவால் முடியவில்லை . ஏனைய இயக்கங்களால் அமைத்த இணக்க சபைகளின் முன் கிராமக் குழுக்கள் செயலிழந்தன . இந்த நிலையில் தன்னியல்பான வேலைகளும் ஏனைய இரகசிய வேலைகளும் அமைப்பிற்கு பெருஞ்சுமையாகின இந்த சுமையினால் அழுத்தப்பட்ட நிலையில் ஏனைய கோட்பாட்டுபணிகளை செய்வது சாத்தியப்படவில்லை .

ஏனைய இயக்கங்களை போலல்லாது இந்த குழுவானது அரசியலுக்கு முக்கியத்துவத்தைக் கொடுத்தாலும் , அந்த முக்கியத்துவமானது கோட்பாட்டுப் பணிகளை ஏனைய தன்னியல்பான வேலைகளுடன் சமமாக வைக்கும்நிலையில்தான் இருந்தது . ஆனால் இந்தப்பணிகள் மிகவும் வேறுபட்ட பண்புகளை , வேறுபட்ட இயங்கு தன்மையை உடையன . கோட்பாட்டுப் பணிகளோமிகவும் மெதுவாக மிகவும் நிதானமாக முன்னேறும் . இதில் ஓரளவு ஆற்றலும் பயிற்சியும் உள்ள சிலர் மட்டுமே ஈடுபடக் கூடிய நிலமை இருக்கிறது . ஏனைய தன்னியல்பு வேலைகளிலோ அப்படியல்ல . அவை மிகவும் வேகமாக நகருகின்றன . அமைப்பிலுள்ள ஒவ்வொருவருமே ஏதாவது ஒரு தன்னியல்பான வேலைகளில் ஈடுபடக்கூடியவர்களாகவே உள்ளனர் . இதனால் இந்த இரண்டு பணிகளும் சமமாக நகரவில்லை . தன்னியல்பான வேலைகள் மிகவும் வேகமாக சென்று கோட்பாட்டுப் பணிகளை மேவி அதனை முடக்கிவிடும் நிலமை உருவாகிவிடுகிறது . தன்னியல்பு வேலைகளின் வீச்சானது ஒரு கட்டத்தில் , கோட்பாட்டுப்பணிகளில் ஈடுபடக் கூடியவர்களையும் அதனுள் இழுத்து , இந்த தன்னியல்பு வேலைகள் தொடர்பான திட்டமிடல் நிர்வாகப் பணிகளுள் அவர்களையும் அமிழ்த்தி விடுகிறது . தன்னியல்பு வேலைகளில் அதிகளவு ஆற்றல் செலவாவதானது கோட்பாட்டுப் பணியைமிகவும் பாதிக்கிறது . இதனால் கோட்பாட்டுப்பணிகள் முன்னெடுக்கப்படுவது சாத்தியப்படவில்லை .

இதே வேளையில் பொதுவாக போராட்டத்தில் நெருக்கடிகள் அதிகரிக்கின்றன . மாற்றங்கள் வேகமாக நடைபெறுகின்றன . இதற்கேற்ப பலமுக்கியமான முடிவுகளை எடுத்து குழுவானது செயற்பட்டாக வேண்டியுள்ள . ஆனால் அமைப்பினுள் உள்ள கோட்பாட்டு வறுமை இதற்கு தடையாக உள்ளது . ஏற்கனவே திட்டம் வகுக்கப்படாததால் நிலைப்பாடுகள் அடிக்கடிமாறுவதாகவும் , ஒவ்வொரு திருப்பத்திலும் முடிவே இல்லாத விவாதங்கள் தொடர்வதாகவும் இருக்கிறது . இதனால் அமைப்பே ஒரு விவாத அரங்கு போல ஆகிவிடுகிறது . அமைப்பானது திட்டவட்டமான இலக்குகளை வகுத்து செயற்படுவது என்பதிலும் பார்க்க ஒருவித அலைந்துதிரியும் நிலமையைத் தோற்றுவிக்கிறது .

83ல் உருவான இயக்கங்கள் அநேகமாக தன்னியல்பின் விளைவுகளேயாகும். அந்த எழுச்சிக் காலகட்டத்தில் தன்னியல்பாக கிளர்ந்தெழுந்த பலரும் அமைப்புகளில் சேர்ந்து கொண்டார்கள் . இயக்கங்கள் எதுவும் அவர்களை முறையான அரசியல் போதமூட்ட முயலவில்லை . புதிய அமைப்பிலும் ஆற்றல்கள் பெருமளவில் தன்னியல்பு வேலைகளிலேயே செலவிடப்படும் நிலையில் இவர்கள் இங்கும் முறையாக அரசியல் ரீதியில் வளர்த்தெடுக்கப்படுவது நடைபெறவில்லை . இந்தநிலையில் போராட்டத்தின் அலை தணியும்போது பொதுவில் போராட்டத்தில் நெருக்கடிகள் அதிகரித்து விட்ட நிலையில் , அமைப்பானது திட்டவட்டமான சில நிலைப்பாடுகளை வகுத்து முன்னேறிச் செல்லாது தேக்கத்திற்குள்ளான நிலையில் போராட்ட அலை வீசும்காலத்தில் அமைப்புகளுடன் சேர்ந்து கொண்ட சிலர் நம்பிக்கையை இழந்துவிடுகிறார்கள் . இது அமைப்பினுள் சச்சரவுகளை ஏற்படுத்தவும் , சிலர் ஒதுங்கிப் போகவும் காரணமாகிறது . சற்றுகாலம் கடந்துதான் என்றாலும் இந்த குழுவானது தனது தவறுகளை உணர்ந்து கொண்டு கோட்பாட்டுப்பணிகளில் அக்கறை செலுத்த முனைந்தது . ஆனால் ஏற்கனவே தன்னியல்பு வேலைகளில் நிறைய ஆற்றல்களை செலவிட்டுத் தீர்த்த நிலையில் அப்போது புதிய பணிகளை செய்வதற்கு ஆற்றல்களின் பற்றாக்குறை பெரிய தடை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாக இருக்கிறது . கடந்த காலத்தில் கோட்பாட்டு அக்கறையுடன் செயற்பட முனைந்த பல குழுக்களது கதைகள் இவ்வாறுதான் சோகமான முடிவை அடைந்தன.

### 3 புட்சிகர அமைப்பொன்றின் செயற்பாடுகளும் அதில் தன்னியல்பின் விளைவுகளும்

மார்க்சியம் – லெனினிசம் – மாவோயிசத்தை தமது வழிகாட்டும் நெறியாக ஏற்றுக்கொண்ட அமைப்பொன்று , ஆரம்பத்திலிருந்தே கட்சிகட்டும் தேவையையும் , திட்டத்தின் அத்தியாவசியமான தன்மை குறித்தும் வலியுறுத்தி வருகிறது . படிப்படியாக கட்சிகட்டும் பணிகளை ஓரளவு செய்துமுடித்து திட்டத்தை முன்வைக்கிறது . தமது திட்டத்தில் அவர்கள் இலங்கையின் சமூக உருவாக்கத்தை அரைக் கொலனித்துவ , அரை நிலப்பிரபுத்துவ சமூகமாக வரையறுத்து தேசியவிடுதலைப் போராட்டத்தை தமது இலக்காக முன்வைக்கிறார்கள் . எமது விடுதலைப் போராட்டத்தில் உருவானஅமைப்புகளுள் கட்சியைக் கட்டிய , திட்டத்தை முன்வைத்த ஒரே அமைப்பு தாமே என்று பெருமைப்பட்டுக் கொள்ளும் இவர்கள் எமது விடுதலைப் போராட்டத்தில் பாரியளவிலான தாக்கத்தை ஏற்படுத்தப்போகிறார்கள் என்று வெளியில் இருக்கும் முற்போக்கு சக்திகளும் , அந்த அமைப்பின் அங்கத்தவர்களுமே ஆவலுடன் எதிர்பார்த்தி திருக்கிறார்கள் . ஆனால் எதிர்பார்த்தபடி குறிப்பிடத்தக்க எதுவுமே நடைபெற்று விடவில்லை . கட்சி கட்டுவதிலும் , திட்டத்தை வரைவதிலும் அடையப்பட்ட வெற்றிகளானவை , அடுத்ததாக போராட்டக்களத்தில் , அரசியல் முன்னெடுப்புகளில் புதிது புதிதான வெற்றிகளால் தொடரப்படவில்லை . மாறாக, அந்த அமைப்பினுள் உட்சச்சரவுகள் வலுவடைந்து சிறிது காலத்தில் அமைப்பே கலைந்து போய்விடுகிறது . இதனை எவ்வாறு புரிந்து கொள்வது ?

மேற்படி அமைப்பைச் சார்ந்தவர்கள் கோட்பாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது சரியானதே . ஆனால் இந்தகோட்பாடு என்பது தம்காலத்தில் மிகவும் முன்னேறிய கோட்பாடாக இருக்கவேண்டும் என்பதும் . தமது புரட்சிக்கான கோட்பாட்டுப்பணிகளை தாமே சிறப்பாக ஆற்றுவதன் மூலமே இது அடையப்பட முடியும் என்பதும் புரிந்து கொள்ளப்படாமல் , மார்க்சியஆசான்கள் முன்வைத்த கோட்பாடுகளை ' பிரயோகிப்பதே ' , செயற்படுத்தப்படுவதே தமது பணி என்றளவில் தான் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது . ஒரு தேசியவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும் இவர்களிடத்தில் பொதுவில் தேசியவாதம் பற்றிய விரிவான கோட்பாட்டுப் புரிதல் எதுவும் இருப்பதில்லை . இருப்பதெல்லாம் லெனினும் , ஸ்டாலினும் ரஷ்யப் புரட்சியை முன்னெடுத்த தருணத்தில் அந்தளவிற்கு முக்கியத்துவம் பெற்றிராத தேசிய பிரச்சினைகளை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாக வெளியிட்டிருந்த கருத்துக்களே . இவ்வாறே மாவோ சீனாவை வரையறுத்த அதே பதங்களை அரைக் கொலனி, அரைநிலப்பிரபுத்துவம் என்று – எடுத்து பயன்படுத்துகிறார்களேயன்றி தமது நாட்டின் உற்பத்திமட்டத்தை, சமூகஉருவாக்கத்தை சரியாக இனங்கண்டு கொள்ள தவறிவிடுகிறார்கள் .

இப்படியாக தமது சொந்த கோட்பாட்டு உழைப்பினூடாக அன்றி மார்க்சிய ஆசான்களது கோட்பாடுகளை அப்படியே இரவல்வாங்கி வகுக்கப்படும் திட்டம்கூட ஒருவகையில் தன்னியல்பான திட்டமாகவே அமைந்து விடுகின்றது . ஏனெனில் இவர்கள் ஒரு புரட்சிகர அமைப்பு , தனக்கான திட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்றபுரிதலில் எப்படியும் ஒரு திட்டத்தை வைத்துவிட வேண்டும் என்று அக்கறைப்படுகிறார்களே யொழிய , தாம் வாழும் சமுதாயத்தை முறையாக பரிசீலித்து அதனூடாக அடையப்படும் முடிவுகளாக இந்த திட்டம் இருக்கவேண்டும் என்பதை உணர்ந்து கொள்வதில்லை . இதன் விளைவு யாதெனில் , இரவல் படையில் மாத்திரமல்ல இரவல் கோட்பாட்டினாலும் கூட புரட்சி செய்ய முடியாது என்ற கசப்பானபடிப்பினைகளை அனைத்து புரட்சிகர சக்திகளுக்கும் இவர்கள் விட்டுச்செல்வதுதான் .

> *இரவல் படையில் மாத்திரமல்ல இரவல் கோட்பாட்டினாலும் கூட புரட்சி செய்ய முடியாது*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### 4 சிறு பத்திரிகை குழுக்களும் அவற்றின் முயற்சிகளில் தன்னியல்பின் விளைவுகளும் .

சிறு பத்திரிகைக் குழுக்களில் தன்னியல்பு ஏற்படுத்தும் பாதிப்புக்களை மதிப்பிடுவதற்கு முன்பு இந்த பத்திரிகை தொடங்கப்பட்ட சூழலை முதலில் நினைவு படுத்திக் கொள்ளவேண்டும் . இந்தியப்படைகள் ஈழத்தில் நிலைகொண்டிருந்த நிலையில் , எமது போராட்டம் தேங்கிப் போனதாகவும் , அதுவரையில் செயற்பட்டுவந்த அமைப்புகளின் வரையறைகள் (Limitations) பற்றியும் உணரும் புலம் பெயர்ந்து வாழும் சிலர் தமக்குள் ஒன்றிணைந்து தாம் இந்த நிலைமையைக் களைய ஏதாவது செய்யவேண்டும் என்ற நோக்கில் மக்களிடம்சரியான கருத்துக்களை கொண்டு போகும் முயற்சியில் இறங்கினார்கள் . இந்த காலகட்டத்தில் இந்தியப்படை வெளியேறி புலிகள் தமிழீழத்தில் தமது பிடியை மேலும் இறுக்கத் தொடங்கவே ஈழத்தில் இதுவரையில் இருந்துவந்த முன்னாள்போராளிகள் , முற்போக்கு சிந்தனையுள்ள பலரும் தென்னிலங்கைக்கும் வெளிநாடுகளுக்கும் வந்து சேர்கிறார்கள் . இலங்கையிலும் கூட இந்த பத்திரிகை முயற்சிகளில் கலந்து கொள்கிறார்கள்.

இந்த பத்திரிகை முயற்சிகளில் ஈடுபம் பலரும் முன்பு பல்வேறு இயக்கங்களில் அங்கத்துவம் வகித்தவர்கள் . அந்தந்த இயக்கப் பத்திரிகை , சஞ்சிகைகளுடன் தொடர்பட்டுச்செயற்பட்டவர்கள் . இவர்கள் கட்சிப்பத்திரிகை பற்றியும் அது கோட்பாட்டாளனாக , அமைப்பாளனாக , பிரச்சாரகனாக தொடர்பாளனாக பணியாற்ற வேண்டிய அவசியம் பற்றியும் ஓரளவு அறிந்திருந்தாலும் கூட ஆரம்பத்தில் இப்படிப்பட்ட நோக்கங்களை தமக்குள் வரித் துக் கொள்ளவில்லை . உடனடித் தேவை மக்களிடம் சரியான கருத்துக்களைக் கொண்டு போவதே எனவும் , காலப்போக்கில் படிப்படியாக இப்படிப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவது பற்றி யோசிக்கலாம் எனவும் கருதுகிறார்கள் .

இப்படிப்பட்ட பத்திரிகையொன்று வரத்தொடங்கியதும் அது கணிசமான வரவேற்பைப் பெறத் தொடங்குகிறது . அதுவரை காலமும் கருத்துச்சுதந்திரம் மறுக்கப்பட்ட ஒரு கோடையில் பெய்தமழை போன்று இந்த சிறுபத்திரிகைகள் இருக்கின்றன இந்த சிறுபத்திரிகைகளைச் சுற்றி முற்போக்கு எண்ணம் கொண்ட பலரும் அணிதிரள்கிறார்கள் தொடர்பு கொள்கிறார்கள் . பத்திரிகைகளில் ஆரம்பத்தில் வெளிவரும் கருத்துக்களைப் பார்க்கும் பலரும் இவை ஒரு புரட்சிகர அமைப்பைக் கட்டும் எனவும், அதற்கான திட்டத்தை விரைவில் முன்வைக்கும் எனவும் எதிர்பார்க்கிறார்கள் . இந்த உற்சாகத்தினால் தூண்டப்பட்ட சில பத்திரிகைகள் கூட அப்படிப்பட்ட ஒரு உள்நோக்கம் தமக்கு இருப்பதாக பகிரங்கமாகவோ அல்லது தனிப்பட்ட தொடர்புகளினூடாகவோ சொல்லத் தலைப்படுகின்றன . இப்படியான நல்ல உற்சாகமான சூழலில் இந்த நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப் படுகின்றன .

பத்திரிகைகளை நாடிவரும் பலரும் தத்தமது ஆற்றல்களை வெளிப்படுத்தும் விதத்தில் இன்னும்பல வேலைகளைசெய்யும்படி இவர்களை நெருக்குகின்றனர் . தம்மை நாடிவரும் சக்திகள் எதனையும் விட்டு விடக்கூடாது என்ற நோக்கில் அவர்களது ஆற்றல்களையும் வெளிப்படுத்தும் விதத்தில் கவிதாநிகழ்வுகள் , நாடகங்கள் , ஒன்று கூடல்கள் , சமூகசேவைகள். . . . என இப்படியே இவற்றின் செயற்பரப்புக்கள் விரிந்து செல்கின்றன . இன்னோர் பக்கத்தில் பத்திரிகைக்கு வந்து குவியும்கவிதைகள் மற்றும் ஆக்கங்கள் பிரசுரிக்க

பத்திரிகைகளை நாடிவரும் பலரும் தத்தமது ஆற்றல்களை வெளிப்படுத்தும் விதத்தில் இன்னும் பல வேலைகளை செய்யும்படி இவர்களை நெருக்குகின்றனர் . தம்மை நாடிவரும் சக்திகள் எதனையும் விட்டு விடக்கூடாது என்ற நோக்கில் அவர்களது ஆற்றல்களையும் வெளிப்படுத்தும் விதத்தில் கவிதா நிகழ்வுகள் , நாடகங்கள் , ஒன்று கூடல்கள் , சமூகசேவைகள் என இப்படியே இவற்றின் செயற்பரப்புக்கள் விரிந்து செல்கின்றன .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தன்னியல்புவாதம் குறித்து. . .

முடியாத அளவில் அதிகமாகஉள்ளன . அத்தோடு வாசகர்ாளும் பத்திரிகையை அடிக்கடி கொண்டு வரும்படி நிர்ப்பந்திக்கிறார்கள் . இதனால் காலாண் டிதழ்கள் , மாதமொருமுறையாகவும் , மாதமொரு முறை வந்தவை வார இதழ்களாகவும் மாறத் தொடங்குகின்றன . இப்படியாக இந்த பத்திரிகை களின் ஆரம்பமுயற்சிகள் மிகவும் உற்சாகத்துட னேயே செல்கின்றன .

ஆனால் இந்த உற்சாகங்களும் , ஆரவாரங்களும் அதிக காலத்திற்கு நீடிப்பதில்லை . விரைவிலேயே இந்த பத்திரிகைக் குழுக்கள் நெருக்கடிகளை சந்தி க்க நேருகின்றன . பத்திரிகையின் ஆரம்பநாட்களில் வாசகர்களின் பங்குபற்றுதலுடன் தொடங்கப்பட்ட விவா தங்கள் ஒரு குறிப்பிட்ட மட்டத்திற்கு மேல் வளர்த் தெடுக்க முடிவதில்லை . இந்த ஆரம்ப விவாத ங்கள் சில முக்கியமான கோட்பாட்டுப் பிரச்சினைகளை எழுப்பிவிடுகின்றன . இவற்றைக் கடந்து செல்வ தாயின் கடுமையான கோட்பாட்டு ரீதியான உழைப்பு , முயற்சி தேவைப்படுகிறது . ஆனால் பல்வேறு தன்னி யல்பான வேலைகள் இவர்களது ஆற்றல்களை செலவ ழித்து விடும் நிலையில் இந்தவிதமான கோட்பாட்டு முயற்சிகள் சாத்தியப்படுவதில்லை . தன்னியல்பு வேலை களின் தீவிரம் காரணமாக ஒரு கட்டத்தில் பத்திரி கைக குழுவில் உள்ள ஒருவர் எழுதிய கட்டுரையை குழுவிலுள்ள ஏனையோர் வாசித்து விவாதிக்கா மலேயே அச்சுக்குப்போவது என்ற நிலை உருவாகி விட்ட பின்பு , கோட்பாட்டு உழைப்பிற்குத் தேவையான கால அவகாசம் சம்பந்தப்பட்டவர்களுக்கு இல்லாத போது , இதற்குமேல் கோட்பாட்டு உழைப்பு என்பது சாத்தியப்படுவதில்லை . இதனால் ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்குமேல் இந்த விவாதங்களை வளர்த்தெடுக்க முடியாதுபோகவே இவை தேக்கத்திற்கு உள்ளாகின்றன . பல்வேறு விவாதங்களிலும் எழுப்பப்படும் கோட்பாட்டுப் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு அவற்றிற்கு சரியான பதில்களை அளிக்க முடியாததால் , விவாதத்தில் கல ந்து கொள்ளும் ஒவ்வொருவரும் அவரவர் விரும் பிய திசையிலெல்லாம் விவாதத்தை இழுத்துச் செல் ல முயல்கிறார்கள் . தனிமனித அழித்தொழிப்புக்க ளைப் பற்றியவிவாதம் ' தனிநபர் பயங்கரவாதம் ' பற்றிய கோட்பாட்டு விவாதமாக வளராமல் , கொலை களே தவறு என்ற ஜீவகாருண்யத்தை நோக்கி நகர்கிறது . கடந்தகாலத்தில் சோஷலிசத்தைக் கட்டுவ தில் எழுந்த நெருக்கடிகள் பற்றிய விவாதமானது , அரசு , கட்சி பற்றிய கோட்பாட்டு அக்கறைகளை தீவிரப்படுத்துவதற்குப் பதிலாக அவை அராஜகவாதக் கருத்துக்களாக சீரழிந்துபோகின்றன . பெண்ணடி மைத் தனத்தைக் களையும் அக்கறையில் தொடங்க ப்பட்ட விவாதங்கள் பெண்களை மேலும் இழிவுபடுத்தும் கொச்சைத்தனமான சர்ச்சைகளில் போய் முடிகிறது . பொதுவில் விவாதங்கள் இப்படியாக திசைதிரும்பிப் போவதைக் கண்டு கவலைப்படும் பலரும் கூட எதிர்க் கருத்துக்களைமுத்திரை குத்திகண்டிப்பதற்கு மேல் ஏதும் செய்யமுடிவதில்லை .

இதேவேளை பத்திரிகைக் குழுக்களுள் நெருக்கடி கள் தீவிரமடைகின்றன . " இன்னும் எத்தனைநாட் களுக்குத்தான் இப்படியேஇருப்பது ? " " உருப் படியான எதனையாவதுசாதித்தோமா ? " " கவி தைக ளும் , சிறுகதைகளும் இன்றைய தேவைதானா ? " " சிலநிலைப்பாடுகளைத்தானும் எம்மால் வகுக்க முடிந்ததா ? " போன்ற முணுமுணுப்புக்கள் கேட்கத் தொடங்குகின்றன . தாம் இந்த ஆரம்பமுயற்சிகளை கடந்து தமது பணிகளை உயர்ந்த கட்டத்திற்கு வளர்த்தெடுக்க வேண்டும் என்ற உணர்வின் வெளி ப்பாடுகளே இவை . ஆனால் இந்த புதியபணிகளுக் குத்தான் யாரும் தயாராக இல்லை . அதற்கான சக்திக ளும் இல்லை . தன்னியல்பு வேலைகளிலேயே கணி சமான சக்தி செலவாகிவிடுகிறது . பத்திரிகைக்குளு க்களுக்குள்ளே இப்படிப்பட்ட விவாதங்கள் நடைபெறும் போதே , வெளியில் வாசகர்களிடையே இன்னும் கூட ஓரளவிற்கு பெருத்த எதிர்பார்ப்புக்கள் இருக் கவே செய்கின்றன . இவர்கள் அமைப்பைக் கட்டுவா ர்கள், விரைவில் திட்டத்தை முன்வைப்பார்கள் என்ப தாக அதீத எதிர்பார்ப்புகள் இருக்கிறது . இந்த வாச கர்களை தொடர்ந்தும் அப்படியே எதிர்பார்க்க விடு வது ஒரு விதத்தில் அவர்களை ஏமாற்றுவதாக மாட்டாதா என்று மனச்சாட்சி பத்திரிகைக் குழு விலுள்ளபலரையும் உறுத்துகிறது . இது தவிர்க்க முடியாதவாறு சிலர் பத்திரிகைக் குழுவிலிருந்து வெளியேறுவதில் போய்முடிகிறது . இப்படிப்பட்ட நெருக்கடிகளை கடக்கும் விதத்தில் பல்வேறு பத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரிகைகளும் தம்மிடையில் ஒரு பொதுவான புரித லை எட்டி அதற்கூடாக ஒருபொதுவான பத்திரிகையை உருவாக்குவதும் , பொதுவான வேலைமுறையை வகுத்துக் கொள்வதும் சாத்தியப் படுவதில்லை . இந்த நிலையில் பத்திரிகையானது , குழு அங்கத்த வர்களது சொந்தப்பணத்தில் வெளிவரும் பத்திரிகை என்றால் அது ஒரு நாள் திடீரென எந்த முன்னறிவிப்பு இன்றிநின்று விடுகிறது . ஆனால் தன்னார்வ குழுக்களின் நிதி உதவியினால் வெளிவரும் பத்திரிகை யானால் இப்படிப்பட்ட கட்டத்தில்தானே ஒரு தனியான இருப்பாக மாறிவிட்டதால் தொடர்ந்தும் வெளிவருகிறது .

ஏனைய சிறுபத்திரிகைகளில் செயற்படும் தன்னியல்பின் இயங்குவிதிகள் இங்கு பன்மடங்கு தீவிரமாக செயற்படுகின்றன . ஏனைய சிறுபத்திரிகைக் குழுக்களினுள் ஏற்படும் நெருக்கடிகள் காரணமாக அப்பத்திரிகை நின்று போவதால் இந்த தன்னியல்பு வேலைகளில் ஈடுபட்டவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின்னாவது இந்த தன்னியல்பு வேலை முறையிலிருந்து மீண்டு வருவது சாத்தியப்படலாம் . ஆனால் தன்னார்வக் குழுவில் நிதிஉதவியுடன் செயற்படும் பத்திரிகைகளில் இந்த விதமானமீட்சி என்பது சாத்தியப்பட மாட்டாது . இந்த விதத்தில் முன்னேறிய பிரிவினரை தன்னியல்பு சகதியிலிருந்து மீளமுடியாதவாறு புதைத்து விடுவதன் மூலம் தன்னார்வ குழுக்கள் முன்னேறிய பிரிவினரை ' காயடிப்பு ' செய்து விடுகின்றன இந்த போக்கிற்கு ஒரு நீண்டகால வரலாறு உண்டு .

இப்போது இந்த சிறு பத்திரிகைகளின் முயற்சிகளை ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொண்டால் இவையொவ்வொன்றும் சிறு குழுக்களாக சிதறிய நிலையில் குறிப்பிட்ட நாடுகளில் அம்பலப்படுத்தல்களைச் செய்து வருகின்றன . இவற்றின் பணிகள் ஒன்றிணைக்கப் படாதிருப்பது , கிளர்ச்சியை நோக்கி வளர்த்தெடுக்கப் படாதிருப்பது இதன் பிரதான குறைபாடாகும் . இவற்றைக் கிரமமாகக் கொண்டு வருவதே இந்த சிறு குழுக்களைப் பொறுத்தவரையில் பெரும் பிரச்சினையாக உள்ளது . இந்த பத்திரிகைகளில் சிலவாவது ஒரு அமைப்பைக்கட்டும் பணியை செய்து முடிக்கும் என்று அதன் வாசகர்கள் தீவிரமாக எதிர்பார்த்தார்கள் . ஆனால் ஒரு பத்திரிகை கூட இதனைச் செய்து முடிக்கவில்லை . குறைந்த பட்சம் அதற்கான முயற்சிகள் கூட செய்யவில்லை . இப்படிப்பட்ட முயற்சிகள் எதுவுமே இல்லையென்றால் முன்னேறிய பிரிவினரை ஏமாற்றுவதாகவே இது அர்த்தப்படும் . இந்தப் பத்திரிகைக் குழுக்களில் ஏதாவது ஒன்று கட்சியின் கருக்குழு என்று கருதப் படும் நிலையில் இல்லை . பத்திரிகைகள் வெளியிடுவது தவிர இவர்களிடம் வேறு புரட்சிகரபணிகள் இல்லை .

மாற்று அமைப்பைக் கட்டும் நோக்கில்செயற்படும் பத்திரிகைகள் தமக்கிடையில் ஒரு பொதுவான விளக்கத்தை எட்டி , அதன்மூலம் ஒரு பொதுவான அமைப்பை உருவாக்குவதை நோக்கி முன்னேற பல கோட்பாட்டுப் பிரச்சினைகள் தடையாகஉள்ளன . வெளிப்படையாக கூறுவதானால் இன்று பலரிடமும் பலவிதமான கேள்விகள் உள்ளன . ஒரு பொதுவான விளக்கத்தை எட்டுவது என்ற நோக்கில் உடனடியாகவே விடை கண்டாக வேண்டிய அவசரமான பிரச்சினைகள் இவை . ஆனால் அதற்கான கோட்பாட்டு உழைப்பை வழங்கத்தான் யாரும் தயாராக இல்லை . இவர்களது ஆற்றல்கள் யாவும் தன்னியல்பு வேலைகளிலேயே விரையமாகின்றன . இதனால் இந்த விவாதங்கள் வெறுமனே பொதுப்புத்தி மட்டத்திலேயே நடைபெறுகின்றன . விவாதத்தில் எதிர்தரப்பினருக்கு அடிகொடுப்பதில் காட்டப்படும் அக்கறையானது இந்த ஆரம்பவேறுபாடுகளை இன்னும் தீவிரப்படுத்தவே பயன்பட்டுள்ளது .

*மாற்று அமைப்பைக் கட்டும் நோக்கில்செயற்படும் பத்திரிகைகள் தமக்கிடையில் ஒரு பொதுவான விளக்கத்தை எட்டி , அதன்மூலம் ஒரு பொதுவான அமைப்பை உருவாக்குவதை நோக்கி முன்னேற பல கோட்பாட்டுப் பிரச்சினைகள் தடையாக உள்ளன .*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்று உடனடியாகவே விடைகண்டாக வேண்டிய கோட்பாட்டுப் பிரச்சினைகளில் தலையிட்டு கோட்பாட்டு ரீதியான உழைப்பின் மூலம் சித்தாந்த மேலாண்மையானது நிலை நாட்டப்படுமானால் கோட்பாட்டு விடயங்களில் அடையப்படும் பொதுவிளக்கத்தின அடிப்படையில் இந்த குழுக்கள் இணைவிற்கு வருவது சாத்தியப்படும் . இது சாத்தியமானால் வருங்காலத்தில் , பல முன்னேறிய பிரிவினரையும் வென்றெடுத்த நிலையில் , வெகுஜன வேலைகள் பலவற்றையும் தாமே அமைப்பின் வழிகாட்டலின் கீழ் சிறப்பாக முன்னெடுக்கலாம் . ஏற்கனவேயுள்ள பல வெகுஜன அமைப்புக்களை வென்றெடுத்து புரட்சியின் நோக்கங்களுக்கு ஏற்ப அவற்றை செயற்படுத்தலாம் . பிரக்ஞை பூர்வமானவழிகாட்டுதல் இல்லாவிட்டால் எம்மால் தொடங்கப்படும் வெகுஜனப் பணிகளே எமது கையைவிட்டு விலகிப் போய்விடும் . அல்லது திசைதிரும்பி எமது ஆரம்ப நோக்கங்களுக்கு எதிராகப் போய்விடும், அல்லது நின்றுவிடும் . அமைப்புகளும் , பத்திரிகைக் குழுக்களும் சிதறும் , தனிநபர்களையோ , பத்திரிகைகளையோ , ஏனைய குழுக்களையோ வென்றெடுப்பது சாத்தியப்படமாட்டாது . சிதைவும் , விரக்தியும் , நம்பிக்கை வரட்சியுமே எங்கும் ஆட்சி செலுத்தும் . இதுதான் இன்றுள்ள பொதுவான நிலைமையாகும் . இதன் வேர் தன்னியல்பு வாதத்தில் இருக்கிறது . இன்றுள்ள பாசிசத்தை முடிவு கட்டுவது என்பது ' விமர்சன ஆயுதத்திலிருந்து ஆயுத விமர்சனத்திற்கு ' மாறிச்செல்வதிலேயே பெரிதும் தங்கியுள்ளது . இந்த வகையான ' மாற்றத்திற்கு வழிவகுக்காத விமர்சனங்கள் அவை எவ்வளவுதான் தீவிரமானதாக , பரபரப்பு மிக்கவையாக இருப்பினும் கூட இறுதி ஆய்வில் அவை ஏதுமற்றவைதாம் .

## 5 . ஒரு பெண்கள் குழுவின் அனுபவங்கள்

இதுவரையில் எமது தேசிய விடுதலைப் போராட்டத்துடன் தொடர்புடைய பல்வேறு அமைப்புக்களிலும் தன்னியல்புவாதம் வெளிப்பட்ட விதங்களை பரிசீலித்த நாம் , அந்தவரிசையில் இந்த பெண்கள் அமைப்பையும் வைத்து விமர்சிப்பது முறையானதல்ல ஏனெனில் அதுவோர் தேசியவிடுதலை அமைப்பல்ல . அத்தோடு அதுபெண்விடுதலை தொடர்பான கோட்பாடுகளை அல்லது கருத்துக்களை பரப்புவது என்ற ஒரு குறுகிய நோக்கத்துடன் மாத்திரமே செயற்பட்ட ஒரு கல்வி வட்டமாகும் . இப்படிப் பட்ட ஒரு மட்டுப்படுத்தப்பட்ட இலக்குகளைக் கொண்ட ஒரு அமைப்பை ஏனைய தேசிய விடுதலை அமைப்புக்களுக்கு சமமாக எடுத்துவைத்து , அதனிடம் திட்டம் இல்லையென்றும் , தன்னியல்பாக செயற்படுவதாக குறைகூறுவதும் பெரிதும் மிகைப்படுத்தப்பட்ட விமர்சனங்களாகவே இருக்கும் . இருப்பினும் எமது போராட்டம் முழுவதிலும் விரவியிருக்கும் சில குறிப்பான பண்புகள் இந்த அமைப்பின் செயற்பாட்டிலும் வெளிப்படுவதால் இதன் வேலைமுறையை மதிப்பிடுவது ஒரு குறுகிய எல்லைக்குட்பட்ட விதத்திலாவது சிலபடிப்பினைகளைப்பெற உதவும் என்பதனால் இந்த பெண்கள் குழுவின் வேலைகளை மேலெழுந்தவாரியாக பார்க்க முனைவோம் .

இந்த பெண்கள் அமைப்பானது பெண்விடுதலையில் தீவிர அக்கறை கொண்ட சிலபெண்கள் – கல்வியியலாளர்கள் , மாணவிகள் , ஆர்வலர் போன்றோர் – சேர்ந்து உருவான ஒரு தளர்வான அமைப்பாகும் . இவர்கள் பெரும்பாலும் பெண்விடுதலை தொடர்பான கருத்துக்களை தமக்குள் பரிமாறுதல் , சில பிரசுரங்களை வெளியிடுவது , சிலகருத்தரங்குகளை , சிறிய கூட்டங்களை நடாத்துவது என்ற ளவில் தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தார்கள் . யுத்தத்தின் கொடுமைகள் தீவிரமடைந்த போது இவர்கள் வெளிநாட்டு உதவி நிறுவனங்களின் நிதி உதவியுடன் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான உதவித்திட்டங்களை செயல்படுத்தினார்கள் . விதவைகளுக்கு , அனாதைகளுக்கு உதவும்விதத்தில் அகதிகள் முகாமையும் , இன்னும் சில பொருளாதார உதவித்திட்டங்களையும் செயற்படுத்தினார்கள் . ஒரு கட்டத்தில் புலிகள் அமைப்பு இந்த செயற்பாடுகள் அனைத்தையும் தாமேபொறுப்பெடுத்துக் கொண்டது.

பெண் விடுதலை தொடர்பான கருத்துக்கள் தமிழ் சமுதாயத்தில் மிகவும் குறைந்தளவிலேயே பரப்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ப்பட்டுள்ளது . இந்த நிலையில் ஒரு தலை முறை பெண்ணிலைவாதிகள் முழுமையாக தம்மை அர்ப்ப ணித்துச் செயற்பட்டாலும் கூட பெண்ணடிமைத் தனத்திற்கு எதிரான விழிப்புணர்வை சமூக அளவில் ஏற்படுத்திவிடலாமா என்பது கேள்விக்குறியானதே . இப்படியாக பெண்விடுதலை தொடர்பான ஆரம்பப்ப ணிகளே மிகப் பெரியளவில் குவிந்து கிடக்கும் நிலையில் பெண்விடுதலை தொடர்பான கருத்துக்களை பரப்பு வதை இலக்காகக்கொண்ட ஒரு அமைப்பானது அகதி வேலைகளில் இறங்கிவிடுவது என்பது ஒரு வித தன்னியல்பு வேலை முறையேயாகும் . இவர் களது வேலைகளை புலிகள் பொறுப்பெடுத்து இருக் காவிட்டாலும் கூட இந்த வேலை முறைகள் பெண் விடுதலை தொடர்பான அவர்களது இலக்கில் அதி கம் உதவியிருக்கமாட்டாது . என்பது மட்டுமன்றி தமது இலக்கை நோக்கி செலவளித்தாக வேண்டிய மிகவும் வரையறுக்கப்பட்ட அளவிலுள்ள மூலவள ங்கள் இப்படிப்பட்ட வேலைகளில் செலவாகி விட்டதே நடந்து முடிகிறது .

இந்த வேலைமுறைகள் இந்த குறிப்பிட்ட பெண்கள் அமைப்பிற்கு மட்டுமே உரியதென்பதல்ல . பல்வேறு தேசிய விடுதலை அமைப்புக்களே கடந்த காலத்தில் சமூகசேவை , அகதிவேலை பொருளாதாரத் திட்டங்கள் போன்றவற்றில் மூழ்கி வரு வதைக் கண்டுள்ளோம் . தற்போது கூட முன்னே றிய பிரிவினர்களில் சிலர் கூட இந்விதமானவேலை களில் அளவுக்கதிகமா கவே மூழ்கிவிடுவதைக் காண்கிறோம் . இதற்கு இவர்கள் கூறும் காரணங் கள் இரண்டு முதலாவது அகதிகள் மிகவும் கஸ்ட ப்பட்டுக் கொண்டிருக்கும் போது நாம் வாழவிருப்பது முறையல்ல. இரண்டாவது மக்களின் நல்லெண்ண ங்களைப் பெறுவதற்கு நாம் இப்படிப்பட்ட வேலைகளில் ஈடுபடுவதுமுக்கியமானது . இந்த காரணங்களை சற்று பரிசீலிப்போம் .

*பெண் விடுதலை தொடர்பான கருத் துக்கள் தமிழ் சமுதாயத்தில் மிகவும் குறைந்தளவிலேயே பரப்பப்பட்டுள்ளது . இந்த நிலையில் ஒரு தலை முறை பெண்ணிலைவாதிகள் முழுமையாக தம்மை அர்ப்பணித்துச் செயற்பட்டா லும் கூட பெண்ணடிமைத்தனத் திற்கு எதிரான விழிப்புணர்வை சமூக அளவில் ஏற்படுத்திவிடலாமா என் பது கேள்விக்குறியானதே .*

யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஒரு தேசத் திற்கு அகதிகள் என்பது உண்மையிலேயே ஒரு நியாயமான பிரச்சினைதான் . பெரிய விடுதலை அமை ப்புகள் கூட இதிலும் தம்மாலானதைச் செய்யத்தான் வேண்டும் . ஆனால் இன்று புரட்சியாளர் களுக்கி டையே ஒரு பெரியபுரட்சிகர அமைப்பு மட்டு மல்ல , சிறிய கருக்குழு கூட கிடையாது . இப்படிப்பட்ட நிலையில் அகதிகள் பிரச்சினையே என்றென்றும் வராது தடுக்கவல்ல . விடுதலையை வென் றெடுப்பதற்கு அவசியமான புரட்சிகர அமைப்பைக் கட்டுவதில் எம்மிடமுள்ள அற்பசொற்ப ஆற்றல்களை செலவிடப்போகிறோமா ? அல்லது எமது தேசத்தை ஆட்டிப்படைக்கும் நோயின் ஒரு குணங்குறியான அகதிகள் பிரச்சினைகளில் ஆற்றலை செலவிட போகி றோமா ? அகதிவேலை என்பது எமது சமூக த்திலுள்ள சாதாரணமாக , ஜனநாயக உணர்வு கொண் டவர்கள் , மத அமைப்புக்கள் போன்ற பலவற்றாலும் செய்யப்படக் கூடியவை ஆனால் புரட்சிகர அமைப் பைக் கட்டுவது என்பது புரட்சியாளர்களால் மட் டுமே செய்யப்பட முடியும் . இதனால் நாம் புரட்சி யாளர்கள் என்றளவில் எம்மால் மட்டுமே செய்தாக வேண்டிய மிகவும் முக் கியமான பணிகளை செய் வதை விட்டுவிட்டு ஏனை ய சாதாரண பணிகளி ல் ஆற்றல்களைச் செல விடுவது என்பது பெரி ய தீங்காகவேமுடியும்.

அடுத்தது , மக்களது நல்லெண்ணத்தைப் பெற்றுக் கொள்ளும் பிர ச்சினை புரட்சிகரஅமை ப்பிற்கு மக்களின் ஆத ரவு மிகவும் அத்தியாவ சியமானதுதான் . ஆனால் இதனை அந்த மக்களது போராட்டத்தை உண் மையிலேயே வழிகாட்டி தலைமைதாங்குவதன் மூலம் பெறப்போகிறோமா ? அல்லது சாதாரண சமூகசேவை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கள் போன்ற வேலைகளினால் பெறப்போகிறோமா ? நாம் எப்பொழுதும் புரட்சிகர போராளிகள் போலசிந்திக்க வேண்டு மேயன்றி சாதாரண ஒரு உள்ளூர் ' பொப்புலிச ' 'அரசியல்வாதி ' போல , தொண்டு நிறுவனங்களை சேர்ந்தவர்களைப் போன்று சிந்திக்க முயலக்கூடாது . தொண்டு நிறுவனங்கள் செய்யக் கூடிய பணிகளுள் புரட்சியாளர்கள் மூழ்கிவிடுவது என்பது புரட்சியாளர்கள் என்றவகையில் போராட்டத்தை புரட்சிகரமாக முன்னெடுக்கும் தமது கடமைகளில் தவறுவதாகவே அர்த்தப்படும் .

' மக்களுக்கு தொண்டு செய்க ' என்றார் மாவோ . அதற்காக மக்களுக்கு செய்யும் தொண்டுகள் எல்லாம் புரட்சிகர பணிகள்ஆகிவிட மாட்டா. ' அன்பு காட்டுவது , உதவிசெய்வது , விட்டுக்கொடுப்பது போன்றவையாவும் ஆக்கபூர்வமானவையாகஇருக்க வேண்டுமேயன்றி பிற்போக்கு ஆனவையாக இருக்கக் கூடாது ' என்றும் அதே மாவோ வலியுறுத்தியிருப்பதை மறந்துவிடக்கூடாது . ஒரு பெரிய செஞ்சேனையில் போர்வீரர்கள் மக்களுடன் செயலாற்றும்போது அதிகார வர்க்க மனோபாவத்துடன் நடந்துகொள்ளக் கூடாது . என்பதை வலியுறுத்தும் விதத்தில் மாவோ கூறிய அறிவுரைகளை , ஒரு சிறிய கருக்குழுவைக் கூட கட்டிக்கொள்ள முடியாத புரட்சியாளர்கள் தமக்கு பொருத்திக் கொள்ளமுயன்றால் அது ' ஆண்டிகள் சேர்ந்து மடம்கட்டிய கதையாகிவிடும் . '

அரசியல் மேலாண்மை , எதிர்புரட்சிகர சக்திகளிடம் இருக்கம்போது அதனை முறியடிப்பதற்கான முயற்சிகளை அரசியல்ரீதியாக மேற்கொள்ளாது , அந்த அரசியல் பணிகளுக்கு மாற்றாக செய்யப்படும்சமூகசேவை , கலை இலக்கிய முயற்சிகளும் கூட எதிர்புரட்சிகர சக்திகளை பலப்படுத்துவதிலேயே போய்முடியும் . புலிகளின் ஆதிக்கத்தின் கீழுள்ள பிரதேசத்திலுள்ள புரட்சியாளர்கள் மாற்று அரசியல் வடிவங்கள் எதனையும் கொண்டிராத நிலையில் கலை முயற்சிகளின் மூலம் மக்களின் உணர்வுகளை தட்டியெழுப்ப முனைந்தால் விழிப்புணர்வு பெற்றவர் புலிகளுடன்தான் இணைந்து கொள்வார் . இவ்வாறே புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் புரட்சியாளர்கள் அகதி வேலைகள் செய்யும் போதும் கூட அதன் பலன்களை புலிகள் இலகுவில் கையகப்படுத்திக் கொள்வர் .

' பகுதி முழுமைக்கு கீழ்படுவது போல சமூக ஜனநாயக கட்சியானது சீர்திருத்தங்களுக்கான போராட்டத்தை விடுதலைக்கான , சோசலிசத்திற்காக நடக்கும் புரட்சிகரமான போரட்டத்திற்கு கீழ்ப்படுத்துகிறது ' . . . . ' புரட்சியாளர்கள் ஒரு வலுவான அடித்தளத்தைப் போடுவதிலிருந்து தொடங்க வேண்டும் . மாறாக மக்களுக்கு மிகவும் எட்டக்கூடியதாக இருப்பதாக கூறப்படுவனவற்றிலுருந்து தொடங்கக்கூடாது . இப்படிச் செய்தால் மக்களின்உடனடிப் பிரச்சினைகளையும் தீர்க்கமாட்டோம் . எமது புரட்சிகர இலக்கையும் அடையமாட்டோம் ' என்று லெனின்கூறுவதை நாம் மனதில் பதித்துக்கொள்வது இன்று மிகவும் அவசியமானதாகிறது .

> *அரசியல் மேலாண்மை , எதிர்புரட்சிகர சக்திகளிடம் இருக்கம்போது அதனை முறியடிப்பதற்கான முயற்சிகளை அரசியல்ரீதியாக மேற்கொள்ளாது , அந்த அரசியல் பணிகளுக்கு மாற்றாக செய்யப்படும் சமூகசேவை , கலை இலக்கிய முயற்சிகளும் கூட எதிர்புரட்சிகர சக்திகளை பலப்படுத்துவதிலேயேபோய் முடியும் .*

## 6) தமிழக புரட்சியாளர்களது அனுபவங்களிலிருந்து

' புரட்சிக்கனல் ' என்ற சஞ்சிகையின் முதாலாவது இதழில் வெளிவந்திருந்த கட்டுரையில் , தமிழக புரட்சிகர சக்திகளது வேலைகளில் தன்னியல்புவாதம் விளைவித்த கேடுகளைப் பற்றிவரும் . செய்திகளை சுருக்கமாக தொகுத்து நோக்குவோம்

மாநில அமைப்பு கமிட்டி என்ற அமைப்பில் அங்கத்துவம் வகித்த ஒரு பகுதியினர் அந்த அமைப்பினுள் எழுந்த கோட்பாட்டு , அரசியல் மற்றும் அமைப்பு நடைமுறைகள் பற்றிய முரண்பாடுகளால் , அதிலி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருந்து 1983ல் வெளியேறி தனியான அமைப்பாக , தமிழ் நாட்டு அமைப்புக் கமிட்டி எனும் பெயரில் செயற்படத் தொடங்குகிறார்கள் . ஒரு ஐக்கியப்பட்ட கட்சியை கட்டுவதும் , கட்சியை மக்களுடன் இணைத்து ஒரு அரசியல் சக்தியாக எழுச்சியுறுவதும் தமது அமைப்பின் இலக்காகவும் , அதற்கு அவசியமான அமைப்புப் பலத்தைப் பெறுவது அமைப்பின் உடனடி நோக்கமாகவும் கருதிச் செயற்படத் தொடங்குகிறார்கள் .

தமது அமைப்பின் பணிகளை வகுக்கும் போது கோட்பாட்டு , அமைப்பு , மக்கள் திரள் இயக்கப்பணிகள் போன்ற பல்வேறு பணிகளையும் அவற்றிற்கேயுரிய முதன்மை , இரண்டாம் பட்சம் என வரிசைப்படுத்தி , இந்த வரிசையை பாதுகாக்கப்படாமல் விடப்படுவதானது வேலை முறையில் தன்னியல்பு நிலவுவதற்கு காரணமாகிறது . அமைப்பானது குறைந்த பட்சம் பலத்தைப் பெறுவது எனும் நோக்கில் கோட்பாட்டுப் பணிகள் முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கவேண்டும் . கோட்பாட்டுப் பணிகளைப் பிரதானப் படுத்தி அதன் மூலம் ஊழியர்களை வென்றெடுத்து அவர்களை அமைப்பாக்குவது என்ற வேலை முறையை செயற்படுத்துவதற்கு தலைமைக் கொமிட்டிகட்சியில் கோட்பாட்டுப் பத்திரிக்கை ஒன்று தொடர்ந்து வெளியிடுவதையும் அதற்கான கட்சிக் கொமிட்டிகள் கட்டப்படுவதையும் தனது முதற்பணியாக கொண்டிருக்க வேண்டும் .

ஆனால் அமைப்பானது கோட்பாட்டுப் பணிகளின் முக்கியத்துவத்தை சரியாக புரிந்து கொள்ளவில்லை . மாநில அமைப்புக் கமிட்டியில் அங்கம் வகித்த போது அதில் நடைபெற்ற கோட்பாட்டுப் போராட்டங்களில் தாம் முன்வைத்த கோட்பாட்டு நிலைப்பாடுகளே போதுமானது என அமைப்புக் கோருகிறது . அத்தோடு அமைப்பு மிகவும் சிறிதாகவும் , மிகக் குறைந்த மக்கள் தொடர்புடையதாகவும் இருப்பதால் ஐக்கியத்திற்கான போராட்டத்தை நடத்துவதற்கே அமைப்பை பலப்படுத்துவதும் , விரிவுபடுத்துவதும் அவசியம் எனக் கருதுகிறது இதனால் அமைப்பைப்பலப்படுத்தவும் , விரிவுபடுத்தவுமாக , ஐக்கியத்திற்கான போராட்டத்துடன் மக்கள் திரளிடையேயான பணிகயைும் , கோட்பாட்டு முயற்சிகளுடன் பெரும் அரசியல் சக்தியாய் மாற்றுவதற்கான பணிகளையும் இணைத்துச் செய்யப்பட வேண்டுமென அது வலியுறுத்துகிறது . ஆரம்ப முழக்கமானது சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை . இதனால் அரசியல் சக்தியாக எழுச்சியுறுவதன் ஊடாகவே ஐக்கியப்பட்டகட்சியைக் கட்டுவதற்கான குறைந்த பட்ச அமைப்புப் பலத்தை பெறமுடியும் என்ற வகையில் இதுவிளங்கிக் கொள்ளப்பட்டது . இதனால் கோட்பாட்டுப் பத்திரிகையை தொடர்ந்து வெளியிடுவதற்கு அமைப்புரீதியான எந்த தயாரிப்பும் செய்யப்படுவதற்கு முன்பே கலைக்குழுக்களின் மூலம் பிரச்சார நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி பின்பு கலைக்குழுக்கள் மூலம் தேர்வு செய்யப்பட்ட முழுநேர ஊழியர்களின் கொமிட்டிகள் கட்டப்பட்டன . இதனால் ஆரம்பத்திலிருந்தே ஊழியர்கொள்கையில் தன்னியல்பு வெளிப்படத் தொடங்குகிறது .

கலைக் குழுக்களுடன் தொடர்புபட்டவர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட இந்த கொமிட்டிகள் விரைவிலேயே நெருக்கடிக்குள்ளாகின்றன. இந்த கொமிட்டிகள் சுயமாக செயற்படும் கொமிட்டிகளாக , அதாவது மேற்கொமிட்டி தோழர்களின் நேரடிப்பங்களிப்பின்றி செயற்படும் கொமிட்டிகளாக இல்லை . அங்கத்தவர்களது அமைப்பு உணர்விலும் , இரகசிய தன்மையிலும் தாராளவாதப் போக்குகள் வெளிப்பட்டன . தாபன அக உறவுகளிலும் , மக்களுடனான உறவுகளிலும் அதிகாரத்துவப் போக்குகள் வெளிப்பட்டன . இந்த குறைபாடுகள் இனம் காணப்பட்டு , அடுத்துவந்த வேலைத்திட்டத்தில் இதற்கு முதன்மை அளிக்கப்பட்டது . 1984ல் வரையப்பட்ட வேலைத்திட்டமானது மூன்று கட்டங்களைக் கொண்டதாக இருந்தது . முதலாவது கட்டத்தில் மாவட்ட கொமிட்டிகளை சுயமாக இயங்கச் செய்வதே பிரதான பணியாகக் கருதப்பட்டது . இரண்டாவது கட்டத்தில் , அரசியல் பத்திரிக்கையை தொடங்குவது , புதிய மக்கள் திரள் அமைப்புக்களைத் தொடங்குவதற்கான பணிகளைச் செய்வதுஎன்பன பிரதான பணிகள் . மூன்றாவது கட்டத்தில் அகில இந்திய பொதுவுடமை புரட்சியாளரது ஒன்றுபட்ட கட்சி அமைப்பிற்கான போராட்டத்தை முதன்மைப்படுத்துவதும், அடிப்படை வர்க்கங்களிடையே மக்கள் திரள் அமைப்புகளை தொட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ங்குவதும் பிரதானபணி .

மாவட்ட கொமிட்டிகளை சுயமாக இயங்கச் செய்யும் நோக்கில் இரண்டு பணிகள் வகுக்கப்பட்டன . முதலாவது , அரசியல் பாடத்திட்டம் ஒன்றைத் தயாரித்து முழுநேர ஊழியர்களுக்கு ஐந்து நாட்கள் வகுப்புகளை எடுப்பது , இரண்டாவது , தாராளவாதப் போக்குகளைக்களையும் நோக்கில் சுயவிமர்சன இயக்கத்தை நடத்துவது , இந்த நடவடிக்கைகளால் அங்கத்தவர்களது அரசியல் விழிப்புணர்வும் , அமைப்பு உணர்வும் , ஓரளவு வளர்ந்தாலும் கொமிட்டிகள் சுயமாக இயங்கும் நிலை ஏற்படும்முன்பே " அரசியல் சக்தியாய் எழுச்சியுறுவோம் " என்ற முழக்கத்துடன் பல்வேறு மக்கள் திரள் அமைப்புக்களை கட்டும் பணி தொடங்கப்பட்டது . பின்பு அடிப்படை வர்க்கங்களை அமைப்பாக்கும் பணி தொடங்கப்பட்டது.

அரசியல் பத்திரிக்கையை வெளியிடுவது மக்கள் திரள் அமைப்புக்களைக் கட்டுவது , பெரியளவிலான மாநாடுகளைக் கூட்டுவது என்றவகையில் அமைப்பின் பணிகள் விரிவடைந்தன . இந்த மாகாநாட்டுப் பணிகளில் ஊக்கமாகக் கலந்து கொண்டவர்களை புதிதாக உள்வாங்கி புதியகொமிட்டிகள் அமைக்கப்பட்டன. இவர்கள் அரசியல் கோட்பாட்டுத் தெளிவோ, அமைப்புப் பயிற்சியோ அற்றவர்கள் . இவர்களை பகுதிநேர பிரச்சாரக்குழு , முழுநேர ஆதரவாளர்கள் அமைப்பு என ஒழுங்கமைத்து , இவர்களிடத்தில் கலைக்குழு , தெருமுனைப் பிரச்சாரம் , அரசியல் , கலாச்சாரபத்திரிகை விற்பனை போன்ற பணிகள் தரப்பட்டன .

மக்கள் திரள் அமைப்புக்களைக் கட்டும் பணிகள் ஓரளவு வெற்றிபெற்றாலும் தொடர்ந்து முன்னேறுவதில் தேக்கம் ஏற்பட்டது . தமது வேலை அனுபவங்களை தொகுத்துக் கொள்வதிலும் , ஊழியர்களை படிப்படியாக அடுத்தடுத்த மட்டங்களுக்கு வளர்த்து , முன்னணி கட்சி அமைப்புக்களைக் கட்டுவதிலும் அணிகள் செயல்திற மற்றவர்களாக இருந்தன . துணை அமைப்புப் பணிகளுடன் கட்சி அமைப்புப் பணிகள் , அரசியல் இயக்கங்கள் ஆகியவற்றை ஒன்றிணைந்த முறையில் கையாள்வதிலும் தேக்கம் வெளிப்பட்டது .

கட்சிக் கொமிட்டிகள் பலதுறைப் பணிகளையும் ஒருங்கிணைத்து , சுயமாக செயற்படும் ஆற்றலைப் பெறாமல் அடுத்த கட்ட வளர்ச்சிசாத்தியமில்லை என்ற நிலை தோன்றியது .

இந்த நிலையில், தோழர்களது அதிகாரத்துவ , தாராளவாத போக்குகளுக்கும் , கொமிட்டிகள் சுயமாக இயங்காமைக்கும் கடந்தகால வேலைமுறையிலும் , ஊழியர் கொள்கையிலும் இருந்த தன்னியல்பே காரணம் எனத் தீர்மானிக்கப்பட்டது . இதனை அடுத்து ஊழியர் கொள்கைகள் வகுக்கப்பட்டு , படிப்படியாக செழுமைப்படுத்தப்பட்டன . ஆனால் கொமிட்டிகள் சுயமாக இயங்கும் தன்மை இல்லாததனால் இந்த கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை . வேலை முறையிலும் ஊழியர் கொள்கையிலும் நிலவிய தன்னியல்பு காரணமாக எந்தவித மாற்றமும் இன்றி கட்சிக்குள் இடம்பெற்ற குட்டிமுதலாளிய , உதிரிசக்திகள் பலர் கட்சியில் தேவைகளுடன் முரண்பட்டு வெளியேறி இருக்கிறார்கள். அல்லது வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் . இதற்கு தலைமைக் கொமிட்டி கூடவிதிவிலக்காக இல்லை . இதுவரையில் இருந்துவந்த தலைமைக் கொமிட்டிகளில் இடம்பெற்றுவந்துள்ள மொத்த தோழர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் தலைமையிலிருந்து நீங்கினர் . அல்லது நீக்கப்பட்டனர் . அவர்களில் ஒருவர் தவிர மற்றவர்கள் அமைப்புத் தொடர்பில் கூட இல்லை . தொடக்கத்தில் இருந்து கட்சிக்கு அரசியல் , கோட்பாட்டுத் தலைமை அளித்து தொடர்ச்சி கொடுப்பவராக ஒரு தோழர் மட்டுமே செயற்பட்டு வருகிறார் . இன்றும் இந்த கட்சிக் கொமிட்டிகள் மேற்கொமிட்டிகளின் நேரடி வழிகாட்டுதல் இன்றி சுயமாக இயங்கும் முழு ஆற்றலையும் பெற்றுவிட வில்லை.

> *கோட்பாட்டுப் பணிகளுக்கு தாம் உரிய முக்கியத்துவம் அளிக்கத் தவறியதானது , தாம் வாழும் சமூகத்திலுள்ள தீவிரமான முரண்பாடுகளையே சரியாக கண்டறிந்து கொள்ளத் தடையாகி விட்டதை இப்போது உணர்கிறார்கள்..*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> *கோட்பாட்டுப் பணிகளை தொடர்ந் [illegible] ந்தாலும் கோட்பாட்டுப் பணிகளுக்கு அவசியமான அமைப் [illegible] களை [illegible] குப்பதற்கு தொடக்கத்திலேயே தமிழ் நாட்டு அமைப [illegible] கமிட்டி தவறிவிட்டது . இதனால் கோட்பாட்டுப் பணி [illegible] ர்ச்சியா [illegible] தலைமையிடம் கொண்டதாகவும் அமையவில்லை . கோட்பாட் [illegible] க்கான தலைமைப்பாத்திரம் இவ்வாறு மறுக்கப்பட்டதானது , வே [illegible] , ஊழியர் கொள்ளையிலும் தன்னியல் [illegible] ணமாயிற்று.*

இத்தனை நெருக்கடிகளுக்கும் பின்னர் தனது கடந்தகால வேலைமுறைகள் அனைத்தையும் மீள்மதிப்பீடு செய்யும் தமிழ் நாட்டு அமைப்புக் கமிட்டியானது மிகவும் கசப்பான சிலபடிப்பினைகளை பெற்றாக வேண்டியுள்ளது . கோட்பாட்டுப் பணிகளுக்கு தாம் உரிய முக்கியத்துவம் அளிக்கத் தவறியதானது , தாம் வாழும் சமூகத்திலுள்ள தீவிரமான முரண்பாடுகளையே சரியாக கண்டறிந்து கொள்ளத் தடையாகி விட்டதை இப்போது உணர்கிறார்கள். தேசிய முரண்பாடானது தீவிரமாக எழுந்து மக்களை தத்தமது தேசஅரசை உருவாக்கும் தேவையை நோக்கித் தள்ளியுள்ள நிலையில் தாம் இந்த புறநிலையதார்த்தங்களைக் கண்டு கொள்ளாது மக்களது போராட்டங்களுக்கும் அவர்கள் உணர்வுகளுக்கும் மிகவும் பின்தங்கி நின்றுவிட நேர்ந்ததை கண்டு கொள்கிறார்கள் .

தமிழ்நாட்டு அமைப்புக் கமிட்டியின் வேலைமுறையிலும் , ஊழியர் கொள்கையிலும் நிலவிய தன்னியல்பு என்பது இந்திய பொதுவுடமை இயக்கத்தின பொதுப்பண்பாகிய தேசம் பற்றிய ஏகாதிபத்திய பொருளாதார வாதத்தின் துணை விளைபொருளே . தேசம் பற்றிய கருத்தியலான பொருளாதார வாதம் இந்திய பொதுவுடமை இயக்கம் புரட்சிகர அரசியல் அதிகாரத்தை நிறுவுவதற்கு திறனற்றதாக ஆகிவிட்ட படியால் , அதன் பணிகள் அனைத்தும் பொருளாதாரவாத , சட்டவாத கோரிக்கைகளால் அல்லது தீவிரவாத வீரசாகசங்களால் மக்களைத் திரட்டுவது அல்லது கவருவது என்பதை நோக்காக கொண்டதாக ஆக்கிவிட்டது . புரட்சிகர அரசியலுக்கு மக்களை உணர்வுபூர்வமாக அணிதிரட்டுவதாக அமையவில்லை . அரசியலே புரட்சிகரமற்றதாய் இருக்கும்போது பணிமுறைகள் வேறு விதமாக இருந்திருக்கமுடியாது . புரட்சிகர அரசியலுடன் இணைக்கப்படாத மக்களைத் திரட்டும் இவ்வேலைமுறைகள் முற்றிலும் தன்னியல்பு வேலைமுறைகளே அன்றி வேறல்ல . இதில் புரட்சிகர கோட்பாடு இல்லை . எனவே அதன் தலைமையிடம் என்று எதுவுமில்லை . இருப்பதெல்லாம் பிற்போக்கு அல்லது வறட்டுவாத , பொருளாதாரவாத கோட்பாடே என்பதால் இதன் வேலைமுறையும் , ஊழியர் கொள்கையும் தன்னியல்பின் பாற்பட்டதேயாகும்.

குறைந்த பட்ச பலத்தைப் பெறுவது என்ற அமைப்பின் ஆரம்ப நோக்கானது , கோட்பாட்டுப் பணிகளை முதன்மைப்படுத்தி அதன்மூலம் ஊழியர்களை வென்றெடுத்து இந்த பலத்தை பெறுவதை நோக்கி முன்னேறியிருக்கவேணடும் . வேலைமுறையில் இருந்த தன்னியல்பு காரணமாக கோட்பாட்டுப் பணிக்கு முதன்மையளிக்காமல் , கலைக்குழுக்கள் மூலம் ஊழியர்களை வென்றெடுக்கும் வேலைமுறைக்கு காரணமானது . ஊழியர் கொள்கையில் இருந்த தன்னியல்பானது குறைந்தபட்ச அமைப்புப்பலம் பெறுவது என்ற இலக்கை கட்சி கொமிட்டிகளை சுயமாக இயங்கச் செய்வதே உடனடி இலக்காக மாற்றிவிட்டது.

கடந்த கால ஊழியர்தேர்வும் , தயாரிப்பும் தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



னியல்பாகவே நடந்து வந்துள்ளன . இக்காலத்தில் பின்பற்றப்பட்டு வந்த ஊழியர் கொள்கையானது சரியான ஊழியர் கொள்கைக்குத் தலைகீழான முறையிலேயே இருந்து வந்திருக்கிறது . அமைப்புக்குத் தேவையான முறையில் ஊழியர்களைத் தயாரித்து அமைப்பை கட்டுவதற்குப் பதிலாக தயாராக இருந்தவர்களைக் கொண்டு அமைப்பைக்கட்டி , அவர்களை அவ்வமைப்பில் ஊழியர்களாக தயாரிக்கும் முறையே பின்பற்றப்பட்டு வந்துள்ளது . அமைப்பில் நிலவிய கோட்பாட்டு வரட்சியானது ஊழியர்களை கோட்பாட்டு ரீதியாகஅமைப்பில் இணைப்பதற்கு தடையாகவும் , அமைப்பு புறநிலையான இயக்கங்களுக்கு தலைமையளிக்க முடியாத நெருக்கடிக்கும் அடிப்படையாக அமைந்தது . இதுவே கொமிட்டிகள் சுயமாக இயங்குவது தொடர்ந்து பிரச்சனையாக இருந்து வருவதற்கும் , மாற்று வர்க்க கருத்தோட்டங்களான தாராளவாத , அதிகாரத்துவ , போக்குகள் தொடர்ந்தும் நீடிப்பதற்குக் காரணமாயின.

கோட்பாட்டுப் பணிகளை தொடர்ந்து செய்து வந்தாலும் கோட்பாட்டுப் பணிகளுக்கு அவசியமான அமைப்புப்பணிகளை வகுப்பதற்கு தொடக்கத்திலேயே தமிழ் நாட்டு அமைப்புக் கமிட்டி தவறிவிட்டது . இதனால் கோட்பாட்டுப் பணி தொடர்ச்சியானதாகவும் , தலைமையிடம் கொண்டதாகவும் அமையவில்லை . கோட்பாட்டுப் பணிக்கான தலைமைப்பாத்திரம் இவ்வாறு மறுக்கப்பட்டதானது , வேலைமுறையிலும் , ஊழியர் கொள்ளையிலும் தன்னியல்பு நிலவுவதற்கு காரணமாயிற்று . வேலைமுறையிலும் ஊழியர் கொள்கையிலும் நிலவிய தன்னியல்பானது கட்சியின் வளர்ச்சிக்குதடையாகி ஒரு தேக்கம் ஏற்படக் காரணமாகியது .

இந்த கசப்பான படிப்பினைகளுடன் இந்த தவறுகளைக் களைவதற்கான முன்முயற்சிகளை அமைப்பு எடுக்கிறது . கடந்த கால தேசிய சூனியவாதத்தை கைவிட்டு தமிழ் நாட்டு விடுதலையை தனது இலக்காக கொண்டு தனது அமைப்பின் பெயரை ' தமிழ் நாடு மார்க்சிய லெனினிச கட்சி ' எனமாற்றிக் கொண்டுள்ளது . கடந்த காலத்தில் 70 ற்கும் மேற்பட்ட முழுநேர ஊழியர்களையும் , பல்லாயிரக் கணக்கான பிரதிகள் விற்பனையாகும் அரசியல் , கலாச்சார இதழ்களையும், பலதரப்பட்ட மக்கள்திரள் அமைப்புகள் , பலதரப்பட்ட பிரச்சார நடவடிக்கைகளுக்கான குழுக்கள், அரசியல் இயக்கங்கள் என்பவற்றின் மூலம் தமிழக அரசியல் தளத்தில் குறிப்பிடத்தக்க அளவிற்கு தாக்கம் நிகழ்த்தக் கூடியதாக இருந்த இந்த அமைப்பானது தனது கடந்தகால வேலைமுறைகளில் இருந்த தன்னியல்பைக் களையும் நோக்கில் தனது கவனத்தை உள்முகமாக திருப்பத் தொடங்கியுள்ளது . அந்த நோக்கில் ஒரு கோட்பாட்டுப் பத்திரிக்கை தொடர்ச்சியாகவும் , கிரமமாகவும் கொண்டு வருவது அதன் முதல் பணியாக அமைகிறது .

தமிழீழ போராட்டத்தைப் பொறுத்தவரையில் , பொதுவில் , தன்னியல்பான போராட்டத்தில் , தன்னியல்பாகவே எழுந்த அமைப்புக்கள் என்ற வகையில் இந்த அமைப்புக்களின் நடவடிக்கைகளில் தன்னியல்பு வெளிப்படுவது ஆச்சரியத்திற்குரிய தொன்றல்ல . ஆனால் நீண்ட கால கட்சிப்பாரம்பரியமும் , தொடர்ச்சியானஅமைப்பு அனுபவமும் கொண்ட புரட்சியாளர்கள் மத்தியிலே வேலைமுறையிலும் , ஊழியர் கொள்கையிலும் தன்னியல்பு நிலவுவதும் , அவை அமைப்பின் வளர்ச்சியில்ஏற்படுத்தும் தாக்கங்களும் தமிழீழ புரட்சியாளர்கள் ஒவ்வொருவரும் எச்சரிகையுடன் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களாகும் .

> *தமிழீழ போராட்டத்தைப் பொறுத்தவரையில் , பொதுவில் , தன்னியல்பான போராட்டத்தில் , தன்னியல்பாகவே எழுந்த அமைப்புக்கள் என்ற வகையில் இந்த அமைப்புக்களின் நடவடிக்கைகளில் தன்னியல்பு வெளிப்படுவது ஆச்சரியத்திற்குரிய தொன்றல்ல .*

இப்போதுள்ள முன்னேறிய பிரிவினர்களில் மிகப் பெரும்பாலானோர் 80களின் முற்பகுதியில் அரசியலுக்கு வந்தவர்களாவர் . இந்த காலகட்டமானது , ஒரு எழுச்சிக் காலகட்டமாகும் . அப்போது மக்கள் திரள் திரளாக அமைப்புக்களை நாடி வந்தா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ர்கள் . தன்னியல்பு வேலை முறைகளே எங்கும் ஆட்சி செய்தன . இந்த வேலை முறைகளுக்குப் பழக்கப்பட்டவர்கள் இந்த அலை தணிந்துவிட்ட காலத்திலும் அதே வேலைமுறைகளையே முன்மொழிகிறார்கள் . அதிலும் முக்கியமாக கடந்தகால தன்னியல்பு வேலைதான் இன்றைய நெருக்கடிகளின் மூலகாரணம் என்ற படிப்பினையை சிறிதும் பெறாதவர்களாகவே இவர்கள் உள்ளனர் .

*அமைப்புப் பணிகள் என்றவுடன் இவர்கள் மனதில் வருவது மக்களிடம்போவது பத்திரிக்கையை வெளியிடுவது , படைகட்டுவது போன்ற வேலை முறைகளே . இப்படிப்பட்ட நிலையில் நாம் அமைப்புப் பணிகள் என்பதை மறுவரையறை செய்தாக வேண்டியுள்ளது .*

தன்னியல்பு வேலைகள என்பவை உலைகள் போன்றன . அதன்வாயில் எவ்வளவு தான் போட்டாலும் அவற்றை விழுங்கிவிட்டு மேலும் அதிகமாகக் கேட்டு மீண்டும் வாயைத் திறக்கும் . எமது ஆற்றல்கள் இவ்வாறாக தன்னியல்பு வேலைகளில் விரயமாக்கப்பட்டால் இன்று எம்மத்தியில் நிலவும் கற்றுக்குட்டித்தனமும், சித்தாந்த ஒட்டாண்டித்தனமும் தொடர்ந்து நிலைக்கவும் , ஆழப்படவுமேசெய்யும் . அந்தந்த காலகட்டத்தில் தோன்றும் பகுதிப் பிரச்சனைகளில் தன்னியல்பாக செயற்படும் ஒருவர் , இப்படியே தனது வாழ்நாள் முழுவதுமே இப்படிப்பட்ட பணிகளிலேயேசெலவிட்டு விடலாம் . ஆனால் புரட்சியை நோக்கிய இலக்கில் சிறிதேனும் முன்னேறியிருக்கமாட்டார் .ஒரு அமைப்பை , அல்லது ஒரு சிறுகுழுவைக் கூட கட்டியிருக்க மாட்டார். பகுதிப் போராட்டங்களில் கலந்து கொள்பவர்களை வளர்த்தெடுத்து குறைந்தபட்சம் தன்னுடன் இன்னும் நான்கு பேரையாவது அணிதிரட்டியிருக்க மாட்டார்

அமைப்புப் பணிகள் என்றவுடன் இவர்கள் மனதில் வருவது மக்களிடம்போவது பத்திரிக்கையை வெளியிடுவது, படைகட்டுவது போன்ற வேலை முறைகளே. இப்படிப்பட்ட நிலையில் நாம் அமைப்புப் பணிகள் என்பதை மறுவரையறை செய்தாக வேண்டியுள்ளது . ஒரு புரட்சிகர கருக்குழுவைக் கட்டும் நிலையில் கோட்பாட்டுப் பணிகள் முதன்மை பெறுகின்றன . கோட்பாட்டுப் பணிகள் என்பவை கோட்பாட்டு விடயங்களை தேடிக்கற்பது , அதனை கூட்டாக விவாதிப்பது இவற்றின் வெளிச்சத்தில் எமது போராட்டத்துடன தொடர்புடைய பல்வேறு விடயங்களையும்பரிசீலித்து இதன் மூலம் திட்டத்தை வரைவது என்று அர்த்தப்படும் . இப்படியாக கோட்பாட்டுபணிகளே முதன்மையான அமைப்புப்பணிகளாக வரையறுகப்பட்டால், இந்த காலகட்டத்தில் கோட்பாட்டு விடயங்களில் அக்கறையும் தேடலும் உள்ள மக்கள் மத்தியிலுள்ள மிகவும் முன்னேறிய பிரிவினரை இலக்காகக் கொண்டு செயற்பட்டாக வேண்டியுள்ளது . இப்படிப்பட்ட முன்னேறிய பிரிவினருடன் தொடர்பை ஏற்படுத்தவும் , கோட்பாட்டு விவாதங்களை நடத்தவும் உதவக் கூடிய ஒரு கோட்பாட்டு பத்திரிக்கையொன்றை நாம் நடத்த வேண்டும் .

இந்த வகையான பணிகளை நாம முன்மொழிவதைக் கேட்டு ஒருவர் நாம் மக்களை விட்டு அந்நியப்பட்டு போவதாகவும், மக்கள் எம்மை ஒரு பொருட்டாகவே மதிக்கப் போவதில்லையென்றும் ஆட்சேபிக்கலாம் . இவர்களுக்கு லெனின் கூறுவது பதிலாக இருக்கும் . " மக்கள் நம்முடன் இருக்கவில்லை என்கிற காரணத்திற்காக உடனடியான தாக்குதல் பற்றி கூச்சலிடுவது முட்டாள்தனமாகும் , அசிங்கமாகும் . ஏனனில் தாக்குதலுக்குப் பொருள் நிரந்தர துருப்புகளின் தாக்குதல் தான் தன்னியல்பாக வெடிக்கும் மக்களின் எழுச்சியல்ல . நிரந்த துருப்புக்களை மக்கள் மீறி ஒதுக்கித் தள்ளிவிடக் கூடும் என்கிற காரணத்திற்காகவே நிரந்தரத் துருப்புகளின் இடையே ' மிக முறையான அமைப்பைப் புகுத்தும் ' நம் வேலையின் மூலமாக மக்களின் தன்னியல்பான எழுச்சியுடன் சமநடை போட்டுச் செலலத் தயங்க கூடாது . ஏனெனில் எந்த அளவிற்கு இவ்வாறு அமைப்பைப் புகுத்துவதில் சமாளிக்கிறமோ அந்தளவிற்கு மக்கள் இந்த துருப்புக்களை மீறிச் செல்வது பெரும்பாலும் நடக்காது . அதற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தன்னியல்புவாதம் குறித்து. . . .

> இதுவரை காலமும் எமது போராட்டத்தில் ஏற்பட்ட பலவகையான நெருக்கடிகளுக்கும் காலாக இருந்தது மட்டுமின்றி, இன்றுவரை இந்த நெருக்கடிகளிலிருந்து மீளமுடியாதவாறு எம்மைப் பீடித்திருப்பது இந்த தன்னியல்புவாதமேயாகும். எனவே இன்றைய அவலநிலைக்கு முடிவுகட்ட விரும்பும் எவருமே இந்த தன்னியல்புவாதத்துடன் கணக்குத் தீர்த்துக் கொள்வது முன்னிபந்தனையாகிறது.

மாறாக இந்தத் துருப்புகள் மக்களுக்கு தலைமை வகித்துச் செல்லும்' (இங்கு துருப்புகள் என்பது லெனின் புரட்சியாளர்களைத்தான் குறிப்பிடுகிறார் என்பதைகவனத்தில் கொள்க)

இதுவரை காலமும் எமது போராட்டத்தில் ஏற்பட்ட பலவகையான நெருக்கடிகளுக்கும் காலா இருந்தது மட்டுமின்றி, இன்றுவரை இந்த நெருக்கடிகளிலிருந்து மீளமுடியாதவாறு எம்மைப் பீடித்திருப்பது இந்த தன்னியல்புவாதமேயாகும். எனவே இன்றைய அவலநிலைக்கு முடிவுகட்ட விரும்பும் எவருமே இந்த தன்னியல்புவாதத்துடன் கணக்குத் தீர்த்துக் கொள்வது முன்னிபந்தனையாகிறது. இந்த தன்னியல்புவாத சகதியிலிருந்து விடுவித்துக் கொண்டு இன்று எம்முன்னுள்ள முதன்மையான பணிகளை சிறப்புற ஆற்றுவோமாயின், நாளை நாம் அனைத்தையுமேகைவரப் பெற்றவர்களாக இருப்போம். இன்றைய பிரதான கண்ணியை தவறவிட்டுவிட்டால் இன்று எம்பிடமுள்ள எதுவுமே இன்றைய அவலத்தை களைய உதவப்போவதில்லை.

•

## கோட்பாட்டு முயற்சிகளும், அதில் பொதுப்புத்தி ஏற்படுத்தும் பாதிப்புகளும்

கோட்பாட்டுப் பணிகளே இன்றைய காலகட்டத்தல் முதன்மையான அமைப்பு பணிகள் என்றான பின்பு, இன்று எம்மத்தியில் நடைபெறும் கோட்பாட்டு முயற்சிகள் பற்றி நுணுக்கமாகபரிசீலிப்பது அவசியமானதாகிறது. (பொதுவாகவே, அறிவுத்தோற்றம் பற்றி எம்மிடம் சரியான விளக்கங்கள் கிடையாது. இது ஒருவரது தனித்திறமை, திடீரென உதிப்பது, கொடை, போன்றபுரிதல்களே எம்மிடம் உள்ளன. திருஞானசம்பந்தர் 'திருமுலைப்பால்' அருந்தி ஞானம் பெற்றதாககூறப்படும் ஒரு மரபில் வளர்ந்தவர்கள் நாம்) இன்றும் கூட எம்மத்தியிலுள்ள சில 'புத்திஜீவிகளை' தேர்ந்தெடுத்துக் கொண்டு, சகலதும் அறிந்த ஞானிகளாக அவர்களைக் கருதிக்கொண்டு, அவர்களது நிழலில் வளர்வதற்கு முயலும் பலரையும் நாம் 'காணமுடியும். தாவரங்கள் மட்டுமல்ல, அறிவும் கூட நிழல்களின் கீழ்வளர முடியாது என்பதுதான் உண்மையாகும்.

கோட்பாட்டுச் செயற்பாட்டை பொருளாதாரச் செயற்பாடு போலவே ஒரு உற்பத்தியாகவே அல்துாசர் காண்கிறார். அதாவது, பொருளாதார செயற்பாட்டில் இயற்கையான அல்லது பகுதியளவில் பதப்படுத்தப்பட்ட மூலப்பொருள்கள், உற்பத்திச் சாதனங்கள், தொழில்நுட்பம், உழைப்பு என்பவற்றைப்பயன்படுத்தி பயனுள்ள விளை பொருட்களாக மாற்றப்படுகின்றன. அவ்வாறே, கோட்பாட்டுச்செயற்பாட்டில், அவதானிப்புக்கள், கருத்துக்கள், கருத்தாக்கங்கள் ஆகிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூலப்பொருட்கள் , கருத்தாக்கசாதனங்கள் , விஞ்ஞான முறையியல் , கோட்பாட்டு உழைப்பு ஆகியவற்றின் மூலம்அறிவாக மாற்றப்படுகின்றது . அதாவது அறிவு என்பது தானக உதிப்பதில்லை . இது திட்டவட்டமான கோட்பாட்டு உழைப்பின் விளைபொருளாகும் . இந்த உழைப்பிற்கு கருத்தாக்க சாதனங்கள் அவசியமானவை . விஞ்ஞான முறையிலை இங்கு கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் . எனவே கோட்பாட்டுச் செயற்பாட்டின்போது கருத்தாக்க சாதனங்கள், விஞ்ஞான முறையியல் , கோட்பாட்டு உழைப்பு என்பவை மிகவும் அத்தியாவசியமானவையாகும்.

கோட்பாட்டு செயற்பாட்டிற்கு அத்தியாவசியமான மூன்று காரணிகளையும் பிரக்ஞைபூர்வமாக கருத்திற்கெடுக்காமல் , தன்னியல்பாக கோட்பாட்டுச் செயற்பாடு மேற்கொள்ளப்படுமாயின் பெறப்படுவது பொதுப்புத்தியாகும். அதாவது பொதுப்புத்திஎன்பது கோட்பாட்டுச் செயல்பாட்டில் தன்னியல்பின் விளைவாகும் . இங்கு முறைப்படி தூய்மைப்படுத்தப்படாத , பதப்படுத்தப்படாத மூலப்பொருட்கள்எமது சமூகத்தில் இருந்து நாம் விமர்சனமின்றி ஏற்றுக்கொண்ட முதலாளித்துவ சித்தாந்த சாதனங்களின் துணைகொண்டு , விஞ்ஞானபூர்வமற்ற முறையியலின் துணையால் , சரியான கோட்பாட்டு உழைப்பு இன்றி தன்னியல்பாக தொடர்பு படுத்தப்படுகிறது . இதன் விளைவாகப் பெறப்படும் , பொதுப்புத்தியானது அநேகமான சந்தர்ப்பத்தில் முதலாளித்துவ சித்தாந்த வகைப்பட்டனவாகவோ , குட்டி முதலாளித்துவ மனோபாவங்களின் பாற்பட்டவையாகவோ இருந்து விடும் வாய்ப்புண்டு .

கோட்பாட்டுச் செயற்பாடுபற்றி இன்னும் சற்று விரிவாகப்பார்ப்போம் : எமது கோட்பாட்டுச் செயற்பாட்டின் இலக்குகளாக சமூக உருவாக்கமும் , அதன் நிகழ்வுகளும் அமைகின்றன , என்பது உண்மையேயாயினும் ஒருவர் தனது கண்ணுக்குத் தெரிபவை அனைத்தையுமே அவ்வாறு எடுத்துக்கொள்வதில்லை . அவர் தனது நோக்கத்திற்கு எவை எவை தேவைப்படுகின்றனவோ , அவற்றை மட்டுமே தேர்ந்தெடுக்கிறார் . இப்படிச் செய்வதற்கு அவர் தனது மூளையில் ஏற்கனவே ஒரு சிந்தனைகளின் வலைப்பின்னலை – ஆய்வுச் சட்டகத்தை – கொண்டிருக்க வேண்டும் .

மிகவும் எளிமையான ஒரு தேடலில் கூட ஒரு ஆய்வாளரது மனதில் எடுகோள்களால் கட்டப்பட்ட சட்டகம் காணப்படுகிறது . எந்த விதமான தகவல்களைத் தேடவேண்டும் ? எந்ததகவல்கள் பொருத்தமற்றவை ? அதனால் தவிர்க்கப் படவேண்டியவை : தனது ஆய்வுக்கான நோக்கம் என்ன ? எந்த உறவுகளைப் பின்தொடர்ந்து செல்வது பயனுடையதாகவிருக்கும் ? போன்ற தகவல்களை இந்த ஆய்வுச் சட்டகம் அவருக்கு வழங்கி அவரின் தேடலை வழிநடத்துகிறது . வெளிப்படையானவற்றை அப்படியே பதிவு செய்வது விஞ்ஞானமாகமாட்டாது .

எல்லா உண்மைகளும் ஒரு சிக்கலான பெரிய நிகழ்வுப் போக்கிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவையே . சிக்கலான, குழப்பமான நிகழ்வுகளின் தொகுப்பிலிருந்து நாம் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றில் கவனத்தை குவிக்கிறோம் . ஏனெனில் நாம் மனதில் கொண்டுள்ள பிரச்சனையுடன் அவை தொடர்புடையவை என நாம் கருதுகிறோம் . அதாவது , எமது மனதில் ஒருவித தகவல் குறிப்புக் கோவையின் சட்டகம் ஒன்று ( Frame of Reference ) இருக்கிறது . இது எமக்கு பொருத்தமானவற்றை சுட்டிக்காட்டுகிறது .

பிரஞ்சுப் புரட்சியில் பல்லாயிரக்கணக்கான சம்பவங்கள் இருந்தன . அவற்றில் பல மிகவும் முக்கியமானவை . அதே போலவே முக்கியத்துவம் அற்ற பல சம்பவங்களும் , விதிவிலக்கான பல நிகழ்வுகளும் இருக்கவே செய்தன . வரலாறானது விதிவிலக்கானவற்றையும் , முக்கியத்துவமற்றவற்றையும் நீக்கிவிட்டு முக்கியமான சம்பவங்களை ஒன்றோடொன்றுதொடர்புபடுத்தி அதனை முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி என்று தீர்ப்பளித்தது . அதாவது , குறிப்பிட்ட ஒரு சமூக நிகழ்விலிருந்து எவற்றை தேர்ந்தெடுப்பது என்பது முக்கியமானது . இதன் மூலம் நாம் மூலப்பொருட்களை தூய்மைப் படுத்தி எடுத்தாக வேண்டும் .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தன்னியல்புவாதம் குறித்து. . . .

ஒரு தனிப்பட்ட உண்மையானது , அதனால் உரு வாக்கப்படும் முழுமையின் பின்புலத்திலேயே அர்த் தம் பெறுகிறது . உண்மை என்பது உடனடியாக தரப்பட்டவையாக , ஸ்தூலமான பொருட்கள் அல்ல . மாறாக , மனிதர் , சமூக உறவுகள் , நிறுவனங்கள் என்ற முழுமையினுள்ளே இருக்கிறது . இயங்கியல் கோட்பாட்டின் அடிப்படைக் கொள்கை யாதெனில் அனுபவரீதியான உண்மை முழுமையுடன் இணை க்கப்பட வேண்டும் . இல்லாத போது அவை சூட்சும மானதாக , மேலெழுந்த வாரியானவையாக இரு க்கும் . இதனால் கோட்பாட்டு ரீதியில் தவறிழைக்கக் கூடியவை சமூகஉறவுகளில் இருந்து பிரித்தெடுக் கப்பட்ட தனி நபர்களும் , வரலாற்றுப் போக்கிலிரு ந்து பிரித்தெடுக்கப்பட்ட சம்பவங்களும் இப்படியாக கோட்பாட்டு ரீதியாக தவறிழைக்கக் கூடியவை யாகும் . மார்க்சிய இயங்கியல் அணுகு முறைகளில் முதன்மையாக காணப்படும் முறைமையாதெனில் ஒரு தோற்றப்பாட்டை பரஸ்பரம் தொடர்பு படுத்தி பார்ப்பதாகும் . உண்மைகளை தனிமைப்படுத்தி , இறுகிய புறவயமான தரவுகளினூடாக பார்க்காமல் அனைத்தும் தழுவிய நிகழ்வுப் போக்காகக்காண் பதாகும் . மார்க்சிற்கு முந்திய சமூகவியல் கோட்பா டுகள் பொதுவாக சமூகம் பற்றிய அனுபவவாதக் கருத்துக்களைக் கொண்டிருந்தன. இங்கு தனிநபர் கள் , அவர்கள் சமூகத்தின் அங்கத்தவர்களாகஇரு ந்த போதிலும் அந்த தொகுப்பிலிருந்து தனிமைப் படுத்தி பார்க்கப்பட்டார்கள் . இதனால் இவை சமூக நிகழ்வுகளைப் புரிந்து கொள்வதில் அதிகம் உதவ முடியவில்லை , தரவுகளை பரஸ்பரம் தொடர்பு படுத்தி , முழுமையிலேயே அவை அர்ததம் பெறுவதை கண்டறிந்தேமார்க்சியத்தின் புரிதலை மிகவும் ஆழப்படுத்தியதாகும் . (2)

வெளிப்படையான உண்மைகள் நாம் சேகரிப்பத ற்காக காத்துக்கிடப்பதில்லை . உண்மைகள் வெளி ப்படையாகவே காணப்படுமாயின் மேற்கொண்டு விஞ் ஞானத்தின் தேவையே இருக்காது என்கிறார் மார் க்ஸ் . உண்மைகளை நாம் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் . எந்தெந்த தகவல்களை தேடுவது என்பது எமது நோக்கத்தைப் பொறுத்தது . எமது கலாச் சார பயிற்றுவிப்புக்களால் நாம் எதனைக் காண்பது , எதனைக் காணாமல் போவது என்று வடிவ மைக்கப் பட்டுள்ளோம் . நாம் பார்ப்பவை எல்லாவற் றையுமே காண்பதில்லை . ( We do not see the same things we look ) ஒருவர் எதனைக் காண்கிறார் என்பது அவர் எதனை நோக்கு கிறார் என்பதிலும் , முன்னைய பார்வை – கருத்தா க்க அனுபவங்கள் ( Visual conceptual experiance ) எதனைக் காணுமாறு கற்பித்து ள்ளதுஎன்பதையும் பொறுத்துள்ளது . ஒரு வனப் பான நிலப்பரப்பைப் பார்க்கும்ஒரு விவசாயியும் , ஓவியனும் வேறுபட்ட விடயங்களையே காண்கிறார்கள் . விவசா யிக்கு என்னதானியம் அங்கு விளையக் கூடும் என்று படுகிறது . ஓவியனுக்கு அதன் அழகுக் கோல ங்கள் புலப்படுகிறது . மற்றவர்கள் பார்வையிலிருந்து வேறு விதமாக உலகைக் காண்பதற்கு நாம் அவ் வாறு பயிற்றப்பட்டவர்களே .

ஒரு பொருளாதார நிபுணரும் , சமூகவியலாளரும் சமூகத்திலிருந்து தமக்குத் தேவையான தகவல் களைப் பெறும் போது தமது மூளையில் உள்ள ஆய்வுச் சட்டகத்தின் அடிப்படையில் தான் தரவுகளை சேகரிக்கிறார்கள் . ஒருவரது கண்ணுக்கு பல விபர ங்கள் தெரியக்கூடும் . இவற்றுள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய அம்சங்களை தேர்ந்தெடுத்து , அவற்றை உரிய முறையில் தொடர்புபடுத்துவதற்கு போதியளவு கோட்பாட்டுப் புரிதல் முன் நிபந்தனையாக அவசியமா கிறது. ஒரு தேசியவாத இயக்கத்தை மதிப்பிடு வதாயின் முதலில் எம்மிடம் தேசியவாதம் பற்றிய கோட்பாடுகளால் ஆன ஒரு வலைப்பின்னல் இருக்க வேண்டும் . அவ்வாறே ஒரு பெண் விடுதலை இயக்கத்தின் நடவடிக்கைகள் , கோரிக்கைகளை மதிப்பிடுவதாயின் பெண் நிலைவாத கோட்பாட்டு களால் ஆன ஒரு ஆய்வுச் சட்டகம் எம்மிடம் இருக்க வேண்டும் . இல்லாதபோது பலமுக்கியத்துவம் வாய் ந்த நிகழ்வுகளை ஒருவர் கவனிக்கத் தவறிவிடு வார் . முக்கியத்துவம் இல்லாதவற்றை தூக்கி ப்பிடித்துக் கொள்வார் . பற்றிக் கொண்டவற்றை பொருத்தமில்லாத முறையில் தொடர்புபடுத்துவர் . இதனால் அந்த நிகழ்வுகளுக்கு பின்னாலுள்ள உண்மை புலப்படாமலேயே போகிறது . இந்த குறைபா டுடையமுறைகளினால் உருவாக்கப்படுவது அரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறை அல்லது போலி உண்மைகள் மாத்திரமே . இவை சமூக ஆய்வில் , புரட்சிகர செயற்பாட்டில் பயன்படமாட்டா .

அடுத்ததாக நாம் சேகரிக்கிற தரவுகளை சூட்சுமப்படுத்தும் கட்டம் , – அதாவது மூலப்பொருட்களை பதப்படுத்தும் கட்டம் – வருகிறது . நாம் பல தரப்பட்ட தகவல்களையும் , சேகரித்து , அவற்றை வகைப்படுத்தி , பொதுமைப்படுத்தி , சூட்சுமப்படுத்துவதன் மூலம் கருத்தாக்கங்களாக மாற்ற வேண்டும் . ஒரு நபர் அல்லது சம்பவம் என்று எடுத்துக் கொண்டுஅதனை அப்படியே பொதுமைப்படுத்தி சூட்சுமப்படுத்த முனைந்தால் தவறிளைப்பதாகஆகிவிடுகிறது . உதாரணமாக தனது பிள்ளை பரீட்சையில் சித்தியடையாததைக் காணும் ஒரு பாமரப்பெற்றோர் ஆசிரியர் சரியாக கற்பிக்கவில்லையென்றோ அல்லது பரீட்சை கடினமாக அமைந்துவிட்டதாகவோ கருதக்கூடும் . ஆனால் ஒரு கல்வி அதிகாரி இப்படிப்பட்ட ஒரு முடிவுக்கு வரமுன்பு குறைந்த பட்சம் பரீட்சைக்கு தோன்றிய மாணவர்களின் எண்ணிக்கை , சித்தியடைந்தோரின் எண்ணிக்கை , வட்டாரத்தில் சித்தியடைந்தவர்கள் சராசரி போன்ற தகவல்களைப் பார்க்கவேண்டும் என்பதை அறிந்திருப்பார் . இவ்வாறே ஒரு சமூக நிகழ்வையும் மதிப்பிடும் போது விரிவானதகவல்களை சேகரிப்பது அவசியமானதாகிறது .

அடுத்ததாக நாம் சூட்சுமப்படுத்துவதன் மூலம் உருவாக்கிய கருத்தாக்கத்தை , குறிப்பிட்டதுறையில் உள்ள குறிப்பிட்ட ஒரு சிந்தனைக் கட்டைச் சேர்ந்த ஏனைய கருத்தாக்கத்துடன் தொடர்புபடுத்தும் பிரச்சனை வருகிறது. அதாவது நேரடியான அர்த்தத்தில் கோட்பாட்டு உற்பத்தி நடைபெறவேண்டும் . இதனை முறையாகச் செய்யும் போதுதான் குறிப்பிட்ட சமூக நிகழ்வுதொடர்பான முறைப்படியான ஒரு கோட்பாட்டைக் கொண்டிருப்பதாக அர்த்தப்படும் .

புரட்சியாளர்கள் தாம் வாழும் சமூகத்தில் இப்படிப்பட்ட கோட்பாட்டுச் செயற்பாட்டை மேற்கொள்வதன் மூலம் தாம் வாழும் சமுதாயம் பற்றி துல்லியமான கருத்துக்களை உருவாக்கிக்கொள்ள வேண்டும் . அப்போது தான் தமது புரட்சிக்கு வழிகாட்டவல்ல திட்டம் , மூலஉபாயம் , தந்திரோபாயம் போன்றவற்றை வகுத்து போராட்டத்தை பிரக்ஞை பூர்வமாக முன்னெடுத்துச் செல்வது சாத்தியப்படும் . ஆனால் எமது சமூகத்தில் மார்க்சியம் தொடர்பாக உள்ள ஒரு கொச்சைத்தனமானவிளக்கமானது இதற்கு பெருந்தடையாக அமைகிறது . அதாவது மார்க்சியத்தில் ஏற்கனவே எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வு காணப்பட்டிருப்பதாகவும் அதனை செயற்படுத்துவது மாத்திரமே தமது கடமை என்பதாக ஒரு விளக்கம் எமது முன்னேறிய பிரிவினரிடத்தில் பொதுவாகக் காணப்படுகிறது . ஒரு கோட்பாடு அது எவ்வளவுதான் முன்னேறியதாக இருப்பினும் கூட , அது புரட்சி தொடர்பான மிகவும் பொதுப்படையான விதிகளைத் தருமேயன்றி , ஒரு குறிப்பிட்ட போராட்டம் தொடர்பான குறிப்பான விதிகளை அந்தந்த நாட்டின் புரட்சியாளர்கள் தமது சொந்தக கோட்பாட்டுச் செயற்பாட்டினூடாகவே கண்டறிய வேண்டும். இதற்கு அவர்கள் தமது காலத்தில் மிக முன்னேறிய கோட்பாட்டைக் கொண்டிருப்பதுடன் தமது சமூக உருவாக்கம் பற்றிய முழுமையான ஆய்வை மேற்கொண்டு முக்கியமான தமது கோட்பாட்டு முடிவுகளை வந்தடைய வேண்டும் . ஆனால் மார்க்சியம் தொடர்பான மேற்கூறிய கொச்சைத்தனமான விளக்கமானது , இந்த கோட்பாட்டுச்செயற்பாட்டிற்கு பதிலாக மார்க்சியத்தை வியாக்கியானம் செய்வதே கோட்பாட்டுப் பணி என்பதாககுறுகிவிடுகிறது . இது பல மோசமான தீங்குகளை ஏற்படுத்திவிடுகிறது . இந்த விதமான அணுகுமுறை காரணமாக புரட்சியாளர்கள் தாம் வாழும் சமூகம் பற்றி மிகவும் சரியான படத்தைப் பெற்றுக்கொள்ள முடிவதில்லை . இதனால் இவர்களது திட்டம் , வேலைமுறைகள் எதுவுமே

*மார்க்சியத்தில் ஏற்கனவே எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வுகாணப்பட்டிருப்பதாகவும் அதனை செயற்படுத்துவது மாத்திரமே தமது கடமை என்பதாக ஒரு விளக்கம் எமது முன்னேறிய பிரிவினரிடத்தில் பொதுவாகக் காணப்படுகிறது .*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உயிர்ப்பு
YUIRPPU
BM BOX 4002
LONDON WCIN 3XX
UNITED KINGDOM

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்